This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# பிரிவோம்... சந்திப்போம்

*I love you sometimes foolishly and at those moment I do not understand that I could not, and should not be absorbing a thought for you as are for me.*

*–ஒரு பிரஞ்சு காதல் கடிதத்திலிருந்து.*

**தி**ருநெல்வேலி ஜங்ஷனில் அந்த ரயில் வண்டி தன் எக்ஸ்பிரஸ் ஸ்தானத்தை இழந்து மூன்று பெட்டிகளுக்குக் குறைக்கப்பட்டுக் கடைசி பிளாட்பாரத்தில் புறக்கணிக்கப்பட்டது. ரகுபதி எதிரே இருந்த பெரியவரிடம், “ஐயா! கொஞ்சம் இந்தப் பெட்டியைப் பாத்துக்கிறீங்களா? காபி சாப்பிட்டுட்டு வந்துர்றேன்” என்றான்.

“தாராளமாக போயிட்டு சீக்கிரம் வாங்க. வண்டி புறப்பட்டுறப் போவது!”

“அந்த வண்டி லேசில புறப்படாதுங்க. ரெண்டு மணி நேரம் ஆகும். இன்ஜின் தேடிக்கிட்டு இருப்பாங்க.” பெரியவர் சிரிக்கவில்லை. “அம்பாசமுத்திரத்தில நிக்குமுங்களா?”

“நிக்கும். நான் அங்கதானே இறங்கறேன்!”

“அம்பாசமுத்திரத்தில எங்க?”

“நான் பஸ் புடிச்சு பாவநாசம் போறங்க!”

“பாவநாசத்தில் எங்க?”

“அங்கிருந்து அப்பர் டாம் போகணுங்க. எங்கபாரு அங்க ப்ராஜக்ட்டில இன்ஜினீயரா இருக்காரு.”

“பேரு?”

“கோவிந்தராஜ்.”

“உங்களுக்கு டவுன்ல போத்தி ஓட்டல் இருக்குதா?”

“சேச்சே! நாங்கள்ளாம் மதுரைங்க.”

“மதுரையில எங்க?”

‘உன் தலைமேல’ என்று சொல்லும் வகைக்கு எரிச்சல் வந்தது. பெரியவர் ராத்திரி பூரா வாணியம்பாடி விபத்தில் தான் தப்பித்ததைப் பற்றி உரத்த குரலில் பேசி கம்பார்ட்மேண்ட் முழுவதையும் விழிப்பில் வைத்திருந்தார். விபத்தில் போயிருக்க

www.writersujatha.com

வேண்டும் என்று அநியாயமாக நினைத்தான். பெட்டியை விட்டு வெளியே வந்தான். மழை பெய்ததில் பிளாட்பாரம் நனைந்திருந்தது. வானத்தில் கந்தலாக மேகங்கள் மிச்சமிருந்தன. மேம்பாலத்தில் இருபது வயது மதிக்கதக்க இளைஞன் அணுகி, “பிரதர் என்கிட்ட ஃபோர் அணேஸ் இருக்கு. இன்னும் ஃபோர் அணேஸ் கிடைச்சா ஒரு காப்பி சாப்பிடுவேன்” என்றான். தன் சொந்த பிரச்சனையை அன்னியோன்னிய நண்பனிடம் பேசுவது போலத்தான் இருந்தது அவன் தொனி.

“பிரதர்! உனக்கு எனக்கும் அதிகம் வித்தியாசம் இல்லை எனக்கும் வேலையில்லைதான். நீ மேம்பாலத்துக்கு வந்துட்ட... என்னை மேம்பாலத்துக்கு வர எங்கப்பா விட மாட்டாரு!” நாலணா கொடுத்துட்டு ஜங்ஷனுக்கு வெளியே வந்தான். கடைக்காரன் முகந்தெரியாமல் வாரப் பத்திரிக்கைகள் மறைத்திருந்தன. ஒரே ஒரு சிகரெட் வாங்கி பைக்குள் பத்திரபடுத்திக் கொண்டான். இரைச்சலாக இருந்த ஓட்டலுக்குள் சென்று காது குத்தின பித்தளை டம்ளரில் காபி சாப்பிட்டான். பசித்தால் அம்பையில் டிபன் சாப்பிட்டுக் கொள்ளலாம்.

இன்டர்வியூவின் நினைவு வந்தது. “why do we use AM for video in T.V?”

சேச்சே! பாண்ட் விட்த்! என்ன சுலபமாகப் பதில் சொல்ல வேண்டியது! சட்டென்று சொல்ல முடியாமல் தயங்கி, அவர்கள் மௌனமாகத் தன் முகத்தையே பார்த்துக் கொண்டு காத்திருக்க ...

“ஆல்ரைட், யூ மே கோ!” நிச்சயம் கிடைக்காது! ரகுபதிக்குப் பொதுவாக ஆத்திரம் வந்து பக்கத்தில் நிரம்பிருந்த ஒரு குப்பைத் தொட்டியை உதைத்தான். பி.இ. பாஸ் பண்ணினாலும் வேலை கிடைக்கும் நிச்சயம் இல்லை. அதற்குப் பின்னும் பரீட்சை! பி.எச்.இ.எல். பரீட்சை பி..இ.எல். பரீட்சை, என்.டி.பி.ஸி. பரீட்சை எழுதியே செத்துச் சுண்ணாம்பாகிப் போய் அப்புறம் அந்தக் கட்டத்தை தாண்டி, அசுரனின் உசிர் நிலை கிடைத்ததுபோல் இண்டர்வியூ கால் வந்து, கடைசியில் ‘பாண்ட் விட்த்’ என்கிற ஒரு வார்த்தை பதில் அவன் வாழ்க்கையையே திசை திருப்புகிறது. மற்றொரு கதவு மூடப்படுகிறது.

பெரியவர் அவன் பெட்டிமேல் கை வைத்துகொண்டு பத்திரமாகத்தான் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பார்வையிலிருந்து விலகி சிகரெட் பிடித்தான். மேலே போனால் அதிகம் சிகரெட் பிடிக்க முடியாது. ஒரு நாளைக்கு இரண்டு மூன்றுதான் முடியும். அப்பாவுக்கு தெரிந்துதான் இருக்க வேண்டும். வேலை கிடைக்கும் வரையாவது சிகரெட் பற்ற வைக்கும் ஒவ்வொரு சமயமும் குற்ற உணர்ச்சி தோன்றும். இது நான் சம்பாதித்த காசில்லை!

வேலை! வேலை! வேலை மாலை அணிந்ததும் உலகமே அவனைப் பார்த்துப் புன்னகைக்கிறது, ஹாலுக்கு வரவேற்கிறது. பெண்ணைக் கல்யாணத்துக்குக் கொடுக்க இசைகிறது.

அம்பையில் இறங்கினதும் பஸ் ஸ்டாண்டுக்கு நடந்துதான். அப்பர் டாம் போகும் பஸ் வாசலில் கூட்டம் அதிகமிருந்தது. கண்டக்டர் தனிப்பட்ட முறையில் வெளியே டிக்கெட் டிக்கெட் கொடுத்துக் கொண்டிருக்க, “ஐயா, ஒரு விக்ரமசிங்கபுரம்! ஒரு பாபநாசம்!” என்று பல குரல்கள் கெஞ்சலில் கண்டக்டர் “இத பாருங்க, அப்பர் டாம் டிய்ட்டு யாராவது இருக்குதா?”

‘இதோ’ என்று பாய்ந்தான் ரகுபதி. ஒரு நிமிஷம் வேலை கிடைத்துவிட்ட மாதிரி சந்தோஷமாக இருந்தது அவனுக்கு. “அண்ணாச்சி, அம்பாசமுத்திரத்துல எவ்வளவுங்க ஜிடி?” என்று டிரைவரைப் பார்த்துக் கண்டக்டர் கேட்க, கட்டபொம்மனாக பெயர் மாறினாலும் பழைய டி.வி.எஸ். சம்பிரதாயங்கள் இன்னும் இருப்பதும் தூரப் பிரயாணிகளுக்கு ஒரு நியாயம் இருப்பதும் அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது.

இந்தக் கண்டக்டரைப்பற்றி டயரியில் எழுத வேண்டும். நிரம்பி வழிந்த பஸ்ஸில் திருநெல்வேலி இயங்கியது.

"என்னவோ, பாத்துக்கிட்டு நிக்கியளே போவட்டும்!"

"ஏன் போட்டுத் தொண்டையைத் தீட்டுதே, 'டயம்' இருக்கில்லை?"

"என்னடே, ஒன்னை ஆசுத்திரில வெச்சுப்பாத்தனே!"

எல்லாவற்றையும் 'அங்க வெச்சு, இங்க வெச்சு' பார்க்கும் இந்தத் தமிழ் அவனுக்குப் பல தருணங்களில் புரியாது.

இருந்தும் தாமிரபரணியைபோல ஒரு களங்கமற்ற தன்மை எல்லார் சகவாசத்திலும் இருக்கிறது. பஸ் புறப்படுவது அவன் எதிர்காலத்தைபோல தீர்மானமில்லாமல் இருந்தது. அப்பா இருக்கிற வரைக்கும் கவலையில்லை. 'டியர் ஸார்' என்று டைப் அடித்த விண்ணப்பங்களாக மற்றொரு நம்பிக்கையைப் பற்றிக் கொண்டு காலந்தாழ்த்தலாம். என்றாவது ஒருநாள், யாராவது ஏமாந்து வேலை கொடுக்கமாலா இருக்கப் போகிறார்கள்?

"மிஸ்டர் ரகுபதி, இந்த பென்சிலை வைத்துக்கொண்டு அந்த மூலை நேர் கோணமா என்று கண்டுபிடிக்கமுடியுமா பாருங்கள்!"

யோசனை, தவிப்பு! "ஐம் ஸாரி ஸார், ஐம் அனேபிள் டு ஆன்ஸர் தட்!"

'போங்கடா பொங்கிப் பசங்களா' என்று பதிலளித்திருக்க வேண்டும்.

பஸ் புறப்பட்டு விக்கிரமசிங்கபுரம்வரை கூட்டம் அம்மியது. ஹார்வி மில்ஸ் தொழிலாளிகள் எம்ஜியார் க்யூவில் நின்று கொண்டிருந்தார்கள். தாமிரபரணி நதி தெரிந்தது. மழை நிரம்பிச் சலசலத்தது. பாவநாசத்தில் குரங்குகள் மாறவில்லை. மீன்களுக்குப் பொரி அள்ளிப் போடுபவர்களும் அகஸ்தியர் காலத்திலிருந்து மாறவில்லை. மலை தெரிந்தது. பச்சைப் போர்வையில் பாதை வெட்டப்பட்டு மோகனமாகப் பள்ளத்தாக்கு அங்கெங்கே காட்டிக்கொண்டு பஸ் ஊர்ந்தது. பவர் ஹவுஸ் தெரிந்தது. அருகே புதிய கட்டடம் பாதி வளர்ந்திருந்தது. பெரிய பைப் குழாய்கள் ஜப்பானிய இன்ஜினியர்கள் வருகைக்காக காத்திருந்தன. வெள்ளித் தகடுபோல் டைவர்ஷன் வியரில் தண்ணீர் ததும்பிக் கொண்டிருந்தது.

இறங்கி, பெட்டியை எடுத்துக் கொண்டு நடந்தான். சரியும் பாதையில் அஸ்பெஸ்டால் வீட்டுக் கூரைகள் தெரிந்தன. கல்யாண ரிஸப்ஷன்போல, லேசாகத் தூறல் தெளித்தது. டென்னிஸ் கோர்ட் மௌனமாக இருந்தது. பிராஜக்ட் ஆபிசரின் வீடு தனியாக உயர்ந்து தெரிந்தது. மரக்கிளைகளுக்கு இடையில் நதி மறுபடி தெரிந்தது. அப்பா இந்நேரம் ஸைட்டிலிருந்து வந்திருப்பார். முதல் கேள்வி 'என்ன ஆச்சு இண்டர்வ்யூ?' என்று கேட்பார். கேட்டுத்தான் ஆகவேண்டும். அவர் அப்பா இல்லையா? மனைவியை இழந்தும் கல்யாணம் கண்ணிக் கொள்ளாமல் தன் ஒரே மகனுக்கு தியாகம் செய்து படிக்க வைத்தவர் இல்லையா? தன்னைப்போல் மற்றொரு இன்ஜினியர் உருவாக வேண்டும் என்று ஆசைபடுகிறவர் இல்லையா? இன்ஜினியராகிக் கல்யாணம் செய்துக்கொண்டு இன்னொரு இன்ஜினியரைப் பெற்றெடுத்து...

வீட்டுக் கதவு பூட்டிருந்தது. சன்னல்மேல் எடுப்புச் சாப்பாட்டு டிபன் காரியர் வைத்திருந்தது. அதை இங்கேயே திறந்து சாப்பிட்டுவிடலாம் போலப் பசித்தது. ரகுபதி காத்திருந்தான். பக்கத்து வீட்டு ஓவர்ஸியர் தன் தோட்டக் கொத்தலிலிருந்து நிமிர்ந்து, "இப்பதான் வரியா?" என்றார்.



www.writersujatha.com

“ஆமாங்க!”

“வேலை கிடைச்சுடுத்தா?”

“அதுக்குள்ள தெரியாது!”

“நான் சொன்னேனே காஸட்–வாங்கிண்டு வந்தியா?”

“ஓ ஸாரி, மறந்துட்டேன் மாமா!”

உடனே அவனை விரோத லிஸ்ட்டில் சேர்த்துவிட்டுத் தோட்டக் கொத்தலுக்கு மீண்டார். அப்பா எப்போதும் போல காக்கி அரை டிராயரும் பனியனும் ஸோலா தொப்பியும் அணிந்து தெருக்கோடியில் தெரிந்தார். இவனைப் பார்த்ததும் வேகமாக நடந்து வந்தார். பத்து கஜத்திலேயே புன்னகைத்தார். பதில் புன்னகையில் வேலை கிடைத்துவிட்டது என்கிற செய்தியை எதிர்பார்த்தார் போலும்.

“ரெண்டு மணி பஸ்ஸில் வந்த இல்லை? நான் கீழ இருந்து நீ இறங்கியதை பார்த்துக்கிட்டே இருந்தேன். ஜீப்பு வெளியே போயிருந்தது; படியேறி வந்தேன்.

“பசிக்குதப்பா!”

“ரெண்டு சாப்பாடு கொண்டு வந்திருப்பா. வா, சாப்பிடலாம்!”

அப்பா அந்தக் கேள்வியை இன்னும் கேட்காதது அவனுக்குத் தவிப்பாக இருந்தது. சாப்பிட்டுவிட்டுக் கேட்பார்.

மேஜைமேல் மௌனமாக இலை விரிக்கப்பட்டு அவனுக்கு அவரே பரிவுடன் பரிமாறினார்.

“யு லுக் டயர்ட் ரகு.”

“இண்டர்யூ சரியா செய்யலைப்பா!”

“பரவாயில்லை, நெக்ஸ்ட் டைம்.”

“இதோட மூணாச்சு.”

“பரவாயில்லை, அடுத்த முறை நல்லா செய்.”

“எனக்குப் பயமா இருக்கப்பா!”

“என்ன பயம்?”

“வேலை கிடைக்காமலேயே இருந்துறப் போவுதோன்னு...”

“ஐம் பிரிப்பார்ட் ஃபர் தட் ஆல்ஸோ.”

“ஐம் நாட்!” என்று அழுத்தமாகச் சொன்னான்.

“சாப்பிடு முதல்ல.”

“என்ன, இந்தத் தடவையும் கிடைக்கலை போலிருக்கே?” என்று பக்கத்து வீட்டுக்காரர் ஸ்வாதீனமாக உள்ளே நுழைந்தார்.

“ஆமாமாம். நீங்க ஆசீர்வாதம் பண்ணி அனுப்பிச்சிங்க இல்லை!” என்று அப்பா சிரித்தார்.

“காம்பெட்டிஷன் ஸக்ஸஸ்னு பத்திரிக்கை ஒண்ணு வரது. அதில இண்டர்வ்யூவை பத்தி நேக்கெல்லாம் போட்டிருப்பான். என் சித்தி பையன் அதைப் படிச்சுடுத்தான்...”

“ஸ்வாமி!” அவர் பெயர் ஸ்வாமிதான். “இதெல்லாம் பத்தி சாயங்காலம் பேசலாமே, இப்ப சாப்டுட்டு இருக்கம்.”

“காஸட் வாங்கிண்டு வரலையா?”

“இல்லை சார், டைம் இல்லை.”

“அப்ப அந்த ட்வெண்டிஃபைவ் ருப்பீஸை...!”

“சாப்பிட்டதும் தந்துர்றேன்.”

“அவசரமில்லை” என்று சென்றார்.

அவர் போனதும் தந்தை மகனைப் பார்த்து சிரித்தார். அந்தச் சிரிப்பில் அவர்கள் இருவருக்கும் இடையில் ஒரு சினேகிதம், ஒரு கம்யூனிகேஷன் இருந்தது. ரகுபதிக்கு மனசு லேசாகி விட்டது.

“மத்தியானம் தூங்கு, சாயங்காலம் வாக் போ, டென்னிஸ் போ. ஒரு தம் அடிச்சுட்டு வா” என்று அவனைப் பார்த்துக் கண் சிமிட்டினார்.

“இல்லப்பா... நான் இப்பல்லாம்... ”

“அநாவசியத்துக்குப் பொய் சொல்லாதே, நான் உன்னைப் பார்த்திருக்கேன் ரகு! என்னை அப்பான்னு பெடஸ்டல்ல எல்லாம் வெக்காதே. ட்ரீட் மி ஆஸ் எ ஃப்ரண்ட். எல்லாத்தையும் எடுத்து க்ளீன் பண்ணிடறியா? எனக்கு மறுபடி அவசரமா பிராஜக்ட் ஆபிசுக்குப் போகணும். புதுசா சீஃப் வந்திருக்கார். வேளைக்கு வந்துர்றார்.”

“அவர் எப்படிப்பா?”

“வந்து ஒரு வாரம்தானே ஆயிருக்கு! சுயரூபம் தெரிய இன்னும் ஒரு மாசம் ஆகும். வரேன் அநாவசியத்துக்கு ஒர்ரி பண்ணிக்காதே. ஏதாவது படி. ஸப்ஜக்ட் படிக்கணும்னு அவசியமில்லை. புதுசா ஒரு ராபின்ஸ் நாவல் வெச்சிருக்கேன்–ஸிஸ்ஸில்ஸ் வித் செக்ஸ்!”

அவர் போனதும் புன்னகைத்துக் கொண்டான், உள்ளுக்குள் ஏமாற்றம். இருந்தாலும் அதை அப்பா அதைச் சாமர்த்தியமாக மறைக்கிறார். டியாரைப் போட்டுக்கொண்டு தொப்பியை மாட்டிக்கொண்டு வேடிக்கையாக நடந்துப் போகும் அவரைப் பார்த்துச் சற்றே பரிதாபபட்டான். பதினான்கு வருஷமாக மனைவி இல்லாமல் எனக்காகவே என்று இவருக்கு வாழ்க்கையில் என்னைத் தவிர என்ன நம்பிக்கை இருக்க முடியும்? எப்போதாவது வேலை கிடைத்து மணம் புரிந்துக் கொண்டு பேரப்பிள்ளையை மடியில் வைத்து... கேட்டு விட வேண்டும் ஒரு நாள். அம்மாவின் படத்தை பெட்ரூமில் வைத்திருந்தார். சின்னதாக, இயல்பாக எடுத்த படம். ஹால் பூரா பெரிசா மாட்டி

வெள்ளிக்கிழமை மாலை போடும் பிஸினஸ் இவரிடம் இல்லை. இறந்ததினம் ‘இந்து’வில் வருஷா வருஷம் விளம்பரம் கொடுத்து,

‘டியர் சரஸ்வதி, நீ என்னை விட்டு இந்த நாள் போய் பதினான்கு வருஷங்கள் ஆனாலும் என் மனத்தில் எப்போதும் இருக்கிறாய்! உன் ஞாபகத்துடன் கோவிந்தராஜன் –ரகுபதி எப்போதும் துக்கத்தில் இருக்கும்...’

இந்த நான்செண்ஸ் எல்லாம் கிடையாது. யோசித்துப் பார்த்தால் அம்மாவைப் பற்றி இவனிடம் அதிகம் பேசினது இல்லை. எப்போதாவது அவள் என்று குறிப்பிட்டு சில சம்பவங்களை சொல்வார்.

மத்தியானம் கொஞ்சநேரம் தூங்கிவிட்டு, முகம் கழுவிக் கொண்டு, பாண்ட் மாற்றிக் கொண்டு, கதவைப் பூட்டி விட்டுப் பக்கத்து வீட்டு ஸ்வாமிடம் சாவி கொடுத்து விட்டு – “அந்த இருபத்தஞ்சு” மெல்ல டென்னிஸ் கோர்ட்டை நோக்கி நடந்தான். புதுசா வயசான அம்மாள் நீல ஸாரியும் கான்வாஸ் ஷூவுமாக மார்க்கருடன் ஆடிக்கொண்டிருந்தாள். “தம்பி வந்துட்டிங்களா? ” என்று மார்க்கர் கத்தினான்.

இன்று டென்னிஸ் வேண்டாம். நடக்கலாம். மலைப்பிரதேசத்தில் காட்டின் விளிம்பில் அவனுக்கு என்று பிரத்தியேக ராச்சியம் இருக்கிறது. அங்கே போய்ப் புத்தகம் படிக்கலாம். பறவைகளைக் கேட்கலாம். நதியோடு சல்லாபிக்கலாம். டயரி எழுதலாம், ஒரே ஒரு சிகரெட் பிடிக்கலாம்.

“இன்று மறுபடி பாபநாசம் திரும்பி வந்தேன். அப்பாவுக்கு ஏமாற்றமில்லை. ஏமாற்றம் எனக்குதான். மிகுந்த ஏ. அப்பாவுடன் பேசினதில் சமாதானம். பல துர்பாக்கியங்களுக்கு இடையில் ஒரு பாக்கியம் அப்பா. ‘ஒரு பென்சிலை வைத்துக்கொண்டு சுவர் மூலை நேர் கோணமா என்று எப்படி கண்டுப்பிடிப்பது’ என்பதை இந்த பிராஜக்டிலுள்ள அத்தனை இன்ஜினியர்களையும் கேட்கப் போகிறேன். போக வர மொத்தச் செலவு நூற்று அறுபது. ரயில் கட்டணம் மட்டும் திருப்பிக் கொடுத்தார்கள்.”

மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். லேசாகக் காற்று வீச, மெல்ல வார்த்தையில்லாமல் மெட்டை மட்டும் பாட ஆரம்பித்தான். தனக்குள் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டான். ‘உனக்குத் தெரியுமாடா ஆன்ஸர்? கேக்கறியே கேள்வி! நான் கேக்கறேன் பதில் சொல்லு. ஒரு பாண்ட் பாஸ்ஃபில்டர் எடுத்துக்க...’

அவன் டயரியின் மேல் மிதந்து மிதந்து ஒரு மலர் வந்து விழுந்தது.

தலையைத் தூக்கி மேலே பார்த்தான்.

அந்தப் பெண் மரக்கிளையில் காலை ஆட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

## 2

அந்தப் பெண் அந்த மரத்தில் அச்சமில்லாமல் உட்கார்ந்திருந்தாள். அதிக உயரமில்லாமல் இருந்தாலும், அந்தத் தினுசில் ஒரு பெண்ணைப் பார்ப்பது ரகுபதிக்குச் சற்று புதுசாகத்தான் இருந்தது. சட்டென்று அவள் குதித்து இறங்கி அவனைப் பார்த்துக் கொண்டே பின்வாங்கினாள். அவனை நேராகத் தயக்கமில்லாமல் பார்த்தாள். பார்வையில் பயமும் சற்றுக் குறும்புத்தனமும் தெரிந்தது. “சுதா! சுதா! ” என்று கூப்பிட்டாள். இன்னமும் ரகுபதியை பார்த்துக்கொண்டுத்தான் இருந்தாள். சற்று

நேரத்தில் பக்கவாட்டிலிருந்து ஒரு பையன் இவளுடைய பதினைந்துவயது இரண்டாம் பதிப்பு போல் வந்து “என்ன மது?” என்றான். அந்தப் பெண் ரகுபதியைக் காட்டி தாழ்வாகப் பேசினாள். அந்தப் பையன் இப்போது ரகுபதியைப் பார்த்து சிரித்தான்.

ரகுபதிக்குச் கோபம் வந்து, “கெட் அவுட்!” என்றான். அவர்கள் சிரித்துக் கொண்டே ஓடிப் போனார்கள்.

வெட்கமாயிருந்தது. அவர்கள் தன்னைப் பார்த்துச் சிரித்ததில் ஏளனம் இருந்தது. சற்றே திமுரும் பெரிய வீட்டுப் பிள்ளைகளின் கர்வமும் இருந்தது. அந்தப் பெண் சற்றே ஆச்சரியமாகத்தான் தோன்றினாள். அவளை அவன் பார்த்ததில்லை. எதற்குச் சிரித்தாள்? நான் எனக்குள் பேசிக் கொண்டது அவளுக்குச் சிரிப்பாக இருந்திருக்க வேண்டும். ரகுபதி தனக்குள் பேசிக்கொள்ளும்போது நாடகம் போல் நடித்துக் கொண்டே எதிரே இருக்கும் ரகுபதியுடன் பேசுவான். பார்ப்பவர்களுக்குக் கொஞ்சம் வேடிக்கையாகத்தான் இருக்கும். அதுதான் சிரிக்கிறாள். இல்லை, தன் தோற்றத்தில் சிரிக்க வேண்டிய அம்சம் ஏதாவது இருந்ததா? பாண்டுக்கு பட்டன் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறதே? முகத்தில் பவுடர் ஏதாவது திட்டுத்திட்டாகத் தெரிகிறதா?

ரகுபதிக்கு எங்கேயாவது கண்ணாடியில் பார்த்துக் கொள்ள வேண்டும் போலத் தோன்றியது. தூரத்தில் சரிவில் ஆறு தெரிந்தது. ஓலைப் பழுப்பாக இருக்கிறது. அதில் முகம் தெரியாது. புதுசாக மழை வந்த களிப்பில் ஆறு குதூகலத்துடன் துள்ளிக் கொண்டிருந்தது, அந்தப் பெண்ணைப் போல். அவள் சிரிப்புக்கு அதன் சமீபத்திய இலக்கான என்னை மறந்துவிட்ட ரீதியில் ஒரு மணியோசைத் துல்லியம் இருந்தது. அந்தப் பெண் யார்? மது...சுதா.

மனது கலைந்து விட்டதால் அந்த இடத்தில் இனி இருக்க விருப்பமில்லாமல் என்ன செய்யலாம் என்று யோசித்தான். ஒரு சிகரெட் பிடித்துவிட்டு வரலாம். பல சரக்குக் கடையில் இவன் வந்து சேர்ந்து விட்டதைச் சொல்லி வைக்க வேண்டும். விக்கிரமசிங்கபுரத்துக்குப் போய் இவனுக்கென்று பிரத்தியேகமாக ஃபில்டர் சிகரெட் வாங்கி வைப்பான். கடினமான பாறைப் பாதையைக் கடந்து ரோட்டுக்கு வந்தான். கடைசி பஸ் புழுதி தொடரச் சென்று கொண்டிருந்தது. பள்ளிக்கூட பையன்கள் விட்டால் போதும் என்று இரைச்சலுடன் மணி அடித்த உடனே ஓடிக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்து மலைச் சரிவில் டென்னிஸ் கோர்ட் தெரிந்தது. அந்த அம்மாள் இன்னும் மார்க்கருடன் ஆடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

“எப்ப வந்திய தம்பி...?

திரும்பி பார்த்தான். தபால்காரர் இவர் என்னவோ பிள்ளை. பேர் சட்டென்று ஞாபகம் வரவில்லை.

“மத்தியானந்தாங்க!”

“உத்தியோகம் கிடைச்சுருச்சா?”

“எங்கங்க, இனிமே உங்களை எதிர்பார்த்துகிட்டு இருக்கிறதுதான் உத்தியோகம்தான்!” என்று சிரித்தான்.

“ஏன் அப்படி சொல்லுறிய? நீங்க பெரிய படிப்பு படிச்சிருக்கிறதா சொன்னாங்க. இன்ஜினியருன்னு சொன்னாங்க ... விர்த்தியா வேலை கிடைக்கும்ல...?”

“கிடைக்கணும்! கிடைக்கணும்!” என்று புழுதி ஓய ஒதுங்கிருந்து விட்டுச் சாலையைக் கடந்து டென்னிஸ் கோர்ட்டை நோக்கி நடந்தான்.

“ஆடர் வந்தா ஒரு நிமிட்ல எங்கையாலயே கொடுக்கேன்” என்று தபால்காரர் சொல்லிவிட்டுச் சென்றார்.

சரிவில் குறுக்கே இறங்கி டென்னிஸை வந்தடைந்தான். மார்க்கர் அவர்களுடன் ரொம்ப பொறுமையுடன் ஆடிக் கொண்டிருப்பது தெரிந்தது. ரகுபதி வந்ததும் “வாங்க தம்பி, ஆடியறளா...?” என்றான்.

“இல்லை! ராக்கெட் கொண்டு வரலை முனுசாமி. அம்மா யாரு?” என்று தாழ்ந்த குரலில் கேட்டான். அம்மாள் தன் முகத்தைத் துண்டு போட்டுத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

“ஆபிஸர் ஒய்ப்புங்க. புதுசா கத்துக்கிறாக. எல்லா பாலும் பாணதீர்த்தம் போய் வுளுது. கோர்ட்டுக்குள்ளாரவே அடிக்கவல்லை.”

இப்போது அந்த அம்மாள் அவர்கள் அருகில் வந்து புன்னகைத்தாள். இவளை எங்கோ பார்த்திருக்கோம் என்று ரகுபதிக்குத் தோன்றியது.

“முனுசாமி யார் இது?” –உச்சரிப்பில் பட்டணம் தெரிந்தது.

“இவுக இன்ஜினியரு கோவிந்தராசன் மகனுங்கம்மா.”

“அப்படியா! ப்ளீஸ்டு மீட் யூ! ஐம் மிஸஸ் கோபிநாத்.”

ரகுபதி மையமாகச் சிரித்தான்.

“ஐயா நல்லா ஆடுவாங்கம்மா... இவுககிட்ட சொல்லிக்கிடலாம் நீங்க” என்றான். கழன்றுக் கொள்ளும் விருப்பத்துடன்.

“அப்படியா? எனக்குச் சொல்லித் தரும் பொறுமை இருக்குமா இவருக்கு?”

“முதல்லேயே கோர்ட்டுக்கு வராதீங்க. வால் ப்ராக்டிஸ் பண்ணுங்க.”

“வால்–ப்ராக்டிஸா?”

“உங்க வீடு எங்க இருக்கு?”

இந்த கேள்வி இருவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது.

“எங்க வீடு தெரியாதா உங்களுக்கு?”

“ஸாரி! தெரியாது.”

“கோபிநாத் யாருன்னு தெரியாது?”

“ஓ எஸ், ஸாரி! மிஸ்டர் கோபிநாத் புதுசா வந்திருக்கிற ப்ராஜக்ட் ஆபிஸர்! ஸாரி! ஸாரி! அப்பா அவரைப் பத்திச் சொல்லிருக்கிறார்.”

“உங்க வீடு எங்க இருக்குன்னு நிச்சயம் எனக்குத் தெரியும்” என்று ராஜாங்கமாக நின்றுக் கொண்டிருந்த–இங்கிருந்தே தெரிந்த–வீட்டைக் காட்டினான். “அங்க

ஏதாவது சமமா சுவர் இருந்தா அதுக்கு எதிரே நின்னுக்கிட்டு முதல்ல ப்ராக்டிஸ் பண்ணா, பால் கண்ட்ரோல் வரும்.”

“விஷயம் தெரிஞ்சவர் போல இருக்கே ... எங்க மார்க்கர் கூட ஆடுங்க பார்க்கலாம்!”

“வாங்க!” என்றான் மார்க்கர். அவனுக்கு சாயங்கால சாராயத்துக்கு வேளையாகிவிட்டது. இங்கிருந்து மலைப் பக்கம் போய் கீற்றுக் கொட்டகையில் நான்கு போட்டுவிட்டு ராத்திரி ஒன்பது மணிக்கு காம்ப் பீரா கேட்கும்படி யாரையோ திட்டிக்கிட்டே வருவான்.

மார்க்கருடன் ஆடும்போது அந்தப் பொண்ணும் பையனும் திரும்பி கோர்ட்டுக்குள் வருவதைப் பார்த்தான். “மது எங்க போயிட்ட கண்ணு?”

“ஹைக்கிங் போயிருந்தோம் மம்மி!” என்றான் பையன். ரகுபதியை பார்த்ததும், “மது, இத பாரு! என்றான். இருவரும் இப்போது ரகுபதியைப் பார்த்து தமக்குள் பேசிக்கொண்டு சிரித்தார்கள். ரகுபதிக்கு ஆட்டத்தை கவனிக்க முடியவில்லை. அவ்வபோது அவர்களை பார்க்கிறபோது அவர்கள் மேலும் ரகசியமாக சிரித்துக்கொள்வது தெரிந்தது. கோபம் வந்தது. சற்றுநேரம் அம்மாள் அவன் ஆட்டதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, “நல்லா ஆடறீங்க! இனிமே நீங்கதான் எனக்கு வாத்தியார். உங்கபேரு?”

“ரகுபதி” என்றான் கோர்ட்டை விட்டு வெளியே வந்து .

களுக்கென்று சிரிப்பு!

“என்ன மது? எதுக்கு சிரிக்கிறீங்க?”

“ஒண்ணுமில்லையம்மா?”

“நாளைக்கு வரீங்களா...?...நீங்க படிக்கிறீங்களா–?”

“படிப்பு முடிஞ்சுருச்சு...”

களுக்.

“என்ன படிச்சிருக்கீங்க?”

“இன்ஜினியரிங்.”

களுக்.

“வேலைல இருக்கீங்களா?”

“இல்லை, அப்ளை பண்ணியிருக்கன்.”

இப்போது அந்தப் பெண் தன் தம்பியைப் பார்த்துக் கொண்டு குலுங்கிச் சிரித்தாள்.

“என்ன மது எதுக்காக ரெண்டு பேரும் சிரிக்கிறீங்க?”

“இவங்க யாரு?” என்றான்.

"என் ஸன், என் டாட்டர். இவபேரு மதுமிதா... இவன் சுதாகர்..."

இப்போது அவர்கள் சிரிப்பை அடக்கமுடியாமல் கோர்ட்டுக்கு ஓரமாக கறுப்புத் தட்டியின் அருகில் சென்று இரண்டு கைகளாலும் வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தார்கள்.

"என்ன மது, எதுக்கு இப்படிச் சிரிக்கறே?"

"என்னைப் பார்த்துச் சிரிக்கிறாங்க!"

"உங்களைப் பார்த்தா? வாட்ஸ் இட் மது?"

"அப்படி நாகரிகமில்லாம வளர்த்திருக்கீங்க..." என்று சொல்லிவிட்டு விரைவாக நடந்துச் சென்றான்.

கோர்ட்டை விட்டு வெளியே வரும்போது, "மது! ஸ்டாப் இட் திஸ் மொமெண்ட். அப்பாகிட்ட சொல்லட்டுமா?" என்று தாயின் அதட்டல் கேட்டும் அந்தப்பெண்ணின் சிரிப்பொலி தொடர்ந்து கேட்டது.

ரகுபதிக்குக் கோபம், அழுகை, எரிச்சல் எல்லாம் வர, வேகமாக வீட்டை நோக்கி நடந்தான். பணக்காரர்கள், திமிர் பிடித்தவர்கள். ஒரு கணம் இரண்டு பேரையும் கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டும் போல இருந்தது. அப்பாவிடம் சொல்ல வேண்டும். அந்த கர்வம் எல்லாம் அவர்களோடு இருக்க வேண்டும். வேலை கிடைத்து ப்ராஜெக்டை விட்டு போவதற்குள் ஒருநாள் இவர்களை நோக்கி ஓர் அரைச் செங்கலை வீசிவிட்டுதான் போக வேண்டும்....பாத்ரூமுக்குப் போய் முகம் கழுவிக்கொள்ளும்போது தனக்குள் காரசாரமாக பேசிக்கொண்டான். 'நீ ப்ராஜக்ட் ஆபிஸர் மகளா இருந்தா எனக்கு என்னடி...? சமையலறைக்குள் சப்தம் கேட்க, பேசுவதை நிறுத்திவிட்டான். "அப்பா...! " என்றான்.

"அப்பா இல்லை!" என்று ஒரு பெண் குரல் கேட்டது.

## 3

**ச**மையல் அறையிலிருந்து அந்தப் பெண் வந்தாள். பாவாடை தாவணியுடன் பதினெட்டு வயது மதிக்கத்தக்கவளாக இருந்தாள் "நீங்க யாரு?" என்றாள்.

"ரகுபதி..."

"மாமாவோட பையனா?" என்றாள். ரகுபதி அவளை நேராகப் பார்க்காமல் "ஆமா" என்றான்.

"நான் தருமி மாமி பொண்ணு. அம்மா சமைக்க வர முடியலை. உடம்பு சரியில்லை. அதுக்காக என்னை அனுப்பிச்சா." நடையில் ஒரு குழந்தை தவழ்ந்து கொண்டிருந்தது.

"யார்து குழந்தை?"

"எம்புள்ளை மாமா! டே சேகர்! மாமா பாருடா!" குழந்தை நாள் பூரா தரையில் புரண்டது போல் அழுக்காக ரகுபதியைப் பார்த்து 'ங்' என்றது. அரைஞாண் கயிற்றில் தாயத்து கட்டி இருந்தது. ரகுபதி அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவளே குழந்தை

போலத்தான் இருந்தாள். “எல்லாம் பண்ணி அடுப்படில மூடி வெச்சுட்டேன் மாமா! அப்பா வரத்துக்கு நாழியாகும்னா ரசத்தை சூடு பண்ணிக்கோங்க. வாடா சேகர்” என்று அதை ஒரு கையால் எடுத்துக்கொண்டு போகிற வழியெல்லாம் முத்தம் கொடுத்துக் கொண்டே போனாள். ரகுபதி முகம் கழுவிக்கொண்டு ரேடியோவை இயக்கிக் குறிக்கோளில்லாமல் சிற்றலையில் நீராடினான். ‘ஏய் துத்து’ என்று அழுத்தமாக சைனா கேட்டது. மாவுத்தன்பட்டி கிருஷ்ணன், சரஸ்வதி ஆகியோர் ‘முரட்டுக்காளை’ படத்தில் ஷைலஜாவை விரும்பிக் கேட்டிருக்க அவள், ‘மாலை மச்சான், ஆசை வெச்சான், வரலாமா தொடலாமா’ என்றாள். அப்பாவின் புத்தகங்களை மேய்ந்தான். வேதாந்தத்தின் கூடவே ராபின்ஸும் இருந்தது. சிரித்துக்கொண்டான். அப்பாவுக்கு எதிலும் அதிக நம்பிக்கை கிடையாது. சின்மயானந்தா கேட்டுவிட்டு ஐ.வி.சசி படத்துக்குப் போவார். இரண்டுக்கும் அவருக்கு முரண்பாடே கிடையாது. ஒருநாள் அவரை கேட்டு விட வேண்டும்.... மது–சுதா! ஏதாவது ஒரு விதத்தில் அவர்களைப் பழி தீர்க்க வேண்டும். மறுபடி ஊமைக் கோபம் ததும்பியது.

என்னைப் பார்த்தால் எல்லாருக்கும் சிரிப்பாக இருக்கிறது. ‘கேலி பண்ணு’ என்று நெற்றியில் எழுதி ஒட்டியிருக்கிறது. ‘உறவில் கலப்பதும் பிரிவில் தவிப்பதும் ஒரே நிலவு’ என்று ரேடியோ சிலோன் அடுத்த பாட்டில் சொல்லிக் கொண்டிருக்க, ரகுபதி தனக்குள் பேசிக் கொண்டான்.

இது பேச்சுக் கூட இல்லை; ஒருவிதமான வால்டர் மிட்டிதனம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாகத் தன்னை நினைத்துக் கொள்வான். இந்த முறை பியார்ன் போர்குடன் கடுமையான போட்டியாக டென்னிஸ் ஆடிவிட்டு டை– பிரேக்கர் வரை வந்து போர்க்கின் சர்விசை உடைத்து ஜெயித்ததும் போர் நேராக பாய்ந்து வந்து கைகுலுக்கி ‘வெல்டன் ரகு’ என்று சொல்லிவிட்டு கடுமையான முகத்துடன் கோர்ட்டை விட்டு வெளியே போக, பார்வையாளர் மத்தியில் அந்த மதுவும் சுதாவும் ‘ஆ’ என்று வாயை பிளந்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்து விட்டு அவனை மொய்த்த கூட்டத்தின் ஃப்ளாஷ் பல்பு மினுக்கலின் மத்தியில் திணறிக் கொண்டு வந்து அந்த மது கண்ணில் நீர் பொங்க ‘மிஸ்டர் ரகு, உங்க திறமையை புரிஞ்சுக்காம அன்னிக்கு சிரிச்சதுக்கு அவமானபடறேன். ஸாரி ஸாரி ஸாரி”

“யாருக்குடா ஸாரி?” என்று அப்பா நுழைய வெட்கத்துடன் தன் கனவை ரத்து செய்துவிட்டு மையமாகச் சிரித்தான். “ரேடியோவை நிறுத்து, எனக்கு தமிழ் சினிமா பாட்டு கேட்டா கான்ஸ்டிபேஷன் வந்துரும். என்ன, ஏதாவது சாப்பிட்டியா?”

“இல்லைப்பா. நீங்க வந்ததும் சாப்பிட்டு வரலாம்னு காத்திருக்கேன்.”

“சமையக்கார அம்மா வந்திருந்தாளா?”

“இல்லை, ஒரு பொண்ணு. அந்த அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம்.”

“ஓ, ஜெயந்தி வந்திருந்ததா?”

“இந்த வயசில கைல குழந்தை.”

“அது மட்டும் இல்லை. புருஷன்கூட வாழ்ந்து அவன் துரத்திவிட்டும் ஆச்சு.”

சமையல் பாத்திரங்களைத் திறந்து ஆராய்ந்தார். “கொஞ்சம் உப்பை அள்ளிப் போடும். எங்க எங்க போயிருந்தே? சொல்லு.”

“எங்கயும் இல்லையப்பா. காட்டில கொஞ்சம் அலைஞ்சேன். டென்னிஸ் கோர்ட்டிக்குப் போயிருந்தேன்.”



www.writersujatha.com

“எங்க பாஸ் மனைவியைப் பார்த்தியா?”

“பார்த்தேன்பா.”

“எப்படி டென்னிஸ் ஆடறாங்க அம்மா?”

“இப்பதான் கத்துக்கறாங்க. உங்க பாஸ் பொண்ணையும் பையனையும் பார்த்தேன்.”

“மதுமிதா, சுதாகர்!–சார்மிங் இல்லை?”

“எனக்கு அவங்களை பிடிக்கலை. எப்பபார்த்தாலும் இளிச்சுக்கிட்டு ... ஐ டோன்ட் லைக் தெம்.”

“அழகான பொண்ணு.”

“கொஞ்சம் கூட பண்பே இல்லை.”

“உன்னைப் பார்த்துச் சிரிச்சாங்களா?”

“ஆமாம்பா...”

“உன்னைப் பார்த்துச் சிரிக்கறதுக்கு என்ன இருக்கு?”

“எனக்கு புரியலை. விட்டுத் தள்ளுங்க.”

“அவங்களைப் பொறுத்த வரையிலும் இந்தப் பிரதேசத்துக்கு பிராஜக்ட் ஆபிஸர்தான், ராஜா மாதிரி. அதனால் கொஞ்ம் கர்வம் இருக்கலாம். கொஞ்சம் கர்வத்தை மத்த எல்லாரும் சகிச்சுக்கத்தான் வேணும். ஆனா அப்பனைச் சந்துச்சு அவரோட பேசிருக்கேனே! அப்படி ஒண்ணும் அகராதி பிடிச்ச ஆளாத் தெரியலையே...”

“பொண்ணு சுகமில்லை.”

தோட்டத்துக்குப் போய் வாழை இலை அறுத்துவந்து அலம்பித் தரையில் போடுவதற்கு முன் வாயிற் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. “யாரு பாரு, சாப்பிடற வேளையில், பிரேக் டவுன்னா நான் வீட்டில இல்லைன்னு சொல்லிரு. இப்பதான் நிம்மதியா வந்து உட்கார்ந்தேன்.”

ரகு வாயிற் பக்கம் சென்றான். கதவைத் திறந்ததும் இரண்டு சைக்கிளைப் பார்த்தான். மதுமிதாவும் சுதாகரும் நின்றுக்கொண்டிருந்தார்கள். இவனைப் பார்த்ததும் சற்றுத் தயக்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு அந்தப் பையன் மென்று விழுங்கி “அங்கிள்! ஐம் ஸாரி!” என்றான். அக்காவைப் பார்த்தான். அவள் தலைப் பின்னலை நிரடிக்கொண்டு கீழ்ப்பார்வை பார்த்துக்கொண்டு “ரொம்ப ஸாரி ஸார்” என்றாள்.

“எதுக்கு?”

“சாயங்காலம் உங்களைப் பார்த்துச் சிரிச்சதுக்கு மன்னிச்சிருங்க...”

“இட்ஸ் ஓக்கே. நான் அப்பவே மறந்துட்டேன். சொன்னப்பறம்தான் நீங்க சிரிச்சதே ஞாபகம் வர்றது; இட்ஸ் ஓக்கே, இட்ஸ் ஓக்கே! ” என்றான் ஸ்டைலாக.

அந்தப் பெண் உதடு துடிக்க, “ஸார்! ஒரு ரிக்வெஸ்ட்.”



www.writersujatha.com

“என்ன?”

“எங்ககூட நீங்க வீட்டுக்கு வரணும். அப்பா அம்மாவைப் பார்த்து எங்க மேல உங்களுக்கு கோபமில்லைன்னு சொல்லி வரணும்.”

“அதெல்லாம் தேவையில்லை.”

“ப்ளீஸ்! அவங்க ரெண்டு பேரும் எங்ககூட அதுவரைக்கும் பேசமாட்டாங்களாம். தயவு செய்து நீங்க வரணும் ஸார்...” என்று கண்களில் சற்றே கண்ணீருடன் கெஞ்சினாள்.

“கொஞ்சம் இரு, சாப்டுட்டு வர்றேன்” என்றான் ரகுபதி. புன்னகையுடன், “வாங்க, உள்ளே வாங்க.”

“யாரு? அட, மது, சுதா! எங்க இந்தப் பக்கம்?”

“உங்க இவர்கிட்ட வந்து வந்து...”

“சாயங்காலம் என்னைப் பார்த்துச் சிரிச்சதுக்கு அப்பாலஜி” என்று சிரித்தான் ரகு.

“சேச்சே! அதெல்லாம் எதுக்கம்மா?”

“இல்லை ஸார், எங்கப்பாவை உங்களுக்குத் தெரியாது. நாங்க காத்திட்டு இருக்கோம். நீங்க மெதுவாக வாங்க ஸார். வந்து, அப்பாகிட்ட உங்களுக்கு எதும் கோபமில்லைன்னு சொல்லிடுங்க.”

“அதுக்கா இந்த இருட்டில வந்தீங்க? சரியாப் போச்சு! வாம்மா, உக்காரு. ஏதாவது சாப்பிடறியா?”

“நோ! தாங்ஸ் அங்கிள்!” அந்தப் பெண் அலமாரியை பரிசோதிக்க, ரகுபதி அப்பாவைப் பார்த்து கண் இமைத்துவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தான்.

“ஐ டோல்ட் யூ ஹி இஸ் எலட்ரிக்மேன்!”

அந்தப் பெண் லேசாகப் பாடிக்கொண்டே ஹாலில் “அங்கிள்!பூனை வளர்க்கறீங்களா?” என்றாள்.

“இல்லையம்மா. எதோ ஸ்ட்ரீட் காட் அது. சாப்பாடு சமயத்துக்கு வரும்.”

“நான் எடுத்துட்டுப் போகட்டுமா இதை?”

“தொடாதே, பிறாண்டிடும்!”

“ஹௌ ஸ்வீட்! புஸ்ஸி!” இவர்கள் சாப்பிடத் தொடங்க, கொஞ்ச நேரத்தில் பூனையை யாரோ மிதித்தது போலச் சப்தம் வந்தது. “என்ன சுதா இது காதைப் பிடிச்சு இழுக்கற? கடிச்சுரும்!”

“பையன் தான் ரொம்ப விஷமம். பொண்ணு சாதுதான்.”

“இந்த ராத்திரியில மன்னிப்புக் கேட்க அனுப்பிச்சிருக்காரே! ட்ரேஞ்ச்மான்!” சாப்பிட்டுவிட்டு, சட்டை மாற்றிக்கொண்டு வெளியே வந்தான். சில்லென்றிருந்தது. தூரத்தே தாமிரபரணி கேட்டுக் கொண்டிருந்தது. மார்க்கர் குடித்து முடித்துவிட்டுத்

தெருவில் எதிரே வந்து மதுமிதாவைப் பார்த்து, "பொட்டைக் கழுதை அப்புறம் மருவாதை கெட்டுப் போயிராது? கெட்டுப் போயிராது! " என்று திரும்பத் திரும்பக் கேட்டான்.

"மார்க்கரா இது?"

"அவன்தான்! ஆனா இப்ப அவன் இல்லை!"

"ஸார்! நீங்க உட்காந்துக்கங்க. டபிள்ஸ் போகலாம்" என்றாள்.

"நோ...நோ நான் நடந்து வரேன்!"

"அப்ப நீங்க ஓட்டுங்க!" என்றாள். சைக்கிளின் முன் பக்கக் குறுக்குக் கம்பியில் உட்கார்ந்துக்கொண்டு ஹாண்டில்பாரைத் பிடித்துக் கொண்டு அவனுக்காகக் காத்திருந்தாள். ரகுபதி சற்றுத் தயக்கத்துடன் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு செலுத்தினான்.

மதுமிதா அவன் மேல் இயல்பாக பட்டாள். அவளிடம் பலவித வாசனைகள் இருந்தன. கொஞ்சம் செண்ட், கொஞ்சம் வியர்வை, கொஞ்சம் ரகுபதிக்கு பரிச்சயமே இல்லாத வாசனை... அவன் முகத்தில் அவள் தலைமயிர் அவ்வபோது பட்டது. ஏற்றத்தில் மிதிக்கும்போது முகம் பட்டது. திருப்பத்தின்போது மார்பு பட்டது. ரகுபதிக்குத் திடீர் காய்ச்சல் வந்தது. ஒரே சமயம் சில்லென்றும் சூடாகவும் உணர்ந்தான். பெண்ணைத் தொட்டதே இல்லை. பத்தடிக்கு உட்பட்டு எந்தப் பெண்ணையும் பார்த்ததே இல்லை. இந்த நெருக்கம் அவனுள் மிகப் புதிய அவஸ்தையைத் தந்தது. இறக்கத்தில் வேகமாகச் சரியும்போது அவள் குதூகலத்துடன் இரண்டு கைகளையும் உயரே தூக்கிச் சற்றே சாய்ந்தபோது ரகுபதி தன் பாலன்ஸ் இழந்ததால் இரண்டு பேரும் விழுந்தார்கள்.

## 4

அந்தப் பெண் சாமர்த்தியமாகத்தான் விழுந்தாள். ரகுபதி கலைந்து விழுந்தான். முட்டியில் சிராய்த்துவிட்டது. நொண்டிக் கொண்டே எழுந்தான். "என்ன இது! சர்க்கஸ் வேலை எல்லாம் செய்யறே?" என்றான் அவளைப் பார்த்து.

"ஸாரி ஸார்! விழுந்திட்டிங்களா?"

"என்னைப் பார்த்தா விழுந்த மாதிரி தெரியலியா?"

"சிரிச்சா கோச்சுக்குவீங்களோன்னு பயமா இருக்கு, உடம்பெல்லாம் புழுதி" என்று அவன் சட்டையைத் தட்டி விட்டாள். ரகுபதி நொண்டலாக சைக்கிளைக் காப்பாற்றி எடுத்து அதைத் தெருவிளக்கு வெளிச்சத்தில் கழுத்தைத் திருகி நேர்படுத்தி, "போகலாமா?" என்றான்.

"உங்களுக்கு அடிகிடி ஏதும் இல்லையே?" என்றாள். சிரிப்பு இருக்கத்தான் இருந்தது குரலில்.

"வெளிச்சத்திலே பார்த்தாத்தான் தெரியும்."

"வீட்டுக்குப் போனதும் டிங்க்சர் போட்டுக்கலாம்."

சுதாகர் முன்னமேயே போய்விட்டதால் இந்தச் சிறிய விபத்து அவனுக்குத் தெரிந்திருக்காது என்று தோன்றியது.

ரகுபதி மெதுவாக சைக்கிளை நடத்தி அழைத்துக்கொண்டு வர அந்தப் பெண் அருகில் வந்தாள். உயரத்தில் அவர்கள் ஜன்னல் கண்கள் தெரிந்தன. நட்சத்திர வானத்தின் பின்னணியில் வீட்டு விளிம்புகள் தெரிந்தன. நிலா அதற்கு ஜரிகை ஓரம் போட்டிருந்தது.

வாசலில் ஜீப் நின்று கொண்டிருக்க, தோட்டத்தில் பிரம்பு நாற்காலி போட்டு வராந்தா வெளிச்சத்தில் அவர் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தார்.

“வாப்பா!” என்றார். குரல் அழுத்தமாக இருந்தது.

“கூட்டிகிட்டு வந்தாச்சுப்பா” என்றாள் மதுமிதா.

“அவர்கிட்ட அப்பாலஜி வாங்கிட்டியா?”

“அதற்கெல்லாம் தேவையில்லை ஸார்! நான் அந்தச் சம்பவத்தை அப்பவே மறந்துட்டேன்.”

“சைக்கிள்ள டபில்ஸ் வந்தோம்பா, விழுந்தோம்” என்றாள்.

“அடடா. அடிகிடி பட்டுச்சா.”

“இல்லை, நான் தப்பிச்சாச்சு.”

“ரொம்ப விளையாட்டுதனமான பொண்ணு. பையன் ரொம்ப குரங்குத்தனம்... நீ கோவிந்தராஜன் பையனா? என்ன பண்றே?”

“பி.ஈ முடிச்சுட்டு வேலை தேடிக்கிட்டுருக்கேன் ஸார்.”

“என்ன ஸப்ஜெக்ட்?”

“டெலிகாம் ஸார்.”

“அட! டெலிகாம்னா எங்கிட்ட ஒரு டெலிமேட்ரி எக்விப்மெண்ட் வந்திருக்கு. வேலை செய்யலை கொஞ்சம் பாக்கறியா?”

“எனக்கு பிராக்டிக்கலா எக்ஸ்பீரியன்ஸ் கிடையாது ஸார்.”

“சும்மா பாரேன். சர்க்யூட் எல்லாம் கொடுத்திருக்கான்..”

“சரி ஸார். நாளைக்குக் காலைல வரேன்.”

“வேலைக்கு எதாவது இண்டர்வ்யூ போயிருக்கியா?”

“எல்லாம் ஆச்சு ஸார். கிடைக்குமா என்கிறது சந்தேகமா இருக்கு.”

“கிடைச்சுரும். இப்பதான் எலக்ட்ரானிக்**ஸு**க்கு நல்ல வாய்ப்புங்கறாங்க.”



www.writersujatha.com

“எல்லாம் சொல்லாங்க ஸார். ஆனா உண்மை வேற மாதிரி இருக்கு. இரண்டாயிரம் பேர் ஃபர்ஸ்ட் கிளாஸ் கிராஜுவேட்ஸே இருக்காங்க!”

“உக்காரு. எதாவது சாப்படறியா? மதுக்குட்டி! இவருக்கு கூல்டிரிங்ஸ் கொண்டு வா.”

“வேண்டாம் ஸார். இப்பத்தான் சாப்பிட்டுட்டு வரேன்.”

“போர்ன்விட்டா, காபி எதாவது?”

“நோ, தாங்ஸ்!”

மதுமிதா உள்ளே போய் அதற்குள் ஒரு கிளாஸில் ஜூஸ் கொண்டு வந்து கொடுத்தாள். கோபிநாத்தின் மனைவி வந்து, “இவர் நல்லா டென்னிஸ் ஆடுவாராம்.”

“அப்படியா! நீ கத்துக்க வேண்டியதுதானே? இந்த வயசில டென்னிஸ் ஆடணும்னு இவ ஆசையைப் பாரு! மாமிகள் டோர்னமெண்ட் எதாவது இருக்கா?”

ரகுபதி கையைப் பார்த்துக் கொண்டு சிரித்தான்.

“மது! நீ இவர்கிட்ட அப்பாலஜி வாங்கிட்டியா?” என்றாள் அம்மா.

“எல்லாம் ஆச்சு” என்றாள்.

“இவ உங்களைப் பார்த்துச் சிரிச்சது ரொம்ப அநாகரிகம். நான் என் குழந்தைகளைக் கொஞ்சம் பொறுப்பா வளர்க்க விரும்புகிறேன். இவர் செல்லம் கொடுத்து ஸ்பாயில் பண்ணி வெச்சிருக்காரு. இன்னிக்கு வலுக்கட்டாயமா போய் மன்னிப்பு கேட்கணும்னு நான்தான் இன்ஸிஸ்ட் பண்ணேன். வயது பத்தொம்பது ஆச்சு. குழந்தைதனமும் துடுக்கும் மாறலை. வீட்டு வேலை ஒண்ணும் தெரியாது. காலைல ஒன்பதரை வரைக்கும் தூக்கம்.”

“மது, இன்னும் விரல் போட்டுக்கறியா?” என்று கோபிநாத் கேட்டார்.

“போங்கப்பா!” என்று அவரை மாரில் குத்தினாள்.

“ஷி இஸ் ஸ்டில் எ சைல்ட்,”

மது அப்பாவின் தோளில் கை ஊன்றிக் கொண்டு நாற்காலி விளிம்பில் உட்கார்ந்தாள். ஒரு கணம் நிலவின் முழு தயவுடன் அவள் முகம் தெரிந்தது. வயிற்றுக்குள் ஒரு சின்ன திடுக்கிடல் ஏற்பட்டது. ‘ஏ ப்யூட்டிஃபுல் சைல்ட்’ என்று எண்ணிக் கொண்டான்.

“நம்ம கோவிந்தராஜ் பையன்.”

“தெரியும். உங்களுக்கு முன்னமேயே அறிமுகமாயிட்டார் இன்ஜினியர்.”

“வேலை கிடைக்காத இன்ஜினியர்” என்றான்.

“எனக்கு டென்னிஸ் வர்ற வரைக்கும் உனக்கு வேலை கிடைக்க வேண்டாம்பா. மார்க்கர் சரியாவே சொல்லித் தர்றதில்லை.”

“மார்க்கர் ட்ரிங்க் பண்ணிட்டு என்னைப் பார்த்து என்னவோ கத்தினாம்பா.”

“காலைல மன்னிப்பு கேக்க வந்திருவான், கவலைப்படாதே. ரொம்பக் குடிப்பான் இல்லை?”

ரகுபதி, “தினப்படி” என்றான். “அப்ப நான் வரட்டுமா?”

“ஸார், கீழே விழுந்துட்டீங்களே ... எங்கயாவது அடிப்பட்டிருக்கா பார்த்துருங்க.”

“கீழே விழுந்துட்டாரா?”

“ஆமாப்பா. சைக்கிள்ள என்னை டபிள்ஸ் வெச்சுக்கிட்டு வர்றப்ப. சொன்னனே!”

“மது! இவரை உள்ள கூட்டிட்டுப் போய் பர்னால் ஏதாவது கொடு, போ!” என்றாள்.

“வாங்க ஸார்!” என்று அவனது கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

ரகுபதிக்குப் பிரமிப்பாக இருந்தது. வராந்தாவில் அறைக் கதவைத் திறந்து, உள்ளே ஹாலில் மென்மையான விளக்குகள் எரிந்துக் கொண்டிருக்க, சுதாகர் லேசான பாட்டுக்கிடையில் ஆஸ்டரிக்ஸ் படித்துக் கொண்டிருந்தவன் இவர்கள் வந்ததைப் பார்க்கவே இல்லை. மாடிப்படிகளில் கயிற்றுப் பாய் மர சப்தத்தை தணித்தது. மதுமிதாவின் அறை போலும். உள்ளே படுக்கையில் புத்தகங்கள் கிடந்தன. ஆளுயரக் கண்ணாடியில் இருவரும் தெரிந்தார்கள். அத்தனை உடைகள் வார்டு ரோபில் தொங்கின. அலமாரியில் மறுபடி புத்தகங்கள், சுவரில் கவாஸ்கர், கமலஹாசன், பிஜீஸ் எல்லார் மேலும் பொறாமையாக இருந்தது. படுக்கையில் ஒரு பெரிய கரடி பொம்மையும் இருந்தது. டியாரைத் திறந்து மருந்து எடுத்து’ “உக்காருங்க. எங்கயாவது அடிப்பட்டிருக்கா பாருங்க” என்றாள். “முழங்கால்தான் கொஞ்சம் சிராய்த்திருக்கிறது” என்று தயக்கத்துடன் பாண்ட்டை உயர்த்தினான்.

“ச்சச் ரத்தம். கொஞ்சம் இருங்க” என்று பஞ்சு கொண்டுவந்து அதை டெட்டாலில் நனைத்துத் துடைத்தாள். ‘ஸ்ஸ்ஸ்’ என்றான். “இந்த வலி நல்லா இருக்கும் இல்லை?” என்று அவனைப் பார்த்து நிமிர்ந்தாள். அவனை படுக்கையில் உட்கார வைத்துவிட்டுத் தரையில் உட்கார்ந்து சிரத்தையுடன் அவன் காயத்துக்கு மருந்திட்டாள். அவளைக் பார்க்க முடிந்தது. மெலிய விரல்கள் அவன் முழங்காலை தொடும்போது அவனுக்கு இதயம் விரைந்தது. வகிடு தெரிந்தது. கையை அசைக்கும்போது மார்பு அசைவது தெரிந்தது. வியர்வை தெரிந்தது. கழுத்தில் மின்னிய மெலிய சங்கிலி தெரிந்தது. அவள் மூக்கு கூர்மையாக இருந்தது. அழுத்தமான உதடுகள். அந்தக் கையை தொட்டுப் பார்க்க வேண்டும் போல இருந்தது. தன்னுடைய நிலையை அவனால் சமாளித்துக் கொள்ளமுடியவில்லை. ஒரு கணத்தில் அவன் ஸ்விட்ச் போட்டதுபோல மாறிருந்தான். இப்போது அவனுக்கு வேலைக் கவலைகள் எல்லாம் அகஸ்தியர் மலையைத் தாண்டிவிட்டன. வேலை கிடைத்துவிடுமோ என்ற புதிய கவலை ஏற்பட்டது. இந்தப் பெண்ணுக்காக ஏழுக் கடல் தாண்ட ஆயுத்தமானான். மனசுக்குள் எத்தனையோ யுகச் சஞ்சாரங்கள் ஏற்பட்டன. உலகத்தில் உள்ள அத்தனை கவிதைகளுக்கும் அவசியம் ஏற்பட்டது. அவன் உடலில் உள்ள ஒவ்வொரு ஸெல்லிலும் மதுமிதா வந்து சேர்ந்துகொண்டாள். இந்தப் பெண்ணை அடைய முடியும்! பெற்றோரிடம் வரவேற்பு இருக்கிறது. சுதந்திரம் இருக்கிறது... ஒருமுறை நிமிர்ந்துப் பார்த்து இயல்பாகச் சிரித்தாள்... இனி இந்தக் கணத்திலுருந்து என் மூச்சின் ஒவ்வோர் இயக்கத்திலும் இவளை அடையும் பாக்கியத்தை குறிக்கோளாகக் கலக்கப் போகிறேன். எனக்கு உள்ளுணர்வு சொல்கிறது. இவள்தான் என் மனைவி! எனக்கு எதிர்காலம் இருக்கிறது. என் படிப்புக்கு வேலை கிடைத்துதான் தீரும். ஸார்! எனக்கு ஐ.டி.ஐ–லே ஆயிரத்து அம்பது ரூபா சம்பளத்தில் வேலை கிடைச்சுருச்சு ஸார். ஸார் எனக்கு எம்.பி.ஏ அட்மிஷன் கிடைச்சுருச்சு ஸார்...”

அவள் அவன் முழங்காலில் டெட்டால் துடைத்து பர்னால் தடவும் இந்த இரண்டு அல்லது மூன்று நிமிடங்களில் ரகுபதிக்கு வேலை கிடைத்தது, கோபிநாத்தை சந்துத்துப் பேசி கல்யாணம் செய்துக் கொண்டு தேனிலவுக்கு வந்துவிட்டான்.

“தோ. சரியாப் போய்டும் ஸார்!”

‘உன் கை பட்டாலே போதுமே!’ என்று சொல்ல நினைத்தான். புன்னகை புரிந்தான்.

அவள் எழுந்து நின்றபோது பத்தொன்பது வயசுக் குழந்தையைப் பார்த்தான். “இந்தப் பொம்மை யாருது?”

“என்னுதுதான்! டெடி அதுக்குப் பேரு!”

“இத்தான் நீ படிக்கிற புத்தகங்களா! ஆர்ச்சி காமிக்ஸ்! இதெல்லாம் வேஸ்ட் ஆப் டைம். நான் நிறைய புத்தகங்கள் ஸஜஸ்ட் பண்றேன், படிக்கிறியா?”

“சரி.”

“நாளைக்கு எங்க வீட்டுக்கு வரியா?”

“சைக்கிள்ளயா?” என்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்புக்காக ‘மதுமிதா, ஐ லவ் யூ’ என்று சொல்ல நினைத்து, பதிலாக “வரட்டுமா?” என்றான்.

எனக்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. திடீரென்று எல்லாப் பொருள்களுமே அழகாகப் பளிச்சென்று தோன்றுகின்றன. ரேடியோவில் அபத்தமான பாட்டுகளுக்கெல்லாம் கண்ணீர் வருகிறது, தொண்டை அடைக்கிறது எனக்குள் அதிகபடியான சக்தி பொங்கிப் பெருகுகிறாற்போல இருக்கிறது. காலம் பறக்கிறது. எப்போதும் ஒரு வித ஜுரம் போல உணர்கிறேன். எனக்கு என்ன ஆயிற்று... இதுதான் காதலா?” டயரியைப் பாதியில் நிறுத்திவிட்டுப் பேனாவை மூடிவிட்டு எழுந்து சிரத்தையாக உடை அணிந்து கொண்டான். தலைவாரிக் கொள்வதில் அத்தனை கவனம், மீசையைத் திருத்துவதில் புதிய சுவாரஸ்யம். ரகுபதி காதல் வசப்பட்டிருந்தான். தலையணைக்கு அடியில் ஒளித்து வைத்தான். முதன்முதல் அவர்கள் வீட்டுக்குப் போகலாம். அங்கே போக ஒரு காரணம் வேண்டும். அந்த டெலிமெட்ரி சாதனத்தைப் பார்க்கும்படி அவர் வர சொல்லிருக்கிறார். அதுதான் சாக்கு. அங்கே மதுமிதாவைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கலாம். எல்லாரையும் கவரவேண்டும்– மதுமிதாவின் அப்பா, அம்மா, ஏன் அந்தத் துடுக்குத் தம்பிப்பையன் சுதாகாரைக்கூட. அப்பாவுக்கு டெலிமெட்ரி, அம்மாவுக்கு டென்னிஸ், ஏன், மதுமிதாவுக்குக் கூட டென்னிஸ் கற்றுக் கொடுக்கலாம். ஒன்–லவ் டூ–லவ் த்ரீ–லவ்!

“ஸார்!”

வீடு அமைதியாக இருந்தது. இந்த வீடு பாக்கியம் பண்ணியது. இதனுள் மதுமிதா வசிக்கிறாள். இதோ வந்து கதவைத் திறக்க போகிறாள்.

“என்ன தம்பி?” என்றான் ப்யூன்.

“வந்து– அவர் இல்லையா?”

“யாரு, பி.ஓ. அவுகளா?”

"ஆமாம்."

"அவரை ஆபீஸ்ல வெச்சு பாக்கலாங்க. அப்பவே போயிட்டாங்க!"

"அம்மா இல்லையா?"

"இல்லைங்க தம்பி."

அடுத்த கேள்வியைக் கேட்கவிடாமல், "எல்லாரும் அருவில குளிக்கப் போயிருக்காங்க."

"அகஸ்தியர் ஃபால்ஸா?"

"ஆமா... பொம்பளையாருங்க குளிக்கிற பக்கம்."

ஏமாற்றத்துடன் திரும்பினான். பிராஜக்ட் ஆபிஸை நோக்கி நடந்தான். புல் சதுக்கத்தைக் கடந்து, ஆஸ்பெஸ்டாஸ் வேய்ந்து ஃபால்ஸ் ஸீலிங் போட்டிருந்த ஆபிஸ் அறை வாசலில் காத்திருந்தான். உள்ளே சீட்டு அனுப்பினான்.

"வரச் சொல்லுதாக."

"வாப்பா! ரகுபதிதானே பேரு? என்ன விஷயம்?"

"ஏதோ டெலிமெட்ரி எக்விப்மெண்ட் சரியா வேலை செய்யலைன்னு நேத்து சொன்னீங்களே, அதைப் பார்க்கலாம்னுட்டு..."

"அட, ஞாபகம் வெச்சிருக்கியே! குட்"... மணிப்பொத்தானை அழுத்தி, வந்த சேவனிடம் "இவரை எம்.ஆர்.டி. ரூமுக்கு அழைச்சுட்டுப் போய்யா. நான் டெலிபோன்ல சாமிநாதன் கிட்டப் பேசிக்கறேன்."

"வாங்க"

"கொஞ்சம் இரு. காபி ஏதாவது சாப்பிடறியா? கொண்டுவரச் சொல்லட்டுமா?

"இல்லை ஸார். எக்விப்மெண்ட்டைப் பார்த்துட்டு அதை ரிப்பேர் பண்ணிட்டன்னா வந்து காபி கேட்டு வாங்கிக்கறேன் ஸார்."

"குட்! ஐ லைக் ஸீரியஸ் மைண்டட் யங்ஸ்டர்ஸ்."

குரோட்டன் பகுதிகளைக் கடந்து அடுத்த கட்டடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அறைமுழுவதும் த்ரீஃபேஸ் மீட்டர்கள் பற்பல சுழன்ற நிலைகளில் இருந்தன.

"வாங்க இப்பதான் பி.ஓ. போன் பண்ணார். நீங்க கம்பெனி இன்ஜினியரா?"

"இல்லைங்க சும்மா பி.இ. பாஸ் பண்ணிட்டுச் சும்மா இருக்கேன். கோவிந்தராஜ் ஸன்."

"ஓ, நீதானப்பா! அதோ எக்விப்மெண்ட். எனக்குப் புத்தகத்தில போட்டிருக்கிறது ஓர் எழவும் புரியலை."

"பார்க்கலாம் ஸார்."

ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாதனம் அது. மான்யுவல் நல்லவேளை ஆங்கிலத்தில் இருந்தது. செட்டிங் எல்லாவற்றையும் பொறுமையாக புத்தகத்தில் கொடுத்திருப்பது போலச் செய்து பார்த்தான். ஸ்விட்சைப் போட்டு பார்த்தான். புத்தகத்தில் இன்ன இன்ன விளக்குகள் எரியவேண்டும் என்று போட்டிருந்தது. ஒன்றுமே எரியவில்லை.

சுற்றிலும் பார்த்து 'அன்புள்ள ஜெர்மனி மிஷினே! தயவு செய்து சரியாய்ப் போய்விடு. சரியாகிவிட்டால் என்னை மதுமிதாவின் அப்பா சிலாகித்து, 'இவனைக்கூட நம்ம மதுமிதாவுக்கு பார்க்கலாம் போல் இருக்கே' என்பார்.

எண்ணங்களைக் கலந்துக் கொண்டு ஃபால்ட் ஃபைண்டிங் பகுதிக்குப் போனான். அந்தப் புத்தகம் திறக்கப்படாமல் பிளாஷ்டிக் உறையில் புதுசாக இருந்தது. லைட்டுகள் ஏதும் வரவில்லை என்றால் முதலில் ஃப்யூஸ் எல்லாம் ஒழுங்காக இருக்கின்றனவா என்று பார்க்கச் சொல்லிருந்தது! ஃப்யூஸ் பானலைத் தேடினான்; திறந்தான். ஒரு ஃப்யூஸ் சரியாக உட்காராமல் தொளதொளவென்றிருந்தது. அதைச் சரியாகத் திருகிப் போட்டான். மறுபடி சுவிட்சைப் போட்டுப் பார்த்தான். பளிச்சென்று எல்லா விளக்குகளும் எரிந்தன. ரகுபதிக்கு நம்ப முடியவில்லை. அதிஷ்டம் என்று சொல்கிறார்களே இதுதான்! கொஞ்சநேரம் புத்தகத்தில் கொடுத்திருந்த 'ஸெல்ஃ செக்' எல்லாம் பண்ணிப்பார்த்தான். ஒழுங்காக வந்தது.

"ஸார்! மிஸ்டர் சாமிநாதன்!"

"என்னப்பா. அட விளக்கும் பளிச்சுன்னு எரியுதே! என்னப்பா செஞ்சே?"

"சர்க்யூட்டைப் பார்த்தேன். கொஞ்சம் சிக்கலான ஃபால்ட்தான்! உங்க பி.ஓ.க்கு போன் பண்ணனும்."

"ஸார்! நான் ரகுபதி பேசறேன். யுவர் எக்விப்மெண்ட் இஸ் ஓக்கே!"

"என்னது! அதுக்குள்ளயா!"

"ஆமா ஸார். ட்ரபிள்**ஷூ**ட் பண்ணிட்டேன்."

"மைகாட்! இதுக்குன்னு ஒரு கம்பெனி இன்ஜினியரை தினத்துக்கு முந்நூறு ரூபா கொடுத்து வரவழைக்கிறதா இருந்தேன். எப்படிப்பா சரி பண்ணே?"

"ஐ வாஸ் ஏபிள் டு டூ இட்! கன்க்ரா**ஜு**லேசன்ஸ்! நான் இப்ப அப்பர் டாம் போயிட்டிருக்கேன். ராத்திரி எங்க வீட்டுக்கு சாப்பிட வா... என்ன?"

"தாங்க்யூ ஸார்."

"வா, எல்லாரும் ஏதாவது கேம்ஸ் ஆடலாம், என்ன?

"தாங்க்ஸ் ஸார்"

வீட்டுக்கு நடக்கும்போது முதலில் அப்பாவைக் கவர்ந்தாகிவிட்டது என்று சந்தோஷத்துடன் மனசுக்குள் பாடிக்கொண்டே சென்றான். எதிரே சுதாகர் மட்டும் வருவது தெரிந்தது. சதாகர் அவனைப் பார்த்ததும் ஓரமாக தழைந்த பார்வையுடன் செல்ல, "சுதா, இங்க வா!" என்றான்.

"யெஸ் அங்கிள்."

“என்கூடவாயேன். உனக்கு ஒண்ணு காட்டணும்.”

“என்ன?”

“எங்க வீட்டுப் பூனைக்குட்டி. ரெண்டு இருக்கு. ஒண்ணு வேணுமா?”

“பூனைக்குட்டியெல்லாம் மதுதான் வெச்சுப்பா!”

“கொண்டு போய் அவகிட்ட குடுக்கிறியா?”

“சரி!” என்று, கூட வந்தான்.

பக்கத்து வீட்டு ஸ்வாமி, சுதாகரைப் பார்த்ததும் மிரண்டு உள்ளே சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டார்.

“ஏன் சுதா அவர் உன்னைப் பார்த்ததும் பயப்படுகிறார்?”

“எனக்குத் தெரியாதே!” என்றான். கண்களில் விஷம் தெரிந்தது.

ஜன்னல் வழியாக ஸ்வாமி எட்டிப் பார்த்தார். “இந்தப் பையனை சேர்த்துக்காதே ரகுபதி. ரொம்ப வாலு.”

“என்ன ஸார் செஞ்சான்?”

“பி.ஓ. பையன்னு ரொம்ப செல்லங்கொடுத்து வளர்த்திருக்காங்க. ரொம்பத் தறுதலை. கிட்டவே சேர்க்காதே! ...”

“என்ன செஞ்சான் சொல்லுமே?”

“அவன் செஞ்ச அக்கிரமத்தை கேட்டா உனக்கு உடம்பெல்லாம் பதறும்... தீபாவளிபோது காலைல கக்கூஸ்ல உட்கார்ந்துக் கொண்டிருக்கேன். ட்ரை லெட்ரின் ...பக்கெட்டுக்குள்ள ஒத்தை வெடியைப் பத்த வெச்சுப் போட்டுட்டு ஓடறான்!”

“நான் இல்லை” என்றான் சுதாகர் முகத்தில் பாவம் மாறாமல்.

“எட்டு நாளைக்கு உக்கார முடியாம சூட்டுப்புண்ணு! டேய்! ஒரு நாளில்லை ஒருநாள் செமையா யார் கிட்டேயாவது உதை வாங்கத்தான் போறே!”

ரகுபதி சிரிப்பை அடக்கிக் கொண்டு, “இவன் ரொம்ப சாது ஸார். அதெல்லாம் செய்யமாட்டான்” என்றான்.

“டேய்! நீ ஒத்தை வெடியை வைக்கலை?”

“இல்லை! யானை வெடி!” என்று சொல்லிக்கொண்டு சுதாகர் ஓடிப்போனான்.

“இந்தப் பிசாசு சகவாசம் வெச்சுக்கவே வெச்சுக்காதே!”

சிரித்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தபோது, அப்பா டயரியைப் படித்துக் கொண்டிருந்தார்.



www.writersujatha.com

ரகுபதியைப் பார்த்ததும் அப்பா உடனே டயரியைப் படிப்பதை நிறுத்தவில்லை. புன்னகை மாறாமல் தொடர்ந்து படித்துக்கொண்டிருந்தார்.

“அப்பா! அதெல்லாம் மற்ற பேர் படிக்கிறதுக்கு இல்லை.”

அவர் அவனை நேராகப் பார்த்துச் சிரித்து, “ஸோ, யூ ஆர் இன் லவ்! நான்கூட உன் வயசில இப்படித்தான் விவஸ்தையே இல்லாம வாரா வாரம் காதல் பண்ணிக்கிட்டு இருப்பேன். ‘ஸ்வர்க சீமா’ பார்த்ததும் பானுமதியை; அப்புறம் காலேஜ் விழாவுக்குத் தலைமை தாங்க வந்திருந்த அதிகாரி கூட அவர் பொண்ணு வந்துருந்தா. அந்த மாதிரி அழகை நான் என் லைஃப்லயே பார்த்தது கிடையாது; அதுக்கப்பறம் மர்லின் மன்ரோ...”

“நீங்க சொல்ற இன்ஃபாச்சுவேஷனுக்கும் நான் டயரியிலே எழுதியிருக்கிறதுக்கும் வித்தியாசம் இருக்கு. உங்களுக்கு சொன்னாப் புரியாது.”

“சொல்லிப் பாரேன்.”

“அதெல்லாம் சொல்ல முடியாதுப்பா.”

“கவிதையா எழுதணும், சித்திரமா வரையணும் அப்படித்தானே?”

“குரல்ல கேலியிருக்கு. உங்களால் புரிஞ்சுக்க முடியாது.”

“இத பார், டயரியில எழுதறத்துக்கு எனக்கு எந்தவித ஆட்சேபணையும் கிடையாது. ஒருத்தருக்கும் தொந்தரவு இல்லாத பழக்கம். ஆனா, காதல் கீதல்னு உன்போல இளைஞர்கள் நம்பறதைப்பத்தி எனக்கு அபிப்ராய பேதம் இருக்கு. காதல் இல்லைன்னு நான் சொல்ல வரல்லை. அது இருக்கிறது என்னவோ நிஜம்தான். என்னைப் பொறுத்தவரையிலும் காதலை நீ சரியா அடையாளம் கண்டுக் கொள்ள தெரிஞ்சுக்கணும். காதலை கடவுள் எதுக்கு வெச்சிருக்கார்? அதையும் சரியாத் தெரிஞ்சுக்கணும். எதுக்கு– சொல்லட்டுமா? உனக்குத் தெரியும்னு நினைக்கிறேன்.”

ரகுபதி தலையாட்டினான். அவனுக்குச் சற்று அவமானமாக இருந்தது. அப்பாவுடன் இப்படியெல்லாம் பேசிக் கொள்வதா! பின்னே இதை யாரிடம் பேசுவது? ஒருநாள் அப்பாவுக்குத் தெரிந்துதானே ஆகவேண்டும்?

“காதல்ங்கிறது Nature’s way of ensuring a pregnancy!”

“நான்ஸென்ஸ்! இது ஏதோ ஒரு ஸினிக் சொன்னது!”

“இல்லை ரகு! கொஞ்சம் நிதானமா யோசித்துப் பார்த்தா உனக்குப் புரியும். நியூயார்க் ஸ்டேட் ஸைக்கியாட்ரிக் இன்ஸ்டிடியூட்ங்கிறது கொலம்பியா ப்ரெஸபிட்டீரியன் மெடிக்கல் ஸென்டர்ல இருக்குது. அதில பயோகெமிக்கல் ரிஸர்ச் பண்ற டேவிட் ஷ்வார்ட்ஸ்ங்கறவர், காதல் வசப்பட்ட நூற்றுக்கணக்கான ஆண், பெண்களைப் பரிசோதனை செய்து, காதல்ங்கிறது வேற ஒண்ணும் இல்லை; நம்ம உடம்பில் ஏற்படற ஒருவிதமான ரசாயன மாறுதல்னு கண்டுபிடிச்சுருக்கார். காதலர்களுடைய யூரின் ஸாம்பிள் எடுத்துப் பார்த்தபோது, எல்லாருக்கும் விதி விலக்கில்லாம ஃபினைல்– எதில் அமின் ஜாஸ்தியா இருக்காம். அந்த வகையைச் சார்ந்தது இது. காதல்ல ஒருவிதமான மயக்கம், ‘பாலும் கசந்தது படுக்கை நொந்தது,’ அதில் உள்ள யூஃபோரியா எல்லாமே ஆம்ஃபிட்டமின் தரக்கூடியதுதான்!”

ரகுபதிக்கு அப்பா இந்த மாதிரி, விஞ்ஞானத்தை வைத்துகொண்டு ஒரு மென்மையான உணர்ச்சியை கொச்சைப்படுத்துவது பிடிக்கவில்லை. பேச்சை மாற்ற எண்ணி, “அப்பா! உங்க ஆபிஸ்ல இருந்த டெலிமெட்ரி எக்விப்மெண்டை ரிப்பேர் செய்துட்டேன்” என்றான்.

அவர் காதலை விடுவதாக இல்லை.

“ஸாரி நான் உன் மனசை புண்படுத்திட்டேன்னு நினைக்கிறேன். அது இல்லை என் குறிக்கோள். காதல்ங்கிறதாலே நம்ம தேசத்தில எத்தனை பண விரயம், கால விரயம், ஆறதுங்கிறதை யோசித்துப் பாரு. எத்ததனை சினிமா! எத்தனை கவிதை! எத்தனை பெருமூச்சு! ஒண்ணுக்கும் உதவாம எத்தனை நேரம் எத்தனை மூலைகளில் காத்திருத்தல்கள்!”

“சரிப்பா, புரியுது.”

“ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே, அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்’னு பாரதி சொன்னதுகூட ஆம்ஃபிட்டமின்தான்னு என் அபிப்ராயம்! ஆல்ரைட், உனக்கு இந்த டாப்பிக் பிடிக்கலைன்னு தெரியுது. இதை நடைமுறையில் சிந்தித்துப் பார்க்கலாம். அந்தப் பெண்ணுக்கு உன்னைப் பிடிச்சிருக்கா?”

“அதெல்லாம் தெரியாதுப்பா. மொத்தமே பத்து வார்த்தைகள்தான் பேசிருப்பேன்.”

“முதல்ல வேலை கிடைக்கிறதைப் பாரு. வேலை கிடைச்சிருச்சின்னா தானாகவே அந்தஸ்து வரும், காதல் மன்னிக்கப்படும். கோபிநாத் என்ன ஜாதின்னு விசாரிக்கணும் முதல்ல.”

“அதெல்லாம் இப்ப யாரும் பார்க்கிறதில்லை.”

“உனக்குத் தெரியாது! வெளிப்படையா கோபிநாத்தே சொல்வார். சாதியாவது ஒண்ணாவதுன்னு. ஆனா, தனக்குன்னு வர்றப்ப கதை மாறிடும். மீராவுடைய கவிதை படிச்சிருக்கில்ல?

**“உனக்கும் எனக்கும் ஒரே ஊர். வாசுதேவநல்லூர்.**
**நீயும் நானும் ஒரே மதம். திருநெல்வேலி சைவப்பிள்ளைமார் வகுப்புங்கூட.**
**உன்றன் தந்தையும் என்றன் தந்தையும் சொந்தக்காரர்கள்–மைத்துனன்மார்கள்.**
**எனவே– செம்புல் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சம் தாம்கலத்தனவே!”**

அப்பா புறக்கடைப் பக்கம் சென்றார். ரகுபதிக்கும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. ‘சரியான அப்பாப்பா நீங்க! படிக்கிற புஸ்தகமெல்லாம் தப்பான புஸ்தகங்கள்!’ டயரியை எடுத்து, தான் எழுதியிருந்ததைப் பார்த்தான். இப்போது கொஞ்சம் ஸில்லியாக இருந்தது. எல்லாமே ஆம்ஃபிட்டமின்! சேச்சே! அப்பா பேச்சைக் கேட்டால் கவிதை கலந்த வஸ்த்துகள் எதுவுமே இருக்க முடியாது. என்னென்னவோ ஏகத்துக்குப் படித்துவிட்டுக் குழப்புகிறார். பாரதி காதலைப் பற்றி எழுதியிருப்பதை முழுவதும் படிக்க வேண்டும். எதற்குப் படிக்க வேண்டும்? என் உடல், உள்ளம் பூராவும் உணர்கிறேனே! இந்தக் கணத்திற்காக நான் இத்தனை வருஷம் காத்திருக்கிறேன். நான் வளர்ந்த விதம், சூழ்நிலை இதற்கேற்ப எனக்குப் தீட்டப்படாமல் உருவாகியிருந்திருக்கிறது. இந்த கணத்தில் திடீரென்று ‘ஃபோகஸ்’ ஆனது போல், ‘இவள்தான்’ என்று அடையாளம் காட்டிவிட்டது, இவள்தான்! இவள்தான்!

பாத்ரூமிலிருந்து, “முதல்ல பெண்ணோட அப்பாவை இம்ப்ரெஸ் பண்ணிட்ட! என்னை மத்தியானம் கூப்பிட்டுச் சொன்னார், ‘உங்க பையன் ரொம்ப புத்திசாலி, ஒரு நிமிஷத்தில ரிப்பேர் பண்ணிட்டானே’ன்னு”

வெளியே வந்தபோது ரகுபதி டென்னிஸ் ஷார்ட்ஸ் அணிந்திருப்பதை பார்த்து, “அம்மாவுக்கு டென்னிஸா? பெஸ்ட் ஆஃப் லக்!” என்றார்.

“நான் எப்பவும் டென்னிஸ் ஆடுவேன், தெரியுமில்லையா உங்களுக்கு?”

“தெரியும் விளையாட்டுக்குத்தான் சொன்னேன். உன்னை டின்னருக்குக் கூப்பிட்டுருக்காராமே?”

“ஆமாப்பா...!”

“இதுவரை எல்லாம் கரக்டாத்தான் எல்லாம் நடந்துகிட்டு இருக்கு. பொண்ணைக் கொடுக்க சம்மதிச்சாலும் சம்மதிச்சுருவார்! ஒரு வேலை கிடைச்சுருச்சின்னா போதும்!”

ரகுபதி சாயங்கால நிழலில் வெளிவந்து டென்னிஸ் கோர்ட்டை அடைந்தான். முனுசாமி திருமதியுடன் ஆடிக்கொண்டிருக்க, அவனைப் பார்த்ததும் “இதோ தம்பி இம்புட்டுத் தேசாலம் உங்களுக்காகதான் காத்திருந்தாங்க! இப்ப இவருக்கூட ஆடுங்கம்மா, எனக்கு சோலியுண்டு...”

“என்ன சோலி முனுசாமி சாராயம்தானே?”

“சேச்சே! சவத்தை விட்டுப் போட்டங்கம்மா?”

“நேத்திக்கு ராத்திரி குடிச்சுட்டு தெருவில என்னஎன்னவோ பேசிக்கிட்டு வந்தியாமே?”

“ஆ! அது நான் இல்லைங்க..”

“நீ இல்லைதான்! குடிச்சா வேற முனுசாமி! கொஞ்சம் ஜாக்கிரதையாவே இரு. வேலை போயிரும்.”

திருமதி கோபிநாத் ரகுபதியையே பார்த்துக் கொண்டிருக்க, “விளையாடலாமா?” என்றாள். ரகுபதிக்கு அருகில் சென்று, “முதல்ல ராக்கெட்டை எப்படி பிடிக்கிறதுன்னு சொல்லித் தரேன், இஃப்யூ டோண்ட் மைண்ட்” என்றான்.

“நாட் அட் ஆல்..”

அம்மாவிடமும் பெண்ணின் வாசனை இருப்பதை உணர்ந்தான். அவள் கழுத்தில் ஒரே ஒரு தங்கச் சங்கிலி மின்னிய இடத்தில் ஒரு சிறு தழும்பு இருப்பதைப் பார்த்தான். கைகள் மென்மையாக இருந்தன. விரல்பட்டபோது அவள் இயல்பாக இருந்தாள். குரலில் கூட அம்மாவுக்கும் பெண்ணுக்கும் ஒற்றுமை இருந்தது. “மதுக்கூட கத்துக்கலாமே!”

“வரச் சொல்லிருக்கேன். அது சோம்பேறி, கத்துக்காது.”

“வேற ஏதாவது கேம்ஸ் ஆடுவாளா?”

“ஒண்ணும் தெரியாது. எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் கத்துகிட்டு விட்டுருவா, ஸ்திர புத்தி கிடையாது. மெட்ராஸ்ல இருக்கறப்ப பரதநாட்டியம் கத்துக்க ஆறு மாசம் அனுப்பிச்சேன். வாத்தியாரைக் கிண்டல் பண்ணினா எங்க வரும்? அது மாதிரிதான் பாத்திக், ம்யூசிக் எதிலயும் சிரத்தை இல்லை!”



www.writersujatha.com

“எதிலயாவது சிரத்தை இருந்துதான் ஆகணும், அதை கண்டுபிடிச்சு...”

“நல்லா தூங்குவா. நிறைய கன்னாபின்னா புஸ்தகமெல்லாம் படிப்பா.”

“எனக்குக்கூட புஸ்தகம் படிக்கிறது பிடிக்கும். நிறைய புஸ்தகம் இருக்கு வீட்டில.”

“சொல்லாதீங்க. உங்க வீட்டை படையெடுத்துருவா.”

“பரவாயில்லை, வரட்டுமே!”

“வரா பாருங்க.”

“அம்மா! மெட்ராஸ்ல இருந்து யாரோடயோ பேசணும்னு டிரங்கால் போட்டிருந்தாயாமே?”

“ஆமா!”

“இங்க வந்துட்டா எப்படி?”

“ஓ ஸாரி! மறந்தே போயிட்டேன் மது, இவர் கூட பேசிக்கிட்டு இரு. நான் போய் அஞ்சு நிமிஷத்துல வந்துர்றேன்.”

“மெதுவா வாங்க!”

மதுமிதா, “குட் ஈவினிங்!” என்றாள். கோர்ட்டில் இருவரும் தனியாக இருக்க, ரகுபதிக்குள் ஆம்ஃபிட்டமின் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது.

“கால்ல அடி எப்படி இருக்கு, சரியாப் போச்சா?”

“சரியாப், போச்சு” என்கிறது காதில் விழாமல் சொன்னான். “டென்னிஸ் கத்துக்கறியா மதுமிதா?”

“முதல்ல நேரா என் கண்ணை பார்த்து பேசுங்க...”என்றாள்.

அவளை நிமிர்ந்து நேராகப் பார்த்தான். அந்தக் கண்கள் அவன் மேல் குறுகுறுத்தன. பயமாக இருந்தது.

“எனக்கு டென்னிஸ் கத்துக்கொடுக்க உங்களுக்கு பொறுமை இருக்குமா?”

“எனக்கு அதைவிட வேற வேலை என்ன?”

“இந்த ஸர்ட் எனக்கு நல்லா இருக்கா ஸார்?”

தன் சட்டையை இறுக்கப் பிடித்துக் கொண்டு டிரில் போல் நின்று காட்டினாள்.

“பிரமாதம்!” என்றான். அவள் மார்பை பார்த்ததை அவள் பார்த்திருப்பாளோ என்று கவலைப்பட்டான்.

நிமிர்ந்து பார்த்துச் சிரித்தாள்.

“உனக்கு எல்லா ட்ரஸ்**ஸு**ம் நல்லாவே இருக்கு.”

"சுதா ரொம்ப கலாட்டா பண்ணான். குதிரைக்குட்டி மாதிரி இருக்குன்னான்."

"சேச்சே.."

"என்னை குண்டுன்ங்கறான் ஸார். நான் குண்டாவா இருக்கேன்?"

"சேச்சே... !"

நெஞ்சைத் தொட்டு, "இங்க குண்டாயிட்டேனாம்! அம்மா சொல்றாங்க–இந்த வயசுக்கு இப்படித்தான் இருக்கணுமாம். ஸார்! ஐ டோண்ட் வேர் ப்ரா, தெரியுமா?"

சுதாகர் சைக்கிள் ஓட்டிக் கொண்டு கோர்ட்டுக்குள்ளே வந்து சர்ரென்று தேய்த்து நிறுத்தினான். "மது. அம்மா கூப்பிடறா!"

"ஹலோ சுதாகர்!"

"பக்கத்துவீட்டு மாமா இருக்காரா?" சுதாகரின் பார்வை ஓர் இடத்தில் நிற்காமல் அலைந்தது.

"இருக்கார். உன்னைக் கண்டா பயப்படறார். தீபாவளியின் போது என்ன செஞ்ச?"

"ஒண்ணும் செய்யலை" என்றான். மதுமிதாவின் பின்னலை இழுத்தான்.

"டுன் டுன்!"

"வேலைக்கார பொண்ணுக்கிட்ட நீ கேட்டுகிட்டு இருந்ததைச் சொல்லட்டுமா இவர்கிட்ட?"

இதைக் கேட்டதும் சுதாகர் சைக்கிளில் பாய்ந்து ஓடிப் போய்விட்டான். மது அவன் போன திசையைப் பார்த்துச் சிரித்தாள்.

"என்ன சொன்னான்?"

"சேச்சே! சொல்ல மாட்டேன்... ரொம்ப மோசம் ஸார். ஹீ யூஸஸ் ஹாரிபிள் வர்ட்ஸ். எங்க கத்துக்கிட்டானோ தெரியலை.. "

"என்னை ஸார்னு கூப்பிடாத மது...!"

"பின்ன, உங்க பேர் சொல்லியா?"

"ஆமாம்... சொல்லு– ரகுபதி."

'ரகுபதி! ரகுபதி –மதுமிதா' சொல்லிப் பார்த்தாள்.

"ரகுபதி ஸார்னு கூப்பிடறதா?"

"வேண்டாம். 'ரகுபதி' போதும். 'ரகு'ன்னு சுருக்கினாக் கூடப் பரவாயில்லை."

"சரி" என்று குதித்துக் கொண்டு ஓடினாள். தட்டிக்குப் பின் மறைந்தவள் சற்று நேரத்தில் மறுபடி தோன்றி "ரகு" என்று கூப்பிட்டாள்.

“என்ன?”

“சும்மா கூப்பிட்டுப் பார்த்தேன்.”

“என் வீட்டுக்கு வரியா” என்று கேட்டது காற்றில் போயிற்று. குறுக்குப் பாதையில் வீட்டை நோக்கி மலை ஏறி விட்டாள். ரகுபதி ஓர் இன்ச் உயரத்தில் மிதந்துச் சென்று வீட்டுக்கு வந்தான். மதுமிதாவைத் திறந்து, முகத்தில் மதுமிதாவைக் இறைத்துக் கொண்டு, மதுமிதா போட்டுக் கழுவிக் கொண்டு, மதுமிதாவால் துடைத்துக் கொண்டு, மதுமிதாவைத் திறந்து மதுமிதாவைப் படித்தான்.

“அப்பா வரலை?”– அந்தப் பெண் காரியரில் சாப்பாடு கொண்டு வைத்தாள். இடுப்பில் குழந்தை அவளுடன் ஒட்டிக்கொண்டிருந்தது.

“உன் பேர் என்ன?”

“ஜெயந்தி மாமா.”

“என்னை மாமான்னு கூப்பிடாதே.”

“பின்னே பேர் சொல்லியா கூப்பிடுவா?”

“எப்படியோ! மாமான்னு கூப்பிடாத!”

“அண்ணான்னு கூப்பிடவா? பரவால்லையா?” அந்தப் பெண் தரையில் உட்கார்ந்துக் கொண்டு தன் குழந்தையின் சின்ன விரல்களை ஆராய்ந்தாள். அப்பனைப் போலவே வாச்சையாக விரல்.

“ஏண்டா, நீயும் என்னைத் துரத்தி விட்டுருவியாடா?”

குழந்தை சிரித்தது.

“சிரிக்கிறான் பாரு. இப்படிதான் இவப்பாவும் முதல்ல சிரிச்சுச் சிரிச்சு நைச்சியம் பண்ணி வளையெல்லாம் வாங்கிண்டார்.”

அவள் கழுத்தில் மஞ்சள் கயிறு மட்டும் தெரிந்தது, மூன்று இடங்களில் தழும்புகள் தெரிந்தன. “உப்பு இன்னிக்கு கம்மியா போட்டிருக்கேன். அப்பா வந்தா சொல்லுங்கோ. அப்பா எப்ப வருவார்?”

“தனியா போகப் பயமா இருக்கு. முனுசாமி குடிச்சுட்டு எதித்தாப்பல வந்தா மேல கையைப் போடறான். அப்பா இருந்தா வீடுவரை கொண்டு விடுவார்.”

“சாப்பிட்டுட்டு கொண்டு விடறேன்.”

“அப்பா மாதிரி நல்லவர் கிடையாது. இவனுக்கு சட்டை தெச்சுக் கொடுத்தார். பழைய பெட்ஷீட் ஏதாவது இருக்கா அண்ணா? ராத்திரி குழந்தை தரையில் படுத்துக்கறது.”

“அப்பா வரட்டும். பார்த்துக் கொடுக்கச் சொல்றேன்.”

“இந்த குட்டி ரேடியோ உங்களுதா?”

“ஆமா...”

“அப்ப உங்காத்திலே ரெண்டு இருக்கு போல இருக்கு! அண்ணா, இது வெலை ரொம்ப சொல்வாளோ?”

“நீ ப்ராஜக்ட் ஆபீசர் வீட்டுக்குப் போயிருக்கியோ?”

“ஓ... கைக்காரியத்துக்குப் போயிருக்கேன். இன்னிக்குக் கூடப் போயிருந்தேனே. உங்களைப்பத்திதான் ரெண்டு பேரும் பேசிண்டிருந்தா...”

“யாரு?”

“மாமாவும் மாமியும். அவாத்தில ஒரு பொண்ணு இருக்கு. பேரு வாயில நுழையலை... அதுக்கு உங்களைப் பார்க்கறானு நினைக்கிறேன்?”

“ஏய்! உளறாதே! பொய்...!”

“இல்லை அண்ணா, நிசம்மா. இதோ, இவன் சத்தியமா” என்று குழந்தை தலையில் அடிக்க, அது ‘கக்’ என்று வெள்ளையாகக் கக்கி அம்மாவைப் பார்த்துச் சிரித்தது.

“என்ன பேசிக்கிட்டாங்க...”

“நம்ம பொண்ணுக்கு இந்தப் பையன் பொருத்தமா இருப்பான் போல இருக்குன்னு. நான் முற்றத்திலே அப்பளம் இட்டுண்டே கேட்டிருந்தேன். பெரியவர் சொல்றார், ‘அது குழந்தை; கல்யாண வயசாகலை’ன்னு. மாமியானா ‘இதுக்குப் படிப்பு சரியா வரலை. நல்ல இடமா வந்ததுன்னா கல்யாணத்தைப் பண்ணிப்புடலாம்’னு சொன்னா. வாஸ்தவம்தானே.”

“என்னைப் பத்தி என்ன சொன்னா?”

“நல்ல பையன். அழகா பாந்தமா இருக்கான். நல்ல குடும்பம். ஒரு வேலை கிடைச்சுடுத்துன்னா இவனை விடவா நல்ல இடம் நமக்குக் கிடைக்கப் போறது?’ன்னா”

ரகுபதி உள்ளே சென்று மரப்பெட்டியை அவசரமாகத் திறந்து அதில் உள்ள பெட்ஷீட்களையெல்லாம் உருவித் தேர்ந்தெடுத்து “இந்தா, வெச்சுக்கோ!” என்றான்.

அவள் கண்கள் விரிந்தன, “இந்தாடா! அண்ணா குடுக்கறா, வாங்கிக்கோ” என்றாள். குழந்தையை பெட்ஷீட் மறைத்தது.

“அப்புறம் குட்டி ரேடியோ?” என்றாள்.

“பாட்டரி போட்டுக் கொடுக்கறேன்.”

அவன் சாப்பிட, குழந்தையைத் தட்டித் தூங்கப் பண்ணிவிட்டு, சாப்பிட பாத்திரங்களை எடுத்து அலம்பி, அடுக்கிப் படுத்தாள். பெட்ஷீட்டைக் குழந்தைக்குப் போர்த்தி மெலிசாக பாடிக்கொண்டிருந்தாள்.

“என்ன ஜெயந்தி, இங்க படுத்துண்டுட்ட? வீட்டுக்கு போகலை?”

“உங்களுக்குத்தான் காத்திண்டிருக்கேன் மாமா. உங்க புள்ளையோட பேசிண்டிருந்தேன். குழந்தைக்கு பெட்ஷீட் கொடுத்தார். அவருக்கு உங்களைப் போல தாராள மனசு...”

"பெட்ஷீட்டா, எதுக்குடா கொடுத்தே? இதுவரைக்கும் இவளுக்கு மூணு பெட்ஷீட் கொடுத்தாச்சு. ரகு, இவ சொல்றதையெல்லாம் நம்பாதே. நிஜம் போல பொய் சொல்லுவா, உங்ககிட்ட என்ன சொன்னா?"

"ஒண்ணுமில்லை மாமா."

ரகுபதி சிரித்து, "மதுமிதாவை எனக்குக் கல்யாணம் செய்து கொடுக்கறதா அவங்க வீட்டில் பேசிக்கிட்டதா சொல்லிச்சு!"

"பேகன் மாதிரி குடுத்திட்டியா! அவங்க வீட்டிலே இவ நுழைஞ்சதே கிடையாது! உடம்பெல்லாம் பொய். ஏய்!" என்று அவள் காதைத் திருகினார். "உம் புருசன் அதாண்டி உன்னை விரட்டி விட்டுட்டான்."

"இல்லை மாமா, அடி தாங்காமதான் வந்துட்டேன். பாருங்க மாமா, கழுத்தெல்லாம் தழும்பு..." என்று கழுத்தை காட்டினாள்.

"இது கூட எவ்வளவு நிஜமோ! ஒரு நாள் உன்னைப் பிடித்து சோப்பு போட்டு தேச்சா தழும்பு காணாம போனாலும் ஆச்சரியப்பட மாட்டேன். வா ரகு! இதை கொண்டு விட்டுட்டு வந்துரலாம்."

"நீங்க போங்கப்பா. எனக்குக் கொஞ்சம் காரியம் இருக்கு."

"என்ன, டயரி எழுதணுமா? இன்னிக்கு என்ன ப்ராக்ரஸ்?"

"இல்லை, பனியன், ஸாக்ஸ்ஸெல்லாம் தோச்சிறலாம்னு பார்க்கறேன்."

"அண்ணா, நான் உங்ககிட்ட சொன்னதெல்லாம் நிஜம்!"

"பொய்யாமொழி, வா!" என்று அவளை விரட்டிக் கொண்டே அப்பா அழைத்துச் செல்ல, ரகுபதி தனியாக இருக்க விரும்பினான். 'ரகுபதி மதுமிதா' ரகுபதி மதுமிதா' என்று சுதந்திரமாகச் சொல்லிப் பார்த்துக் கொண்டான். மூஞ்சியில்லாத பவர் ஸ்டேஷன் டெலிபோன் ஒலித்தது.

"ஹலோ!" என்றான்.

"ரகுபதியா?" என்றாள். அவள்தான்!

"என்ன மது...?"

"அம்மா உங்களைக் கேட்கச் சொன்னா, நாளைக்குப் பாண தீர்த்தம் வரீங்களான்னு?"

"யார் யாரு?"

"சுதா வரமாட்டன்னு தகராறு பண்ணிக்கிட்டிருக்கான். நீங்க எங்ககூட தனியா வருவிங்களா?"

"சரி..."

"அருவில குளிக்கலாம், என்ன?"

"சரி..."

"உங்ககிட்ட சரிங்கறதைத் தவிர வேற வார்த்தையே கிடையாதா?"

"வேற என்ன சொல்லணும்?"

"ஐ லைக் மது'ன்னு... !"

அப்பா திரும்பி வந்து சற்று நேரம் படித்துவிட்டு விளக்கணைத்ததும் இருட்டில் பெரிசாக விழித்துக் கொண்டிருந்தான் ரகுபதி. புரண்டு படுத்தான். தூக்கம் ஒரு மைல் தூரம் இருந்தது. மனத்தில் அருவி பாய்ந்தது. அதில் மதுமிதா தன் அவயங்களைச் சோம்பேறித்தனமாக அசைத்துக் குளித்தாள். அவ்வபோது அருவியின் சாகசங்களுக்கிடையில் தெரிந்தாள். அவனைப் பார்த்து சிரித்தாள். 'கொஞ்சம் அந்த பக்கம் திரும்பிக்கங்க, நான் ஷர்ட் மாத்திக்கணும்.' எழுந்து விளக்கைப் போட்டுக் கொண்டான். அந்தப் பெண்ணின் எண்ணங்களை விரட்டுவது இயலாத காரியமாக இருந்தது. தம்ளர் தண்ணீர் சரித்துக் கொண்டான். அடுத்த அறையில் குறட்டை கேட்டது. அப்பா காதலித்திருப்பாரோ? கேட்க வேண்டும். இவள் என் பர்ஸனாலிட்டிக்குச் சரியான நேரெதிர்! நான் சங்கோஜி. இவள் எல்லாருடனும் பழகுகிறாள். நான் தொடவே தயங்குகிறேன். இவள் சுபாவமாகப் படுகிறாள். என்குணங்களில் இருக்கும் குறைபாடுகளை எல்லாம் இவள் நிரப்புகிறாள். எனக்குத்தான் இவள் கிடைக்க கூடியவள். இதோ, என் கை நீட்டலின் அருகே இருப்பவள். சே! இரண்டு நாளில் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். ஆனாலும் இப்படி எப்போதும் அவள் நினைவாக இருக்கக் கூடாது. எனக்கு இன்னும் எத்தனையோ சாதிக்க வேண்டிருக்கிறது. முதலில் வேலை கிடைக்க வேண்டும். சம்பாதிக்க வேண்டும். காசு சேர்க்க வேண்டும் மதுமிதாவை...சட்!

புத்தகத்தை எடுத்துப் புரட்டினான்.

"ஆண் தேனீ தன் ஜோடிக்குப் பளபளக்கும் மணல் துகள்களையும் பூவிதழ்களையும் கொண்டு வந்து கொடுக்கிறது. சிலந்திகள் தம் காதலைக் காட்டப் புதுப்புதுக் கோலங்கள் வரைந்து பல்ட்டி அடித்துக் காட்டுகின்றன. தேள் தன் காதலியைக் கையைப் பிடித்துக் கொண்டு பின் பக்கமாக 'வாக்' அழைத்துச் செல்கிறது. பெங்குவின் பறவை தன் காதலிக்கு செர்ரி பழங்களைச் சேகரித்துக் கொண்டு அழகான தன் வாயில் போடுகிறது. பெண்ணுக்கு இஷ்டமிருந்தால் பழத்தை ஆண் பறவையின் வாயில் திரும்ப வைத்து விடுகிறது! இரண்டும் ஒரு மரக்கிளையில் உட்கார்ந்துக்கொண்டு உற்சாகமாக அந்தப் பழத்தை மாற்றி மாற்றிப் பரிமாறிக் கொண்டு பொழுது போக்குகின்றன. நீலக் குருவியின் காதலன் அதற்கு நீலத்திலேயே கூழாங்கற்கள், மலர்கள் எல்லாம் எடுத்து வந்து கொடுக்கிறது. இயற்கையில் எங்கு பார்த்தாலும் காதல்தான் இருக்கிறது."

"அப்பாவின் பூச்சிகள், பறவைகள் பற்றிய புத்தகம் கூடக் காதல் என்கிறது!"

புத்தகத்தை மூடி வைத்துவிட்டு ரகுபதி கண் மூட, தன் சிறகுகளை செகண்டுக்கு 75 தடவை அடித்துக்கொண்டு வார்த்தையில்லாத காதல் கீதம் பாடி, அறுபது அடி உயரதுக்கு எவ்விப் பறந்து, ஒரு கணம் அந்த உயரத்தில் ஸ்திரமாக நின்று, அடுத்த கணம் சரேல் என்று சரிந்து மரக்கிளையில் உட்கார்ந்திருக்கும் மதுமிதாவுக்கு எதிராக சட்டென்று ப்ரேக் போட்டது போல அந்தரத்தில் நின்று இரண்டு இறக்கைகளும் துடிக்க, பற்ற வைத்த தங்கச் சொப்பைப் போல அவள் முன்னால் நடனமிட 'ரகுபதி மதுமிதா, தனதன தனதன' என்று அத்தனை பறவைகளும் தேனீக்களும் ஆரவாரிக்க...

தூங்கிப் போனான்.

"குட்மார்னிங்! குட்மார்னிங்!"



www.writersujatha.com

கண்களில் சூரியன் உறுத்து விழித்தபோது பளிச்சென்று மதுமிதா நின்று கொண்டிருந்தாள்.

“என்ன அது! இன்னும் தூங்கிக்கிட்டுருக்கீங்க? எங்ககூட வரதா சொல்லியிருந்தீங்களே! குட்மார்னிங்! அங்கிள்! இப்படிதான் தினம் தூங்குவாரா?”

“இன்னிக்குக் கொஞ்சம் சீக்கிரம்.”

“எந்திரிங்க எந்திரிங்க!” –அவன் போர்வையை உதறி எறிந்து அவன் விலாவில் குத்தினாள். தலையைக் கலைத்து விளையாடினாள். ரகுபதிக்கு வேஷ்டி சற்று முழங்காலில் விலகியிருந்ததால் வெட்கமாக இருந்தது. அறைக்கு ஓடினான். வாசலில் ஜீப் “பீப் பீப் ” என்றது. “கமிங் கமிங், என்றாள். “நீங்க வரீங்களா அங்கிள்?”

“எங்கம்மா?”

“பாண தீர்த்தம் போறோம்...”

“சரிதான். உங்ககூட வந்தா உங்கப்பா என்னை வீட்டுக்கு அனுப்பிச்சுருவார்!”

“வீட்லதானே இருக்கிங்க!” என்று அருவிக்கு அறிமுகமாகச் சிரித்தாள்.

“ரொம்ப அறுவை ஜோக் சொல்லுவே போல இருக்கே...”

“அருவி ஜோக்”

கண்களில் நீர் வரச் சிரித்தாள். அப்பா தலையில் அடித்துக் கொண்டார். ரகுபதி அவசரமாக ஷேவ் பண்ணிக் கொண்டபோது எட்டிப் பார்த்தாள்.

“எதுக்கு ஸார் ஷேவ்? அங்கிள்! இவருக்கு கல்யாணம் ஆயிடுத்தா?”

“இல்லையம்மா. உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்க யோசிச்சிட்டிருக்கான்.”

“ஹய்யோ!” என்று கையைக் உதறிக் கொண்டாள்.

முகம் கழுவிக் கொண்டு வெளிவந்தவனை ஏற இறங்கப் பார்த்தாள். ‘ஷேவ் பண்ணப்பறம் சுமாரா இருக்காரு. கல்யாணம் செய்துக்கலாம் போலத்தான் தோணுது.”

“உன்னைப் பத்தி டயரியில எழுதியிருக்கான்.”

“எங்க காட்டுங்கப் பார்க்கலாம்?”

“அப்பா! தேர் இஸ் எ லிமிட் டு ஆல் திஸ்!” ரகுபதி அதட்டினான்.

“என்ன இது, அப்பாவை அதட்டறீங்க? ஹூம். உங்களை நான் கல்யாணம் செய்துக்க மாட்டேன்.”

வாசலில் மறுபடி ஹார்ன் ஒலிக்க, “வரீங்களா... முதல்ல குளிப்போம். அப்புறம் கல்யாணம் செய்துப்போம்” என்றாள். ரகுபதி கட்டுப்பட்டவன் போல அவள் பின் சென்றான். முன் ஸீட்டில் உட்கார்ந்தாள். “இடம் இருக்கு. நீங்களும் உட்காரலாம்.”

மண் பாதையில் புழுதி தொடர பள்ளிச் சிறுவர்கள் கொஞ்ச நேரம் துரத்தினார்கள். அப்பர் டாம் சாலையில் திரும்பியதும் யூகலிப்ட்ஸ் மரங்கள் துரத்தின...

ஜீப் ஆட்டத்துக்கு ஏற்ப மதுமிதா அவன் மேல் படப்பட ரத்த உஷ்ணம் அதிமாகி, தார் ரோட்டைச் சபித்தான். திருப்பங்களை வாழ்த்தினான். சிகரெட் பிடிப்பதை நிறுத்தி விடப் போகிறேன் என்று தீர்மானித்தான். முத்தமிட்டால் வாசனை பிடிக்காமல் இருக்கலாம். ஆள் காட்டி விரலுக்கு அருகில் சின்னதாக பிளாஸ்டர் போட்டிருந்தது.

“கைல என்ன?”

“சுதா பிளேடை வைச்சுக் கீறிட்டான்.”

“ஸ்ஸ்! ரொம்ப வலிச்சுருக்குமே?”

“இல்லை.”

அப்பர் டாம் நிரம்பித் ததும்பிக் கொண்டிருந்தது. பட்டர்ஃப்ளை வால்வு வழியாகத் தண்ணீர் வெள்ளை மயில் தோகை போல விசிறியடித்துக் கொண்டிருந்தது. “ஏறி உக்காந்துக்கலாம் போல இருக்குல்ல?”

மோட்டார் படகு மௌனத்தை அநியாயமாகச் சீறிக்கொண்டு செல்ல தண்ணீர் திவலைகள் இடக்கையால் அலசிக் கொண்டே எதிரே உட்கார்ந்திருந்த மதுமிதாவை வெள்ளத்தில் நீந்திக் காப்பாற்றினான். எதிரே பச்சை இருட்டில் கானகம் தெரிய மதுமிதாவை புலியினின்றும் காப்பாற்றினான். மோட்டார் மீசைக்காரன் பவ்யமாக நின்றுக் கொண்டே ரட்டர் செலுத்த, அவன் ஒரு கணம் நின்று மதுமிதாவின் கையைப் பிடித்து இழுக்க, ரகுபதி பாய்ந்து அவன் தாடையில் ஒரு டிஷ்யூம் கொடுத்து வெள்ளத்தில் கவிந்துக் காப்பாற்றினான்.

அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

“மதுமிதா ஐ லவ் யூ!

“வாட்?” என்றாள் மோட்டார் படகின் இரைச்சலில்.

“அப்புறம் சொல்றேன்!”

“கேக்கலை” என்று அபிநயம் செய்தாள்.

எதிர்க் கரையைக் அடைந்து காட்டு ரகசியத்தினூடே கொஞ்சம் போலக் நடந்து அருவியை அணுகுவதற்கு முன்னே அதன் ஓசை ஒல்லியான வெள்ளி விழாப்போல ஆரவாரித்தது.

ஸ்பெக்ட்ரம் பிரிந்து இலவசமாக ஒரு வானவில். மதுமிதா உற்சாகம் பொங்க அதனருகில் ஓடினாள். “தம்பி! குளிக்க கிளிக்க வேண்டாம்னு சொல்லுங்க. அய்யா கேட்டார்னா கோவிச்சுப்பாங்க! அந்தம்மா பாட்டுக்குக் கன்னுக்குட்டி மாதிரி ஓடுது. அருவி ஃபீடா வரும். இந்த வேளையில குளிக்க முடியாது. அருகாலே போனாலே அடுச்சுப் போட்டுரும்!”

“அம்மா! கிட்டப் போவாதிங்க! சொன்னா கேளுங்க! “அவளைக் கட்டுப்படுத்த முடியாது. இப்போது அவள்தான் அருவி! பக்கத்தில் நின்றாள். சிதறலில் நனைந்தாள். “மது! கிட்டப் போகாதே! ஃபோர்ட்ஸ் ஜாஸ்தி! குளிக்க முடியாது!”

ஒரு கிளையருவி கோபம் இல்லாமல் இருந்தது. அதனருகில் திருடன் போல அணுகி அப்படியே சட்டைபேண்டுடன் நனைந்தான். மயிற்க்கற்றைகள் திரிதிரியாக, முகத்தில் வெண்முத்துகள் ஒளிர, சிரிப்பில் ஆரோக்கியமான பற்களில், அவனைப் மூச்சுப் திணற வைத்த உடம்புடன் ஒட்டிய ஈரத்தில், திடீர் திடீர் என்று உற்சாகத்தில் அவள் எழுப்பிய கூக்குரலில், திரும்பத் திரும்ப அவள் தன் முதுகின் கோடும் இடுப்பின் வளைவும் தெரிய ...

ரகுபதிக்குச் சுருக்கென்றது. மோட்டார் படகுக்காரனும் டிரைவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“என்னய்யா வேடிக்கை பாக்கறிங்க?”

“அதான! சின்னம்மா இன்னும் சின்னக் குழந்தை மாதிரிதான்!”

என் மனைவியை மற்றொருவன் பார்ப்பதாவது! “நீங்க ரெண்டு பேரும் போய்க் கரையில இருங்க. நான் கூட்டியாரேன்!” அவர்கள் இவனைச் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டே புறப்பட, “வாங்க ரகு!” என்றாள்.

இதோ சந்தர்ப்பம் எதிரே நனைந்த மேனியுடன் தனிமையாக, காட்டில் அந்தப் பெண் அவனை அழைக்கிறாள். அவளருகில் சென்று கை கோத்து, மெய் கோத்து இருவரும் இயற்கையின் ஈரத்தில் இழைந்து ஒன்றாகக் கலந்து போய், மெல்ல அவள் அதரங்களைத் தேடி, தொட்டு, பட்டு அழுத்தி, அழுத்தி.

“நீ குளிச்சுட்டு வா, நான் இங்கேயே இருக்கேன்.” என்றான் ரகு.

## 9

அந்த மறுப்புக்காக அவன் தன்னை அன்றைய தினம் பூராவும் திட்டிக் கொள்ளப் போகிறான். தயக்கமில்லை. கோழைத்தனம் இல்லை. அது என் சுபாவம்...? சரியாக அவனுக்கு புரியவில்லை. ஓர் அருமையான சந்தர்ப்பத்தைத் தவற விட்டுவிட்டான். பொறுத்திரு. சமயம் வரும். இவளை முழுசாக உனக்கே உனக்கு என்று அணைத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் வராமலா போகிறது? மதுமிதாவைச் சமூகம் ஒத்துக் கொண்ட வழிமுறைகளில்தான் அணைத்துக் கொள்ள விரும்பினான்.

தலையைச் சிலிர்த்துக் கொண்டு உற்சாகமாகச் சிரித்துக் கொண்டிருப்பவளை இந்தக் காலையில் இங்கிருந்து பார்த்துக் கொண்டிருப்பதற்கு அனுமதி கிடைத்ததே என் அதிஷ்டம், பாக்கியம், அவசரப்படக்கூடாது.

மதுமிதா எனக்குத்தான்.

மறைவிடத்தில் சென்று மாற்று உடைகள் அணிந்து கொண்டு வந்தவள் பளிச்சென்று இருந்தாள். ஒரு பாறையைத் தாண்டுவதற்கு அவன் கரத்தை கேட்டபோது அவள் விரல்கள் சில்லென்று இருந்தன.

“மதுமிதா, கொஞ்சம் உட்காருவோமா?”

“மதுமிதான்னு கூப்ட்டு டைம் வேஸ்ட் பண்ணாதிங்க ‘மது’ போதும்.”



www.writersujatha.com

“இல்லை மதுமிதா. இந்தப் பேர்லேயே ஒரு மயக்கம் இருக்கு. உன்னை ஒண்ணு கேக்கணும். “உக்காரேன்...”

மதுமிதா எம்பி எம்பி ஓர் இலையைப் பறிக்க முயன்றாள். “அந்த இலையைப் பறிச்சுத் தாயேன் ரகு.”

“எதுக்கு?”

“சும்மா.”

“மதுமிதா, நீ காலைல சொன்னது நிஜமா?”

“நிஜம். என்ன சொன்னேன்...”

‘என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு உனக்கு இஷ்டமா’ என்று கேட்க நினைத்தவன், “நிஜமாவே தீவிரமா சொல்லியிருந்தா உனக்கு ஞாபகம் இருக்கும்” என்றான்.

அவள் கையை டெலஸ்கோப் பண்ணிக்கொண்டு அவனைப் பார்த்தாள். “இந்த மரத்துமேல ஏறுவீங்களா?”

“எனக்கு அதெல்லாம் தெரியாது.”

“உங்களுக்கு பாடத் தெரியுமா?”

“தெரியாதே!

“ஏதாவது பாடுங்களேன். எனக்குப் பாடணும் போல இருக்கு.”

“பாடிப் பாரேன்...!”

“சேச்சே! அருவி நின்னு போயிடும்!” என்று சிரித்தாள். திடீர் என்று கைகளைத் தரையில் ஊன்றிக் குட்டிக் கரணம் போட்டாள். வாலிபால் டீம்ல இருக்கேன். மூன்றாம் பிறை, வா கண்ணா வா. எல்லாமும் பாக்கணும். திருநெல்வேலில ஓடறதாம் போகலாமா?”

“போகலாம்.”

“உங்களுக்கு ஸ்ரீதேவி பிடிக்குமா...?”

“எனக்குப் பிடிச்ச ஒரே பொண்ணு மதுமிதா.”

“நான் சினிமா ஆக்டர்ல சொல்றேன். எனக்கு சுஹாசினி பிடிக்கும். ஷி இஸ் ஓ.கே... ரகு, எதாவது அறுவை ஜோக் சொல்லேன்.”

“எனக்கு ஒண்ணும் தெரியாதே!”

“நான் சொல்லட்டுமா! வேஷ்டியைக் கிழிச்சு இட்லி பானைல உபயோகப்படுத்தினா அதுக்கு என்ன பேர்?”

“சொல்லு.”

“வேஸ்ட்டி” என்று தனக்குள் சிரித்துக் கொண்டாள். அடுத்தது என்ன பேசப் போகிறாள் என்பதை எதிர்பார்க்க முடியவில்லை. டிரைவரும் மோட்டார் படகுக்காரனும் திரும்பி வர, “வாங்கம்மா, போகலாம்!”

“ரகு இன்னும் குளிக்கலையே. நீங்க குளிங்க. நான் இவங்ககூட சுத்திப் பார்த்துட்டு வரேன்!”

“வேண்டாம், எனக்கு அருவில குளிக்கணும்னு அவசியமில்லை.” டிரைவர் அருகே பீடி நாற்றம் அடித்தது. திரும்பி மோட்டார் படகில் செல்லும்போது மதுமிதா அவனை அடிக்கடி தொட்டுத் தொட்டு ‘பறவையைப் பார்’ ‘தண்ணீர் பாம்பை பார்!’ என்று வேடிக்கை காட்டிக் கொண்டே வந்தாள். காட்டிய காட்சிகள் எல்லாம் அவன் மனத்தில் பதியவே இல்லை. பதிலாக, தொட்ட இடம் எல்லாம் தெளிவாக ஞாபகம் இருந்தது. படகை விட்டு இறங்கும்போது அது சற்று ஆடியதால் அவன்மேல் முழுமையாகச் சாய்ந்தாள். அவனைப் பற்றிக் கொண்டு எழுந்தாள். ஒரு கணம் அவள் முகம் அவன் முகத்துக்கு அருகில் இருந்தது. கடிகாரத்தைப் பார்த்து மூன்றுமணி நேரம் சென்றுவிட்டது ஆச்சரியமாக இருந்தது. அவளுடன் பசைப் போட்டு ஒட்டிக் கொண்டு அவளுடனே சதா இருந்து விட வேண்டும் என்று விரும்பினான்.

“என்னடா, காலைல இருந்து தூரப் பார்வை பார்த்துகிட்டு இருக்கே? மதுமிதாவா.”

“இல்லைப்பா!”

“சாம்பார்ல உப்பில்லையே, தெரியலையா?”

“சாம்பார்ல உப்பில்லையா?”

அப்பா அவன் சாப்பிடுவதையே பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய புன்னகை அவனுக்குப் பிடிக்கவில்லை. ‘மூன்ஸ்ட்ரக்’னு சொல்வாங்க இதுதான். என்னது எழுந்துட்டே...?”

“பசியில்லைப்பா!”

“நிஜமாவே அம்பிகாபதி, மஜ்னு எல்லாரையும் சேத்து உருட்டி வெச்சாப்பல இருக்கே. ஷேக்ஸ்பியர் பாத்தான்னா கேள்வி கேக்காம ரோமியா வேஷம் கொடுத்துருவான்!”

ரகுபதி சிரிக்கவில்லை.

“எங்கே போறே?”

“சும்மா போஸ்டாபீஸ் வரைக்கும்ப்பா!”

“மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்; உனை மறவாதிருக்க வேண்டும்’னு வள்ளலார் சொன்னார்.”

அப்பா மேல் கோபம் வந்தது. இவ்வளவு தீவிரமான விஷயத்தை இவ்வளவு வேடிக்கையாகப் பார்க்கிறார். வயசு வித்தியாசம்தான் காரணம். இவருக்கு என் மனசை தெரிந்துக் கொள்ளமுடியாது.

போஸ்ட் ஆபீஸுக்குப் பள்ளிக்கூடத்தைக் கடந்து போக வேண்டிருந்தது. தட்டிக்குள் குழந்தைகள் இரைச்சல் கேட்க, ஆசிரியர்கள் வெளியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஜிப்பா ஒருத்தர் ‘தமிழரசி’ என்று பெயரிருக்கும்போல இருந்த கண்ணாடி டீச்சரிடம்

சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார். காதலாக இருக்குமோ? தங்க நிறத்தில் தலையும் கண்ணில் கருங்கோடும் கொண்ட ஒரு பறவை, பார்த்து ரசிக்க ஆளில்லாமல் அழகாகப் பறந்துக் கொண்டிருந்தது. வானத்தில் மேகங்கள் முத்தமிட்டுக் கொண்டிருந்தன. வண்ணத்துப் பூச்சிகள் தேன் மலர்போல் துடித்துக் கொண்டிருந்தன.

“வணக்கம் தம்பி”! என்று கேட்டுத் திரும்பிப் பார்த்ததுதான். “நீங்கதான் கோவிந்தராஜன் மகனுங்களா? வந்திருக்கிறதா கேள்விப்பட்டேன். எனக்கு ஒரு பிட்டிசன் இங்கிலீசில எழுதிக் கொடுக்கணும் டிப்பார்ட்மெண்டுக்கு...”

“நீங்க யாரு?”

“செல்லப்பாங்க. தமிழ்வாத்தியார். இன்னி தபால்ல போய்ச் சேரணும். தயவு பண்ணுங்க. இந்தப் பொட்டக் காட்டில கொண்டு போட்டுட்டாங்க. சம்சாரம் மதுரையில இருக்குது. புள்ளைங்க மதுரையில படிக்குது. நான் திருநவேலி சில்லாவில பாவநாசத்தில! என்ன கொடுமை பாத்திங்களா?” அவர் என்னுடன் போஸ்ட் ஆபீசுக்கு நடந்தார். “கிளாஸ் இல்லீங்களா?”

“அதுபாட்டுக்கு அது” என்றார். தபால் ஆபீசில் ஒரே ஓர் அதிகாரி கார்டை ரூபாய் நோட்டு போல நிரடி நிரடி விற்றுக்கொண்டிருந்தார். சேமிப்புப் பற்றியும் கொயினா மாத்திரை பற்றியும் பழைய போஸ்டர்களில் தூசு படிந்திருக்க, இந்திராகாந்தி இளமையாக இருந்தார். தமிழாசிரியர் பர்ஸிலிருந்து தன் மனைவியின் புகைப் படத்தை காட்டினார். ஒரு சிலர் காத்திருந்தார்கள். “தபால் பஸ்ஸு சந்திருச்சா அண்ணாச்சி?”

தமிழாசிரியர் அவனுடன் பிட்டிசனுக்காக ஒட்டிக் கொண்டிருக்க, “நற்றிணையில் கைக்கிளையைப் பற்றி ஆராய்ச்சி பண்ணி பாதில விட்டிருக்காங்க. ஓம் எம். ஏ. பண்ணிப்பிட்டன்னா இந்தக் காட்டை விட்டுரலாம். கல்லூரிகள்ல வேலை கிடைக்கும்.”

“அப்பம் நீ என்னதான் சொல்லுத? வயிறு பசிக்கில? என்னடே?”

“இந்தத் தமிழ் வேற நமக்கு தோதுப்படலீங்க... அப்பம் தோசைன்னுக்கிட்டு...!”

தபால் பஸ் வந்து நிற்க, ரகுபதிக்குள் சற்று பரபரப்பு அதிகமானது. பெட்டியை மனத்தில் உடைத்து, ஸீல் பிரித்துப் பார்த்து விட்டான். அதில் அவனுக்கென்று கடிதம் முதலில் கிடைத்தது. “டியர் ஸார், வித் ரெஃபரன்ஸ் டு யுவர் அப்ளிகேஷன் ஃபார் அப்பாய்ண்ட்மெண்ட் வித் அஸ் அண்ட் தி ஸ்பஸிக்வெண்ட் இண்டர்வ்யூ...”

நற்றிணையில் ஒரு பாடல் இருக்குதுங்க. காதல்னா அதாங்க காதல்!”

“காதலா...?”

“ஆமாங்க, சங்க காலத்துல காதல் இப்ப இருக்கிற காதலையெல்லாம் பீட் அடிச்சுரும்!”

இப்போது கொஞ்சம் சுவாரஸ்யத்துடன் “சொல்லுங்க” என்றான்.

தபால் பிரிக்க நேரமாகும்.

“மடலேறல், விடைதழுவுதல், குற்றிசை, குறுங்கலி, சுரநடை, முதுபால்னு...”

“ஏதோ பாட்டு இருக்கிறதா சொன்னீங்களே...?”

“நற்றிணைலங்க, சொல்லட்டுங்களா?”

“பாட்டு பாடவேண்டாம். அர்த்தம் மட்டும் போதும்.”

அழுக்குப் பையின் அரக்கு முத்திரை பிரிக்கப்பட்டது.

“பாருங்க, சின்ன வயசில புன்னைக் காயை மண்ணில ஒளிச்சுவெக்கிற வெளையாட்டு வெளையாடியிருக்கிறது அந்தப் பொண்ணு. மறந்துப்போய் வெச்சுட்ட காய் தன்னிச்சையா வளர்ந்து செடியாயிருச்சு. அதுக்கு இந்தப் பொண்ணு பாலெல்லாம் ஊத்தி அன்பா வளக்குது. செடியும் இவளோட வளர்ந்து மரமாயிடுச்சு. இந்த மரத்தடியில காதலன்கூட வெளையாட வருது அந்தப் பொண்ணு ‘இந்தச்செடி என்கூட வளர்ந்தது. எனக்கு அக்கா மாதிரி. அதனால இதனடியில உன்னைத் தழுவதற்கு எனக்கு வெக்கமா இருக்குது’ன்னு சொல்லுது!”

“என்னவே குறுக்க வந்து நிக்கியே! ஒதுங்கு! ஒதுங்கு”

“போஸ்ட்மாஸ்டர் சார்...! எனக்கு ஏதாச்சும் தபாலுண்டா?”

“பேரு...?”

“ஜி.ரகுபதி.”

“இன்சினியரு கோவிந்தராசன் மகன்தானுங்களே?”

“ஆமாங்க.”

“அவரு காலைல வந்து சொல்லிட்டுப் போனாக– எதாவது வந்தா உடனே வந்து கொடுக்கும்படிக்கு. இப்படி, பேருக்கு பேர் கேட்டுக் குழம்பிப் போடுவதாக!”

“ஸாரி, அவர் வந்து கேட்டது எனக்குத் தெரியாது! லெட்டர் எதாவது இருக்கா?”

“ஒண்ணும் இல்லை!”

“தம்பி! என் பிட்டிசன்...” என்றார் தமிழ்.

“சாயங்காலம் வீட்டுக்கு வாங்க. எழுதிக் கொடுக்கறேன். வரப்ப அந்த நற்றிணை புஸ்தகத்தையும் எடுத்து வாங்க.”

ரகுபதி, தமிழ் வாத்தியார் இரண்டு பேருமே ஏமாற்றத்துடன் நடந்து செல்லும்போது பிராஜக்ட் ஆபிஸ் சேவகன் வந்து, “அய்யா உங்களைக் கூப்பிடுதாக” என்றான். ரகுபதிக்குச் சட்டென்று சந்தோஷம் ஏற்பட்டது. அதே சமயம் மறுபடி டெலிமெட்ரி படுத்து விட்டதோ என்கிற கவலையும் கிடைத்தது. ஆனால் மதுமிதாவுடன் சம்மந்தப்பட்டது எதுவுமே அவனுக்குத் துடிப்பு தருகிறது. மதுமிதாவின் அப்பா கூப்பிடுகிறார் என்றால் பறக்க வேண்டும்.

“வாப்பா! உன்னை ஜன்னல் வழியா பார்த்தேன். எங்க இந்தப் பக்கம்?”

“போஸ்ட் ஆபீஸ் ஸார்!”



www.writersujatha.com

“அப்பாயின்மெண்ட் ஆடருக்கு வெயிட் பண்றியா?”

“ஆமா ஸார்!”

“வேலை கிடைக்காம போயிருமா? அருவி ஸ்நானம் எப்படி இருந்தது? மது சொன்னா, பேசவே மாட்டேங்கறியாமே! அதுக்கு நஷ்ட ஈடா அவ நிறைய பேசியிருப்பாளே...?” ஓட்டைவாய்! எதுக்கு கூப்பிட்டேன்னா உங்ககூட பேசணும். ஒருவிதமான ஸெல்ஃபிஷ் இண்டரஸ்ட்ன்னு வெச்சுக்கயேன். உன்னோட டேட் ஆஃப் பர்த் என்ன?”

“ஏப்ரல் 22 ஸார்!”

“சாமார்த்தியமா வருஷம் சொல்ல மாட்டேங்கறே டாரஸா நீ ...? நான் கூட டாரஸ்தான்! உனக்கு உங்கப்பா எதாவது பொண்ணு கிண்ணு பாத்து வெச்சிருக்காரா?”

“இல்லை ஸார்” என்றான். கைகள் லேசாக நடுங்க ஆரம்பித்தன.

“வாழ்க்கையில உன் குறிக்கோள் என்ன?”

“முதல்ல வேலை கிடைக்கிறது தான் பெரிசா இருக்குது ஸார்!”

“வேலைக்கென்ன, தன்னால கிடைச்சுரும். கோவிந்தராஜ் சொன்னாரே. என்.டி.பி,ஸி.ஐ.டி,ஐ.பி.இ.எல். எல்லாத்திலயும் அப்ளை பண்ணியிருக்கியாம். இன்ஜினியரிங் சர்வீஸஸ் எக்ஸாம் எழுதறதா உத்தேசம் இருக்கா?”

“இந்த வருஷம் எழுதிப் பார்க்கலாம்னு இருக்கேன்.”

“வேலையைப் பத்திக் கவலைப்படாதே. கிடைச்சுரும். வாழ்க்கை ஓர் ஆம்பிஷன், எதிர்பார்ப்பு வேணும். அது உனக்கு என்ன?”

‘உங்க பொண்ணை கல்யாணம் செஞ்சுக்கறதுதான் ஸார்!’

“ஆம்பிஷன்னு பார்த்தா எவ்வளவோ இருக்கு ஸார். கம்யூட்டர் சயன்ஸில எதாவது பண்ணலாம்னு தோணுது. எதிர்காலம் டிஜிட்டல் எலக்ட்ரானிக்ஸ்லயும் கம்ப்யூட்டர் சயன்ஸிலயும்தான் இருக்குது.”

“நான் சப்ஜெக்ட்டை சொல்லலை. வாழ்க்கையில சொல்றேன்.”

அவன் கொஞ்சம் யோசித்து, “ஒன் **ஷு**ட் நாட் டிஸ்கல் எ ட்ரீம்’னு சொல்வாங்க...”

“ஸோ யூ ஆர் ஏ ட்ரீமர்...?”

“அப்படின்னு இல்லை!” எதாவது சொல்லித் தொலையேன்! எத்தனையோ நல்ல வாக்கியங்கள் இருக்கின்றனவே! மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து கொள்வது, ஒரு நல்ல குடிமகனாவது, பெரியோர்கள் போற்றும்படியாக நடந்துக் கொள்வது, எது சொன்னாலும் இப்போது செயற்கையாகத்தான் இருக்கும். என் ஒரே ஆசை, ஆம்பிஷன், அப்ஸெஷன் எல்லாமே உம் மகள்தான் என்று எப்படிச் சொல்வேன்...?’

“உன்னை எனக்குப் பிடிச்சுருக்கு. பொய் சொல்ல வரலை உனக்கு. உம் வயசில என்னை இந்த மாதிரி கேள்வி கேட்டிருந்தா நானும் உன்னை மாதிரிதான் திணறியிருப்பேன். பரவாயில்லை. பேசாம டென்னிஸ் ஆடிக்கிட்டு அருவில குளிச்சுக்கிட்டு ஜாலியா இரு. நடக்க வேண்டியது தன்னால நடக்கும். பை தி வே,

உன்னையும் மதுவையும் தனியா இன்னிக்கு அனுப்பிச்சதே உன்னை ஒருவிதமான பரீட்சை பார்க்கதான். பாஸ் பண்ணிட்டே...” என்றார்.

## 10

மதுமிதாவின் அப்பா, ரகுபதி பேசக் காத்திருந்தார்.

“பரீட்சையா?” என்றான்.

“ஆமா. உன்னைப் பார்த்த மாத்திரத்திலேயே எங்க ஃபாமிலில எல்லாருக்கும் பிடிச்சுப் போயிருச்சு. மதுமிதாவைப் பார்த்துப் பழகியிருக்கில்ல...? அவளை என்ன சொல்வே நீ”

“நீங்கதான் அன்னிக்குச் சொல்லிட்டிங்களே ஸார் ஒரு குழந்தைன்னுட்டு. இன்னும் அவகிட்ட ஒரு குழந்தையினுடைய அறியாமைகள் நிறைய பாக்கியிருக்குது. இன்னிக்கு அருவில குளிக்கிறபோது ரொம்ப இயல்பா என்னையும் கூடவே குளிக்கலாம் வான்னு கூப்பிட்டா.”

“கேள்விப்பட்டேன். நீ ஏன் போகலை...?”

ரகுபதி கொஞ்சம் யோசித்து, “காரணம், நான் குழந்தை இல்லை! ஐ’ம் நாட் ஷ்யூர் ஆஃப் மைஸெல்ஃப்!”

அவர் முகம் மலர்ந்தது. “வெரிகுட்! நான் உன்னைப் பத்தி கணிச்சது ரொம்ப கரெக்ட். ஐ லைக் யூ! ஐ லைக் யூ வெரி மச். என் டாட்டர் கூட நீ பழகறதில எனக்கு ஆட்சேபம் எதுவுமே இல்லை. என் மனைவிக்கும் இல்லை. மதுவுக்குப் படிப்பில அவ்வளவு இன்ட்ரஸ்ட் இல்லை.”

“பரவாயில்லை.”

“சோம்பேறிப் பொண்ணு.”

“பரவாயில்லை.”

“வேலைக்குப் போகணும் அல்லது மேல் படிப்புப் படிக்கணும்னு எந்த ஓர் ஆசையும் இல்லை.”

“நல்லவேளை!”

“அதனால சீக்கிரம் கல்யாணம் செய்துரலாம்னு யோசிச்சுக்கிட்டு இருக்கோம். பயப்படாதே! சீக்கிரலாம்னா நாளைன்னைக்கே இல்லை! இன்னும் ஒரு வருஷம் இரண்டு வருஷம் கூட போகலாம். என்ன சொல்லறே?”

“நல்லது” என்றான்.

“மது ஒரே பெண். லைஃப்ல கல்யாணம்கிறது ஒரு பெரியகேம்பிள். என்னதான் விசாரிச்சு, குலம் கோத்திரம் எல்லாம் பார்த்துச் செய்துகிட்டாகூட பிற்காலத்தில சந்தோஷமா இருப்பாங்கன்னு நிச்சயமா சொல்லவே முடியறதில்லை, இருந்தாலும் பாக்காம இருக்கவும் முடியறதில்லை, உங்கப்பாவை எனக்கு நல்லாத் தெரியும்.

உன்னையும் பார்த்துக்கிட்டு வரேன், யூ ஸீம் டு பி ஓக்கே! ஆனா உனக்கு இஷ்டமிருக்கணும்!"

படபடப்பில் "என்ன ஸார் சொல்றிங்க... இஷ்டமா...! இஷ்டம்தான்!" என்றான்.

"நாங்க எதையும் வலுக்கட்டாயமா செய்யற மாதிரி நீ நினைக்கக் கூடாது."

"சேச்சே! அப்படி எல்லாம் இல்லை ஸார்!" என்றான் அவசரமாக. என் பாக்கியம். அதிர்ஷ்டம் என்று ஏதேதோ சொல்ல ஆரம்பித்து மழுப்பினான். அவனுக்குப் பேச வரவில்லை. நா உலர்ந்திருந்தது. வீட்டுக்கு வந்து அப்பாவிடம் சொன்னபோது "என்ன இது! வில்லனே இல்லாத காதல் கதையா இருக்குதே!" என்றார்.

## 11

ரகுபதி உலகமே தன்னைத் பார்ப்பது போல் உணர்ந்தான். அதனால் தன்னை எங்கேயாவது கொண்டு போய் ஒளித்து வைத்து கொள்ளலாமா என்று விரும்பினான். எதிரே கோபிநாத், அவர் மனைவி, இடப்பக்கம் மதுமிதா, சுதாகர், கோடியில் அப்பா, எப்போதும் கோபிநாத்தையே பார்த்துக் கொண்டு சில ப்ராஜக்ட் இன்ஜினியர்கள். எல்லாரும் பெரிய மேசை முன் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். விதவிதத் தின்பண்டங்களைத் தொட்டுப் பார்ப்பதற்கே அவனுக்குத் தயக்கமாக இருந்தது. வயிறு பூராவும் பசி மறைந்துபோய் சந்தோஷம் கலந்த கனம் வந்து நிரம்பி இரண்டு நாளாயிற்று. மதுமிதா அதோ, அவனைப் பார்த்து விரசமில்லாமல் கண்ணிமைக்கிறாள். மற்ற பேர் முள்கரண்டி மேல் கவனமாக என்ன என்னவோ சைனிஸ் சமாசாரத்தையெல்லாம் திருகித் திருகிச் சாப்பிட்டுக்கொண்டிருக்க, ரகுபதி ஒரே ஒரு பட்டாணியுடன் போராடிக் கொண்டிருந்தான். கேசவன் வயிற்றில் சிவப்பு பட்டை அணிந்து கொண்டு பாந்தமாக ஸாஸ் விசாரித்துக் கொண்டிருக்க, கோபிநாத் மென்றுக்கொண்டே, பேசிக்கொண்டே மென்று கொண்டிருந்தார். "கோவிந்தராஜ்! ஜாதகம் எல்லாம் பார்க்கிறது உண்டா நீங்க?"

"நீங்க பார்க்கறிங்கன்னா நான் பார்க்கறேன் ஸார்!"

"எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை. வேணும்னா சம்பிரதாயத்துக்கு வெச்சுக்கலாம்!"

"வரதட்சிணை உண்டா?" என்றாள் அம்மா.

"சேச்சே, பேசக் கூடாது! ஜெயில்ல போட்டிருவார் ஸார்."

"சம்பந்தியானப்புறமும் ஸார்னுதான் கூப்பிட போறீங்களா கோவிந்த்?"

"அப்ப ஆபீஸ்ல ஸார், வீட்டில சம்பந்தி!"

"இன்னும் கொஞ்சம் பாயசம் விட்டுக்கும்! என்ன, டயபடிஸ் அதெல்லாம் ஒண்ணுமில்லையே?"

"இல்லை ஸார்!"

"மது! மாப்பிள்ளைக்குப் பாயசம் வேணுமா—விசாரிச்சியா?"

“பாயசம் வேணுமா?” என்றாள் மது, நிமிர்ந்து.

“அங்கிருந்தே கேட்டா? வேணும்னுதான் சொல்லுவார். கிட்டவந்து பரிமாறேன். ஒருநாள் அதைச் செஞ்சுதானே ஆகணும்?”

மதுமிதா உதட்டை துடைத்துக் கொண்டு எழுந்து வந்து ஒரு டம்ளரிலிருந்து அவன் தட்டில் சிரித்துக் கொண்டே ஊற்றினாள்.

“ஏம்மா. அவருக்குப் பாயசம் ஊத்துறியா, குளிப்பாட்டறியா?”

எல்லாரும் அபத்தமாகச் சிரித்தார்கள். ரகுபதிக்கு அதெல்லாம் கேட்கவே இல்லை. கவனம் சாப்பாட்டில் இல்லை. கால்கள் எங்கே என்று தெரியவில்லை. மனசில் சதா அது என்ன சொல்வார்கள், யாழ்–அது ஒலித்துக் கொண்டே இருந்தது. அந்த இடத்து சாண்டலியர், திரைச்சீலைகள், கண்ணாடிக்குள் இருந்த பரிசுப் பொருள்கள் ஏன், மரப்பெட்டி மூலையில் சற்றே தெரிந்த விளக்குமாறு எல்லாமே அழகாக இருந்ததாக பட்டது. சூழ்மிருந்தவர்கள் அத்தனை பேரும் தேவதைகளாக இருந்தார்கள். அவர்கள் பேச்சில் பாட்டு இருந்தது. அப்பா! இது என்ன ஜுரமில்லாத ஜுரம்! நடப்பது எல்லாம் கனவு போலத்தான் இருக்கிறது, திடீர் என்று யாராவது எழுப்பி விடுவார்களோ என்று அச்சமாக இருக்கிறது.

இத்தனை சந்தோஷம் தாங்காது! கூடாது! மது மறுபடி அவனைப் பார்த்து கண்களால் சிரித்தாள். ஒரு ஸாலட் துண்டத்தைப் பாதி கடித்துக் கொண்டு சாய்ந்த மாதிரி அவனைப் பார்த்தாள். விரலால் சைகை செய்து சாப்பிட்ட பின் ‘மாடிக்கு’ என்று அழைத்தாள். ரகுபதிக்கு காதுக்குள் இதயம் கேட்டது.

“என்ன, சாப்பிடவே மாட்டேங்கறான்?”

“ரொம்ப எக்ஸைட்மெண்ட் ஸார்!”

“எதுக்கு?”

“ஹி இஸ் லக்கி!” என்றார் அப்பா.

“ஷி இஸ் ஆல்ஸோ லக்கி!” என்றார் கோபிநாத்.“எப்ப கல்யாணத்தை வெச்சுக்கலாம்?”

“முதல்ல ஃபார்மலா ஒரு நிச்சயதார்த்தம் வெச்சுக்கலாம்னு அபிப்ராயப்படறேன் ஸார். அதுக்கு முன்னால் அவனுக்கு வேலை கிடைச்சுரட்டும். அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வரட்டும்னு தோணுது. நீங்க என்ன சொல்றிங்க?”

“வாஸ்தவம்தான்! வேலை கிடைக்க வேண்டியது அவசியம்தான். என்ன சொல்ற ரகு?”

ரகு, “சரிதான்” என்றான். அப்பா மேல் கோபம் வந்தது. ஆனால் வேலையில்லாமல் கல்யாணமாவது? அதையும் நினைத்துப் பார்க்க முடியாது.

“எப்பப்பா உனக்கு இண்டர்வியூ முடிவெல்லாம் தெரியும்?”

“மாசக் கடைசிக்குள்ள ஸார்!”

“அதுவரைக்கும் வெய்ட் பண்ணலாம். என்னம்மா சொல்றே? நீ பேசவேயில்லையே” என்று மனைவியைப் பார்த்துக் கேட்டார் கோபிநாத்.



www.writersujatha.com

“எனக்கு என்னவோ உடனே நிச்சயதார்த்தம் வெச்சுறலாம்னுதான் தோணுது. வேலை கிடைக்காமயா போவது?”

“இருந்தாலும் ஒருவிதமான பத்திரத்துக்குத்தானே?”

“அவங்க எதிரிலே சொல்லக்கூடாது. இந்த மாதிரிப் பையன் கிடைக்கறத்துக்கு கஷ்டங்க. கோவிந்தராஜ், உங்களுக்கு எத்தனையோ பேர் பையனை விசாரிச்சு எழுதிருப்பாங்களே?”

“வாஸ்தவம்தான்!”

“பாத்திங்களா? யாருக்காவது வாக்கு கொடுத்துட்டீங்களா?”

“இல்லை உங்களுக்குதான் முதலில் கொடுக்கப் போறேன்.”

“சீக்கிரம் நிச்சயதார்த்தத்தை வச்சுக்கலாங்க;”

“எதுக்கும் ஒரு மாசம் பார்க்கலாம். அதுக்குள்ளே ஆர்டர் வந்துருச்சுன்னா சரி. மது! இவரை அழைச்சுட்டுப் போயி போட்டோ ஆல்பம் எல்லாம் காட்டு!”

“வாங்க!” என்றாள் மது.

“சுதா! நீயும் போ. உன் மாடல்ஸ் எல்லாம் காட்டுப்பா!”

அம்மா சாமார்த்தியமாக இருவர் தனிமையைத் தவிர்ப்பது தெரிந்தது. மாடிப்படியில் மதுமிதா குதித்து ஏற ‘இந்த இடுப்பு என்னுடையது’ என்று எண்ணிக்கொண்டான். அறைக்குள் சென்று மேஜை விளக்கைப் பொருத்தி “என்ன ஆல்பம் பார்க்கணும் உங்களுக்கு! சின்ன வயசா பெரிய வயசா?”

“எனக்கு ஆல்பம் வேண்டாம் மதுமிதா!”

“பின்னே!”

“சுதா, ஒரு தம்ளர் தண்ணி கொண்டு வாயேன்?”

“என்னைக் கழற்றி விடறிங்களா?” என்றான் சுதா.

“சேச்சே, அப்படி இல்லை!”

மதுமிதா படுக்கையில் உட்கார, “சாப்பாடு ரொம்ப ஹெவி இல்லை?” என்றாள்.

“ம்.”

“நீங்க என்னை கல்யாணம் செஞ்சுக்கப் போறிங்களா?”

“ஆமாம்!”

“கல்யாணம் எப்படி இருக்கும்?”

“நீதான் சொல்லேன்!”

“எனக்கு ஐடியாவே இல்லை! பட் ஐ ஹேட் பேபிஸ்!”

“பேபிஸ் கம் லேட்டர்!”

“கல்யாணத்தன்னிக்கு ஸாரி கட்டணுமா?”

“விருப்பமிருந்தா...”

“பாண்ட் போட்டுகிட்டு கல்யாணம் செஞ்சுக்க விட மாட்டாங்க” என்று சிரித்தாள். அப்பறம் வி’ல் ஹாவ் ஸெக்ஸ், இல்லையா?”

ரகுபதி அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான்.

“ரகு, நீங்க பார்த்திருக்கிங்களா எப்பவாவது!”

“என்ன மதுமிதா, இதெல்லாம் பேசலாமா? தூ!

“பார்த்ததில்லை? நான் ரெண்டு தடவை பார்த்திருக்கிறேன். சின்ன வயசில அப்பா, அம்மா, அப்பறம் போன வெக்கேஷன்ல காமினி ஆண்டி நடராஜ் அங்கிள் கூட, ரகு நாம தான் இப்ப கல்யாணம் செய்துக்கப் போறோமே. ஏதாவது சாக்கு சொல்லிட்டு திருநெல்வேலிக்கு பிக்சர் பாக்க போயிறலாம். கூட்டமில்லாத பிக்சரா போகலாம், அங்க...”

“மது ... ப்ளீஸ்! ஒரு நல்ல உறவை இந்த மாதிரி வந்து, அது என்ன சொல்வாங்க!” என்னவோ சொல்ல நினைத்து, போட்டுக் குழப்பினான்.

“அப்பன்னா கல்யாணம் ஆற வரைக்கும் ... வெறும்... வாடா சுதா!” என்றாள். “என் தம்பி இருக்கான். பாருங்க பொல்லாதவன். அன்னிக்கு வேலைக்கார பொண்ணுக்கிட்ட என்ன கேட்டுக்கிட்டிருந்த சுதா?”

“மாங்கா பறிச்சுதான்னு!”

“அதுக்கப்பறம்?”

“போடி டுன் டுன்! ஸார், இவளை கல்யாணம் செய்துக்காதிங்க ஸார். பாய்ஸ் எல்லாரையும் ஸைட் அடிப்பா. ஆம்பிளை மாதிரி விசில் ஊதுவா. ஹெரால்ட் ராபின்ஸ் படிப்பா!”

மதுமிதா சிரித்துக்கொண்டே அவன் சொன்னதையெல்லாம் மதிக்காமல் தொடர்ந்து, “அந்தப் பெண்ணை கேக்கறான் ஸார்...வந்து... வந்து... ”

“மது!” என்று அவள் முதுகில் குத்து விட்டான் சுதாகர்.

“சுதா இந்த மாதிரி எல்லாம் அக்காவை அடிக்கக்கூடாது”

அவன் கவனிக்காமல் மேலும் தொடர்ந்து அவளை அடிக்க, நிஜமாகவே வலித்திருக்க வேண்டும். பட்டென்று திருப்பி அவன் முதுகில் ‘தொம்’ என்று குத்தினாள். இப்போது அவன் பதில் அடி வலுக்க ஒரு கணத்தில் இரண்டு பேருக்கும் மயிர் பிடிச் சண்டை வந்து, கட்டிலையும் சோபாவையும் மிதித்து ஓட, “மது! சுதா! என்ன இது?” என்று ரகுபதி எச்சில் விழுங்கிக் கொள்ள, மதுமிதா அவன் கையை இப்போது முறுக்கிக் கொண்டிருக்க, சுதாகர் முழங்காலை மடக்கி நெஞ்சில் ஓர் உதை கொடுக்க,

‘அம்மம்மா’ என்று அவள் படுக்கையில் உட்கார்ந்து விட்டாள். ஓடிப்போனவனை ரகுபதி பிடிக்க முற்பட்டான். அவன் காலர்தான் கைக்கு வந்தது.

“ஒரு பொம்பளையை அடிக்கிறேயே வெக்கமாயில்லை?” என்றான்.

“ஒரு பொம்பளை பின்னால சுத்தறியே, வெக்கமாயில்லை?” என்றான்.

“சே! ஆனாலும் இந்தப் பையன் ரொம்ப மோசம் மது!” என்றான் ரகு.

“ஒரு நாள் செமையா எங்கிட்ட வாங்கப் போறான்!”

இதற்குள் சுதாகர் திமிறிகொண்டு ரகுபதியைத் தள்ளிவிட்டு ஓடிப்போனான். படியிறங்கும் போதே அழ ஆரம்பித்தான்.

“கீழே போய், இல்லாததையும் பொல்லாததையும் சொல்லுவான் ஸார். மார்ல ணங்குன்னு குத்திட்டான். –தன் சட்டை பட்டனைக் கழற்றிக் தேய்த்துக் கொண்டாள். “வீங்கிருக்கா பாருங்க” என்று அவன் கையை எடுத்துத் தேய்த்துக் கொண்டாள்.

ரகுபதிக்கு சண்டை சச்சரவு சகலமும் மறந்து போய் உதடுகள் உலர்ந்து போயின. அவள் எதும் வேணுமென்றே செய்கிறாற்போல இல்லை. இயல்பாக அவன் கையை எடுத்து தடவிக் கொண்டவள் அதே இயல்பின் தொடர்ச்சியாக, கையை நீக்கிவிட்டுக் பட்டன் போட்டுக் கொண்டு, “சனியன்! சனியன்! இவன் கல்யாணத்துக்கு வேண்டாம்” என்றாள். “அம்மா, அப்பா ரெண்டு பேரும் இவனுக்குதான் சப்போர்ட். பாய்னா என்னவெல்லாம் செய்யலாமா? என்ன நியாயம் இது! கொஞ்சம் இருங்க. அவன் நோட் புத்தகத்தை எல்லாம் இங்க் பண்ணி வச்சிட்டு வர்றேன்.”

“மது! வேண்டாம்.”

கீழேயிருந்து அதட்டலாக, “மது, ஏன் சுதாவை அடிச்சே?”

“அவன்தாம்மா என்னை அடிச்சான். இவரை வேணா கேளுங்க!”

“யூ ஆர் எ க்ரோன் அப் கர்ள்! யூ மஸ்ட் பிஹேவ் யுவர்ஸெல்ஃப்!”

“பாத்திங்களா. இதேதான் தினம்!

“ரகுபதியை அவங்க அப்பா கூப்பிடறாங்கன்னு சொல்லு மது.”

“நான் வரட்டுமா மதுமிதா?”

“ஞாபகம் வெச்சுக்கோங்க! திருநெல்வேலி!”

“பார்க்கலாம்!”

கீழே எல்லாரும் சிலோன் டி.வி. பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

விடைபெற்றுக் கொண்டு வானத்தில் வெள்ளிப் பாளமாக தொங்கிக்கொண்டிருந்த நிலா ஒளியில் நனைந்து வீட்டை நோக்கி அப்பாவுடன் நடக்கும்போது “இட்ஸ் டூ குட் டு பிலீவ். இல்லை ரகு?” என்றார் அப்பா.

ரகுபதி பேசாமல் வந்தான்.

“நான் சொன்னதில கோபமா உனக்கு?”

“என்ன சொன்னீங்க?”

“வேலை கிடைச்சப்பறம் நிச்சயதார்த்தத்தை வெச்சுகிறலாம்னுட்டு.”

“சேச்சே! என் நல்லதுக்குத்தானே சொல்றிங்கப்பா! நான் அதை பத்தியே நினைக்கலை. நீங்க சொன்ன மாதிரி வில்லனே இல்லாத கதையா இருக்கு இது. எல்லாமே எதிர்பார்த்தபடியே நடக்கிறது. எல்லாமே ரொம்ப திகட்டுது!”

“ரகு, நான் ஒரே ஒரு அட்வைஸ் கொடுப்பேன் கேட்பியா?”

“சொல்லுங்கப்பா!”

“கல்யாணம் ஆறதுக்கு முன்னாடி அவளை ...”

“அப்பா!”

“இல்லை ரகு. சந்தப்பங்கள் நிறையவே ஏற்படும். டெம்டேஷன் அதிகமாகவே இருக்கும். இருந்தாலும் அதற்கு நீ ஆளாகக் கூடாது. அது நியாயமில்லை. அவசியமும் இல்லை. நான் எதுக்கு இதைச் சொல்றேன்னு பிற்பாடு புரியும் உனக்கு.”

“சேச்சே! அந்த மாதிரியெல்லாம் செய்யமாட்டேம்ப்பா. அந்தப் பொண்ணும்...”

“இல்லை. அந்தப் பொண்ணும் கொஞ்சம் பெரிசா வளந்த குழந்தையாட்டம்தான் எனக்குப்படுது. அவளை...அவளை...அவளை.. யூ நோ வாட் ஐ மீன்...ரொம்ப சுலபம்! ஆனா இந்தச் சலுகையைப் பயன்படுத்திக்காம இருக்கிறதிலதான் நீ பெரிய மனுஷத்தனத்தைக் காட்டறே. அதிலதான் உன்னை வளர்த்தவனுக்குப் பெருமை தர்றே, என்ன?”

“கவலைப்படாதிங்கப்பா... அந்த மாதிரி எல்லாம் நடக்காது.”

ஜெயந்தி வாசலிலே காத்திருந்தாள். “என்ன ஜெயந்தி?”

“சாப்பாடு கொண்டு வந்திருக்கேன் மாமா!”

“அடாடா! இன்னிக்கு விருந்துக்குப் போவப் போவதை சொல்லலியா?”

“என்னது! ரெண்டு பேரும் சாப்பிட்டாச்சா? வத்தக்குழம்பெல்லாம் பண்ணிருந்தேனே!”

“பரவாயில்லை எல்லாத்தையும் நீயே எடுத்துக்கோ.”

“எனக்கு எதுக்கு இவ்வளவு சாதம்? மார்க்கர் குடிச்சுட்டு வருவான். அவனுக்குப் போடுங்கோ. கொஞ்சம் கதவைத் திறக்கறேளா?”

“ஸாரி ஜெயந்தி! ராத்திரி ரொம்ப நேரம் காக்க வெச்சுட்டேன்.”

“எனக்கு இப்ப ஆத்துக்குப் போறத்துக்கு நீங்கதான் யாராவது துணை வந்தாகணும்.”

“ரகு, போயிட்டு வந்துடேன்.”

“இல்லேப்பா, நீங்க போங்க!”

அவனுக்கு கவிதை எழுத வேண்டும் போல இருந்தது.

## 12

ரகுபதி ப்ராஜக்ட் ஆபிஸர் வீட்டைத்தாண்டிப் போகையில் மதுமிதா தெரிகிறாளா என்று திரும்பி பார்த்துக்கொண்டே போனான். எட்டு மணிதான் ஆகிறது. இன்னும் தூங்கி எழுந்திருக்க மாட்டாள். அப்பா அகஸ்தியர் ஃபால்ஸில் குளிக்கப் போயிருந்தார். குறுக்குவழியாக கல்லில் வெட்டப்பட்ட பாதையில் இறங்கி சென்றிருப்பார். அப்பாவிடம் திருநெல்வேலி போவதாக சொல்லிவிட்டு பணம் வாங்கிக் கொண்டு வரவேண்டும். முடிந்தால் மதுமிதாவை வருகிறாளா என்று கேட்டுப்பார்க்க வேண்டும். எப்படி கேட்கப் போகிறான்? நேராகப் போய் கேட்கிற ஜாதி இல்லை அவன். ஏதாவது சந்தர்ப்பம் கிட்டாதா என்று காத்திருக்க வேண்டும். இப்போதுக் கூட, அப்பாவை பார்ப்பதைவிட மதுமிதாவின் வீட்டுவாசலின் வழியே செல்வதுதான் முக்கியமாக பட்டது அவனுக்கு. படிகளில் கீழிறங்கிச் செல்லும் மார்க்கத்தில் ரெஸ்ட் ஹவுஸ் பக்கம் திரும்பினபோது அவன் உள்ளம் துள்ளியது. அவள்தான் மெல்ல அசைந்து அசைந்து ஸ்டைலாக நடந்துக் சென்றுக் கொண்டிருந்தாள். திருநெல்வேலி, அகஸ்தியர்ஃபால்ஸ் எல்லாம் மறந்துப்போய் திசை திரும்பி அவளை நோக்கி சென்றான். செம்மண் பாதையில் ரெஸ்ட் ஹவுஸ் புதுசாக பெயிண்ட் அடித்து கலெக்டரோ மினிஸ்டரோ வருவதால் பொலிவு பெற்று பளபளவென்று வெயில் மின்னியது. சமையல் அறை புகைக்கூண்டிலிருந்து மீன்குழம்பு சுவாசித்தது. க்ரோட்டன்ஸ்கள் புதுசாக கிராப் வெட்டி கொண்டிருந்தன. பூந்தொட்டிகளில் அவசர மலர்கள் வந்து சேர்ந்திருந்தன. திரைச்சீலைகள் சமீபத்தில் சலவைக்குப் போயிருந்தன. எப்போதும் கூண்டில் ரகளை பண்ணும் கிளிக்கூட அலம்பி விட்டாற்போல் இருந்தது.

வானமும் அலம்பி விட்டிருந்தது. கண்ணாடி நீலத்தில் ஒரே ஒரு மேகம் அம்மாவைத் தேடிக் கொண்டிருந்தது. இல்லை, காதலியை. மதுமிதா முகட்டில் நின்று கொண்டு எதிரே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளை நெருங்க அருவியின் ஓசை அதிகரித்தது. டைவர்ஷன் வியரில் திறந்து விட்டதில் உற்சாகமாகப் பாறையை பிளந்து கொண்டு தண்ணீர் வெண்மையான குதிரைப் போல பாய்ந்துக் கொண்டிருந்தது. சோ என்று அட்டகாச ஆரவாரம் வேறு.

“மதுமிதா! ஏய்! மது!” என்று உரக்க கூப்பிட்டாலும் அவளுக்கு காது கேட்கவில்லை. சற்று தூரத்தில் பாதுகாப்புக்குக் கம்பி போட்டிருந்தது. கவிதை கலந்த மண்டபம் ஒன்று தெரிந்தது.

“மதுமிதா! மதுமிதா!” ம்ஹூம்? மிகத் தயக்கத்துடன் அவளைப் போய்த் தொட்டான். உடனே துணுக்கென்று பயப்படுவாள் என்று எதிர்பார்த்தான். அவள் திரும்பி அவனைப் பார்த்து லேசாக புன்னகைத்தாள். “எங்க இந்தப் பக்கம்?” என்றான்!

“என்ன?”

எங்க இந்தப் பக்கம்?

அவள் கிட்டே காதில் வந்து “சும்மா தண்ணியை வேடிக்கைப் பார்க்கறதுக்கு” என்றாள். பாதாளத்தில் நீர் தெறித்து வானவில் நனையாமல் இருந்தது. தாமிரபரணி நதியின் ஆரம்ப உற்சாகம் அந்தப் பிரதேசம் முழுவதும் ஒலிக்க, செங்குரங்குகள் மிக

நீளமான வால்களுடன் சர்க்கஸ் பண்ணிக்கொண்டு, கிடைத்த காயையெல்லாம் பாதி பாதி கடித்து தூக்கிப் போட்டுவிட்டு திடீர் என்று மரக்கிளைகளில் தை தை என்று ஒரு காரணம் இல்லாமல் குதித்தன. ரகுபதிக்கும் குதிக்கவேண்டும் போல இருந்தது.

“இங்கிருந்து விழுந்தா எப்படி?” என்றாள் மதுமிதா.

“சரிதான்! வா, போகலாம். என்ன பேச்சு இது!” ஏறக்குறைய முன்னூறு அடி தள்ளியிருந்த வீழ்ச்சியின் சாரல் அவர்கள்மேல் லேசாக காற்றுடன் கலந்து வந்து நனைத்தது. கல்யாணத்தில் பன்னீர் தெளிப்பார்கள்.

“வா, போகலாம்,”

“திரும்ப வரும்போது மதுமிதா, “இந்த இடத்தில யாரோ ஒரு பெரியவர் விழுந்து செத்துப் போயிட்டார் இல்லையா?” என்றாள்.

“ஆமா! எழுதியிருக்கே பார்க்கலை? வ.வே.**ஸு**. ஐயர்!”

“அவர் யாரு?”

“நீ தமிழ் படிக்கிறதில்லையா?”

“படிப்பேன்… மதன் ஜோக்ஸ்…”

“அப்ப வ.வே.**ஸு**. ஐயரைப் பத்தித் தெரிஞ்சிருக்க நியாயமில்லை.”

“அவர் என்ன செஞ்சார், சொல்லேன்?”

“தமிழ்ல முதல்ல சிறுகதை அவர்தான் எழுதினார். ஷார்ட் ஸ்டோரி.”

“அவருக்கு முந்தி ஏன் யாரும் எழுதலை?”

“என்னமோ எழுதலை. இவர்தான் ‘குளத்தங்கரை அரசமரம்’னு ஒரு சிறுகதை எழுதினார்.”

“பாவம் செத்துப் போயிட்டார் இல்லை? ரகு, மண்டைல பட்டதும் உடனே உயிர் போயிடுமா அந்த மாதிரி விழுந்தா?”

“போய்டணும்.”

“ஏன் விழுந்துட்டார்?”

“வ.வே.**ஸு**. ஐயரோட விபத்தைப் பற்றிப் பேசாம வேற ஏதாவது நல்லதா பேசலாமா? திருநெல்வேலி வரியா என்கூட?”

“ஓ வரேனே! ரெண்டு சினிமா பார்த்துட்டு வரலாம். அப்பாகிட்ட ஜீப் கேக்கட்டுமா?”

“பஸ்ல போகலாமா!”

“அம்மா விடமாட்டாங்க ரகு! இதான் சமயம்!” என்றாள் குரலில் சதியுடன்.

“என்ன?”

"நீ, நீங்க என்னைக் கல்யாணம் செய்துக்கப் போறதானே?"

"ஆமா!"

"அதோ, அந்த மரத்தடிக்குப் போயி கொஞ்சம் சரிவில இறங்கிட்டா நம்மை யாரும் பார்க்க மாட்டாங்கதானே!"

"ஆமாம்," ரகுபதியின் இரத்தம் அனைத்தும் முகத்துக்கு ஓடியது.

"அந்த சரிவில போய் உட்கார்ந்துகிட்டு... நீ வந்து, நீ வந்து என்னை கிஸ் பண்றியா?"

"எங்க?" என்றான் பலவீனமாக.

"அந்தச் சரிவில!"

அவனுக்கு பேச வரவில்லை. நாக்கு உலர்ந்து போயிற்று. மதுமிதா, "வா!" என்று அவன் கையை பிடித்துக்கொண்டு சரசரவென்று அழைத்துச் சென்றாள். மூச்சு வாங்கியது. ஓட்டத்தினால் அல்ல, எதிர்பார்த்த அனுபத்தால்.

"மது யாராவது பார்த்துட்டாங்கன்னா?"

"பார்த்தா என்ன? ரெண்டு பெரும் கல்யாணம் செய்துக்கபோறோம்னு சொல்லிறது."

"இல்லை மது."

"அட, சும்மா வாங்க! நான் என்ன கடிச்சா முழுங்கிடுவேன்!" ஏறக்குறைய அவனைக் கீழே தள்ளிவிட்டாள். அயர்ந்து போய் உட்கார, அருகே உட்கார்ந்தாள். எதற்கோ சிரித்தாள். அப்படியே படுத்துக்கொண்டாள்.

இவ்வளவு கிட்டத்தில் இப்படி பெண் இருப்பது ரகுபதிக்கு அநியாயமாகப்பட்டது. கைகளை இயல்பாகப் பின்னால் நீட்டிக்கொண்டு சோம்பல் முறிக்கும் புலிபோல உடம்பை இழுத்தாள். ஒரு கணம் அவள் சட்டை பிரிந்து வயிறு தெரிந்தது. மேலே பார்த்தாள்.

"இது என்ன மரம், சொல்லு பார்க்கலாம்?"

ரகுபதிக்கு நிமிர்ந்து பார்த்து "வேப்பமரம்" எள்றான்.

"தப்பு. இதுக்குப் பேரு 'பெர்ஸியன் லிலாக்".

"அட, உனக்கு எல்லாம் தெருஞ்சிருக்கே!"

"எனக்குத் தெரியாது. நேற்றைக்கு வந்தப்ப அப்பாதான் சொன்னாங்க. நான் கூட வேப்பமரம்தான் சொன்னேன்."

"உங்கப்பாவுக்கு மரத்து மேல ரொம்ப இஷ்டமா?"

"மரம், பறவை எல்லாத்திலேயும். நான் அப்பா சொன்னதுக்கு எதுத்தே சொல்லமாட்டேன். அப்பதான் ரகுவைத் கல்யாணம் செய்துக்கறியான்னு கேட்டாங்க."

"நீ என்ன சொன்னே?"

“ஓகேன்னேன்.”

“இஷ்டப்பட்டுத்தானே சொன்னே?”

“இல்லை! உன்னைக் கண்டா எனக்குப் பிடிக்கலை. உன் மூஞ்சி கூடப் பிடிக்கலை.”

“என்னது!” என்று திடுக்கிட்டுக் கேட்டான்.

“சும்மா சொன்னேன்.”

“சீரியஸா சொல்லு. என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?”

“சிரிக்கிறப்போ ஒரு மாதிரி தலையைச் சாய்ச்சுக்கறது பிடிக்கலை.”

“அப்புறம்?”

“மத்ததெல்லாம் பிடிச்சிருக்கு கிவ் மி எ கிஸ் ரகு. அது எப்படி இருக்கும்னு பார்க்கணும்.”

“எனக்கு உங்கிட்ட எது பிடிச்சிருக்கு, பிடிக்கலை சொல்லட்டுமா.”

“என் பல்லு ஒரு வரிசை தப்பி இருக்கும்” என்று ஈ என்று ஒரு முறை காட்டினாள். “அப்புறம் காலைப்பாரு. எல்லா விரலும் ஒரே சைஸா இருக்கும். சுதா இதைக்கூட கேலி பண்ணுவான். காலை சரியா கடவுள் வெக்கறதுக்குள்ள அவசரப்பட்டுப் பிறந்துட்டானாம். கிவ் மி எ கிஸ்” என்று கன்னத்தை நீட்டினாள். அவளை மெல்ல தோளில் பற்றித் திருப்பி உதடுகளைத் தேர்ந்தெடுத்து நெருங்கி முத்தமிடுவதற்குள் ‘சரக் சரக்’ என்று சப்தம் கேட்க,

“ என்ன ஜெயந்தி?”

“அட, நீங்க ரெண்டு பேருமா? நான் ஏதோ என்னவோன்னு வேற யாரோன்னு பயந்தே போய்ட்டேன்.”

“இந்தப் பொண்ணு யாரு?”

“ஜெயந்தியம்மா! என்னது, நான் உங்காத்துக்கு நார்த்தங்க ஊருகா போட வந்திருக்கேனே. பார்த்ததில்லையா?”

“குழந்தை எங்கே?”

“ஆத்தில அம்மாகிட்ட விட்டுட்டு வந்திருக்கேன், அருவில ஸ்நானம் பண்ணிட்டுப் போகலாம்னுட்டு.”

“நீங்க ரெண்டு பேரும் உட்கார்ந்துண்டு இருக்கிறது தெரியலை. குறுக்கு வழியா வந்தேன் நான். தோ போய்டறேன். நீங்க ரெண்டு பேரும் சௌகரியமா உட்காந்துக்கங்கோ” என்று விலகினாள்.

“அந்தப் பொண்ணு அருவில குளிச்சா பொடவை எல்லாம் நனையவே இல்லையே” என்றாள் மதுமிதா.

“குளிக்கப் போறா போல இருக்கு. வா மது, போகலாம்.”

“அப்ப அது?”

“அப்புறம்! கல்யாணம் ஆனப்பறம்.”

“ம்ஹூம். இப்பதான்” என்று பிடிவாதம் பிடித்தாள்.

அவள் கிட்டத்தில் போய் மறுபடி அருகில் அவளை நெருங்கி ஏறக்குறைய முத்தமிட்டு விடும்போது அவள், “ஊம்! ஆசை ஆசை!” என்று தன் உள்ளங்கையைக் காட்டினாள்.

“மது! மது!” என்று குரல் கேட்க. “அம்மா!” என்று எழுந்து ‘பை!’ என்று ஓடினாள். போகிறபோது ஒருமுறை திரும்பி “வ.வே.ஸு. ஐயர்!” என்று சொல்லிவிட்டுப் போனாள்.

“தனியா மரத்தடியில உக்கார்ந்திருந்தாப்பலே காதலி கூட?”

“ஜெயந்தி சொன்னாளாப்பா?”

“ஆமாம். முத்தம்வரைக்கும் போயிட்டாப்பல இருக்கே?”

மௌனமாக இருந்தான்.

“ரகு!” நேத்திக்குப் படிச்சுப் படிச்சு உங்கிட்ட சொன்னதெல்லாம் வேஸ்ட்டுன்னு தெரியறது.”

“சேச்சே! சும்மா உக்கார்ந்துக்கிட்டு இருந்தோம், அவ்வளவுதான்.”

“இதுக்கெல்லாம் அவசரமே இல்லை ரகு.”

“ஐயோ! ஒண்ணுமே நடக்கலைப்பா. எங்க இந்த ஜெயந்தி.”

“ஓர் அறியாத பெண்ணை இந்த மாதிரி உபயோகப்படுத்தறது ரொம்ப...”

“இனஃப். நீங்க சொல்ற மாதிரி எதுவுமே நடக்காதபோது இந்த லெக்சரே அநாவசியம்.”

“லெக்சர் இல்லை ரகு! முதல்ல அஸ்திவாரம் எழுப்பலாம்.”

“என்ன அஸ்திவாரம்?”

“வேலை கிடைக்கட்டும்! வேலை கிடைக்கிறது ஒரு முக்கியமான முன் தேவை இல்லையா? அவங்க என்னதான் அவா டாட்டரை உன்னோட பழகவிட்டாலும் சில வரம்புகள் எல்லாம் இதில பொதிஞ்சு இருக்கிறதை நீ முதல்ல உணர்ந்துக்கணும். வேலை கிடைக்காம கல்யாணம் பண்ணிக்கிறதை நீ விரும்ப மாட்டேன்னு எனக்குத் தெரியும்.”

“இப்ப யாருப்பா வேலை கிடைக்கிறதுக்கு முன்னாடி கல்யாணத்தைப் பத்திப் பேசினா?”

“யாரும் பேசலை. ஒருவித எச்சரிக்கைத்தான்.”

“எச்சரிக்கையா?”

"ரகு! நான் இதை விரும்புகிறதா நீ நினைச்சுக்கக்கூடாது. ஆனா இதுவும் ஒரு சாத்தியம்தான். உனக்கு வேலையே கிடைக்கலைன்னு வெச்சுக்க. அல்லது வேலை கிடைக்க ஒரு வருஷம், இரண்டு வருஷம் ஆறது. அப்ப கிடைக்கும்ங்கிற உத்திரவாதத்தின் பேரில ஒரு பெண்ணை உங்கூடப் பழகவிட்ட அவங்களுக்கு நீ இன்னைக்குக் காலைல செய்தது துரோகம் ஆகாதா?"

"அந்தப் பொண்ணுதான் கேட்டாப்பா! கைலதான் கொடுத்தேன்!"

"அக்ரீட்! எனக்கு விவரம் எல்லாம் வேண்டாம். ஆனா நீ என்னை ஏமாத்திட்ட. நான் உங்கிட்ட இன்னும் கொஞ்சம் டிக்னிட்டியை எதிர்பார்த்தேன் ரகு. ரகு, இதுக்கெல்லாம் அவசரமில்லை ரகு. அப்புறம் அலுத்தத்துப் போயிரும்! ஸெக்ஸில ஓர் எதிர்பார்ப்பு வெச்சுக்க..."

"ஸெக்ஸ் எல்லாம் பெரிய வார்த்தைப்பா!"

"பின்ன இப்ப இது என்ன? நெக்கிங்கா?"

"உங்களோட என்னால கம்யூனிகேட் பண்ண முடியலை. விடுங்க. என்னப்பா?"

தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போனான். 'ஜி.ரகுபதி' என்று விலாசமிட்டிருந்தது. ரகுபதி படபடப்புடன் பிரித்தான். அப்பா அதற்குள் உள்ளே போயிருந்தார். பிரிக்கிற அவசரத்தில் உள்கடிதம் சற்று ஓரத்தில் கிழிந்து விட்டது. பொறுமையில்லாமல் மற்ற மடிப்புகளை நீக்கி 'டியர் ஸார்...' அவசர அவசரமாகப் படித்தான்.

ரகுபதிக்கு ஆயிரம் வயலின்கள் வாசிப்பது போல இருந்தது.

அவனுக்கு வேலை கிடைத்துவிட்டது.

## 13

அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் முழுவதும் கவிதையில் எழுதியிருந்தது. டைப் அடித்த காகிதத்தின் வாசனை அவனுக்குப் பிடித்திருந்தது. கையெழுத்துப் போட்டிருந்த ஆசாமியை வாரி முத்தமிட வேண்டும் போலிருந்தது.

"எங்க கிளம்பிட்டே?" என்றார் அப்பா.

"கோபிநாத் கிட்ட தகவல் சொல்லிவிட்டு வந்துர்றேன்." ரகுபதிக்குச் சற்று வெட்கமாகத்தான் இருந்தது. இருந்தும் இந்த முக்கிய செய்தியை அவரிடமும் உடனே சொல்லாவிட்டால் தலை வெடித்துவிடும் போல இருந்தது.

"சட்டுன்னு என்னை மறந்து போய்ட்ட பாத்தியா?"

"இல்லையப்பா. உங்களுக்குதான் முதல்ல தாங்க்ஸ் சொல்லணும். சம்பளம் வாங்கினதும் முதல் காரியமா...உங்களுக்கு என்ன வேணும் சொல்லுங்க,"

"நான்கு முழம் வேஷ்டி!" என்று சொல்லித் சிரித்தார். "போ போ--- போய் அவர்கிட்ட சொல்லிட்டு வந்திரு. சந்தோஷப்படுவார்."

பாண்ட் மாற்றிக் கொண்டு பளிச்சென்று வாரிக்கொண்டு– மதுமிதாவை பார்த்தாலும் பார்க்கலாம்.– ப்ராஜக்ட் ஆபீசுக்கு ஓடினான். ஏழெட்டு இன்ஜியர்களுடன் கோபிநாத் ஒரு வரைபடத்தின் மேல் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்தார். “ஸார்! ஸார்” என்று இரைந்தான். நிமிர்ந்தவர் கேட்டார்,

“என்ன ரகு? யூ ஸீம் எக்ஸைட்டட்!”

“கிடைச்சுருச்சு ஸார்! ஆர்டர் வந்திருச்சு!” என்று அதை அவர் மேசை மேல் வைத்தான்.

“எனக்கு முந்தாநாளே தெரியுமே இது.”

“என்னது!”

“ஆமாம். அப்பவே மெட்ராஸ்ல போன் பண்ணி விசாரிச்சுட்டேன். உன் பேர் லிஸ்டில இருக்கிறதா சொன்னாங்க” என்று புன்முறுவலித்தார்.

“எங்ககிட்ட... எங்ககிட்ட... சொல்லவே இல்லையே.”

“முன்னாலேயே சொல்லி இயல்பா தபால்ல ஆர்டர் வந்ததும் கிடைக்கிற சந்தோஷத்தை எதுக்கு கெடுக்கணும்னு பேசாம இருந்தேன்.”

“மதுமிதாவுக்கு தெரியுமா ஸார்...”

“நான் ஒருத்தருக்கும் சொல்லலை. நீ போய் சொல்லிட்டு வா. ஆர்டரை சரியாப் படிச்சியோ?”

“முழுக்கப் படிக்கலை ஸார்...”

“மூணு நாளில உன்னை மெடிக்கல் செக்கப்புக்கு கூப்பிட்டிருப்பாங்களே. செக்கப் ஆன உடனே வேலைல சேர்க்கறதுக்கு தயாரா இருக்கணும்னு சொல்லியிருக்காங்களே...பாத்தியா?”

ரகுபதிக்கு வயிற்றுக்குள் சட்டென்று வேதனைப் பந்து உட்கார்ந்து கொண்டது.

“அப்படியா?”

“நிச்சயதார்த்தத்துக்கு சமயமில்லை. நீ போய் முதல்ல வேலையை ஒத்துக்க. அப்புறம் எவ்வளவு சீக்கிரம் லீவு கிடைக்குதோ திரும்பி வந்துரு. இங்க ஃபார்மலா ஒரு ஃபங்ஷன் ஏற்பாடு பண்ணிடலாம்” என்றார்.

“சரி ஸார்.”

“போய் மதுகிட்ட சொல்லு. பெஸ்ட் ஆஃப் லக்.”

மரத்தடியில் வலைத்தொட்டில் கட்டி அதில் ஆடிக் கொண்டே படித்துக் கொண்டிருந்தாள். சுதாகர் மரத்தின் மேல் ஏறி மற்றொரு மரத்துக்கு தாவப் பிரயதனப்பட்டுக் கொண்டிருந்தான். மதுவின் அம்மா நாற்காலிக்கு அருகே டீ சமாசாரங்களை பிரம்பு மேசை மேல் அடுக்கிக் கொண்டிருக்க, “வாங்க ரகு! என்ன இப்படி வேர்த்திருக்கிறது?”

“எனக்கு எனக்கு வேலை கிடைச்சிருச்சிங்க.”

“அட! அப்படின்னா நிச்சயதார்த்தத்தை உடனே வெச்சுர வேண்டியதுதான். கேட்டியா மது! எந்திரிடி. இனிமே அவர் வந்தா எந்திரிக்கணும்!”

“பரவால்லை. அதெல்லாம் எனக்கு அவசியமில்லை.”

மதுமிதா படுக்கை தொட்டிலிலிருந்து குதித்து அம்மாவின் அருகில் சென்று ரகுபதியைப் பார்த்து, “என்ன வேலை?” என்றாள்.

“இன்ஜினியர் வேலை. அதுக்குத்தானே படிச்சேன்?”

“சம்பளம் வருமா?”

“எடுத்த உடனே ஆயிரத்து அம்பது தரதாச் சொல்லியிருக்கான். இதைத் தவிரச் எச்.ஆர்.ஏ., ஸி.ஸி.ஏ., எல்லாம் உண்டு. ட்ரான்ஸ்போர்ட் அலவன்ஸ், மெடிக்கல் வசதிகள் எல்லாம் உண்டு. மத்திய சர்க்காரைச் சேர்ந்த தொழிற்சாலை.”

“ரொம்ப நல்ல வேலை! என்ன மாப்பிள, என் பொண்ணு அதிர்ஷ்டக்காரியா இல்லையா–இப்ப சொல்லுங்க!”

“நிச்சயம்” என்றான். மதுமிதாவை விட்டுப் பார்வையை அகற்றவில்லை. அவள் அவனை இரண்டு ஜோடி விரல்களைக் குறுக்கே அமைத்த துவாரம் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“சித்திரை முடிந்ததும் சீக்கிரமே கல்யாணம் வெச்சுக்கிடலாம். இவ அப்பாகிட்ட சொல்லிட்டிங்களா?”

“சொல்லிட்டங்க.”

“நிச்சயதார்த்தத்தைப் பத்தி என்ன சொன்னார்?”

“வேலைல உடனே போய்ச் சேரும்படிக்கு ஆர்டர் வந்திருக்கு. சேர்ந்து சீக்கிரமாவே லீவு எடுத்துக்கிட்டு வா’ன்னு சொன்னார்.”

“ஊருக்குப் போறதுக்குள்ள நிச்சயதார்த்தத்தை வெச்சுக்க முடியாதா?”

“நீங்க வேணா அவர்கிட்ட சொல்லிப் பாருங்க. நான் தயார்தான்.”

“ரகு, ஊருக்குப் போகப் போறிங்களா?”

“ஆமாம்!”

“எனக்கு அழுகை வரலியே?”

“ஏய்!”

“ரகு, உள்ள போகலாம்” என்று அவள் மேசையிலிருந்து ஒரு பிஸ்கட்டை எடுத்துக் கடித்துக் கொண்டேசெல்ல, ரகுபதி அம்மாவைப் பார்த்தான்.

"போய்ப் பேசிக்கிட்டு இருங்க" என்றாள். மதுமிதாவின் பின் சென்றான். மாடிக்கு அழைத்துச் சென்றாள். "ரகு, நிசமாவே ஊருக்குப் போயிடுவியா?"

"போய்த்தான் ஆகணும்."

"என்னையும் அழைச்சுட்டுப் போயேன்."

அவள் கண்களில் நீர் நிரம்பியது. "இல்லை மதுமிதா, போன உடனே எர்லியஸ்ட் ஆப்பர்ச்சுனிட்டி... திரும்பி வந்திருவேன்."

"இல்லை ரகு, நீ போகாதே" என்று சிணுங்கினாள்.

"போகாம இருக்க முடியாதம்மா. வேலை ஒப்புத்துக்கணுமில்லையா?"

"இங்கேயே பாவநாசத்தில வேலை கிடைக்காதா?"

ரகுபதி சிரித்தான்.

"இல்லை, அப்பாகிட்டதான் நிறைய காசு இருக்கே. நீ எதுக்கு வேலைக்குப் போகணும்?"

"இதெல்லாம் நடைமுறையில நடக்கிறது இல்லை கண்ணு."

"எங்கே சொல்லு மறுபடியும்? கண்ணு!"

"கண்ணு!"

"ரொம்ப ஸ்வீட்" நேராக வந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். "என் கண்ணை நேராப் பார்த்துச் சொல்லு, அங்கப் போனதும் என்னை மறக்க மாட்டியே? வேற பெண்களை ஸைட் அடிக்க மாட்டியே?"

"சேச்சே! என்ன சொல்ற நீ? என் லைஃப் முழுக்க உன்னை..."

"ப்ராமிஸ்! என் கையில சத்தியம் பண்ணி சொல்லு."

"சத்தியமா உன்னைத் தவிர வேற யாரையும் கனவில் கூட எண்ண மாட்டேன். உன்னைத்தான்... உன்னைத்தான் கல்யாணம் செய்துப்பேன்!"

"கொஞ்சம் இரு" என்று உதட்டில் விரல் வைத்து எச்சரித்துவிட்டுக் கதவைக் சாத்தி உள்பக்கம் தாளிட்டாள். "அம்மாவும், சுதாவும் தோட்டத்தில்தான் இருக்காங்க" என்றாள். திரைச்சீலையைத் தளர்த்திக்கொண்டு உள்ளே லேசாக இருட்டடித்தாள். ரகுபதி பிரமித்து போய் போர்த்துக் கொண்டிருக்க, அவனருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். அவன் கையை எடுத்து தன்மேல் வைத்துக் கொண்டாள். அவன் தலைமுடியை கலைத்தாள். மூக்கால் கன்னத்தில் உரசினாள். அவள் கன்னங்கள் சிவந்திருந்தன. பெரிசாக மூச்சு விட்டாள். அவள் திறந்த வாயிலிருந்து மெலிதாக பெப்பர்மிண்ட் வாசனை இருந்தது. அவன்மேல் சாய்ந்துக் கொண்டாள். முகத்தில் வியர்வை பளிச்சிட்டது. முகத்தை தன் கழுத்தின் மேல் அழுத்திக் கொண்டாள். அவள் கைகள்...

"நோ! மது! வேண்டாம் வேண்டாம்."

“வேணும் வேணும்”

“டயம் இருக்கு டயம் இருக்கு! கல்யாணம் ஆகட்டும்” என்று தொடர்பு இல்லாமல் சொல்லி எதிர்த்தான். ஆவேசம் வந்தவள் போல் அவனை மூச்சுத் திணறக் கட்டிக் கொண்டவள் சட்டென்று அவனை விடுவித்து விட்டாள். அவன் மார்பில் கை வைத்து சற்று பலமாக அவனை தள்ளினாள்.

“வேண்டான்டிப் போ!”

“இல்லை மது, நான் சொல்ல வரது... இது வந்து... இதுல நம்ம ரெண்டு பேருக்கும் ஒரு எதிர்பார்ப்பு வேணும். லெட்ஸ் நாட் ஹர்ரி.!”

கேட்கிறாளா இல்லையா சரியாக தெரியவில்லை. தலையில் ரிப்பன் வைத்துக் கொண்டு கண்ணாடியில் பார்த்துக் கன்னத்தில் பரவியிருந்த பவுடர் திட்டை சரிபடுத்திக் கொண்டு “போங்க! போய் வேலைக்குப் போய் சேர்ந்துக்கோங்க!” என்றாள்.

“மதுமிதா! நீ சின்ன பொண்ணு. இந்த சந்தர்ப்பத்தில உணர்ச்சி வசப்பட்டு, அவசரப்பட்டு எதையாவது செய்யரது சுலபம். கொஞ்ச வருஷம் கழிச்சு இந்த சம்பவத்தை நாம ரெண்டு பேரும் பேசிக்கறப்ப நான் செய்தது சரியா தப்பாங்கறது உனக்குப் புரியவரும்.”

“பூ!” என்று விரட்டினாள் மறுபடி குழந்தை!

“மது, ஐ’ ம் ஸாரி.”

கவனிக்காமல் “அம்மா கூப்பிடாறங்க” என்று சட்டென்று அவனை விட்டு நீங்கிப் புறப்பட்டாள்.

இவள் யார் குழந்தையா? எப்படிப்பட்ட பெண்? என் மேல் அதிக ஆசை வைத்திருக்கிறாளா? என் மேலா அல்லது என் உபயோகத்தின் மேலா? எனக்காக, என் பிரிவுக்காக வருத்தப்படுகிறாளா? என்னை விரும்புகிறாளா? இவளுக்கு காதல் என்பதை பற்றியெல்லாம் அபிப்ராயம் இருக்கிறதா?

வீட்டுக்கு நடந்துச் செல்லும்போது சரிவிலிருந்து கட்டடத்தைப் பார்த்தான். மதுமிதா பால்கனியில் நின்றுக் கொண்டு கையை ஆட்டினாள் புன்னகையுடன்.

“சாயங்காலம் வாங்க” என்று கத்தினாள்.

இதற்கு என்ன அர்த்தம்?

முதன்முதலாக ரகுபதிக்கு மதுமிதாவைக் கல்யாணம் செய்துக் கொண்டதும் வாழ்க்கை அப்படி ஒன்றும் பன்னீரும் ரோஜா இதழ்களும் தெளித்த கனவாக இருக்கப் போவதில்லை என்று தோன்றியது. நான் மடையன்! அந்த உணர்ச்சிப் பூர்வமான தருணத்தில் அவள் விருப்பத்திற்கு பதில் தந்திருக்க வேண்டும். காதல் என்பது மனம் மட்டும்தானா? உடலும் உண்டு! இவளிடத்தில நகைச்சுவை உணர்ச்சி இருக்கிறது, அறியாமை இருக்கிறது. தன் பெண்மை எல்லைகளை மீறின ஆர்வத்துக்கு இடம் கொடுத்து இன்று கேட்டிருக்கிறாள்! இதைத் தெரிந்துக் கொள்ளாமல் என்னவோ புத்தர் போல முட்டாள்தனமாக... அடுத்து இனி அருகில் வரமாட்டாள்! சந்தர்ப்பம் போய்விட்டது. சந்தர்ப்பங்கள் பின்னால் ஏற்படத்தான் போகின்றன! அனுமதி பெற்ற சந்தர்ப்பங்கள் அனுமதி இல்லாத சந்தர்பத்தில்தான், திருடப்பட்ட கணங்களில்தான்

இன்னும் பரபரப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளாத மடையன் நான். இவள் என்னை அனுகியதில் தப்பே இல்லை. நான் இவளுக்குத்தான் என்று தெரிந்த பின்தானே அணுகியிருக்கிறாள்...!

வீட்டுக்கு திரும்பினபோது அப்பா அவன் சட்டை பாண்டுகளை ஒரு பெட்டியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தார். “நாளைக்கு மெடிக்கல் டெஸ்ட்டுன்னா இன்னி ரயில்ல கிளம்பியாகணும். கோபிநாத் உனக்கு ஜங்ஷன்ஸ் புக் பண்ண ஏற்பாடு பண்ணியிருக்கிறதா சொன்னார். கல்யாணத்தைப் பத்தி என்ன சொன்னார்?”

“வேலையை ஒப்புக்கிட்டு லீவுல வரச்சொன்னார்.”

“வேலையை ஒப்புக்கிட்டதும் ப்ரொபேஷன்ல போடுவான். அப்ப லீவு கிடைக்கிறது கஷ்டமா இருக்கும். ப்ரொபேஷன் ஆறுமாசம்தானே?”

“ரெண்டு மூண் நாள் சேர்ந்தாப்பல லீவு வராதாப்பா?”

“ஃபாக்டரிகள்ல கொஞ்சம் கஷ்டம்! பார்க்கலாம். நிச்சயதார்த்தத்தை ப்ரொபேஷனுக்கு அப்பறம் கூட வெச்சிக்கலாமே!”

“வேண்டாம்பா, அந்தம்மா ஊருக்கு கிளம்பறதுக்குள்ள வெச்சுக்கணும்னு அத்தனை அவசரமா இருக்காங்க. அதிகம் ஒத்திப் போட வேண்டாம்.”

“தேவையில்லை. இத பாரு ரகு, உன் காரியருடைய ஆரம்பத்தில் இந்த மாதிரி இமோஷனலா ஓர் அனுபவம் ஏற்படறது எனக்கு கவலையா இருக்கு. இப்ப ஊருக்குப் போய் வேலையை ஒப்புத்துக்கிட்டாக் கூட எப்ப பார்த்தாலும் இந்தப் பொண்ணையே நினைச்சுகிட்டுத்தான் இருப்பே.”

“அப்படி இல்லப்பா.”

“இந்த மாதிரி ஒரு தங்க தட்டில் ஓர் அழகான பொண்ணைக் கொடுக்கப் போறான்னு இந்தச் செய்தியே உன் கவனத்தை ரொம்ப பாதிக்கப் போறது. அது எனக்கு கவலையா இருக்கு. கொஞ்சம் அவசரமாவே கல்யாண பேச்சு ஆரம்பிச்சுருச்சு. நான் இதை எதிர்பார்க்கவே இல்லை.”

“நீ அதுக்காக கல்யாணத்தை ஒத்திப் போடச் சொல்லாதேப்பா. அவங்களே தீர்மானிக்கட்டும்.”

“என்னைத்தவிர எல்லாருமே அவசரத்துல இருக்காப்பல இருக்கு. எனக்கு என்னான்னா ரகு! லெட் மி பி ஃப்ராங்க்! நீயும் ஊரைவிட்டு போயிருவே. இதைப் பத்திப் பேச சந்தர்ப்பம் வராது. எனக்கு ஒரு சந்தேகம் வருது! கோபிநாத் இந்தக் கல்யாணத்தை ஏற்பாடு பண்ண ஏன் இத்தனை அவசரமும் பதற்றமும் காட்டறார்னு கேக்கத் தோணுது.”

## 14

“**எ**ன்னப்பா சொல்றீங்க?” என்றுப் பதறிப் போய் கேட்டான்.

“உன் உதடு துடிக்குது! உனக்கு கோபம்னு தெரியுது. நான் கேட்க விரும்பலை.”

“இல்லைப்பா. உங்க மனசில என்ன வெச்சுக்கிட்டு இருக்கீங்க, சொல்லிருங்க.”

“ரகு நீ கவனிக்கலை. நீ வந்து ஒரு வாரம், பத்து நாள் கூட ஆகலை. அதுக்குள்ள விஷயம் எவ்வளவு தூரத்துக்கு வந்திருக்குப் பாரு. அந்தக் குடும்பத்துக்கு நீ அறிமுகமான இரண்டாவது நிமிஷம் பெண்ணை உன்கிட்ட பழக்கியாச்சு. அம்மா டென்னிஸ்ங்கறாங்க, அப்பா மாப்ளைங்றாரு. எல்லாரும் புகழறாங்க, விருந்து வைக்கிறாங்க, பதினஞ்சு நிமிஷத்துல நிச்சயதார்த்தங்கறாங்க, என்னவோ சினிமால வர மாதிரி கதை பாயுது. அதனால விஷயம் எதாவது வேறமாதிரி இருக்குமோன்னு தோணுது.”

“வேற மாதிரின்னா?”

“எனக்கு குறிப்பா சொல்ல தெரியலை ரகு! என்னவோ உணர்ச்சி பூர்வமா இதில் ஏதோ உதைக்குது ஸம்திங் ராங்!”

“நீங்க ஒரு ஸினிக் ஆயிட்டிங்க... அதுதான் ராங்” என்று நகைத்தான் ரகு. இது அவரைப் பாதித்திருக்க வேண்டும். முகம் சற்று சுருங்கி போய்விட்டது.

“எதாவது தப்பா இருந்தா உங்களுக்கு கண்டுபிடிக்க சமயம் இருக்குதில்லை? நான் ஊருக்குப் போய் திரும்பி வர நாளாகும் இல்லையா? அதனால அதுக்குள்ள கண்டுபிடிச்சு வையுங்களேன்!”

“அப்படின்னா இதில ஏதாவது தகராறு இருந்தா நான் சொல்ற மாதிரி கேட்பே இல்லே?”

“எதைப்பத்தி?”

“மதுமிதாவை கல்யாணம் செய்துக்கறதைப் பத்தி”

“இல்லைப்பா, அவளை நான் கல்யாணம் செய்துக்கறதா தீர்மானிச்சுட்டேன். என்ன ஆனாலும் சரி”

“அவ எப்படிப்பட்ட பொண்ணா இருந்தாலும் பரவாயில்லையா?”

“நீங்க மனசில என்ன வெச்சுக்கிட்டு இருக்கிங்கன்னு எனக்கு சரியா புரியலைப்பா”

“ஓக்கே! ஐ’ல் பி ஃப்ராங்க். இந்தப் பொண்ணு... இந்தப் பொண்ணு எதாவது முன்னாலே வந்து களங்கப்பட்ட பொண்ணா இருந்து அதை மறைச்சு வைக்க சட்டுபுட்டுன்னு கல்யாணம் செய்துவைக்க இவங்க முயற்சி பண்றாங்களோ?”

“நல்ல கற்பனா சத்திப்பா உங்களுக்கு!”

“ஸாரி, நீ இவ்வளவு லைட்டா இதை எடுத்துப்பேன்னு நினைக்கலை.”

“சரி, அப்படியே இருக்கட்டும். அதனால என்னப்பா? என்னைப் பொறுத்தவரையில் மதுமிதா நான் அவளை என்னிக்கு சந்திச்சேன்னோ அன்னிக்குப் பிறந்தவ! அதுக்கு முன்னால என்னன்ன நடந்ததுங்கறது பத்தி எனக்கு கவலையில்லை.”

“அப்படிச் சொல்லிட்டா எனக்கு இதில மேற்கொண்டு பேச்சே இல்லை... சர்ட்டிப்பிகேட் எல்லாம் எடுத்து வெச்சுக்கிட்டயா? பணம் கொஞ்சம் டிராப் பண்ணிக்கிட்டு வரேன். வழிச் செலவுக்கு வேண்டிருக்கும்.”

அவர் நிச்சயம் அடிப்பட்டிருந்தவர் போலத்தான் தெரிந்தார். ஒரு சமயம் அவரைப் பார்த்தால் பாவமாக இருந்தது. எல்லாம் என் நன்மைக்காகத்தான் சொல்கிறார். ஆனாலும் அதீதமாக ஒன்றுக்கு ஒன்று முடிச்சுப் போடுகிறார். மதுமிதாவா! அவளுடன் அதிகம் பழகினவர் இல்லை. அவள் ஒரு புஷ்பம் போல, காட்டில் பறக்கும் சின்ன குருவியைப்போல, உற்சாக அருவியைப்போல...

அப்பா போனதும் ஜெயந்தி சாப்பாடு கொண்டு வந்து வைத்தாள்.

“ஜெயந்தி நான் ஊருக்குப் போறேன்.”

“அதுக்குள்ளேயா அண்ணா?”

“எனக்கு வேலை கிடைச்சுருச்சு.”

“எனக்கு ரொம்ப சந்தோஷம். மாமா சொல்லிண்டே இருப்பார், ‘ரகுவுக்கு வேலை கிடைச்சுட்டா எனக்கு ரொம்ப நிம்மதி’ன்னு. உங்களுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணிட்டாலும் நிம்மதின்னுட்டு. நிச்சயதார்த்தம் கூட பண்ணப் போறதாக கேள்விப்பட்டேன். ப்ராஜக்ட் ஆபிஸர் பொண்ணுதானே... !”

“ஆமாம் ஜெயந்தி.”

“அவ ரொம்ப குடுத்து வெச்சவ. நன்னாப் பண்ணிப் போடுவா ‘ஒரே பொண்ணில்லையா! எவர்சில்வர் பாத்திரம் மட்டுமே மூணு பீரோ வெச்சிருக்கா. நானே பாத்திருக்கேன். எப்ப நிச்சயதார்த்தம்?

“போய் வேலையை ஏத்துண்ட உடனே திரும்பி வந்திருவேன். லீவு கிடைக்கணும்.”

“பட்டணத்திலதான் வேலையா?”

“ஆமாம்.”

“ஊருக்குப் போயிட்டுப் திரும்பிப் வரப்ப எனக்கு சின்னதா ஒரு மில்க் குக்கரும்... அயோத்தியா புடவைன்னு விக்கறா... அறுபத்தி அஞ்சு ரூபாயோ என்னவோ... அது ஒண்ணு வாங்கிண்டு வரேளா? பணம் கொஞ்சம் கொஞ்சமா கழிச்சுண்டுடலாம்!”

“பணம் வேண்டாம். நானே என் காசிலே வாங்கிட்டு வரேன் ஜெயந்தி.”

“என் சம்பள பணத்தையெல்லாம் உங்கப்பாகிட்டதான் கொடுத்து சேத்து வெச்சுருக்கேன். அவர் மாதிரி மனுஷர் கிடைக்க மாட்டார். எங்கிட்ட கொடுத்தா செலவழிச்சுருவேன்னு இதுவரைக்கும் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபா சேத்து வெச்சுருக்கார் போஸ்ட் ஆபிசில. கையெழுத்துக் கூட எங்க போடறதுன்னு தெரியாது. அவர் மாதிரி உண்டா!”

ரகுபதிக்குச் சுருக்கென்றது. அவர் மனத்தைப் புண்படுத்திவிட்டோம். ஊருக்குப் கிளம்புவதற்குள் சமாதானமாக எதாவது சொல்லிவிட்டு போகலாம். என்னைப் பற்றி அவர் கவலைப்படுவது இயற்கையே...

“இருங்க நான் கட்டித்தரேன்” என்று ஜெயந்தி முந்தானையை செருகிக் கொண்டு அவனிடமிருந்து ஹோல்டாலைப் பிடுங்கிக் கொண்டு கீழே சம்பிரமமாக உட்கார்ந்துக்கொண்டு தோல்வாரைப் பிடித்துக் கட்டும்போது ஜெயந்தியின் புடவை மெலிசாக இருந்ததும் அவள் பாடி போடாததும் முழங்காலுக்குமேல் சிவப்பாக

இருப்பதும் அவள் மார்பின் பிரிவும் தெரிய ரகுபதிக்குச் சட்டென்று அந்த இடத்தைவிட்டு விலகிவிட வேண்டும்போல இருந்தது. இருந்தும் அவனால் விலகமுடியாததற்கு தன்னை மிகவும் கடிந்துக் கொண்டான். மதுமிதாவுக்கு துரோகம் செய்வது போல உணர்ந்தான். காலால் உதைத்துக்கொண்டு ஹோல்டாலின் வாரை இழுக்கும்போது அவள் நெஞ்சு மஞ்சள் ரவிக்கையின் ஊடே தெரிய... இவள் அழுக்கு! இவள் குளிக்கவில்லை! இவள் மனைவி! இவள் பிள்ளைப் பெற்றவள்! இவள் அழகில்லை என்று எத்தனையோ சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

“கிட்டவந்து இதை கொஞ்சம் இறுக இறுக்கிப் பிடிச்சுக்கங்க” என்றாள்.

அவள் அருகே சென்று அவளுடன் சேர்ந்துக் கொண்டு படுக்கை கட்டும்போது... நான் இந்த மாதிரி சபலப்படும்போது எப்படி அந்தப் பெண்ணிடம் பரிபூரண தூய்மையை எதிர்பார்க்க முடியும்! கல்யாணத்துக்கு முன் ஏற்படும் இந்த மாதிரி பேதலிப்புகள் எல்லாமே மன்னிக்கப்பட வேண்டியவை! என்றாவது ஒரு நாள் எதிர்காலத்தில் நான் டூர் போகும்போது மதுமிதா இந்த மாதிரிதான் தரையில் சம்பிரமமாக உட்கார்ந்துக் கொண்டு காலை விரித்துக் கொண்டு படுக்கை கட்டுவாள். அப்போது அவளை நான் அப்படியே பாதிப் படுக்கையில் வீழ்த்தி...

அப்பா வந்தார். “ஜெயந்தி, இனிமே மறுபடி நீயும் நானும்தான். இவன் வேலைக்குப் போறான்.”

“சொன்னார் மாமா...”

“ரகு, முன்னூறு ரூபா எடுத்துக் கொண்டு வந்திருக்கேன். ரெண்டு நூறு ரூபா நோட்டும் சில்லரையுமா போறலைன்னா எழுது.”

“சம்பளம் வந்துரும்பா.”

“வரட்டும் வரட்டும், அதுவரைக்கும் என்ன பண்ணுவே? கோபிநாத் என்னை கூப்பிட்டனுப்பிச்சார். மத்தியானம் அவர் வீட்டில உன்னைச் சாப்பிடக் கூப்பிட்டார். என்னையும் கூப்பிட்டார். நான் வரலை. எனக்கு விருந்துச் சாப்பாடு ஒத்துக்கிடறதில்லை. நானும் ஜெயந்தியும் வத்தக் குழம்பும் இருக்கவே இருக்கோம். என்ன ஜெயந்தி?”

“மாமா! என் காசில ஒரு அறுபத்தைந்து ரூபா உங்க பிள்ளைகிட்ட கொடுத்துருங்கோ. அவரை ஒரு புடைவை வாங்கிண்டு வரச் சொல்லியிருகேன்.”

“சரி சரி, நீ போ. ரகு, குளிச்சுட்டு அவங்க வீட்டுக்குப் போயிரு. ரொம்ப பேசிகிட்டு இருக்காதே. ரெண்டரை மணி பஸ்ஸை விட்டா நீ ரயிலையும் விட்டுருவே. சேர்ற தினமே லேட்டா போகவேண்டாம்!”

ஜெயந்தி படுக்கையை ‘விண்’ என்று கட்டிவிட்டாள். வழி அனுப்ப வருகிறேன் என்றாள்.

மத்தியானம் கோபிநாத் வீட்டுக்கு போன போது மதுமிதா புள்ளிப் போட்ட சட்டையும் வயிற்றை அழுத்திய பேண்டையும் போட்டுக் கொண்டு கொஞ்சம் அதிகமாகவே பவுடர் போட்டுக்கொண்டு சுதாவுடன் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததும் “ரகு உன்கூட ரயில்வே ஸ்டேஷன் வரைக்கும் வரப் போறேன்.”

“பஸ்லயா?”

“இல்லை. கார்ல போகப் போறோம். நானு, நீ, அப்பா, அம்மா, சுதா எல்லாரும்!”

உள்ளே சென்றதும் “எதுக்கு ஸார் நீங்க இவ்வளவு சிரமம் எடுத்துக்கறீங்க?” என்றான்.

“சே! சே! மாப்பிள்ளை முத முத உத்தியோகம் ஏற்கப் போறார். அதுக்காக திருநெல்வேலி ஜன்ஷன் வரைக்கும் கூட வந்து வழியனுப்பக் கூடாதா? ரகு, நீங்க சேரப் போற கம்பெனியைப் பத்தியெல்லாம் விசாரிச்சுட்டேன். நல்ல கம்பெனி. நல்ல எதிர்காலம் இருக்குதாம். ப்ரொடக்ஷன் போஸ்டிங் கிடைச்சுட்டா சீக்கிரமே ப்ரொமோஷனெல்லாம் கிடைக்குமாம். ஃபினான்ஸ் டைரக்டர் எனக்குத் தெரிஞ்சவர்.”

பின்னணியில் மதுமிதாவும் சுதாகரும் சண்டை வலுத்துப் போய் ஒருவரை ஒருவர் துரத்த, “இந்தப் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டு இருந்தா இந்நேரம் அழைச்சுகிட்டுப் போயிருக்கலாமில்லை!” என்றாள் அம்மா.

“ரகு உங்க அட்ரஸ் என்ன? நான் உங்களுக்கு லெட்டர் போடணும்.”

“போனதும் அட்ரஸ் எழுதறேன்.”

“உங்கப்பா எங்கே? வரலையா”

“அவர் சாப்பாட்டுக்கு வரலைன்னு சொல்லச் சொன்னார் ஸார்.”

“அப்படியே மகனை டேக் ஓவர் பண்ணிக்கிட்டோம்னு நினைச்சுருப்பார்!”

“அதெல்லாம் இல்லை ஸார். ஹி ஈஸ் ஹாப்பி.”

“ரகு ரகு!” என்று மது கூப்பிட்டு, “இந்தாங்க, இதை எப்பவும் உங்க ரூம்ல மாட்டிக்கங்க” என்றாள்.

நீண்ட சதுர அட்டையின் மேல் நேர்த்தியாக ஒட்டவைக்கப்பட்ட ஜப்பானியப் பெண்ணின் பொம்மை அது. “அவளே போட்டது. ஒரு தடவை இதுக்காக கிளாஸ் அட்டெண்ட் பண்ணிருக்கா. எல்லாம் வருது. சிரத்தை இல்லை. டான்ஸ் கூட ஆடுவா. மது, போட்டோ காட்டினியோ?”

“மது, உன் போட்டோ ஒண்ணு வேணுமே!” என்றான் ரகு.

“குடுத்தாப் போச்சு” என்றார் கோபிநாத். “மாப்பிள்ளை! ரொம்ப என் பெண்ணைப் பத்தியே நினைக்க வேண்டாம். முதல்ல வேலையில கவனமா இருங்க.”

மதுமிதா பெரிய ஆல்பத்தை எடுத்து, “இதுல எது வேணா செலக்ட் பண்ணிக்கங்க” என்றாள் ஆர்வத்துடன். ரகு உட்கார்ந்துக் கொண்டு ஒவ்வொன்றாகப் பார்த்தான். சின்ன வயசில் பள்ளி நாடகத்தில் லேசான மீசையுடன்; பரத நாட்டியத்தில் எல்லா விரல்களையும் தாமரைப் பூ பண்ணிக் கொண்டு; பிக்கினிக்கில் பல மாணவிகளுடன்; கர்ள் கைடு டிரஸ்ஸில்; இரட்டைப் பின்னலில் ஒன்றை மட்டும் மார் மேல் போட்டுக் கொண்டு எட்டு வயசிலிருந்து எப்படி வருஷம் வருஷமாக மெருகூட்டப்பட்டிருக்கிறாள் என்பதற்குச் சாட்சியங்கள்.

“இது நான் எடுத்தேன்” என்றான் சுதா.

மரத்தின் மேல் உட்கார்ந்துக் கொண்டு பாவாடைத் தாவணியுடன். “இதை எடுத்துக்கறேன். இப்படித்தான் இவளை முதல்லே சந்திச்சேன்!”

“ரகு, கொஞ்சம் தோட்டத்துப் பக்கம் வாங்க. போட்டோ எடுத்தரலாம். உங்க ரெண்டு பேரையும் எடுத்தர்றேன்.”

“இரண்டு பேரும் அருகருகே நிற்க, “என்ன வெக்கப்படறிங்க” என்று மது அவன் கையை எடுத்து தன் தோள் மேல் வைத்துக் கொள்ள, “சிரிங்க” என்றாள்.

க்ளிக் என்ற சூட்டுடன் போலராய்ட் காமிராவிலிருந்து டெவலப் செய்யப்பட்ட பிரிண்ட் நழுவி வெளியே வர, முதலில் ஏறக்குறைய வெளுப்பாக இருந்து, மெல்ல மெல்ல வர்ணங்கள் பெற்று இன்னும் வர்ணங்கள் சிறந்து, மரம், நிழல், பின்னால் கல்மண்டபம், அதன் பின்னால் வான நீலம் எல்லாம் உருவாக மதுமிதாவும், ரகுபதியும் சிருஷ்டிக்கப்பட்டு அவர்கள் புன்சிரிப்பு பிறந்து, “இந்தாங்க, வெச்சுக்கங்க” என்று அவன் கையில் போட்டோவின் பிரதியைக் கொடுத்தார்.

“உனக்குத் தினம் மூணு லெட்டர் போடட்டுமா ரகு?”

“பேசாம கூடவே போயிறேன்.”

இவை எல்லாவற்றிற்கும் இடையிலும் ரகுபதிக்கு அவளை விட்டுப் பிரியப் போகும் சோகம் உண்மையான கனமான அடிவயிற்றில் சேர்ந்துக் கொண்டது. அவர்கள் சிரித்துச் சிரித்துப் பேசினாலும் இதனூடே ஒரு சரடு போல இந்த அழுத்தம், கனம் அதிகமாகிக் கொண்டே வந்தது. ‘இன்னும் கொஞ்சம் நேரம்தான்’ என்று பார்க்க பார்க்க தொண்டையில் அடைத்தது.

காரில் எல்லாருக்கும் இடம் இருக்காது போல இருந்தது. அப்பா, “பரவால்லை, நான் இவனுக்கு நிறைய தடவை டாட்டா சொல்லிருக்கேன்” என்று சிரித்துவிட்டு விலகிக் கொண்டார். முன்ஸீட்டில் டிரைவரும் ரகுவும் கோபிநாத்தும் உட்கார்ந்திருக்க, பின்னால் சுதா, மது, அம்மா, மதுமிதா அடிக்கடி அவன் தோளில் சீண்டிக் கொண்டிருந்தாள். “ஏன் ஊருக்குப் போறே?” என்று சிணுங்கினாள். ரகுபதிக்குச் அந்தச் சோகம் உச்சக்கட்டத்தை நோக்கி செல்வது போல் இருந்தது. எந்த இடத்தில் எப்போது அது வெடிக்கப் போகிறது என்று பயமாக இருந்தது.

மறுபடி திருநெல்வேலி சந்திப்பு. அதே வண்டிதான். இஞ்ஜின்கூட அதேதானோ? கர்டு கூட அவரேதானோ? முதலில் இங்கு வந்து சேர்ந்ததிலிருந்து இப்போது வரை எல்லாம் சொப்பனம் போலத்தான் இருந்தது.

கார்டு விசில் ஊத, அதே சமயம் மணி அடிக்க, ஜன்னலில் தெரிந்த நாலு முகங்களில் அவன் கண், மனம், சிந்தனை, ரத்தம் எல்லாவற்றிலும் அவள் முகம் மட்டும்தான் விரவியிருக்க அவள் ‘டாட்டா’ என்று கையாட்ட, திடீர் என்று ஞாபகம் வந்தவள் போல அவள் ஊர்ந்துக் கொண்டிருந்த வண்டியுடன் ஓடிவந்து அவன் கையை பிடித்து அழுத்தி கன்னத்தில் லேசாக தட்டி, “நான் உனக்கு ஞாபகத்துக்கு தந்தேனே, நீ எனக்கு எதும் தரலை பார்த்தியா?” என்றாள்.

ரயில் அதற்குள் வேகம் பிடித்து விட, ரகுபதியின் கண்களில் குபுக்கென்று கண்ணீர் வெள்ளம்போல் திரண்டு வழிந்தது.

## 15

ராத்திரியெல்லாம் பிரயாணத்தின்போது மேல் பர்த்தியில் ஏறிப் படுத்துக்கொண்டு அந்தப் பக்கம் திரும்பிக் கொண்டு கண்ணீர் சிந்தினான். வெட்கமாகத்தான் இருந்தது.



www.writersujatha.com

இத்தனை குறுகிய காலத்தில் ஒரு பெண் தன்னை இவ்வளவு ஆக்கிரமிக்கக் கூடும், ரயிலில் அழச் செய்யமுடியும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ரயில், பாலத்தில் போகும்போதெல்லாம் திரும்ப திரும்ப மதுமிதா மதுமிதா என்று சொல்வது போல இருந்தது. கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் ரயிலில் எந்தச் சத்தமும் அவள் பெயருடன் பொருந்தும் போல இருந்தது. ஜெயந்தி கட்டிக் கொடுத்திருந்த இட்லிப் பொட்டலத்தைத் திறக்கவே இல்லை. ஃப்ளாஸ்கில் பால் பத்திரமாக இருந்தது.

அந்த ரயில் வண்டி இருக்கிற கிராஸியங்கையெல்லாம் தோற்றுவிட்டு சாவதானமாக சென்னை எழும்பூர் வந்து சேர்ந்தது. போட்டர்கள் கூட அசுவாரஸ்யமாகத்தான் உள்ளே படையெடுத்தார்கள். சென்னை வெயில் இப்போதே தன் ஊசிகளை தயார் செய்துக் கொண்டிருந்தது. டிக்கெட் பரிசோதகர் கைகளுக்கிடையில் வியர்த்திருந்தார். எங்கேப் போவது என்று அப்பா திருத்தமாக குறிப்புகள் கொடுத்திருந்தார். முதலில் பெரம்பூரில் அவருடைய கஸின் வீட்டுக்குப் போய், அவரையும் உடன் அழைத்துக் கொண்டு மெடிக்கலுக்குப் போக வேண்டியது. அவரைக் கேட்டுக் கொண்டுதான் மற்றபடி தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வெண்டியது. இப்போதே அப்பாவின் சொல்லை மீற ஆரம்பித்தான், பெரம்பூர் போகவில்லை. எழும்பூரில் எதிரிலேயே ஒரு சந்தில் இருந்த ஓட்டலில் ரூம் எடுத்தான். ஜன்னலைத் திறந்தால் டூரியஸ்ட் பஸ்களை அலம்பிக் கொண்டிருந்தார்கள். டீக்கடையில் பாய்லர் தெரிந்தது. சுவரொட்டிகளில் ரஜினிக்காந்தும், மொட்டை மாடியில் ஒரு பொண்ணும் தெரிந்தார்கள். ஆபிஸ் போகிற அவசரமோ என்னவோ – பாடியுடன் நின்றுக் கொண்டிருந்தாள். ரகுபதிக்கு எல்லா பெண்களுமே மங்கிவிட்டாற் போலத்தான் இருந்தது. அத்தனை பேரையும் மதுமிதா சாப்பிட்டு விட்டாள். கொஞ்சநேரம் வெற்று பார்வை பார்த்துக் கொண்டு அவளுடன் பேசினது அத்தனையும் கதைச்சுருக்கமாக யோசித்துக் கொண்டிருந்தான். பையன் கண்ணாடி தம்ளரில் காபி கொண்டு வந்து, “டிப்பன் எதாவது வேணுமாங்க?” என்றான்.

“வேண்டாம்பா ஒரு பாக்கெட் சிகரெட் வாங்கிட்டு வந்துரு.”

“சரிதாம்பா,” என்று பையன் கிளம்பிச் செல்ல, ரகுபதி உபயோகத்தின் முதல் நாளைக்கு தயாரானான்.

“உங்க சர்ட்டிபிகேட்டெல்லாம் தரிங்களா?”

“டிகிரி சர்ட்டிபிகேட் இன்னும் ப்ரொவிஷனலாகத்தான் இருக்காப்பல இருக்கே?”

“எல்லாருக்கும் அப்படித்தான் மேடம்.”

“சரி உக்காருங்க.”

உட்கார்ந்த இடத்திலிருந்து தொழிற்சாலை தெரிந்தது. நீண்ட காரிடரில் பலர் அலைந்து கொண்டிருந்தார்கள். சங்கு ஊத, எல்லாரும் அதற்கு காத்திருந்தாற்போல காண்டினை நோக்கிச் சென்றார்கள். நிறையப் பெண்கள் தென்பட்டார்கள். மரத்தடியில் கைக்குட்டை விரித்து அங்கங்கே சினேகதிகளுடன் ஜோடி சேர்ந்துக்கொண்டு சின்ன டிபன் பாக்சில் இருந்து சாப்பிட்டார்கள்.

ரகுபதி உட்கார்ந்திருந்த ஹால் ஏறக்குறைய காலியாகியிருந்தது. ஒரே ஒருத்தர் ஓரத்தில் டிரான்சிஸ்டர் கேட்டுக் கொண்டே மேசைமேல் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். “ஹாய்” என்று ஒரு குரல் கேட்டு திரும்பினான். அவனைப் போல ஒரு இளைஞன்.

“நீயும் ஜாய்ன் பண்ணத்தான் வந்திருக்கியா?” என்றான். கண்ணாடி போட்டிருந்தான். தலை வாருகிறது அவன் குடும்பச் சரித்திரத்திலேயே இல்லை போலத் தோன்றியது.

www.writersujatha.com

ஜோல்னாப் பையில் சர்ட்டிபிகேட்டுகளும் சிகரெட் பெட்டியும் வைத்திருந்தான். ஜீன்ஸ் அவஸ்தைகளுக்கு ஏற்ப நிறமிழந்திருந்தது. காலில் ஹவாய் செருப்பு.

"பாண்ட் உண்டா தெரியுமா?"

"மூன்று வருஷமாம்" என்றான் ரகு.

"மெடிக்கல் ஆயிருச்சா?"

"இல்லை, இனிமேதானாம்."

"டெஸ்ட்டிக்கிள்ஸ் பிடிச்சுப் பாப்பாங்களோ மெடிக்கல்லே?"

ரகுபதி அதிர்ந்து அவனைப் பார்த்தான்.

"என்டிபிஸி மெடிக்கல் செய்தாங்க, அதான்" என்றான்.

"சேரலியா?"

"கோர்பாவில போட்டா எவன் போவான்? சிகரெட்?"

"நோ... தாங்ஸ் இப்பதான் ஆச்சு."

அவன் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு "எல்லாரும் லஞ்சுக்குப் போயிடறாங்க. எனக்கு பப்ளிக் செக்டர்ல சேரவே கொஞ்சம் தயக்கம்தான். இது ஏதோ லாபத்தில் ஓடறதாம். டிவிடெண்டெல்லாம் கொடுக்கறாங்களாம். போனஸ் உண்டாம். மெட்ராஸ்ல வேற இருக்கு."

சாப்பிட்டு திரும்பிக் கொண்டிருந்தப் பெண்களைப் பார்த்து, "பெண்களும் கொஞ்சம் சுவாரஸ்யமா இருக்காங்க. ஆனா எல்லாத்துக்கும் மெட்டி ... இல்லேன்னா வகிட்டிலே குங்குமம். ரொம்ப கற்புள்ள பாக்டரியா இருக்குது போல!"

ரகுபதி சிரித்தான்: "உங்கபேரு?"

"கலைச்செல்வன். எங்கப்பா டீ கே...சாமி பேரு வீட்டுல கூடாது. உன்னைப் பார்த்தா ஃபார்வேர்ட் கம்யூனிட்டி மாதிரி தெரியுது."

"இல்லை. நான் திருநெல்வேலி பிள்ளைமார்."

"திருநெல்வேலி. புதுமைபித்தன் பிரதேசம்! மெட்ராஸ்ல எங்க தங்கறதா உத்தேசம்?"

"இன்னும் டிஸைட் பண்ணலை. ஸ்டேஷனண்டை ஓர் ஓட்டல்ல இருக்கேன்."

"ஐயையோ! அங்கல்லாம் வேண்டாம். லேடி ஜாயிண்டஸ் நிறைய உண்டு. பத்துமணி ஆனா பளிச்சுன்னு பவுடர் போட்டுக்கிட்டு பத்தினிமார்கள் கதவை தட்டுவாங்க. நான் ஒரு ரூம் எடுத்திருக்கேன். நல்ல மயிலாப்பூர் மாமி வீட்டில. வாடகைத்தான் டூ ஃபிஃப்டி. ஷேர் பண்ணிக்க ஆள் தேவை. உன்னைப் பார்த்தா அப்பிராணியா இருக்கே. ஏன் ஒரு மாதிரியா இருக்கே?"

"ரயில்ல தூங்கலை."

"வேற ஒண்ணும் இல்லையே? இதோ. அம்மா வராங்க" என்று, வந்த பர்ஸனஸ் ஆபிஸ் கிளார்க்கைப் பார்த்து புன்னகைத்து, "நாங்க எப்ப மெடிக்கலுக்குப் போகணும்?" என்றான்.

"கொஞ்சம் இருங்க ஸார் எஸ்கார்ட் வந்து அழைச்சுட்டுப் போவார்."

"அதுவரைக்கும் இந்த 1978– ஆம் வருஷத்திய வீக்லியைப் படிச்சுகிட்டு இருக்கலாம். மேடம்! எங்க பாட்ச்சில கர்ள்ஸ் யாராவது சேர்றாங்களா?"

"எனக்குத் தெரியாது. அந்த கேபின்ல மதுசூதன்ராவ்னு பர்ஷனல் ஆபிசரை கேளுங்க."

"தேவையில்லை. சேர்ந்தா தன்னால தெரியுது. என்ன, உன் பேர் என்ன?"

"ரகுபதி!"

"ரதின்னு கூப்பிடலாமா?"

"இல்லை, ரகு!"

"என்னைக் கலான்னு கூப்பிடுவாங்க, மார்டிகிராவில பெண்வேஷம் போட்டுட்டு பின்னாலயே மூணு பாய்ஸ் வேளச்சேரி வரைக்கும் துரத்திட்டு வந்துட்டாங்க!"

அவனை உன்னிப்பாக பார்த்ததில் தலை சீவினால் முடிந்துவிடலாம் போலத்தான் இருந்தது. கண்களில் ஏதோ ஒரு மையிட்ட தன்மை இருந்தது. பல்வரிசை ஒழுங்காக இருந்தது. பெண் வேஷம் பொருத்தமாகத்தான் இருக்கும்போல இருந்தது.

"போதாக்குறைக்கு ஃபால்ஸட்டோ வாய்ஸில பேசுவேன். கிஷோர்–லதா ரெண்டு குரலும் பாடுவேன். சாயங்காலம் எங்கேயும் போயிடாதே. லெட்ஸ் ஸ்டிக் டுகெதர், முதல்ல உன் ரூமுக்குப் போய் சாமான்லாம் எடுத்துட்டு வந்துரலாம். நீ ஏதாவது இண்ஸ்ட்ருமெண்ட் வாசிப்பியா?"

"இல்லை."

"சொல்லித் தரட்டுமா? எனக்கு ஏழு தெரியும்– எல்லாம் அரைகுறையா?"

வர வர கலைச்செல்வனை பிடித்திருந்தது. அவனிடத்தில் ஒரு கவர்ச்சி, பேசும் தோரணையில், சிரிப்பில் எல்லாம் இருந்தது. கொஞ்சநேரத்தில் அந்தக் கிளார்கை வசியம் பண்ணி அவளை சற்றே கன்னம் சிவக்க சிரிக்க வைத்துவிட்டான். இருக்கிற பேருக்கெல்லாம் "எங்கப்பா பால் பாயிண்ட் செய்கிற ஃபாக்டரி வைத்திருக்கிறார்" என்று ஆளுக்கொரு பேனா விநியோகம் செய்தான். இப்போது அவன் ஒரு மேசையின் எதிரில் உட்கார்ந்து கொண்டு அந்தப் பெண் கிளார்க் கணக்கில் ஒரு டீ அடித்துவிட்டுதான் கிளம்பினான்.

**தொ**ழிற்சாலையை அடுத்தே இருந்த ஆஸ்பத்திரியில் அவர்கள் ரெண்டு பேருடன் ஒரு பெங்காலி இளைஞனும் சேர்ந்து மூவருக்கும் பரிசோதனை நிகழ்ந்தது. சட்டையை கழற்ற சொன்னபோது என்னவோ போல இருந்தது. இ.ஸி.ஜி. எல்லாம் எடுத்தார்கள். சிறுநீரைக் காய்ச்சிப் பார்த்தார்கள். கொஞ்சம் ரத்தம் வாங்கிக்கொண்டு பரிசோதனை செய்துபார்த்தார்கள்.

"சாயங்காலம் என்ன செய்யறதா உத்தேசம்?"

“இன்னிக்குத்தானே வந்து சேர்ந்திருக்கிறோம். ஊருக்கு லெட்டர் எழுதலாம்னுட்டு.”

“நீ அந்த டைப்பா! ரயிலை இறங்கினதும் கையோட அப்பாவுக்கு ‘இப்பவும் நான் வந்து சேர்ந்தேன். வாரம் தவறாமல் எண்ணெய் தேய்த்துக் கொள்கிறேன். மாதம் தவறாமல்...”

“இல்லை எங்கப்பா ரொம்பவும் ஃப்ரீ டைப். நான் வந்து...” இவனிடம் மதுமிதாவைப் பற்றிச் சொல்லலாமா...? வேண்டாம்.

ரிப்போர்ட் நேராக அனுப்பப்படும் என்றும், மறுதினம் வந்து ஆபிஸில் வந்து மற்றதை விசாரித்துக் கொள்ளலாம் என்றும் சொன்னார்கள். இருவரும் வெளியே வந்து மரத்தடியில் சோடா சாப்பிட்டார்கள். பஸ்ஸில் வெளியே தொத்திக் கொண்டு வரவேண்டிருந்தது. சைதாப்பேட்டை வந்ததும் கொஞ்சம் காலியாகியது. தார் ரோட்டில் பொய் ஜலம் மின்னியது. நிறைய இளைஞர்கள் சினிமாவில் நடித்துக் கொண்டிருக்கிறார்கள் போலும்.

“மார்ல மயிரில்லாத பசங்களும் இப்ப சினிமாவில ஆக்ட் பண்ண ஆரம்பிச்சுட்டாங்க. இனிமே எட்டு வயசு, ஒன்பது வயசு குழந்தைகளை வெச்சுகிட்டு எடுத்தாதான் புதுமை! அமெரிக்காவில் அதுவும் இருக்கு தெரியுமா?”

கண்டக்டர் அவன் புகைப் பிடிப்பதை ஆட்சேபிக்க, “ஸாரி பிரதர், தெரியலை” என்று அதை அணைக்காமல் கைக்குள் அதைப் பொத்திக்கொண்டான். “இதுகளுக்குள்ள பூர்ணிமா கொஞ்சம் பரவாயில்லை. உனக்கு யார் பிடிக்கும்?” என்றான்.

“ம்! மதுமிதா!”

“மதுமிதா... அப்படி ஒண்ணு வந்திருக்கா என்ன?”

பேச்சைமாற்றி “தேனாம்பேட்டையிலதானே இறங்கணும்?” என்றான்.

அபிராமபுரத்தில் பால் டிப்போவுக்கு அருகில் பழைய வீட்டை இடித்துக் கட்டி ஃப்ளாட் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அதன் மூன்றாம் மாடியில் இருந்த ஃபிளாட்டின் மணியை அவன் அழுத்தினான்.

“வாங்க கலை!” என்றாள் மாமி. இவள்தானா?

“இவர் பேரு ரகுபதி. திருநெல்வேலிக்காரரு. ரகு, இவங்கதான் வீட்டுக்காரங்க. ஹஸ்பெண்டு ஆடிட்ல இருக்காரு. அடிக்கடி டூர் போவாரு... இல்லைங்களா?”

“ஆமாம்பா, ஆம்பிளைத்துணை இல்லாம ரொம்ப கஷ்டம் இந்தக் காலத்தில. கொஞ்சம் அசந்தா கொள்ளையடிச்சுர்றா.”

“லதா, பள்ளிக்கூடம் போயிருக்கா?”

“ஆமா, இப்ப வந்துருவா. காபி சாப்படறியா?”

“சாப்பிட்டா போச்சு. மாமி காபி படு டாப்பா இருக்கும். நீ லதாவைப் பார்க்கணும் ரகு.”

உள்ளே போனவளை, “மாமி, லதாவுக்கு என்ன வயசு?” என்றான்.

“பதிமூணு.”

“சான்ஸே இல்லை” என்று தலையை ஆட்டினான். “முதல்லே ரூமைப் பாரு.”

“பெரிய ரூம்தான். கட்டில்ல படுத்துக்கணும்னுகூடக் கட்டாயம் இல்லை. ஃபான் போட்டா சுத்துது. குழாயில தண்ணி வருது. கண்ணுக்குக் குளிர்ச்சியா இப்புறம்

லதா, அப்புறம் எதுத்தாப்பல சன்னலைத் திறந்தா ஒரு நியூலி மாரிட் கப்பிள் கொட்டம்! நான் பேசற தொனி உனக்குப் புரியலைன்னு தெரியுது. நீ ஸ்கூல் எங்க படிச்ச? திருப்பராய்த் துறையிலயா?”

“இல்லையே ஏன்?”

“சும்மா கேட்டேன். மாமி! எங்களால உங்களுக்கு எத்தனை சிரமம் பாருங்க. வாங்கிக்க ரகு. இந்த மாதிரி காபியை நீ லைஃப் டைம்ல சாப்பிட்டிருக்கியா பாரு.”

“சும்மா கலாட்டா பண்ணாதிங்க கலா.”

ரகுபதிக்குச் அந்தச் சூழ்நிலையே சற்று உறுத்தியது.

இந்த அறைக்கு வர வேண்டாம் என்றுதான் தீர்மானித்தான். ஆனால், அதைப் பளிச்சென்று கலைச்செல்வனிடம் சொல்லிவிட அவனுக்கு அவகாசம் கிடைக்க வில்லை. கிடைத்தாலும் அவன் சொல்லிவிடுகிற வர்க்கமில்லை. எல்லாவற்றையும் மென்று முழுங்கி எத்தனை சந்தர்ப்பங்களை நழுவவிட்டு ...

ராத்திரி உட்கார்ந்துக் கொண்டு அவளுக்கு கடிதம் எழுதினான். ‘டியர் மது’ என்றுதான் ஆரம்பித்தான் தமிழிலேயே எழுத தீர்மானித்தான். கொஞ்சம் கஷ்டப்பட்டு எழுத்து கூட்டியாவது படிக்கட்டும். ‘உன்னைவிட்டுப் பிரிந்து வந்ததிலிருந்து எனக்கு என்னமோ ஒரு முக்கியமான அங்கத்தை இழந்து விட்டாற்போலத்தான் இருக்கிறது. மது, அன்று ராத்திரி ரயிலில்–நம்பமாட்டாய்–அழுதேன். உனக்கு எப்படி இருந்ததோ, எனக்கு நெஞ்சம் பூரா அடைத்துக் கொண்டாற்போலத்தான்.”

“சே! காதல் கடிதம் எழுத வரவில்லை, என்று கிழித்துப் போட்டுவிட்டு ‘மதுமிதா’ என்று ஆரம்பித்தான். எப்படி எழுதுவது? மனத்தில் இருக்கும் தீராத அந்த எண்ணங்களை எப்படி எழுத்து ரூபத்தில் மாற்றுவது? கலைச்செல்வனைக் கேட்டுப் பார்க்கலாமா? சேச்சே! காதல் கடிதம் எழுதுவது எப்படி என்று ஏதாவது புத்தகம் இருக்குமே. இங்கிலீஷில் இருக்கும். இல்லை, உலகத்துக்கு பிரசித்தமான காதல் கடிதங்கள்!

கடிதத்தை ராத்திரியும் மறுநாள் ஆபிஸ் சென்ற போதும் யோசித்துக் கொண்டு வரிவரியாக மனசில் எழுதிக் கொண்டிருந்தபோது அவளிடமிருந்து முதல் கடிதம் வந்துவிட்டது! ஃபாக்டரி அட்ரஸுக்கு எழுதி அது டிபார்ட்மெண்ட் தெரியாமல் நோட்டிஸ் போர்டில் செருகப்பட்டு, ஆச்சரியமாக அவனை வந்து சேர்ந்தது. இங்கிலீஷும் தமிழும் கலந்த மணிப்பிரவாளத்தில்!

‘டியர் ரகு’

அம்மா தான் உனக்கு லெட்டர் எழுதச் சொன்னா. mistakes நிறைய இருக்கும். எனக்கு நீ போனப்பறம் ரொம்ப சாப்பாடு பிடிக்கவில்லை. ராபின் குக் ‘Brain’ படிச்சேன். ரொம்ப பயம். சுதா is very naughty.

இப்ப தான் Tamil எழுதக் கத்துக்கிட்டிருக்கேன். என்னை ஞாபகம் இருக்கா? mother insists I should write in Tamil.

உங்க அப்பாட்ட இருந்து அந்த Kitten கொண்டு வச்சுக்கிட்டேன். ரகுன்னு பேர் வெச்சுருக்கேன். I wish you had been as playful as the kitten. அப்பா ஆபீஸ் போறாங்க. அம்மா Tennis. நான் Bore அடிச்சுக்கிட்டு உக்காந்திருக்கேன். எப்ப வரே? புது வேலை நல்லா இருக்கா? என் Handwriting நல்லா இருக்கா? மெட்றாஸ்ல என்ன சினிமா பார்த்தே? இதுக்கு உடனே reply போடு.

Miss you and kiss you

'மது.'

www.writersujatha.com

## 16

**நா**ற்பது முறை படித்ததில் மதுமிதாவின் கடிதம் அவனுக்கு மனப்பாடமாகியிருந்தது. பதிலை பஸ்லிலும், காண்டீனிலும், மெஷின் ஷாப்பிலும் வரிவரியாக அமைத்துக் கொண்டிருந்தான். "இதுக்குப் பேரு மெஷின் சென்டர். இதுல ரீமிங், டாப்பிங், மில்லிங்..." என்று ஃபோர்மன் சொல்லிக் கொண்டிருக்கும்போது 'லவிங்'கையும் கூடச் சேர்த்துச் சொல்வது போல இருந்தது. கலைச்செல்வன் அவனை மதிய இடைவெளியின் போது பார்த்து, "ஒரு மாதிரியா இருக்கே. உனக்கு காண்ஸ்டிபேஷன் இல்லை; காதல்! என்று சொல்லும்போதுகூட பதில் கடிதத்தைதான் நினைத்துக் கொண்டிருந்தான். 'டியர் மது' வா, இல்லை. 'அன்புள்ள மதுமிதா' வா என்று சர்ச்சை. உன்னை, உன்னுடன், உன்னால் என்று முற்றுப் பெறாத பல வாக்கியங்கள். வரிசையில் காத்திருந்தன. நெருப்பை விழுங்கி அதில் சிக்கி கொண்டவன் போல உணர்ந்தான்.

மாலை அறைக்கு திரும்பியதும் கலைச்செல்வன் அலங்கரித்துக் கொண்டிருக்க "வெளியே போகப் போறியா கலை?" என்றான்.

"ஆமா... கான்ஸர் அண்ட் விடி சினிமா."

"சினிமாவா?"

"ஆமா. இந்த மாதிரி மெடிக்கல் படமெல்லாம் பார்கலைன்னா சமூகத்தில் நம்ம பொறுப்பு என்ன ஆவுறது? 'ஏக் துஜே கேலியே'க்கு அப்புறம் வசூல்ல இந்தப் படம் தான் கொடிக்கட்டிப் பறக்குதறாம்! நீ வரியா, வர்லியா? ஆமா... இந்தப் போட்டோ யாரு?"

www.writersujatha.com

"கலை, அதை இப்படிக் கொடு!"

"இரு...ப்பா பார்க்க கூடாதா? என்னது வம்பா இருக்குது? பார்த்தா எதாவது கற்பு டாமேஜ் ஆயிருமா?"

"நீ ரொம்ப மோசம் நீ. ப்ரைவஸிங்கறதே கிடையாதா கலை?"

கலை அதைப் பற்றி கவலைப்படாமல், "போலராய்ட்! ஷோக்காத்தான் கீரா! உன் தங்கச்சியா? தோள்ளல்லாம் கை போட்டுக்கிட்டு இருக்குது!"

ரகுபது கோபத்தில் பேசாமல் இருக்க, "காதல் பண்றியா இந்தப் பொண்ணை?"

பேசவில்லை.

“முழிக்கிற முழியே காதல்னு காட்டிக் கொடுக்குது, தகதகன்னுதான் இருக்குது! லக்கி நீ! எப்படி சமாச்சாரம் ஒன்சைடா, டபிள் சைடா?”

“என்ன?”

“உன் காதல்தான்!”

“நிச்சயதார்த்தம் நடக்கப் போவுது.”

“கை வெச்சுட்டியா?”

“சே! கலை யூ ஹாவ் எ டர்ட்டி மைண்டரா.”

“என்ன கேட்டுட்டேன் இப்ப?”

“சே! கேக்கற விதமே அசிங்கமா இருக்குது.”

“அசிங்கமாவா கேக்கறேன். உங்கள் காதல் ஒருவரை ஒருவர் தொடுகை வரை வந்துவிட்டதா? பிரிவாற்றாமையால நீ தவிக்கறதும், கொல்லன் துருத்திப்போல் மூச்சு விடறதும் காதல் ரொம்ப முன்னேறிதான் இருக்குதுன்னு நினைக்க வைக்கிறது.”

“சே! நாளைக்கே ரூமைக் காலி பண்ணிட்டுப் போகப்போறேன்.”

“சரி, அப்ப உனக்கு இன்னிக்கு வந்த கடிதங்களை கொடுக்க வேண்டாங்கறியா? நோட்டிஸ் போர்டில பார்த்தேன்.”

ரகுபதி உடனே மலர்ந்து “கலை, விளையாட்டுக்குச் சொன்னேன். கொடுத்திடு” என்று கெஞ்சினான்.

“பேர் சொல்லு?”

“மதுமிதா.”

“வாவ்! பேர் கேட்டால ஸ்காட்ச் ஆன் தி ராக்ஸ் மாதிரி இருக்குது. வயசு.?”

“பத்தொன்பது.”

“ஆயிடுச்சா?”

ரகுபதி பேசாமல் இருந்தான்.

“எனக்கு இந்த இன்பர்மேஷன் வேணும். ஆயிடுச்சா இல்லையா?”

“ஏன் எல்லாத்தையும் உடல் சம்பந்தப்பட்ட உறவாப் பாக்கறே?”

“சரி அப்ப மனத்தால்தான் தொட்டுக்கிட்டிங்களாக்கும்?”

“சீக்கிரம் சினிமாவுக்கு போயேன்.”

“ஒழி” என்று அவனுக்கு வந்த இரண்டு கடிதங்களையும் கொடுத்தான்.

‘டியர் ரகு!’

நான் எழுதிய letter கிடைச்சுதா? ஏன் பதில் போடலை? இன்னிக்கு சுதா மரத்தில இருந்து விழுந்தான். கால் உடையலை. நாளைக்கு வீட்டுக்கு guests வராங்க நீ ஏன் reply போடலை? Too bad அதுக்காக நீ வந்த உடனே மூக்கிலே ஒரு தடவை குத்தப்போறேன், ‘சப்பக்”! மெட்ரா**ஸு**க்கு ஓடிவந்துரட்டுமா?

மது.

‘ரகுபதிக்கு அப்பா அநேக ஆசீர்வாதம். நீ போய் சேர்ந்ததிலிருந்து ஒரு கடிதமும் இல்லை. அதற்குள் அப்பாவை மறந்து விடுவாய் என்று நான் நம்பத் தயாராக இல்லை. நீ கொண்டு சென்ற பணம் போதாது என்று அறிந்து உடன் ஒரு மூந்நூறு ரூபாய்க்கு டிராப்ட் இணைத்திருக்கிறேன். உன் பெயரில் பாங்கில் ஒரு கணக்கு ஆரம்பித்துக் கொள்வது அவசியம். முடிந்தால் ரங்கநாதன் தெருவில் லிஃகோ புத்தகக்கடையில் கீழ்க்காணும் புத்தகங்களை வாங்கி அனுப்பு. பன் எதிர்கால மனைவி இங்கு வந்து பூனைக்குட்டியைத் தூக்கிக்கொண்டு போனாள். உன் போட்டோ கேட்டாள். தவழ்ந்துக் கொண்டு இருப்பாயே சின்னக் குழந்தையாக, அதைத்தான் வேண்டும் என்று கேட்டாள். கோபிநாத்தும் உன்னிடமிருந்து ஒரு கடிதத்தை எதிர்பார்ப்பதாக தெரிகிறது. எல்லார்க்கும் சேர்த்தாற்போல் எழுதிடு. உடம்பை பார்த்துக்கொள். உன் வீட்டு விலாசத்தை எழுது. அல்லது ஓட்டலா?

அப்பா.

உடனே உட்கார்ந்துக் கொண்டு, ‘மது! நீ நம்பமாட்டாய். எதற்காக வேலை ஏற்றுக் கொண்டேன் என்று பிரமிப்பாக இருக்கிறது. இந்தக் கடிதம் பார்த்த உடனே பக்கம் பக்கமாக எனக்கு எதை வேண்டுமானாலும் எழுது. நீ எழுதும் கடிதங்கள்தான் எனக்குச் சோறு. திருநெல்வேலி ஜங்ஷனில் உன்னைவிட்டுப் பிரிந்தப்போது கண்ணீர் விட்டு அழுதேன். மதராஸ் பெண்கள் எவரும் உன்னைப்போல் அழகில்லை. எதை வேண்டுமானாலும் எழுது. காலை படுக்கைவிட்டு எழுந்திருப்பதிலிருந்து இரவு படுக்க போகும்வரை ஒவ்வொரு நிமிஷமும் நீ என்ன, என்ன செய்கிறாய் என்பதையெல்லாம் தினம் ஒரு கடிதம் இல்லை, இரண்டு கடிதம் எழுது. மது மது மது, எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலத்தான் இருக்கிறது. டெலிபோனில் கீழ்க்காணும் எண்ணில் இருப்பேன். நிச்சயம் மத்தியானம் ஒன்றிலிருந்து இரண்டரை வரை. எனக்குப் போன் பண்ணிப் பேசேன்.’

நெருக்கமாக மூன்று பக்கம் எழுதி மணியைக் பார்த்தான். ரயில்வே ஸ்டேசனில் போய் ஆர்.எம்.எஸ்–ஸில் சேர்த்துவிடலாம். மற்ற கடிதங்களை உதறிப் போட்டுவிட்டுப் பஸ் பிடிக்க ஓடினான். பஸ்ஸின் ஆட்டத்தில் இன்னும் ஒரு பின்குறிப்பு எழுதினான். ‘ரகுபதி’ சீரியஸ் ஸ்டார்ட் இம்மீடியட்லி’ என்ற தந்தி கொடுக்கலாமா என்று யோசித்தான்.

என்ன ஆகிக் கொண்டிருக்கிறது எனக்கு? நிச்சயம் எனக்குப் பைத்தியம் பிடிக்கப் போகிறது!. ரயில் நிலையத்தில் தபால் பெட்டியில் சேர்த்ததும் கொஞ்ச நேரம் டிக்கெட் அபீஸின் அருகில் சென்று நின்றான். திருநெல்வேலிக்கு டிக்கெட் எடுத்து இப்போதே கிளம்பி விட்டால் என்ன?

எங்கடா வந்தே?

சும்மாப்பா!

எப்படி மறப்பது! கடவுளே, எப்படி அவளைத் தவிர வேறு எதையாவது சிந்திப்பது? எதாவது வழி சொல்லேன்? மெல்ல நடந்து எதோ பஸ்ஸைப் பிடித்தான்; மாம்பலம் போகிறது என்று பிற்பாடு தெரிந்தது. கடைசிவரை பிரயாணம் செய்தான். பஸ்டாண்டிலிருந்து பரபரப்பான தெருவின் ஊடே நடந்தான். கூரையெல்லாம் எவர்சில்வர் பக்கெட்டுகள் தொங்கின. கோயிலின் வாசலில் காசு கொடுத்துச் செருப்பை கழற்றினார்கள்.

உள்ளே சென்று சிவனையும் விஷ்ணுவையும் வணங்கினான்.

www.writersujatha.com

உபன்யாசத்தில் பத்துப் பேர் நொந்து உட்கார்ந்திருந்தார்கள்.

‘நாயகி பாவம்னு பேர் இருக்கு! என்ன பண்றா? கன்னுக்குட்டியை பார்த்துட்டு இதான் எங்க கண்ணன் மேச்ச கன்னுக்குட்டிங்கறா. மலையைப் பார்த்து இதான் அவன் தூக்கின மலைங்கறா. ‘ரகுபதிக்கு அவனையறியாமல் கன்னங்களில் கண்ணீர் உருண்டோடியது.

மற்ற பேர் சேர்ந்து கொண்டதும் போஸ்டிங் விஷயம் தீர்மானிக்கப் பட்டது. கலைச்செல்வனுக்கு ரிஸர்ச் டிபார்ட்மெண்டில் போஸ்ட் ஆகியிருந்தது. “அங்கதான் கர்ள்ஸ் ஒர்க் பண்றாங்கப்பா...” மற்ற சிலருக்கு ப்ரெடக்ஷன். இவனுக்கு மட்டும் மெயிண்டனஸ் என்று போட்டுவிட்டார்கள். எதிர்த்துப் பேச அவனுக்கு தைரியமில்லை. முதன் முதலாக அவன் டிபாட்மெண்டுக்கு போனபோது நீண்ட பென்சில் நான்குப் பேர் பழைய டோமாண்ட் ஆஸிலால் கோப்பை அக்காகப் பிரித்துத் தலையை நுழைத்து ஆராய்ந்துக் கொண்டிருந்தார்கள். இவன் வந்ததை ஒருவரும் கவனிக்கவில்லை. உட்கார் என்று சொல்லவில்லை. பார்வையில் ‘அனுபவமில்லாத நேற்றுப் பயல் எங்களுக்கு மேல் இன்ஜியனிராக வரப்போகிறான். என்ன கிழிக்கப் போகிறான்’ என்கிற அலட்சியம் இருந்தது. யாரும் பிடி கொடுத்து பேசவில்லை. எல்லாவற்றையும் உதறித் தள்ளி விட்டு அடுத்த பஸ்ஸில் திருநெல்வேலி என்று தோன்றியது. வேலை! வேலை! வேலையிருந்தால்தான் எனக்கு மதிப்பு! அதனால்தான் மதுமிதா!

ரிப்போர்ட் பண்ண வேண்டிய ஆபிஸர் லீவில் இருந்தார். அவர் மேஜையில் இரண்டு டெலிபோன்கள் இருந்தன. அது இப்போது அடித்தது.

யாரும் எடுப்பதாக தெரியவில்லை. இவன் தயக்கத்துடன் போய் எடுத்தான்.

“ஹலோ!”

www.writersujatha.com

“மிஸ்டர் ரகுபதி எக்ஸிக்யூட்டிவ் ட்ரெய்னி இருக்காரா?”

நம்ப முடியாமல், “யெஸ்! ஸபீக்கிங்” என்றான்.

“ட்ரங்கால் ஃப்ரம் பாபநாசம். ஸ்பீக் ஆன்!”

எனக்கா! எனக்கா! இன்பம் பிரவகித்தது. யார் மதுவாகத்தான் இருக்கும்! என் கடிதம் போய் சேர்ந்த உடனே போன் பண்ணியிருக்கிறாள். “ஹலோ... ஹலோ! ஒஓ!”

டிரங்காலின் பற்பல சப்தங்களுக்கு இடையில் “ஸ்பீக் அப் பீப்பி ஹோல்டிங்” என்று தேவலோகத்தில் கேட்டது.

“ஹலோ! ரகுபதியா?”– ஆண் குரல்.



www.writersujatha.com

“யெஸ் ரகுபதி ஸ்பீக்கிங்!”

“நான்தான்... பேசறேன்”

“யாரு?”

“கோபிநாத், கோபிநாத்!”

‘ஓ, ஹலோ ஸார்!”

“லெட்டர் இன்னிக்குதான் கிடைச்சது. மது இன்னும் அதை எழுத்துக் கூட்டிக்கிட்டு படிச்சுக்கிட்டு இருக்கா. நான் போன் பண்ண காரியம் வேற. உனக்கு அடுத்தது எப்ப லீவு?”

“வீக்லி ஹாலிடேஸ்தான்! ஸண்டேதான் ஸார்!”

“ரெண்டு மூணு நாள் சேர்ந்தாற்போல லீவு வராதா?”

“பார்க்கணும் ஸார். எதுக்கு?”

“திருநெல்வேலிக்கு அர்ஜெண்டா வந்துட்டுப் போயேன். இல்லை, லீவு ஷார்ட்டா இருந்தா மதுரை வரைக்கும் ஃப்ளைட்டில வந்துட்டு அங்கருந்து டிபார்ட்மெண்ட் கார் அனுப்பிச்சு பிக்கப் பண்ணிக்கச் சொல்றேன். மே டேக்கு உங்க ஃபாக்டரிக்கு லீவு இருக்குமே கட்டாயமா?”

“விசாரிக்கிறேன் ஸார்.”

“இல்லைன்னா லீவு எடுத்துட்டு வந்திரு”

“எதுக்கு ஸார்?”

“என்ன தெரியாத மாதிரி கேக்கறே? கல்யாணத்துக்கு நிச்சயதார்த்தம் வெச்சுரலாம், அதுக்குதான் என் ஒஃப் ரொம்ப இன்ஸிஸ்ட் பண்றா. நான் உங்கப்பாகிட்ட பேசிக்கிட்டு இருக்கேன், நீ வரியா?”

“எப்ப ஸார்?”

“அடுத்த வாரம் செகண்ட் ஸண்டே அன்னிக்கு வெச்சுரலாம். நீ ஒண்ணாம் தேதி காலைல வந்துரேன். ஃப்ளைட்ல வரதா இருந்தா யூ மஸ்ட் கிவ் இன்ஃப்பர்மேஷன் என்ன?”

“இல்லை ஸார் பஸ்ஸோ, ரயிலோ பிடிச்சு வந்துர்றேன். ஸார், மது எப்படி இருக்கா?”

“த்ரீ மினிட்ஸ் ப்ளீஸ்!”

“ஆல்ரைட்! மது இஸ் ஃபைன். வெச்சுரட்டுமா?”

டெலிபோனை வைத்தபோது அவனுக்கு எதிரே இருந்த அத்தனை பேரும் விரோதமானவர்களாக தெரியவில்லை. அவர்களைப் பார்த்து புன்னகைத்தான். “ஸார்! உங்களுக்கெல்லாம் நான் வந்ததுக்கு ஒரு ஸ்வீட் வாங்கிக் கொடுக்க விருப்பம்” என்றான்.

கலைச்செல்வனுடன் உள்போனில் தொடர்புக் கொண்டு, “கலை! நான் அவசரமாக திருநெல்வேலி போகணும், இந்த மாசக் கடைசில!” என்றான்.

“என்னப்பா?”

“நிச்சயதார்த்தம்.”

“நானும் வரட்டுமா? மாப்பிள்ளைத் தோழன் வேண்டாமா? அப்புறம் அது என்ன பேர் சொன்னே மதுமதி...”

“மதுமிதா!”

“அவளுக்குத் தங்கச்சி யாராவது இருக்காங்களா?”

“ஸாரி! ஒரே பொண்ணு,”

“மாவட்டத்துல வேற கிடைக்காதா? உனக்கு எதாவது அப்ஜெக்ஷன் இருக்குமா?”

சற்றே தயக்கத்துடன். “சேச்சே! இல்லை” என்றான். “ரெண்டு நாள் லீவு தொடர்ந்தாற்போல வருதாம் மே மாதம் முதல்ல. அப்ப வெச்சுக்கலாம்னு சொன்னார்.”

“வெரிகுட்!”

“கலை! ஒரு ரகசியம் சொல்லட்டுமா?”

“சொல்லு.”

“இந்தக் கணத்தில் இந்த உலகத்திலேயே மிக அதிக சந்தோஷமா இருக்கிற ஆசாமி நான்தான்.”

## 17

அப்பா அனுப்பிவைத்த முந்நூறுடன் கலைச்செல்வனிடம் கடன் வாங்கிய இருநூறையும் சேர்த்து மதுமிதாவுக்கு ஒரு ஸாரி, திருநெல்வேலிக்கு ஒரு டிக்கெட், அவளுக்கு ‘இந்திரஜால்’ காமிக்ஸ், அவனுக்கு ஷர்ட் எல்லாம் எடுத்தான். தன் கை மோதிரத்தை அவளுக்கு கொடுக்க தீர்மானித்தான்.

கலைச்செல்வன் தன் மதுமிதாவை பார்ப்பதைக் கூட அவன் விரும்பவில்லை. தான் ஒரு பொறாமை மிகுந்த கணவனாக இருக்க போகிறோமோ என்று கவலை ஏற்பட்டது. சத்தியமாக அவள் அவனை ஒரு விளிம்புக்குக் கொண்டுவந்து விட்டாள். நோட்டுப் புத்தகத்தில் **ஸ்ரீ**ராமஜெயம் போல, மதுமிதா மதுமிதா என்று அவனை எழுதச் சொன்னால் ரொம்ப ஆர்வத்துடன் இப்போது எழுதுவான். பொழுது போகாதபோது இங்கிலீஷ், தமிழ், தேவநாகரி மூன்றிலும் மதுமிதா என்று எழுதி அந்த எழுத்துக்கு அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்தான். ‘எம்’ என்று எழுத்துப் பதித்த பிளாஷ்டிக் மோதிரம் ஒன்றும், ஃபுல் கை ஷர்ட் இல்லாமலிருந்தாலும் ‘எம்’ போட்ட ‘கஃப்லிங்’குகளும் வாங்கிக் கொண்டான். மாக்மில்லன் கம்பெனியின் விளம்பரம் ‘எம்’ எழுத்தை மட்டும் வெட்டிக் கொண்டு அதை தன் அலமாரியில் ஒட்டிருந்தான். தெருவில் எந்த வீட்டைப் பார்த்தாலும் இதில் நானும் மதுமிதாவும் என்று எண்ணிப் பார்த்துக் கொள்வான். ஃபர்னிச்சர் கம்பெனியின் ஷோரூம் கட்டில்களிலும் நாற்காலிகளிலும்

அவளுடன் உட்கார்ந்து பார்த்தான். ஒரு சமயம் ஜாவாவில் போவான்; இன்னொரு சமயம் வெஸ்பா; சில பணக்கார சமயங்களில் மார்ஃபோர் அல்லது டோயொட்டா. பாண்டிபஜார் கண்ணாடி வளையல்களை எல்லாம் அவளுக்குப் போட்டு பார்த்துவிட்டான். சைனா பஜார் ஸாரிகளை எல்லாம்? காதிபவனில் முரட்டு கதர் குர்தா அவளுக்கு நன்றாக இருந்தது. செல்லாராமில் சில்க் சட்டை. பஸ்ஸில் கூட்டமில்லாமல் இருந்தால்தான் அவளுடன் ஏறிக் கொள்வான். இல்லையேல் டாக்ஸி! சினிமாவில் எப்போதும் அப்பர் கிளாஸ்தான். அதுவும் கூட்டமிருக்கக்கூடாது. அவளிடம் கேட்டுக்கொண்டு தையல் மெஷின்கள் வாங்கினான். ஃப்ரிஜ் தவணை முறையில்! கட்டில் முதலியவைதான் அப்பாவே கொடுத்து விட்டாரே!

www.writersujatha.com

கொஞ்சம் தும்மினாலும் அவளை டாக்டரிடம் அழைத்துச் சென்றான்.

இரண்டுப் பேரும் ரத்தப்பரிசோதனை செய்துக்கொண்டு பிறகுதான்... ஓ! சொல்ல மறந்து விட்டேனே! கல்யாணம் ஆன கையோடு தேனிலவுக்கு கோடையா, ஊட்டியா என்று இருவருக்கும் வாக்குவாதம் வந்தது. அவளுக்கு விட்டுக் கொடுத்து விட்டான். கலைச்செல்வனிடமிருந்து கண்ணதாசன் கவிதைகள் படிக்கத் தொடங்கிவிட்டான்.

‘கோடிட்ட முந்தானைக் கொஞ்சிக்
குழைந்தாடக் கோலமயில் போல
வருவாள் கொடியோடும் இடையாட
இடையோடும் கனியாடக் குழல் மூடி
ஆடிவருவாள் காடிட்ட வெண்பூக்கள்
கடைவாயில் நின்றாடக் கண்ஜாடை
நடனமிடுவாள்... கட்டான
திருமேனிப் பட்டாளம் கொண்டென்னைக்
கைதாக்கிச் சிறையிலிடுவாள்
ஊடிட்டுக் கூடிட்டு உடலொடு
சுவையிட்டு உறவாடும் வஞ்சிமயிலை...’

“சபாஷ்! என்ன உணர்ச்சிகரமாப் படிக்கிறே!” என்று கை தட்டிக் கொண்டே உள்ளே நுழைந்தான் கலைச்செல்வன்.

ரகுபதி சற்றே வெட்கத்துடன் புத்தகத்தை வைத்து, “போயட்ரி நல்லா இருக்கு!”

“அதில எத்தனையோ பக்திப் பாடல்கள் எல்லாம் இருக்கு? ஆமா, தெரியாமத்தான் கேக்கறேன்... காதல்னா என்னடா பண்ணும்? ஒரு மாதிரி உள்ளுக்குள் ஞம ஞமங்குமா?”

www.writersujatha.com

“காதல் பண்ணிப்பாரு...”

“எனக்கு வர மாட்டேங்குதே. ஒரு பொண்ணைப் பார்த்தா நமக்குப் பார்வையெல்லாம் டக்கராயிடுது. இன்னிக்கு வந்துக்கிட்டே இருக்கேன்னா, ஒரு ஸ்கூல் பஸ் நிறைய பொண்ணுங்க. ஆகா! அந்த டிரைவரா நாம இருக்க மாட்டோம்னுதான் தோணுது. ரகு சொல்ல மறந்துட்டேனே! நான் உன்கூட திருநெல்வேலி வரலை”

“ஏன் கவலை?”

ரகுபதிக்கு சந்தோஷமாகவே இருந்தது.

“எனக்கு இண்டர்யூ வந்திருக்கு. சிங்கப்பூர்ல இன்ஜினியர்ஸ் எடுக்கறாங்களாம். ஏதோ ஓர் ஏஜென்ஸி மூலமா இந்த இண்டர்வ்யூ வந்திருக்கு. ஸாரிடா! நான் உன் நிச்சயதார்த்ததுக்கு வரமுடியாது. நீ அப்ளை பண்ணலியா?”

"விளம்பரம் பார்க்கலையே!"

"உனக்குப் பேப்பர் பூரா மதுமதிதானே தெரியும்!"

"மதுமிதா, மதுமிதா!"

மது–ஸம்திங் போயேன்! நான் சொன்னேனே தங்கை சமாசாரம் ஞாபகம் இருக்குமில்லை? ஆமா, உனக்கு யாரு லீவு கொடுக்கப் போறாங்க?"

"பங்க் அடிக்கப் போறேன். நீதான் ஓர் எம்ஸி பார்த்துக் கொடுக்கணும்."

"காதல் வியாதிதானே?"

"அறுக்காதே..."

"இன்னிக்குப் கர்ள் ஃப்பிரண்டுக்கிட்ட இருந்து லட்டர் வரலியா?"

"வந்திருக்கு..."

"மனப்பாடம் பண்ணிட்ட இல்லை?"

"கலை இந்த ஸாரியைப் பாரு..."

"நல்லாதான் இருக்கு. ஆனா அது ஒண்ணும் ஸாரி கட்டடற பொண்ணா தெரியலையே! இது என்ன டீஷர்ட்டா? அடி சக்கை! ப்ரா வாங்கிட்டுப் போகலையா? என்ன சைஸ்?"

"சே? திடீர்னு புத்தியைக் காட்டறப் பாரு நீ."

"என்னவோப்பா பொதிகை மலைச் சாரலிலேயே நமக்குப் ஒரு பொண்ணு பார்த்துக் கொடுக்க வேண்டியது உன் பொறுப்பு. சொல்லியாச்சு. இந்தா, இதை வச்சுக்க."

"என்ன கலை இதெல்லாம்?"

"சும்மா வெச்சுக்க– உனக்கு நிச்சயதார்த்தத்துக்கு நான் வாங்கி கொடுத்ததா ஒரு ஷர்ட். கலர் பிடிக்குதா?"

"தாங்க்ஸ் கலை..."

கலைச்செல்வன் அவனருகில் வந்து தன் கேலிகளையெல்லாம் மறந்து அவன் முதுகில் "சந்தோஷமா இரு" என்று தட்டிக் கொடுத்து கை குலுக்கினான்.

"உன் மேல எனக்கு பொறாமை இல்லை. நான் நிச்சயதார்த்தத்துக்கு வரலைன்னு சொன்னதும் உன் கண்ணில கொஞ்சம் பிரகாசம் தெரிஞ்சுது. நான் அடிமடில கை வைக்கிற ஜாதியில்லை!"

"சேச்சே... !"

"சமயம் வர்றப்ப காதல் பண்றதைப் பத்தி சொல்றேன். தெய்வீகக் காதல், சங்ககாலம் எல்லாம் பிச்சு வாங்கற காதல், 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' டைப். ஒரே ஒரு சின்ன சிக்கல். அப்பறம் சொல்லறேன். டூத் பேஸ்ட் வாங்கிட்டு



www.writersujatha.com

வரச்சொன்னேனே, வாங்கி வந்தாயா? ரெண்டு நாளா ட்யூப்ல இருக்கிற ஈயத்தைத் தேச்சுகிட்டு இருக்கமில்லை?"

வெள்ளிக்கிழமை சென்னை எழும்பூர் கார்டு கவிதை கலந்து விசில் ஊதினார். இன்ஜின் புல்லாங்குழல் போல ஒலிக்க, வண்டி கனவால் லூப்ரிகேட் செய்யப்பட்டு இருப்புப் பாதையில் உருளத் தொடங்க, ரகுபதிக்கு ஸ்திரமாக ஒரு சிரிப்பு உதட்டில் சேர்ந்துக் கொண்டுவிட்டது. கடிகாரத்தைப் பார்த்தால் மதுமிதாவை சந்திக்க இன்னும் பதினெட்டு மணி இருபது நிமிஷம் இருந்தது. மேல்பர்த்தில் புழுக்கமா? யார் சொன்னார்கள்? விளக்குப் போதலையா? பரவாயில்லை. அவள் கடிதம் அத்தனையும்தான் அவனுக்கு நெட்டுருவாயிற்றே! மொத்தம் ஐந்து கடிதங்கள்தாம். அவள் போட்டோவைக் எடுத்துக் கொண்டு சற்று நேரம் சுவாரஷ்யமாக படித்தான். ராத்திரி தாம்பரத்தில் இறங்கிப் பால் சாப்பிடும் உத்தேசம் இருந்தது. விழுப்புரம் வரை விழித்திருந்தான். அப்புறம் சற்றே தூங்கிபோனபோது தெருவோரமாக ஒரு பிரபல நடிகன் படுத்துக் கொண்டு மலர் வளையங்கள் சூழச் சவ ஊர்வலம் செல்ல, நடிகனின் மனைவி அதிகம் கவலைப்பட்ட மாதிரி தெரியவில்லை. ஜன்னல் வழியாக ரகுபதியுடன் பேசிக்கொண்டிருக்கிறாள். 'கொஞ்சம் திரும்புங்கள்' என்று அவன் பக்கவாட்டுத் தோற்றத்தை ரசிக்கிறாள். ஒலிப்பெருக்கில் தேவாரமும் 'பாப்' பாடலும் ஒலிக்கிறது. இறந்துப்போன நடிகனுக்காக பலர் மலர் வளையங்கள் வைக்க, இவன் ஜன்னலை விட்டு விலகாமல், 'இப்போது எப்படி இருக்கிறேன்' என்று அவள் மனைவியிடம் கேட்க, அவள், 'அழுவதற்கு மறந்தே போய் விட்டேன்' என்கிறாள்.

அந்தக் கனவு ஏதோ ஒரு விதத்தில் அவனைப் பாதித்துவிட்டது. அதன் அர்த்தம் புரியவேயில்லை. ஆனால், அதன் அடித்தளத்தில் சோகம் இருந்தது. எல்லாம் கனவுதானே என்று உணர்ந்ததும் அந்த நடிகனுக்காகப் பரிபூரணமாகச் சந்தோஷப்பட்டான்.

தூங்கினால் மறுபடி கனவு வந்துவிடுமே என்ற அச்சத்தில் வண்டி நின்ற இடத்தில் டீ வாங்கிக் குடித்துக் கொண்டான்.

தபால் வண்டியில்தான் வந்து சேர்ந்தான் பாபநாசம். மாதத்தில் மாறியிருந்தது. மலர்கள் இன்னும் பளிச்சென்றும், மேகங்கள் இன்னும் பளிச்சென்றும், மேகங்கள் இன்னும் வெண்மையாகவும், வானம் இன்னும் நீலமாகவும் இருந்தன. பறவைகள் அவனுக்காக நேயர் விருப்பம் நடத்தின. அப்பாவுக்கு ஆச்சரியமாக இருக்கும். கடிதம் போட நேரமில்லை. மதுமிதாவை ஸ்மரிக்கதான் பொழுது சரியாக இருந்ததே! கோபிநாத் போன் பேசி வரச் சொன்னதைச் சொல்லிருப்பார். அப்பா எதிர்பார்த்துக் கொண்டுதான் இருப்பார்.

வீடு பூட்டிருந்தது. பக்கத்து வீட்டு சுவாமி கொத்திக் கொண்டிருந்தார். "என்னது வேலையை விட்டுட்டியா?"

"இல்லை ஸார் லீவுல வந்திருக்கேன்!"

"அதுக்குள்ளேயா?"

"அப்பா எங்கே?"

"அப்பர் டாம் போயிருக்கார். நீ வரதா சொல்லவே இல்லையே!"

'உம்மிடம் சொல்லமாட்டார்' என்று நினைத்துக் கொண்டான். என்ன செய்யலாம்? நேராக அங்கே போய் விடலாமா? மது என்ன செய்துக் கொண்டிருப்பாள். எழுப்பலாம், நான் வந்திருக்கிறேன் என்று தெரிந்தால் நேராக இங்கே ஓடி வந்து விடுவாள். முதலில் கோபிநாத்தைப் போய் பார்க்கலாம்.

கோபிநாத் ஆபிஸில இல்லை. அவரும் டாம் ஸைட் போயிருக்கிறார் என்று தெரிந்தது. தமிழ் ஆசிரியர் அவனைப் பார்த்ததும் பள்ளியிலிருந்து ஓடி வந்து கொண்டிருந்தார்.

கோபிநாத்தின் ஆபிசுக்குள் நுழைந்து உள் தொடர்பு டெலிபோனைக் கேட்டான். அவர் வீட்டு டெலிபோன் எண்ணைச் சுழற்றினான். கொஞ்ச நேரம் அடித்தபின் "ஹலோ?"

"மது?" என்றான்.

"மது இல்லை. சுதா பேசறேன்." கூடவே ஏதோ மிக்ஸி போல சப்தம் கேட்டது.

"மது எங்கே?"

"**ஹூ** இஸ் ஸ்பீக்கிங்?"

"நான்தான் ரகு!"

"விச் ரகு?"

"ரகு...ரகுபதி..."

"இஸ் இட் எ ட்ராங்கால்?"

"இல்லை. மதுவைக் கூப்பிடேன்?"

"வெயிட்..."

காத்திருக்கையில் நாடித்துடிப்பு பன்மடங்காகியது. 'மது' நான் வந்துட்டேன் என்று சொன்னால் போதுமா?

"ஹலோ! யாரு?"

"மது! நான்தான் ரகு."

"நான் மதுவுடைய அம்மா! யாரு ரகுவா?"

"ஆமாம்மா"

"எங்கிருந்து பேசரிங்க?"

"இங்கதான் வந்திருக்கேன். கோபிநாத்தான் வரச் சொல்லிருக்கார். தெரியாதா?"

"ஓ.எஸ் தெரியும்! தெரியும்! எப்ப வந்தீங்க?"

"இப்பதான்: அரைமணிக்கூட ஆகலை. மது இருக்காளா?"

"இருக்கா. ராதாகூட பேசிகிட்டு இருக்கா."

"வீட்டுக்கு வரட்டுமா?"

"சாயங்காலம் வாங்க. அவர் ஆபிஸ்லருந்து வந்துருவார். சொல்றேன்."

“மதுவுக்கு சிலதெல்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன்னு சொல்லுங்க.”

“சரி, வாங்க.”

டெலிபோனை வைக்க, காத்திருந்த தமிழ் ஆசிரியர் அவனருகில் மகிழ்ச்சியுடன் வந்தார்.

“தம்பி, எனக்கு மாத்தல் ஆர்டர் வந்திருச்சு. சூன் திங்களிலேயே இருந்து மதுரைக்கே போட்டுருக்காங்க. இனிப்பான செய்தி. என்ன சொல்றீங்க? அங்க இருந்துக்கிட்டே கைக்கிளையைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாமுன்னு.”

“அப்படியா, ரொம்ப சந்தோஷம்” என்றான். அவர் மற்றொரு ‘பெட்டிஷன்’ இனிக் கேட்கமாட்டார் என்பதில் சந்தோஷமாக இருந்தது. மார்க்கர் இரண்டு பையன்களை வைத்து கோர்ட்டை உருட்டிக் கொண்டிருந்தான். “என்ன தம்பி கொஞ்ச நாளா விளையாட வர்றதில்லை?”

தான் வேலை கிடைத்துப் ஊருக்குப் போனதே மார்க்கருக்கு இன்னும் தெரியாது என்பது வியப்பாக இருந்தது.

அப்பா அவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். “என்ன இது, டாட்டா காட்டின கையை பாக்கெட்டில போட்டுக்கறத்துக்குள்ளே திரும்பி வந்துட்ட? உடம்பு கிடம்பு சரியில்லையா?”

“அப்பா, கோபிநாத் உங்ககிட்ட சொல்லலையா?

“இல்லையே! என்ன?”

“எனக்கும் மதுமிதாவுக்கும் கல்யாண நிச்சயதார்த்தம் நாளைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்.”

அப்பாவின் முகத்தில் ஆச்சரியமும் வேதனையும் தெரிந்தது. “எனக்கு தகவலே இல்லையே! நேத்துக்கூட, ஏன் இன்னிக்குக் காலைலக்கூட, அப்பர் டாம்ல பார்த்தேன், சொல்லவே இல்லையே! உனக்கு லெட்டர் எழுதியிருந்தாரா?”

“இல்லேப்பா. டெலிபோன்ல கூப்பிட்டு அவசரமா வரச்சொன்னார். அம்மா இன்ஸிஸ்ட் பண்றாங்க! வந்தன்னா ஒருநாளில் ஃப்ங்ஷனை முடிச்சுட்டு போயிறலாம்னு சொன்னதால நான் அவசரமா புறப்பட்டு வந்தேன்...”

“ஏம்பா, ஊருக்குப் போனவன் ஒரு லெட்டர் போடக்கூடாதா? இல்லை இத்தனை சீக்கிரமா திரும்ப வர்றவன் ஒரு லெட்டர் போடக்கூடாதா?” என்று அவனை அடிப்பட்ட முகத்துடன் கேட்டார்.

“சரி சரி. பரவால்லை. எங்கிட்ட எதும் தகவல் கிடையாது. கோபிநாத் ஒரு வேளை என்கிட்ட சொல்ல வேண்டியது அவசியமில்லைன்னு நினைச்சுகிட்டு இருக்கிறார்போல!”

“சேச்சே! அதெல்லாம் இல்லை. ஒருவேளை நான் வந்தப்பறம் சொல்லிக்கலாம்னு இருக்காரோ?” என்ன யோசித்துப் பார்த்தாலும் சமாதானமாகவில்லை. கோபிநாத் அப்பாவிடம் தன்னை வரவழைத்த விஷயத்தை சொல்லாதது அவனுக்கு விந்தையாகவே இருந்தது. மாலை கேட்டுவிடலாம். அப்பாவின் கோபம் கண்ணாடிபோல் தெரிந்தது.

பிறகு சமாதானப்படுத்தவேண்டும்... அப்பாவின் சொல்லை மீறி தனிபட்டுச் செயல்படவும் தைரியம் வந்துவிட்டது. இருந்தும் அப்பாவிடம் சொல்லாதது தப்புதான்.

“நான் ஆபிஸ் போறேன். ஜெயந்தி வந்தா ஆழாக்குப் பால் அதிகமா வாங்கிக்கச் சொல்லு. நீ போய் கோபிநாத்தைப் பார்த்து சரியா விசாரிச்சுகிட்டு வந்து சொல்லு. நிச்சயதார்த்ததுக்கு முன்னாடி என்னைக் கூப்பிட்டா சரி” என்று சைக்கிளில் ஏறிக்கொண்டு கோபமாக மிதித்தார்.

சாயங்காலம் வரை இருப்புக் கொள்ளவில்லை. இந்நேரம் மதுவுக்கு அவன் வந்திருப்பது தெரிந்திருக்கும். ஏன் இன்னும் போன் வரவில்லை? அவளுக்காக வாங்கிருந்த பரிசுப் பொருள்களை எடுத்துக் கொண்டான். கவனமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு அரை மணி நேரம் கண்ணாடியில் இப்படியும் அப்படியுமாகப் பார்த்துச் செலவழித்தான்.

மது இதோ வந்துவிட்டேன் பார். உனக்கு எல்லாம் வாங்கி வந்திருக்கிறேன் மது, நிச்சயதார்த்தம் ஆனவுடன் என்னுடன் சென்னை வந்துவிடு. அங்கே...

கோபிநாத்தின் வீட்டை மறுபடி அணுகும்போது அவனுக்குப் போன தடவை இந்த வீட்டில் நிகழ்ந்த அத்தனையும் மனத்தில் அலையடித்தது. இங்கேதான் மதுவை முதன் முதலாக தொட்டேன். இங்கேதான் அவள் என் கையை எடுத்துக் கொண்டு தன் மார்பின் மேல் வைத்துக்கொண்டாள். சைக்கிளில் விழுந்து முழங்காலில் சிராய்த்திருந்ததற்கு மருந்துப் போட்டாள்...

தோட்டத்தில் நுழைந்தபோது சுதா குறுக்கே ஓடுக் கொண்டிருந்தான்.

“ஹலோ சுதா!”

“ஹலோ அங்கிள்!” என்று வானத்தைப் பார்த்தான்.

“என்ன சுதா?”

“ஏரோப்ளேன். மாடல் பிளேன்.” சுதா தன் கையில் பளிச்சுடும் சிறிய பெட்டி ஒன்றிலிருந்து திருகி கொண்டிருக்க, ரிமோட் கண்ட்ரோல் என்று விசாரித்தான். “ராதா வாங்கிக் கொடுத்தது”.

“மது எங்கே?”

“அதோ! ராதாகூட!”

முதலில் சிரிப்பொலி கேட்டது. வருவதற்கு பத்து செகண்ட் முன்னாலயே ஜோவியன் மஸ்க் மணம் வந்தது. “ஹாய்! ஐ’ம் ராதாகிஷன்!”

## 18

அவனுக்குப் வயசு சரியாக சொல்ல முடியவில்லை. தலை கலைந்து ரொம்ப ஃபாரினாக இருந்தான். இந்தியாவில் சந்தித்திராத சட்டை பாண்ட் அணிந்திருந்தான். சட்டையில் அனாவசிய பட்டன்கள் இருந்தன. பாண்டில் வேண்டுமென்றே ஒட்டுப் போட்டிருந்தது. போலராண்ட் கண்ணாடி அணிந்திருந்தான். தூரத்தில் மரத்தில் கட்டிருந்த ஊஞ்சல் இன்னும் காலியாக ஆடிக் கொண்டிருந்தது. மதுமிதா அவனைப் பார்த்து “ஹலோ ரகு! எப்ப வந்தே?” என்றாள்.

அவன் அணிந்திருந்த பனியனில் அயல்நாடு தெரிந்தது.

“மிட்டி! இதான் ரகுவா?”

“இதான்! இது ராதாகிஷன்!”

“ராதா ஃபர் ஷார்ட்” என்று பால்மால் சிகரெட் பற்றவைத்துக் கொண்டு “சிகரெட்?” என்று ரகுவிடம் நீட்டினான். ரகு அதை மறுக்க, இண்டியாவில் ரோஸ்டட் சிகரெட் கிடைக்கறதில்லை என்று க்வார்ட்ஸ் லைட்டர் ஒன்றை எடுத்து, “உன்னைப் பத்தி மிட்டி சொல்லிருக்கா” கிளிக்! என்ன மிட்டி?”

“மது! இவர் யாருன்னு சொல்லலியே” என்று தவிப்புடன் கேட்டான்.

“இது வந்து, இது வந்து” என்று கையை உதறிக் கொண்டு “ராதா, நீ யாரு?”

“என்ன மிட்டி இப்படிக் கேக்கறே?” என்று வசீகரமாக புன்னகைத்துவிட்டு ‘ஐம்’ ராதாகிஷன் ஃப்ரம் நுயார்க்.”

“நுயார்க்குனா! அமெரிக்காவா?”

“யா! ஓ யா! ஐ வொர்க் தேர், கம் ஹியர் அன் வெக்கேஷன். கோபி ஈஸ் ஃகிரேட் ஃப்ரெண்ட் ஆப் டாட்!” உச்சரிப்பில் எரிச்சலூட்டக்கூடிய யாங்க்கி பாசாங்கு இருந்தது.

“கைல என்ன?” என்றாள் மது.

முதன் முதலாகக் கையிலிருந்த பார்சலை உணர்ந்து, “மது இது உனக்கு... ஸாரி!”

“காஷ்! ஸாரி! மிட்டி! யூ வேர் ஸாரிஸ் ஸ்டில்? ஸ்டேட்ஸ்ல ரொம்ப அசௌகரியமா இருக்கும்.”

“ஹூ இஸ் கோயிங் டு ஸ்டேட்ஸ?”

“மிட்டி?

“ஹூ இஸ் மிட்டி?”

“வாட்ஸ் யூர் நேம் ஸ்வீட் ஹார்ட்?”

“மது!”

“மது ஃபார் யூ, மிட்டி ஃபார் மி! நோ ப்ராப்ளம் ஓகே?”

“என்ன மது நீ ஸ்டேட்ஸ் போகப் போறியா?”

“யா” என்றான் ராதா.

“என்ன மது?”

“ஆமா! நாங்க ஸ்டேட்ஸ் போகப் போறோம்.”



www.writersujatha.com

“நாங்கன்னா?”

“நானும் ராதாவும்.”

“யா! ஆஃப்டர் தி வெடிங்!”

ரகுபதி திகைத்துப்போய் மதுமிதாவைப் பார்த்தாள். அவள் கீழே குனிந்துக் கொண்டாள்,

“எனக்குப் புரியலை மது! என்ன இது?”

“நோ ப்ராப்ளம், நோ ப்ராப்ளம். கோபி வந்ததும் எல்லாத்தையும் ஸார்ட் அவுட் பண்ணிறலாம். சுதா இதை எடுத்துக்கிட்டுப் போய் மம்மிகிட்ட கொடு. ரொம்ப தாங்க்ஸ்! வெடிங் ப்ரசண்டா எடுத்துக்கலாம்.”

“என்ன மது இது? என்னை உங்கப்பா எதுக்கு வரவழைச்சிருக்கார் தெரியுமா?”

“தெரியாது.”

“என்ன இப்படி பொறுப்பில்லாம பதில் சொல்றே? நான் எதுக்கு வந்திருக்கேன் தெரியுமா?”

“எல்லாம் தெரியும், லெட்ஸ் மீட் ஓர் எ க்யாஸ் ஆஃப் பியர், அண்ட் டாக் இட் ஓவர்.”

“பதில் சொல்லு மது.”

“என்ன சொல்லணும்?”

“உங்கப்பா உனக்கும் எனக்கும் கல்யாணம் நிச்சயம் செய்யறதுக்கு நாள் குறிச்சு என்னை மெட்ராஸ்ல இருந்து வரவழைச்சிருக்கார், தெரியுமா?”

மதுமிதா புதியவனைப் பார்த்தாள். அவன் அவளை வளைத்துக் கொண்டு, “கம் ஸ்வீட் ஹார்ட், கம். ரகு, ரெட்ஸ் ஹாவ் எ பால் கேம்” என்று புறப்பட்ட மதுமிதா சற்று தயக்கத்துடன் அவனை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு, புதியவனால் ஏறக்குறைய செலுத்தப்பட்டவளாகச் சென்றாள். பிரமித்து நின்றான். அவன் கையில் ஸாரி பாக்கெட் கனத்தது. அவர்கள் இருவரும் சிரித்துக்கொண்டே வீட்டுக்குள் நுழையும்போது “மிட்டி, இன்னும் நீ ஆல்பம் காட்டலை பாத்தியா? நாட்டி கார்ள்!”

ரகுபதிக்கு முதலில் தன்னுள் ஏற்படும் உணர்சிகளை வகைப்படுத்த முடியவில்லை. வயிற்றுக்குள் கனம் புகுந்து கொண்டுவிட்டது. கண்ணீர் ஊற்று தயாராகிக் கொண்டிருந்தது. துரோகம் முதுகில் கத்திக் குத்துப் போல் வலித்தது. என்ன இது, சடுதியில் இப்படி மாறி விட்டார்கள்? இல்லை ஏதோ தப்பாக நிகழ்ந்திருக்கிறது. கோபிநாத் வரட்டும், கேட்டுவிடலாம். இது ஏதோ தற்காலிக அமெரிக்க மோகம். அவசரப்படாதே. கலவரப்படாதே. முதலில் பெண்ணுடன் தனியாகப் பேச வேண்டும். என்னுடன் திருநெல்வேலி ஜங்ஷனில் ரயிலுடன் ஓடி வந்தவள் இவள். “மிஸ் யூ அண்ட் கிஸ் யூ ” என்று எழுதியவள் இவள். இது ஏதோ தடாலடிக் கலைஞன் குறுக்கே வந்து குழம்புகிறான். கோபிநாத் வரட்டும்.

மெல்ல வீட்டு வாசலுக்கு நடந்தான். உள்ளே சிரிப்பொலி கேட்டது. மதுதான் சிரிக்கிறாள். உள்ளே அமெரிக்க பொம்மைகளின் விஞ்ஞான சப்தம் கேட்டது. “மது, இத பாரு, இத பார்” என்று சுதாவின் உற்சாகக் குரல் கேட்டது, ரகுபதி பிரம்பு

நாற்காலியில் உட்கார்ந்துக் கொண்டு காத்திருந்தான். இந்தரஜால் காமிக்ஸை புரட்டினான். சேவகன் வந்து உள்ளே போகும்போது "அய்யாவைப் பார்க்க வந்திருக்கிங்களா?"

"ஆமாம்பா!"

"அவர் வர இன்னும் நேராங்குங்களே!"

"அம்மாவை வரச் சொல்லிங்களேன்!"

"அம்மா டென்னிஸ் போயிருக்காங்க."

சற்று நேரம் செய்வதறியாது உட்கார்ந்திருக்க, சுதா துள்ளிக் குதித்துக் கொண்டு வெளியே வந்து ரகுவைப் பார்த்துப் "ராதா அங்கிள்க்கு டூத் பேஸ்ட் வேணுமாம்" என்று கடைப் பக்கம் ஓடினான்.

உள்ளே சற்று நேரம் மௌனமாக இருந்தது. அதன்பின் "நோ ராதா! நோ! நாட் நௌ" என்று மதுவின் குரல் கேட்டதும், உள்ளே போய் அவனைக் கத்தியால் குத்தி விடலாம் போலத் தோன்றியது.

"மது!" என்று உரக்கக் கூப்பிட்டான் பதிலில்லை.

"மது! மது!" என்று நரம்பு புடைக்க கத்த, ராதா என்கிறவன் வெளியே வந்து, "வாட்ஸ் தி ப்ராப்ளம்? ஏன் இங்கியே நின்னுக்கிட்டு இருக்க ரகு? ஸாரி, உள்ள வா கமான் இன்!"

தயக்கத்துடன் நுழைய, மது சட்டை பட்டன் போட்டுக் கொண்டிருந்தாள்.

"உக்காருங்க, கோபி உங்ககிட்ட என்ன சொன்னார்?"

"நான் அவர்கிட்ட பேசியிருக்கிறேன்."

"கோபி வர நேரமாகும். இல்லை மிட்டி?"

"மிட்டின்னு அவளைக் கூப்பிடாதீங்க. அவளுக்கு இனிமையான பேரு மதுமிதா!"

"மதுமிதா இஸ் டூ லாங் ஃபர் மி! என்ன மிட்டி?"

"ரகு, இது பாத்திங்களா ஷர்ட்டு, ராதா வாங்கி வந்தது."

"மிஸ்டர் ராதாகிஷன், இஃப் யூ டோண்ட் மைண்ட், நான் இவளோட தனியா பேச விரும்பறேன்"

"பை ஆல் மீன்ஸ்! மிட்டி, நான் மாடிக்குப் போய்க்கட்டுமா?

"நானும் வரேன் ராதா!"

"இல்லை மது, நான் உன்கிட்ட பேசியாகணும்!"

"என்ன இது!"

"உட்கார் மது! ஸார் அமெரிக்கா! நீங்க போகலாங்க ஸார்!"

“ஓக்கே ஓக்கே!” என்று தோள்களைக் குலுக்கிக் கொண்டு ராதாகிஷன் மாடிக்கு ஏறிச் செல்ல, மாடிகளிலிருந்து, “மிட்...ஃபினிஸ் பண்ணதும் மேல வரியா?”

“உக்கார் மது, என்னைப் பாரு!”

“என்ன பார்க்கணும்?”

“சொல்ல மது, என்ன இது திடீர்னு?”

“அப்பாதான்!”

“அப்பாதான் என்ன?”

“வந்து... போன வாரம் ஸண்டே ராதா வந்தார்.”

“யார் இந்தக் கோமாளி சொல்லு!”

கோமாளி என்ற பதப்பிரயோகத்தை ரசித்துச் சிரித்துவிட்டு, “இது வந்து, அப்பா ஃபரண்ட் சச்சிதானந்தம் இல்லை, அவர் ஸன். இங்கு வந்தார். நிறைய பிரஸண்ட்ஸ் கொண்டு வந்தார். அப்பா கூடப் பேசினார். அப்பாகிட்ட நான் மதுவை கல்யாணம் பண்ணிக்க விருப்பம். அமெரிக்கா அழைச்சுகிட்டுப் போறேன்னு சொன்னார். அதனால...அதனால”

“அதனால எனக்கு கொடுத்த வாக்குறுதியெல்லாம் காத்தில பறக்க விட்டுடியா?”

“வாக்குறுதின்னா என்ன அர்த்தம்?”

“ப்ராமிஸ்.”

“உனக்கு என்ன ப்ராமிஸ் பண்ணேன்?”

“என்ன ப்ராமிஸ் பண்ணியா? என்ன மது இப்படிக் கேக்கறே? நீ உங்க அப்பா, அம்மா மூணு பேரும் சேர்ந்து எனக்கு கொடுத்த சலுகையெல்லாம் மறந்தே போய்ட்டியா? உங்கப்பா போன வாரம் எனக்கு டெலிபோன் பண்ணி வரவழைச்சதாவது தெரியுமா உனக்கு?”

“அப்பா சொன்னார்.”

“பின்?”

“ஐம் கன்ஃப்யூஸ்ட்” என்றாள் தொடர்ந்து,

“ரகு! அப்பாதான் என்னைக் கேட்டா–உனக்கு யாரை கல்யாணம் பண்ணிக்க இஷ்டம்னு– ரகுவையா, இல்லை ராதாவையா?”

“அதுக்கு நீ என்ன சென்னே?”

“முதல்ல ரகுவை பிடிச்சிருந்தது, இப்ப ராதாவை பிடிச்சிருக்குன்னு சொன்னேன்.”

“பிடிச்சிருக்குன்னா உன் அகராதில என்ன அர்த்தம் மது?”

**வா**சலில் ஜீப் சீறும் சப்தம் கேட்டது. சேவகன் கோப்புகள் அடங்கிய பெட்டியுடன் வர, அதன்பின் கோபிநாத் “ஷ்! அப்பா என்ன வெயில்” என்று கன்னத்தில் கர்ச்சீப்பை ஒத்திக்கொண்டே வந்தார்.

ரகுபதி இருப்பதை பார்த்துச் சற்றும் திடுக்கிடாமல் “வா ரகு‘ எப்ப வந்தே?”

“மத்தியானம் ஸார்.”

“நான் கொடுத்த தந்தி வந்து சேர்ந்ததோ?”

“தந்தியா? இல்லை ஸார்!”

“வரவேண்டாம்னு கொடுத்திருந்தேனே! சே!

“ஏன் வரவேண்டாம்னு கொடுத்தீங்க?”

“நாம போட்ட ப்ளான் எல்லாம் சேஞ்ச் ஆயிருச்சு!”

“வேற மாப்பிள்ளை தேடிக்கிட்டீங்க, அவ்வளவுதானே?” – ரகு தன் குரலில் இருந்த அதட்டலைக் கவனித்து ஆச்சரியப்பட்டான்.

“என்ன பண்றது ரகு, நாம ஒண்ணு நினைக்கிறோம். சுவாமி வேற நினைக்கிறார். பிராப்தம்னு ஒண்ணு இருக்கில்லை?”

“இதில பிராப்தம் எங்க வர்றது? எல்லாம் நீங்க தீர்மானிச்சதுதானே? மை காட்! என்ன ஸார் இது, பனியனைக் கழட்றாப்பல கழட்டி எறியறீங்க? ஏன் ஸார், நீங்கதானே சும்மா உக்காந்திருந்தவனை உங்க பெண்ணைக் கட்டிக் கொடுக்கறதாச் சொல்லி ஆசை காட்டினீங்க?”

“என்னப்பா இது, தப்பா வார்த்தையெல்லாம் உபயோகிக்கறே? ஆசை காட்டினோமா? மதுவுக்கு ஏத்த மாப்பிளையா பார்த்துகிட்டு இருந்தோம். நீ சரிப்படுவேன்னு தோணிச்சு. அதனால நிச்சயதார்த்தத்தை வெச்சுக்கலாம்னு தீர்மானிச்சோம். இப்ப இந்த ராதாகிஷன் வந்ததும் சில புதிய சிக்கல்கள் வந்துறவே...”

“என்ன ஸார் சிக்கல்கள்? சொல்லுங்க? நான் தீர்த்து வைக்கிறேன்!”

“அதெல்லாம் உன்னால முடியாதுப்பா. நீ ஒர்ரி பண்ணிக்காதே! ரகுபதி, வி ஆல் லைக் யூ!”

“என்ன ஸார். இதை போய் இவ்வளவு லைட்டா எடுத்துக்கறிங்க?”

“லைட்டாதான் எடுத்துக்கணும். இல்லைன்னா வாழ்க்கையிலே ரொம்ப கஷ்டப்படுவே!”

“எங்கப்பாகிட்ட சொல்லிட்டிங்களா?”

“எதைப் பத்தி?”

“நிச்சயதார்த்தம் கான்சல் ஆனதைப்பத்தி?”

“நிச்சயதார்த்தம் ஏற்பாடு செய்ததைச் சொல்லியிருந்தால்தானே கான்ஸல் பத்திப் பேச்சு? அந்தத் தந்தி நிச்சயம் உனக்குக் கிடைக்கலையா? போஸ்டல் டிபார்ட்மெண்ட்டுக்கு ஒரு கம்ப்ளெயிண்ட் கொடுக்கணும்”

“தந்தி நாசமா போகட்டும் ஸார்! இப்ப என்னை வரவழைச்சுட்டு இந்த மாதிரி பேரிடியைத் தூக்கிப் போடறிங்களே?”

“சேச்சே! அப்படியெல்லாம் எக்ஸாஜரேட் பண்ணாதேப்பா. இப்ப என்ன ஆயிருச்சு?”

“மது இதுக்கு ஒப்புத்துக்கிட்டாளா?”

“ஷி இஸ் மை டாட்டர். நான் சொல்வதைக்கேப்பா.”

“அவ எனக்கு எழுதின லெட்டர் எல்லாம் காமிக்கட்டுமா?”

“வேண்டாம். எங்க வீட்டில எதுவும் ரகசியம் கிடையாது. மது, எனக்குக் காட்டிட்டுதான் தபால்ல சேர்த்திருக்கா!

“அவ என்னைத் தொட்டிருக்கா ஸார்! முத்தம் கொடுத்திருக்கா!”

“ஸோ, வாட்? நாம தொடற அத்தனை பேரையும் கல்யாணம் செஞ்சுக்கணுங்கறியா?” – கோபிநாத் மிகவும் அசந்தர்ப்பமாகச் சிரிக்கத் தொடங்கினார்.

“என்ன ஸார் இப்படி திடீர் மாற்றம்? சொல்லுங்க ஸார்! எதாவது தப்பா நிகழ்ந்து போச்சா? எதாவது சண்டையா? நான் செய்தது, எழுதினது எதாவது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? இல்லை, சும்மா அந்த ஆள் அமெரிக்காவில வேலையா இருக்கான், நீ இந்தியாவில இருக்கே, அதனால அவன் பெட்டர்னு தீர்மானிச்சுங்களா? அவனை சரியாப் பாத்திங்களா ஸார்? உச்சந்தலையில சொட்டையை மறைச்சுருக்கான்! அவனோட கம்பேர் பண்ணா மது குழந்தை ஸார்!”

மது ஒரே ஒரு கப்பில் காப்பி கலக்கிக் கொண்டு வந்தாள். “ரகு! உனக்கு எதாவது வேணுமா?”

“ஒண்ணும் வேண்டாம் மது, சொல்லு மது! உண்மையா உன் உள் மனசில இருந்து சொல்லு. இப்ப நடக்கிறதில உனக்கு இஷ்டமா?”

“மது! நீ உள்ளே போ.”

“இரு மது. எனக்கு பதில் சொல்லிவிட்டு உள்ளே போ!”

“மதூ!”

“இருங்க ஸார். எம் ஐ நாட் என்டைட்டில்ட் ஃபர் என் ஆன்ஸர்?”

“நான் பதில் சொல்றேன்.”

“கேள்வி அவளை கேட்டுருக்கேன் ஸார்!”

“இத பார் ரகு! இப்ப எல்லாமே கொஞ்சம் அகலமா இருக்கு. இதெல்லாத்தையும் அமைதியா ஒவ்வொரு பகுதியா டிஸ்கஸ் பண்ணலாம். ராத்திரி டின்னருக்கு வாயேன். எல்லாத்தைப் பத்தியும் பேசலாம் நான் செய்ததில எதாவது தப்பு இருந்தா சொல்லு.

என்ன? ஜாஸ்தி ஒர்ரி பண்ணிக்காதே. இதல்லாம் வாழ்க்கையில ரொம்ப சாதாரண விஷயம்.” அருகே வந்து அவன் தோளில் தட்டி, “நல்ல பெண்ணா பார்த்து தரேன். கவலைப் படாதே!” என்று லேசாக அவனைத் தள்ளிக் கொண்டு வாசல் வரை கொண்டு விட்டார். பிரமிப்பில் மெஷின் தப்படிகள் வைத்து வீட்டை நோக்கி நடந்தான்.

பக்கத்து வீட்டு சுவாமி தோட்டத்திலிருந்து எழுந்து,“என்னப்பா, கேள்விப்பட்டது நிஜம்தானா? பி.ஓ. டாட்டரை கல்யாணம் செய்துக்க போறியாமே! நிச்சயதார்த்தத்துக்கு வந்திருக்கியா?” என்று சொன்னதெல்லாம் கேட்கவில்லை. அவனுக்கு தனிமை தேவையாக இருந்தது. ஒரு தலையணை தேவையாக இருந்தது, நெஞ்சுவரை, தொண்டைவரை அடைத்திருந்தது. உள்ளத்தைக் காலிப்பண்ண நிறைய கண்ணீர் சிந்த வேண்டிருந்தது. நேராக வீட்டுக்குள் சென்றான். வாயிற்புறத்து அறைக்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண்டான். எதிரே அலமாரியில் இருந்த கண்ணாடியை எடுத்து தன்னை பார்த்துக் கொண்டான். ‘உன் மூஞ்சுக்கு கல்யாணம் வேறயா?” என்று சொல்லிக் கொண்டதும் குழாய்த் திறந்ததுபோல் கண்ணீர் பெருகியது. துடைத்துக்கொள்ள சிரத்தைப்படாமல் ஒரு மூலையில் உட்கார்ந்துக் கொண்டு மெலிய இருட்டில் விரிவாக அழுதான். கன்னங்களில் உருண்டு கண்ணீர் மடியை நனைத்தது. மூடியிருந்த ஜன்னல் வழியாக தென்னை நிழல் சிணுங்கிக் கொண்டிருக்க, வெளியே விதவிதப் பறவைகள் ஆகாயத்தை உற்சாகக் குரல்களால் நிரப்பிக் கொண்டிருக்க, தூரத்தில் மணி அடித்ததும் பள்ளிப் பிள்ளைகளின் ஆரவார அலை கேட்க, கொஞ்சம் உன்னிப்பாக கவனித்தால் மதுவின் அம்மா ஆடும் டென்னிஸ் ஆட்டத்தின், ‘ப்ளக் ப்ளக் சப்தங்கள், தன்னை இந்த ஊருக்கு கொண்டு வந்த தபால் வண்டி, எப்போதும், தாமிரபரணி எல்லாமே அந்த அறையில் தனிமையில் அவன் அழுகைக்கு பின்னணியாக அமைந்தன. உள்ளுக்குள் இறுக்கமாக கெடித்து வைத்திருந்த சோகம் அத்தனையும் கரைவதற்கு அழுகை தேவையாக இருந்தது. ஆனால் ரொம்ப காலம் அழவேண்டும் போல் இருந்தது. வேறு எதாவது செய்ய முடியுமா?

ஜன்னல் கதவு திறந்து அப்பா எட்டிப் பார்த்தார்.

“அழுது முடிச்சாச்சுன்னா கொஞ்சம் கதவை திறக்கறியா?”

## 19

அப்பா உள்ளே நுழைந்ததும் “பாத்ரூம் போய் முகத்தைக் கழுவிக்கிட்டு வா” என்றார்.

“அப்பா... புத்தியை காட்டிட்டாங்கப்பா!”

“எதிர்பார்த்தேன், நீ போய்த் துடைச்சுக்கிட்டு வா!”

“டிச் பண்ணிட்டாங்கப்பா!”

ரகு அவசரமாகச் சென்று முகம் கழுவிக் கொண்டான் கண்ணாடியைப் பார்க்க பயந்தான். முகம் சற்று வீங்கியிருந்தது. சே! மூக்கைச் சிந்திக் கொண்டு அழுந்த டவலால் துடைத்துக் கொண்டான்.

“சொல்லு” என்றார் அப்பா. அவனை நேராக பார்க்கவில்லை. ஜன்னல் வழியாக வெளியேதான் பார்த்துக் கொண்டிருந்தார். அவனைப் பார்த்து சற்று சிரித்தாலும் அவன் கண்ணாடிபோல் உடைந்து விடுவான் என்கிற எச்சரிக்கை அவரிடம் தெரிந்தது.

www.writersujatha.com

"அவர்தாம்பா என்னை டெலிபோன் பண்ணி வரவழைச்சார், நிச்சயதார்த்ததுக்கு! இப்ப போனா அமெரிக்காவில இருந்து புதுசா ஓர் ஆள் வந்திருக்கானாம். அவனுக்கு கொடுக்க போறாராம் மதுமிதாவை!"

"கொடுக்கட்டுமே... தொலைஞ்சது சனியன்னு விட்டுரு!"

"என்ன இப்படிச் சொல்றீங்க! இதில எவ்வளவு துரோகம் இருக்குது! அவங்க எனக்கு காட்டின ஆசை ஒட்டுமொத்தமா குடும்பம் முழுக்க எனக்குத் தந்த உரிமைகள், அந்தப் பொண்ணு என்கிட்ட – எல்லாத்தையும் யோசித்துப் பாருங்கப்பா."

"சரி சரி. அதுக்காக ஏண்டா அழறே?"

"எனக்குத் தாங்கலை... இப்படிக் கூட மனுசங்க இருப்பாங்களா!"

"இருக்காங்க. இவங்களுக்கெல்லாம் கல்யாணமும் டி.வி. செட்டு வாங்கறதும் ஒண்ணுதான். இதுக்காக நீ எதுக்கு மாஞ்சு போகணும்? அதுதான் எனக்குப் புரியலை!"

"என்னால இதை லைட்டாவே எடுத்துக்க முடியலைப்பா."

"இப்ப என்ன பண்றதா உத்தேசம்?"

"நீங்கதான் சொல்லணும். அவங்களை அடிச்சுக் கேக்கணும். அழுத்தமா கேக்கணும்– நீங்க செய்தது என்ன அநியாயம் பாத்திங்களான்னு!"

"அவங்க நியாயப்படுத்துவாங்க...அப்புறம்?"

ரகு சற்று நேரம் சும்மா இருந்து விட்டுத் தீர்மானித்துப் பேசினான்: "அப்பா! நான் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துக் கொண்டே ஆகணும்! அவளை விட்டா வேறு யாரையும் கல்யாணம் செய்துக்க மாட்டேன்."

"சுலபமா சொல்லிட்ட, அவகிட்ட பேசினியா?"

"பேச அவகாசம் கிடைக்கலை. அவ கொஞ்சம் வெகுளிப் பெண். அவளை சுலபமா மனம் மாத்திட்டாங்கப்பா. அவ கூட அரைமணி பேச அவகாசம் கிடைச்சா போதும்; என்கூட ஓடி வந்திருவா!"

"அது வேறயா! ரகு, நான் சொல்றதை குறுக்கிடாம கேளு... ஹைப்பர்கமின்னு ஒரு டர்ம் இருக்கு. உனக்கு அதுக்கு அர்த்தம் தெரியுமா?

"தெரியாது"

"நம்ம நிலைமைக்கு மேல, நம்ம அந்தஸ்துக்கு மேல பெண்ணெடுக்கறது. அந்தக் குற்றத்தைதான் நாம செய்ய இருந்தோம். நல்லவேளை, கடவுளா பார்த்து இதில இருந்து கழற்றி விட்டுட்டார். இதை ஒரு 'ப்ளெஸிங் இன்டிஸ்கைஸா'தான் நீ எடுத்துக்கணும். எனக்கு முதல்ல அவங்க அவசரப்பட்டதில இருந்தே உதைச்சுது. பெண்ணுக்கு எதாவது குறை இருக்குமோன்னு நினைச்சேன். குறை பெண்கிட்ட இல்லை. அது ரொம்ப மேம்போக்கான பொண்ணு. ஐடியாஸ் ஏதும் அதுக்கு ஸெட் ஆகலை. சுதந்திரமா வளர்ந்துச்சு. பிறர் மனதைப் புண்படுத்துவோம் என்பதைப் பத்தி பாகுபடுத்த கூடிய பக்குவம் அந்தப் பொண்ணுக்கு இருக்குதா–எனக்கு சந்தேகம் தான். எல்லாமே விளையாட்டாதான் அது பாவிக்குது; அந்தமாதிரி பொண்ணை அதுவும் பணக்காரத்தனமா முழுசுதந்தரத்தோட வளர்ந்த பெண்ணை, கல்யாணம் கட்டிக்கிறதில

உனக்குப் பலவித பிரச்சனைகள் பிற்பாடு ஏற்படலாம். அது இப்பவே தவிர்க்கப்பட்டதில எனக்கு சந்தோஷம். கொஞ்ச நாளைக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனா சரியாப் போயிரும். இந்த மாதிரி சின்ன மனுசங்ககிட்டே சம்பந்தம் வேண்டாம் ரகு!

“நீங்க என்ன சொல்றீங்க? இதை இப்படியே விட்டுர்றதா?”

“ஆமா, உன்னால ஒண்ணும் செய்ய முடியாது,”

“இல்லையப்பா.... முடியும். எனக்கு நம்பிக்கை இருக்குது. முதல்ல அந்த கோபிநாத்தை ‘எதுக்காகய்யா திடீர்ன டிஸிஷனை மாத்தின’ன்னு கேச்சுத்தான் போறேன்?”

“இனி அவர் உன்னைச் சந்திச்சாத்தானே?”

“இல்லையப்பா, ராத்திரி வரச் சொல்லியிருக்காரு, சாப்பிடப் போகாட்டாலும் காரணம் கேட்டு வெச்சுக்கலாமில்லையா?”

“காரணம் சொல்றாரு, அதுக்கப்புறம்?”

“எனக்கு எதிரா ஒரு காரணமும் இருக்க முடியாது. அவர் பண்ற அநியாயத்தை அவர்கிட்ட ஆதாரபூர்வமா காட்டிர்றேன்.”

“என்ன ரகு பேசறே நீ? இது ஓர் ஓட்டப் பந்தயம் மாதிரி... அமெரிக்க ஜெயிச்சுருக்சு!”

“இல்லை. நான் கேக்கத்தான் போறேன். என்ன காரணம்னு சொல்லட்டுமே! அப்புறம் முடிஞ்சா அவளையும் பார்த்துப் பேசிட்டு நீ செய்தது எப்பேர்ப்பட்ட துரோகம்னு சொல்லப் போறேன். அந்தப் பையன் கிட்டயும் முன்னால் நடந்ததையெல்லாம் சொல்லிடப் போறேன். இவங்க எப்படிப்பட்ட மனுசங்கன்னு தெரிஞ்சுக்கட்டுமே!”

“யூ ஆர் இன்ஃபர் ஸர்ப்ரைஸஸ் ரகு!”

“அப்பா... இன்னிக்கு சாயங்காலம் எனக்குக் கிடைச்சதை விட அதிர்ச்சி வேற எதும் இருக்க முடியாதுப்பா. எனக்கு என்னவோ உள்ளுணர்வில ஏதோ சொல்லுது. இதெல்லாம் தற்காலிகமானதுதான். எனக்கு மதுவோட பேச சந்தர்ப்பம் கிடைச்சா போதும். ஓர் அரை மணி கிடைக்காதா பார்த்துரலாம்”

“அப்ப இன்னிக்கு ராத்திரி அவங்க வீட்டுக்குப் போகப் போறியா?”

“ஆமாப்பா... கூப்பிட்டிருக்காங்கல்ல?”

“பெஸ்ட் ஆஃப் லக். ஆனா ஒரு வேண்டுகோள். போய்ட்டு வந்தப்புறம் பொட்டைப் பிள்ளை மாதிரி அழாதே. ஏமாற்றத்தைத் தாங்கறதுக்கும் தயாரா இரு. அநாகரிகமா நடந்துக்காதே. நான் வரவா”

“இல்லைப்பா, நீங்க வேண்டாம். ஆனா நீங்க அவரை....இல்லையப்பா........ இதை நானே சமாளிக்கப் போறேன். ஐ’ல் கெட் தட் கர்ள்– சத்தியாகிரகம் பண்ணியாவது!”

“சுயமரியாதையை இழக்காதே! நான் ஷிப்ட்டுக்குப் போய்ட்டு வரேன்!”

இருட்டினதும் அவர்கள் வீட்டுக்குப் போவதற்கு முன் தனக்குள் பற்பல சாத்தியக் கூறுகளை ஒத்திகை பார்த்துக் கொண்டான். “நீங்க செய்யறது எந்த விதத்தில் நியாயம் அதை முதலில் சொல்லுங்க சார்” என்று கண்ணாடியைப் பார்த்துக் கேட்டான். கொஞ்ச நேரம் கழித்து “அவனுக்கு என்ன வயசு சார்? நிச்சயம் முப்பதைத் தாண்டி இருக்கும். இப்படி பதினோரு வயசு வித்தியாசத்தில் ஓர் ஆள் அமெரிக்காவில் சம்பாதிக்கிறான்கிறதுக்காகக் கொடுத்த வாக்கை மீறலாமா சார்? எதுக்கு சார் அவ அந்த மாதிரி கடுதாசி எழுதணும்?” “மிஸ்டர் ராதாகிஷன்! நீங்களே நடந்தது எல்லாத்தையும் கேளுங்க” என்று சொல்லிக் கொண்டு தலைவாரிக் கொண்டான்.

ஜெயந்தி சாப்பாடு கொண்டு வந்தாள். “சூடாருக்கு இப்பவே சாப்பிடறிங்களா அண்ணா?”

“இல்லையம்மா, எனக்கு முக்கியமான ஜோலி இருக்கு. எட்டு எட்டரைக்கு வந்துருவேன்.”

“கல்யாணம் எப்ப மாமா?”

“நடக்கும்! நடக்கத்தான் போறது! விட்டேனா பார், ஜெயந்தி” என்று சொன்னது அந்தப் பொண்ணுக்குப் புரியவில்லை.

**கோ**பிநாத் புன்னகையுடன் “வா ரகு!” என்று வரவேற்றார். “ஏய், ஒரு சேர் கொண்டு வந்து போடு!” வாசலில் உட்கார்ந்திருந்தார். எதிரே ஸ்காட்ச் சமாசாரங்கள். ப்ளாக் லேபல் என்று தங்க எழுத்துகளின் பின் திரவம் சஞ்சலித்தது. பக்கத்தில் வறுத்த முந்திரிப் பருப்பு வைத்திருந்தது.

“மது எங்கே?”

“எல்லாரும வாக் போயிருக்காங்க.”

“மதுவும் வேணும்.”

“கவலைப்படாதே. முதல்ல நாம பேசலாம். நான் எல்லாத்தையும் விரிவா சொல்றேன். வாட்ஸ் யுவர் ப்ராப்ளம்? உக்காருப்பா முதல்ல. ரிலாக்ஸ்! நத்திங் இஸ் லாஸ்ட்.”

உட்கார்ந்தான். எப்படி ஆரம்பிப்பது என்று யோசித்தான்.

“என்ன யோசிக்கிறே? உன் முதல் கேள்வி ‘நீங்க செய்தது உங்களுக்கே நல்லாருக்கா..? அதுதானே?”

“நீங்க என்னை இப்படி நட்டாற்றில் விட்டுருவிங்கன்னு நான் எதிர்பார்க்கலை. ஐ’ம் டெரிப்ளி டெரிப்ளி டிஸப்பாயண்ட்டட்!”

“வாஸ்தவம்தான். முதல்ல ஏமாற்றம் இருக்கு!”

“மோசம் சார். என்னை ஃபோன் பண்ணி நிச்சயதார்த்தத்திற்கு வரவழைச்சு...”

“உனக்கு வரவேண்டாம்னு தந்தி அடிச்சேம்பா! அது சேரலைன்னா ரசீதை வேணா காண்பிக்கட்டுமா?”

“அதெல்லாம் வேண்டாம் சார். தந்தி கிடைச்சிருந்தா கூட நான் காரணம் என்னன்னு கண்டுகொள்ள வந்திருப்பேன்”

“அப்ப தந்தி கிடைச்சுதா?”

“தந்தி தந்தின்னு ஸைட் ட்ராக் பண்ணாதீங்க. முக்கியமான பிரச்சனைக்கு வாங்க. நீங்க என்னை ட்ரீட் பண்ண விதம் சரியானதா யோசித்துப் பாருங்க. இவ்வளவு ஹோப் கொடுத்துட்டு...”

“நான் செய்தது தப்புங்கறே.. வெச்சுக்கலாம் ஏன் அப்படிச் செய்தேன். சொல்லட்டுமா?”

“நியாயப்படுத்தவே முடியாது சார்”

“கொஞ்சம் நான் சொல்றதைக் கேட்டுப் பாரேன்”

“கேக்கறேன். ஆனா மது எனக்குத்தான். நிச்சயம் எனக்குத்தான். நான் வேற எதுக்கும் சம்மதிக்கப் போறதில்லை.”

“கேக்கறேன் முதல்ல. மதுவுக்குப் பத்தொன்பது வயசு. இந்த வயசுக்கு அவ இன்னும் குழந்தைதான். உங்கூட பழகறதுக்கு அனுமதிச்சோம். பழகினா, எதுக்காக அனுமதிச்சோம்? எ ப்ராஸ்பெக்டிவ் ப்ரைட்க்ரூம் ஃபை மை டாட்டர். அந்த ரீதியில் உன் காரியர், உன் புத்திசாலித்தனம். உன் குணம் எல்லாமே எங்களுக்குப் பிடிச்சிருந்ததால பழகவைச்சோம். உன்னைத்தான் அவளுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கறதுன்னு நிச்சயம் தீர்மானிச்சோம். ஆஃப்டர் ஆல் ஒரு தகப்பன்ங்கிற முறையில அவளுடைய சந்தோஷம்தான் எனக்கு மிக முக்கியம். இல்லையா! அவளை நிச்சயம் சந்தோஷமா வெச்சுப்ப எனக்குத் தெரியும். உன் குணத்திலேயோ உன் நடவடிக்கையிலோ அப்பழுக்கு எதும் சொல்லமுடியாது. இந்தத் தீர்மானம் உனக்கு எதிராக ஒண்ணுமே இல்லை. நீ நல்லவன்தான். உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள அவ பாக்கியம்தான் பண்ணியிருக்கணும். அதனால நீ இதைப் பர்ஸனா எடுத்துக்கவே கூடாது.

இப்ப புதுசா வந்திருக்கானே இந்த ராதா கிருஷ்ணன் இவளைப் பார்ப்போம். அமெரிக்காவில வேலை செய்றான். அங்க எவ்வளவே டெம்ப்டேஷன் இருந்தும் இந்தியாவில் நம்ம பக்கத்துப் பெண்ணைத்தான் கல்யாணம் செய்துப்பேன்னு இங்க வந்திருக்கான். என் கலிக் ஒருத்தரோட பையன். எத்தனை சம்பாதிக்கிறான் தெரியுமோ? வருஷத்துக்கு சுமார் அறுபதாயிரம் டாலர். லாட் ஆஃப் மணி? ரெண்டு கார் இருக்கு. வீடு வாங்கியிருக்கான். கம்ப்யூட்டர் ஃபீல்டில் ஒரு மல்ட்டி நேஷனல் கம்பெனியில டாப் இன்ஜினியரா இருக்கான். மதுவைப் பார்த்ததுமே புடிச்சுப்போச்சு. பண்ணிட்டா இவளைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு உறுதியாயிட்டான். என் க்ளோஸ் ஃப்ரெண்டடோட மகன். இவன்கிட்டே உன்கிட்ட வாக்குக் கொடுத்ததைப் பத்தி சொல்லியாச்சு. இருந்தும் ஹிடஸ்ன்ட் டேக் நோ ஃபர் என் ஆன்ஸர். ‘மது இல்லைன்னா எல்லாத்தையும் விட்டுட்டு சாமியாராப் போயிருவேன்‘னு சொல்லிவிட்டான். எனக்குத் தர்ம சங்கடமான நிலைமையாப் போச்சு. இவனும் ரொம்ப நல்ல பையன்தான். இவனும் என் டாட்டாரை நல்ல வெச்சுப்பான் க்ரீன் கார்டு வெச்சுட்டிருக்கான். இவளை அமெரிக்காவுக்கு உடனே அழைச்சிட்டுப் போறேன்னு சொல்லிட்டான். நான் இவனைப் பத்தி மறைமுகமா விசாரித்துப் பார்த்துட்டேன். என் பிரதர் இன்லா ஒருத்தர் ஹேமடாலஜிஸ்டா அமெரிக்காவில் இருக்கார். அவர் மூலமா விசாரிக்கச் சொன்னேன். டெலிபோன்ல ரெண்டு தடவை பேசினேன். ரொம்ப நல்ல பையன், பெரிய இன்ஜினியர், எதிர்காலம் ரொம்ப பிரகாசமா இருக்குன்னு ரிப்போர்ட் கொடுத்தார் ஏதாவது சாப்பிடறியா”? என்றார்.

“இல்லை சார்! பழக்கமில்லை! சார், இந்த ஸ்காட்ச் அவன் கொண்டு வந்ததுதானே?”

“ஆமாம். அதனால அவன் கெட்டவன்னு நான் நம்பத் தயாரா இல்லை. என் பிரதர்–இன்லா கொடுத்த ரிப்போர்ட்டைக் குறிச்சு வெச்சிருக்கேன்... டேய் யார்ரா அது?

“வேண்டாம் சார் சொல்லுங்க”

“ரெண்டு மாப்பிள்ளைங்க, ரெண்டு பேரும் என் டாட்டருக்கும் பொருத்தமானவாதான். இதில யாரை செலக்ட் பண்றது பெரிய டைலம்மாவாப் போச்சு. கடைசில என் பொண்ணுடைய சந்தோஷத்தையும் நல்வாழ்வையும் மட்டுமே குறிக்கோளா வெச்சிக்கிட்டுப் பார்த்தேன். இந்த மாதிரி சின்ன வயசில அமெரிக்கா போய் அங்க சுகமா வாழற ஒரு பெரிய சந்தர்ப்பத்தை அவளுக்கு இப்படி டினை பண்ணிட்டம்னா, கொடுத்த வாக்கைக் காப்பாத்தணும்ங்கிற ஒரே காரணத்துக்காக அவளை உனக்குக் கல்யாணம் செய்து கொடுத்தா என்ன ஆகும்? யோசித்துப் பாரு. ஷி வில் பி மிஸ்ரபிள் உன்னுடன் வாழும் ஒவ்வொரு கணத்திலும் தப்பவிட்ட சந்தர்ப்பத்தை நினைச்சுப் பார்த்துக்கிட்டே இருப்பா. அது உங்க மண வாழ்க்கையைப் பிசாசு மாதிரி துரத்தும்.

“ஆல்ரைட் நீ மெட்ராஸ்ல இருக்கே, அங்கே எத்தனை சம்பளம்? ஆயிரத்து அம்பது, இருநூறு, முந்நூறு ரூபாய்ல ரெண்டு ரூம் செட்டில் இருப்பிங்க. வேலைக்காரங்க வெச்சுக்க முடியாது. பால், மோர், தயிருன்னு, அவதான் அலையணும். ஆபீஸ் போய் நீ திரும்ப வருவ, உனக்குக் காத்துக்கிட்டு இருக்கணும். பாக்யராஜ் படங்களுக்குப் போவீங்க. பஸ்ஸில நெருக்கியடிச்சிட்டு பீச்சக்கு போவீங்க, கொஞ்ச நாள்ள அவளை பிரக்னண்ட்டாக்கி தாய் வீட்டுக்கு அனுப்புவ. அப்புறம் பசும்பால், புட்டிப் பால்... என் மகளை இந்த மாதிரி ஒரு ஹம்டிரம் வாழ்க்கைக்கு உட்படுத்த நான் விரும்பலை, ஒரே மகள், பூ கணக்கா வளந்தவ.”

“சார், இதைப்பத்தி நீங்க எனக்கு அந்த மாதிரி சலுகைகள் கொடுக்கறதுக்கு முன்பே யோச்சிருக்க வேண்டாமா?”

“யோசித்தேன். அந்த சமயத்தில என் மகளுக்கு வந்த வரன்களில் நீதான் பரவாயில்லைன்னு இருந்தது. அப்ப இந்த ராதாகிஷன் ஃபாக்டர் இல்லையே! இதபாரு, எனக்குப் பதில் சொல்லு. ஒரு அப்பன் தன் மகளுக்கு நல்ல சுகமான வாழ்க்கை கிடைக்கணும்னு விரும்பறது தப்பா?”

“எப்படி சார் நீங்க அந்த வாழ்க்கையை சுக வாழ்க்கைன்னு முடிவு கட்ட முடியும்? நியூயார்க்கிலே பட்டப்பகல்ல நடக்க முடியாதாம். மக் பண்ணிடுவாங்களாம். அவ உயிரையே பணயம் வைக்கிறிங்களே!”

“அவ கார்லன்னா போகப் போறா! அவங்க இருக்கறதெல்லாம் பாஷ் ஏரியா... ஹார்லம்போல ஸ்லம்லதான் இதெல்லாம் நடக்கிறது. இவங்க இருக்கிறது எங்க தெரியுமோ?”

“சார், உங்களுக்கு சுகம் என்கிறது பண மட்டம்தான்னு தெரியுது?”

“பணமும்தான்.”

“மத்த விஷயங்களைப் பத்தி கவலையே இல்லையே உங்களுக்கு?”

“எப்படிப்பா சொல்றே?”

“என் நெஞ்சில குத்தியிருக்கீங்களே கத்தி, அதுக்கு என்ன பதில் சொல்றீங்க?”

“சேசே...! ரொம்ப மிகைப்படுத்தறப்பா. என்ன ஆயிருச்சு இப்ப?”

“என்ன ஆகலை?”

“இப்படியே ராத்திரி பூரா பதில் சொல்லிக்கிட்டே இருக்கப் போறியா?”

“இல்லை சார். நான் இதுக்கு சம்மதிக்க மாட்டேன். எனக்குப் பெரிய துரோகம் பண்ணிட்டிங்க. உங்க மகளை எனக்குக் கொடுத்தே ஆகணும். இல்லைன்னா... இல்லைன்னா...”

“இல்லைன்னா என்னப்பா செய்யப் போறே?”

“உங்க வீட்டு முன்னால் சத்தியாக்கிரகம் பண்ணப்போறேன்!”

“தட்ஸ் ரிடிக்யுலஸ்! நீ அந்த மாதிரியெல்லாம் செய்ய மாட்டே. எனக்குத் தெரியும்?”

“எனக்கு மதுவோட அரை மணிநேரம் தனியா பேசணும்.”

“தாராளமா! இன்னிக்கே பேசு. இதோ இப்ப வந்துருவா, ராதா கூட வாக்கிங் போயிருக்கா. வந்ததும் ரெண்டு பேரும் தனியாவே பேசிக்கிங்க. ராதா உண்ட் மைண்ட்!”

“அவ எனக்கு எழுதின கடிதம் எல்லாம் என்கிட்ட இருக்கு.”

“இத பார்! பயப்படுத்தறியா? அதை நீ ராதாகிட்ட நிச்சயம் காட்டலாம். அவன் மைண்ட் பண்ண மாட்டான்.”

ரகுபதி அத்தனை அஸ்திரங்களும் மண்ணில் மொண்ணையாய் விழுந்த போர்வீரன் போல உணர்ந்தான்.

சட்டென்று அவர் கையைப் பிடித்துக் கொண்டான்; “சார் ப்ளீஸ்! என்னால தாங்க முடியாது சார். எத்தனையோ எதிர்பார்த்தேன். எத்தனையோ கனவு கண்டுட்டேன். இதைப்போல பெரிய ஏமாற்றத்தை என்னால சமாளிக்க முடியாது சார். எம் மார்ல கை வைச்சுப் பாருங்க. பாபநாசம் வந்ததில இருந்து கிடந்து தடார் தடார்னு அடிச்சுக்குது. அவனுக்கு எத்தனையோ நல்ல பெண்ணுங்க கிடைக்க மாட்டாங்களா? ஒண்ணே ஒண்ணுன்னு எனக்குச் கிடைச்ச பொக்கிஷத்தை ...” அதற்கு மேல் கோவையாகப் பேச முடியாமல் அழுகை வந்து தடுத்தது. அவர் மணிக்கட்டைப் பிடித்துக் கொண்டு சொட்டுச் சொட்டாகக் கண்ணீர் சிந்தினான். “நோட்டு புஸ்தகமெல்லாம் அவ பேரை...”

“வாட்ஸ் இட் ரகு! யூ ஆர் மெஸ்ஸிங் இட் அப்! ஆர்ன்ட் யூ அஷேம்ட்! யூ ஆர் எ மேன் ஐ ஸே! இந்த மாதிரி அழுமூஞ்சிக்கா என் டாட்டரைக் கல்யாணம் செய்து கொடுக்கணும்?... ஸ்டாப் இட் ஐ ஸே!” என்று அதட்டினார்.

அவன் கண்ணீர் சட்டென்று நின்று கோபம் அவனை ஆக்கிரமித்தது. எரிமலை போல், இல்லை டைனமைட் போல் வெடித்தது.

“யூ பாஸ்டர்ட்! என்னன்னு நினைச்சுக்கிட்டிருக்க. நாய்க்குட்டி மாதிரி வான்னா வரணும், போன்னா போகணுமா? இத்தனை தூரம் நம்பிக்கை கொடுத்திட்டு சுலபமா பேச்சிலே என்னை ஏச்சுறலாம்னு பாக்கிறீங்களா? முடியாது! நான் இதை ஒரு கை பார்த்துர்றேன்.”

“என்ன செய்வே?”

“பார்த்துக்கிட்டே இரு! ஊர் பூரா இதைச் சொல்லி நாற அடிக்கிறேன் பாரு! எங்கிட்ட இருக்கிற லெட்டரை எல்லாம் ஃபோட்டோஸ்டாட் எடுத்து போஸ்டர் அடிச்சு சுவர் எல்லாம் ஒட்ட வைச்சு.... கல்யாணம் நடந்துருமோ? பாத்துரலாம்...!”

அவர் எழுந்தார்.

“ஸ்காட்ச் சாப்பிடறிங்களா ஸ்காட்ச்,” என்று மேஜையைக் கலைத்துத் தள்ளினான்.

கோபிநாத் பதறாமல் “ஆல்ரைட் ரகு. நான் உன்னை நிராகரித்த நிஜமான காரணத்தை சொல்ல வேண்டான்னு பார்த்தேன். இப்ப சொல்ல வேண்டியதாயிருச்சு, கேள்” என்றார்.

## 20

**கோ**பிநாத் கோபத்துடன் விஸ்கியின் வேகமும் சேர்த்து கொள்ள, “இத பார் பையா, நான் சொல்றதை முழுக்கக் கேட்டுப்போ. உன்னை நாங்க நிராகரிச்சதுக்கு முக்கியமான காரணத்தைத் தெரிஞ்சுக்கிட்டுப் போ.”

“அடப் போய்யா” என்று நடக்க ஆரம்பித்தான்.

“காரணம் உங்கப்பா..”

நின்றான். திரும்பினான்: “என்ன சொல்ற?”

“உன் அப்பாவைப் பத்தி சில தகவல்கள்..”

“என்ன உளர்றிங்க....?”

“பெரிய துரோகம் பண்ணிட்டதா என்னைக் குற்றம் சாட்டறியே, உண்மையான காரணத்தைத் தெரிஞ்சக்கிட்டுப் போ... அப்புறம் என்னைத் திட்டமாட்டே... இதபாரு தம்பி! எனக்கு பொறுப்பு இருக்குது. கொடுத்த வாக்கைக் காத்தில பறக்க விடற கேவலமான மனுஷனில்லை நான்.”

‘ரகு இந்த இடத்தை விட்டுப் போ’ என்று ஏதோ ஓர் உள்ளுணர்வு எச்சரித்தது. வேண்டாம் கேட்காதே! கேட்காதே!

“உங்கப்பா ஜெயந்தின்னு ஒரு பொண்ணை வெச்சிக்கிட்டு இருக்கிறதா எனக்குத் தகவல் வந்தது.”

“வ்வாட்!” என்று துடித்தான்.

“நான் முதல்ல நம்பலை. பூடகமா எல்லாரும் பேசிக்கிட்டாங்க. இதைப்பத்தி உங்கப்பா கிட்ட கேக்க எனக்கு உரிமையில்லை. அது அவர் சொந்த விஷயம். ஆனா உங்க வீட்டில சம்பந்தம் வெச்சுக்க நாங்க விரும்பலை!”

அவர் பேசச் பேச அவன் ரத்தம் அத்தனையும் முகத்துக்குப் பாய்ந்தது. உதடுகள் துடித்தன. “இனஃப்! உங்க பெண்ணைத் தெருவில போற நாய்க்கு வேணா கொடுங்க. ஆனா, எங்கப்பாவைப் பத்தி அவதூறாப் போசதீங்க. போதும் உங்க சகவாசம். நான் எங்கப்பாவை தெய்வம் போல பூஜை செய்யறேன். உலகத்தில் தலைசிறந்த மனுஷரா அவரை மதிக்கிறேன்.”

“சரிதாம்பா... நான் என்ன சொல்றேன். இந்த மாதிரி வதந்தி இருக்கிற வீட்டில சம்பந்தம் வெச்சுக்க நான் தயங்கினது ரைட்டா இல்லையா?”

“நான் சென்ஸ்! எப்படி இதையெல்லாம் நம்பறீங்க! விவஸ்தை கிடையாதா உங்களுக்கு? அவரைப் பத்தித் தெரியாதா உங்களுக்கு?”

“ஆபீஸ்லத்தான் தெரியும். நான் நம்பிட்டேன்னு சொல்ல வரலை. அது பொய்யா இருக்கலாம். ஆல்ரைட்... பெனிஃபிட் ஆஃப் டவுட்! சரி, ஆனா, என் மனைவி கேக்கறா ‘அந்த மனுசன் என் பொண்ணைக் கையைப் பிடிச்சு இழுக்க மாட்டான்னு என்ன நிச்சயம்’னு. இதுக்குப் பதில் என்ன?”

“அடப் போய்யா தெரு ஜனங்களா! எங்கப்பாவை இந்த மாதிரி சொன்னத்துக்குப் பல் அத்தனையும் பேத்திருக்கணும், அவர் யாரு தெரியுமா?”

“தெரியாது. அதனாலதான்....”

“ச்சீ! பெரிய மனுஷனா இருந்துக்கிட்டு உள்ளமெல்லாம் சாக்கடைய்யா. தூ! உங்க குடும்ப சகவாசமே வேண்டாம். அமெரிக்கா! ஆப்பிரிக்கா ரெண்டு பேரைக் கல்யாணம் கட்டிக்கொடு... வாழ்த்துகள்! யோவ்! நீ உருப்புடுவியா?” – சம்பந்தமில்லாமல் குரல் நடுங்கச் சொல்லிக் கொண்டே ஒரு கல்லைப் பொறுக்கி அந்த வீட்டுக் கண்ணாடி ஜன்னல்மேல் எறிந்தான். என்னிக்காவது ஒருநாள் என்கிட்டே நிச்சயம் நீ உதைப்படப்போற, பாத்துக்கிட்டே இரு!” என்று மலைச்சரிவில் அதிவேகமாக நடந்து விழுந்தான்.

காரணமாம் காரணம்! அப்பாவைப் போய் இப்படி! ஜெயந்தியும் அப்பாவுமாம்! அதீத கற்பனை. துண்டம் துண்டமாக அவனை வெட்டியிருக்க வேண்டும். அப்பழுக்கற்ற மனிதரைப் போய் இப்படிப் பேசுவதாவது? நாற்ற ஜனங்கள். இதைப் போய் அவரிடம் சொல்லி மனத்தைப் புண்படுத்த வேண்டாம். சொன்னாலும் புண்பட மாட்டார். புன்னகைப்பார். இவர்களை சரியாகத்தான் எடை போட்டு வைத்திருக்கிறார். நான்தான் தற்காலிக மதுமிதா மோகத்தில் மற்றதெல்லாம் மறைக்கப்பட்டு இந்த மேல்தட்டு நாய்களை இனம் கண்டு கொள்ளத் தவறி விட்டேன். அப்பா! இது என் குற்றம். ராப்பூரா அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். தெளிந்து விட்டேன். ஞானம் பெற்று விட்டேன். சொல்லலாமா, வேண்டாமா? சொல்லித்தான் ஆக வேண்டும். ஜெயந்தியா! எத்தனை வயசு இருக்கும்! இருபத்தைந்தா! அழகாகவா இருக்கிறாள்? இருந்தால் என்ன...கையில் குழந்தை. மணமானவள். இவளைப் போய்..சே! கணவனிடமிருந்து ஏன் பிரிந்தாள்? ஒரு வேளை சந்தேகமோ? இருக்காது. ஏதோ தீங்கிழைக்கப்பட்டவள். அவளுக்குப் புகலிடம் கொடுத்திருக்கிறார். சாப்பாடு கொண்டு வந்தால் உடனே வைப்பாட்டியாக்கி விடுவதோ! எல்லாம் பக்கத்து வீட்டு சாமி செய்த விஷமமாக இருக்கும், உதைக்க வேண்டும்! காஸட் கொண்டு வராத வெறுப்பால் இந்த வதந்தியைப் பரவ விட்டிருப்பான். என்ன மோசமான கீழ்த்தரமான ஜனங்கள்!

அப்பா வராந்தாவில் ஈஸிசேரில் உட்கார்ந்து கொண்டு க்ராஸ் வோர்டு போட்டுக் கொண்டிருந்தார். பக்கத்தில் சேம்பர்ஸ் அகராதி. இவன் வந்ததை மூக்குக் கண்ணாடிக்கு மேல் நிமிர்ந்து பார்த்து,“ போன காரியம் என்ன ஆச்சு?” என்றார்.

“ஒண்ணும் ஆகலைப்பா”.

“சாப்ட்டியா?”

“இல்லை.”



www.writersujatha.com

“ஜெயந்தி சாப்பாடு வெச்சிருக்கா.”

“இருக்காளா?”

“இல்லை, போய்ட்டா நான் வேணா ஸர்வ் பண்ணவா?”

“வேண்டாம்” என்று மௌனமாகச் சாப்பிட உட்கார்ந்தான்.

“ரொம்ப பேஸ்த் அடிச்சு வந்திருக்கே. என்ன சொன்னார் கோபிநாத்?”

“என்ன சொன்னான்னு கேளு. எவ்வளவு கீழ்த்தரமான மனுசன்ப்பா.”

“பெண்ணைக் கொடுக்காததினாலயா?”

“இல்லை. அதுக்கு அவன் சொன்ன காரணத்தால்.”

“அவன்னு சொல்லாதே. அவர் என் பாஸ். என்ன காரணமாம்? அமெரிக்கா மாப்பிள்ளை பெட்டர். நிறைய சம்பாதிக்கிறான். பெண்ணுடைய சந்தோஷம். நல்வாழ்வு எக்ஸ்ட்டரா, அதானே?”

“அதேதான். ஆனா என்னை நிராகரிச்சதுக்குக் காரணம் சொன்னான் பாரு! பயங்கர எரிச்சல் வந்து கல்லை வீசிக் கண்ணாடியை உடைச்சுட்டு வந்துட்டேன்.”

“அப்படி என்ன சொல்லிட்டார்?”

“உங்களைப்பத்தி அவதூறா!”

“என்னைப் பத்தியா? ஸ்ட்ரேஞ்ச்! அதை எங்கிட்டயே சொல்லியிருக்கலாமே! வெய்ட் எ மினிட்! அவதூறுன்னா எதாவது நான் வந்து ஜெயந்தியை வெச்சுக்கிட்டு இருக்கிறதா சொன்னாரா?”

ரகு அவரை ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தான்.

கிராஸ்வோர்ட் கட்டங்களை நிரப்பிக் கொண்டே அப்பா மெல்லச் சொன்னார்: “ரகு! அது உண்மைதான்”

“என்ன!”

“வெச்சுக்கறது என்கிறது கொஞ்சம் அசிங்கமான வார்த்தையா இருக்கலாம். ஆனா அவளை நான் இந்த வீட்டில கூப்ட்டு வெச்சுக்கப் போறேன்!”

“மைகாட்! ஏம்ப்பா பொய் சொல்றீங்க! நான் நம்ப மாட்டேன்! முடியாது!” ரகுபதி அபத்தமாகச் சிரித்தான்; “ஜோக் பண்றிங்க! தமாஷ் பண்றிங்க! அதானே?”

“இல்லை, ரகு. தமாஷ் இல்லை. உங்கிட்ட பொய் சொல்ல விரும்பலை.”

அவர் குறுக்கெழுத்தை நிறுத்தவில்லை. “நோ! நான் நம்பமாட்டேன். நீங்க எங்கிட்ட பொய்தான் சொல்லியிருக்கிங்க. ப்ளீஸ். அப்படித்தானே?” என்று கெஞ்சினான்.

மௌனமாக இருந்தார். இதோ! இதோ சொல்லப் போகிறார்! எல்லாம் தமாஷ் என்று! காத்திருந்தான். அவர் பேசவில்லை.



www.writersujatha.com

கொஞ்ச நேரம்.

“ஏம்ப்பா? ஏன்?” என்றான்.

“நான் அவளைக் காப்பாத்தப் போறேன். தேவையிருந்தா கல்யாணம் செய்துக்கப் போறேன்.”

“அந்த.... அந்தக் குழந்தை! மைகாட்! ஒரு நாளில் எவ்வளவு அதிர்ச்சி எனக்கு!”

www.writersujatha.com

“ஸாரி!”

“உங்களுக்கு என்ன வயது?”

“நாற்பத்தெட்டு, அவளுக்கு இருபத்திநாலு, பேர் பாதி!” என்று சிரித்தார்.

“ஜெயந்தி! அஃப் ஆல் பீல்பிள்!”

“அவளைப் பற்றி உனக்குப் பூராவும் தெரியுமோ?”

“தெரிஞ்சுக்க விருப்பமில்லை! கேக்கறத்துக்கே அருவருப்பா இருக்குது.”

“கேட்டுட்டுத் தீர்மானம் பண்ணு.”

“நோ! நோ! நான் கேக்க விரும்பலை. எனக்கு இன்னிக்குப் போதும். அந்த கோபிநாத் மேல் இருந்த பகைமை எல்லாம் இப்ப கரைஞ்சு போயிருச்சு!”

“ரகு! கொஞ்ச நேரம் என்னை அப்பான்னு பார்க்காம, தனிக்காட்டில் மாட்டிக்கிட்ட ஓர் ஆண் பிள்ளையா என்னை யோசிச்சுப் பாரு. உள்ளுக்குள்ள எழற உணர்ச்சிகளை எல்லாம் சமூகம். மதிப்பு, அப்பன்கிற அந்தஸ்து இதுக்காக உள்ளே சுருட்டி வெச்சுக்கிட்டு இருந்தவனாகப் பாரு. இருபது வருஷமா ஒற்றைப் படுக்கையில் உருண்டவனாப்பாரு!”

“எனக்கும் அவளுக்கும் ஒரே வயது!” என்று சிரித்தான். அவர் உதடுகள் இறுகின.

“ஆஸ் தி பெஸ்ட்ப்பா! எனக்குக் கல்யாணம் ஆகாட்டாலும் உனக்காவது கல்யாணம் ஆவுதே! வாழ்த்துக்கள். சாயக்காலத்தில் இருந்து இப்படி வாழ்த்திக்கிட்டே இருக்கேன்.”

www.writersujatha.com

“டோண்ட் பி க்ரூயல்!”

“நானா? நானா க்ரூயல்?”

“நான் சொல்றதைக் கேளு! கேட்டுத்தான் ஆகணும். கேட்டுத்தான் ஆகணும்.”

“கலப்பு மணமா?”

“என்னை முழுக்கக் கேக்காம ஜட்ஜ் பண்ணாத!” அப்பா இப்போது அவசரமாகப் பேசினார்; “நீ நினைச்சுட்டிகிட்டு இருக்கே, அவகூட தினப்படி படுக்கையில புரண்டுக்கிட்டு இருக்கேன்னு! நான் அவளை வித்தியாசமா தொட்டது இல்லை. அவளுக்கு நான் நம்பிக்கை தரப்போறேன். ஒரு வாழ்க்கை தரப் போறேன். தெரியுமா?

www.writersujatha.com

ஒரு கேவலமான ஜந்து; அவ்வளவுதான். அவ கழுத்தில தழும்பைப் பார்த்திருக்கியா? அது என்ன தெரியுமா?”

“அனாட்டமிக்கல் டிடெய்ல்ஸ் எல்லாம் வேண்டாம்பா.”

“வெறுப்பில பேசறே! ஏமாற்றத்தில பேசறே! பேசு, பரவாயில்லை.”

“எப்ப கல்யாணம்?”

“ரகு! என் லைஃப்ல முதல் தடவையா உன்ன மகனாப் பெற்றதுக்காக வருத்தப்படறேன்.”

“அதே ஃ பீலிங்தாம்பா எனக்கும்!”

“போடா... போய் படுத்துக்கடா! காலைல பேசலாம்.”

“எனக்குப் படுக்கணும் போல இல்லை. கொஞ்ச நேரம் வெளிய சுத்திட்டு வரேன். கதவைத் திறந்து வெச்சிருங்க!”

“போ! போ! எங்க வேணா. போ! ஸ்வெட்டர் போட்டுக்கிட்டுப் போ!”

கேட்காமல் வெளியே வந்தான். இலக்கில்லாமல் நடந்தான். காலில் செருப்பில்லை. கல் குத்தினது பொருட்டாகத் தெரியவில்லை. வானத்தில் வைரவிழா தெரிந்தது. ஓரியனின் பெல்ட்டுக்கு அருகில் அவனுடைய கார்த்திகை நட்சத்திரம் பளிச்சென்று தெரிந்தது. கொஞ்சம் கொஞ்சம் சிவப்புக் கண் சிமிட்டிக் கொண்டு சிகரெட் பற்ற வைத்துப் புகைத்தான். நதியின் ‘சோ’ தெளிவாக கேட்டது. சின்னச் சின்ன வீடுகளில் சின்னச் சின்ன மனிதர்கள்! என்ன செய்யலாம்? கலைக்கு போன் செய்யலாமா? இப்போதா? எங்கிருந்து? நாளை! நாளை! அப்பா! சடக்கென்று கோமாளியாகி விட்டீர்கள். சின்னத் தொந்தியும் நரையும் வைத்துக் கொண்டு என்ன கல்யாணம் உனக்கு? எதற்காகக் கல்யாணம்? புரியவில்லையே! ‘மோகத்தைக் கொன்று விடு அல்லால் என்றன் மூச்சை நிறுத்தி விடு... என்கிற பாரதி வரியை அப்பா அடிக்கோடிட்டிருந்தது நினைவுக்கு வந்தது. மூச்சை நிறுத்த அவரால் இயலவில்லை!

கல் படுகையில் உட்கார்ந்தான். தெருநாய் கிட்டே வந்து குரைத்தது. கவலைப்படவில்லை. சற்று நேரத்தில் அவனருகில் வந்து வாலாட்டியது.

“சே! இட் வாஸ் டு குட் டு பி ட்ரூ!” என்று அந்த நாயிடம் சொல்லிக் கொண்டான்.

அது புரிந்தது போல் இன்னும் வாலாட்டியது. டென்னிஸ் கோர்ட் தெரிந்தது. கேம் ஸெட் அண்ட் மாட்ச் டு ராதாகிஷன்!

“நீ... நீங்க என்னைக் கல்யாணம் செய்துக்கப் போற தானே!”

“ஆமா.”

“அதோ. அந்த மரத்தடிக்குப் போயி கொஞ்சம் சரிவில இறங்கிட்டா நம்மை யாரும் பார்க்க மாட்டாங்கதானே!”

“ஆமாம்.”

'அந்தச் சரிவில போய் உக்காந்துகிட்டு நீ வந்து... நீ வந்து .... என்னை கிஸ் பண்றியா?'

"உன் பேர் என்ன?"

"ஜெயந்தி, மாமா."

"என்னை மாமான்னு கூப்பிடாத."

இப்ப எப்படிக் கூப்பிடப் போகிறாள்?

'சிரிக்கிறான் பாரு. இப்படித்தான் இவப்பாவும் நைச்சியம் பண்ணி சிரிச்சுச் சிரிச்சு வளையெல்லாம் வாங்கிண்டார்.'

கழுத்தில் மஞ்சள் கயிறு! மூன்று இடங்களில் தழும்பு?

'அப்பா மாதிரி நல்லவர் கிடையாது. இவனுக்குச் சட்டையெல்லாம் வாங்கிக் கொடுத்தார்.'

சட்டை வாங்கிக் கொடுத்ததுக்கு என்ன கொடுத்தாய்!

இப்படி எண்ணுவது தப்பு என்றும் ஓர் ஓரத்தில் ஏதோ உறுத்தியது. சிகரெட் பாக்கெட் காலி. கடை திறந்திருக்குமா தெரியாது. மெல்ல கடை நோக்கி நடந்தான். ப்ராஜெக்ட் ஆபீஸர் வீடு பெரிசாக விழித்துக் கொண்டிருந்தது. தெளிவாகச் சிரிப்பு கேட்டது. அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் சிரிப்பு. அமெரிக்க சங்கீதம் கேட்டது. ஈர்க்கப்பட்டவன் போல அந்தத் திசை நோக்கி நடந்தான். எதற்காக மறுபடி அங்கே போகிறான் என்று தெரியவில்லை. பைத்தியக்காரத்தனம்!

மதுமிதாவைத் தூரத்திலிருந்து பார்க்க விரும்பினான். ஒருவேளை தோட்டத்தில் உலவலாம். அவளிடம் பேச வாய்ப்புக் கிடைக்குமா? எது தன்னைச் செலுத்துகிறது என்பது புரியவில்லை. ஒரு மணிநேரத்துக்கு முன் இந்த வீட்டில் காலடி வைக்கக்கூடாது என்று சபதம் போட்டுச் சென்றவன், இப்போது குழைந்து கொண்டு அங்கே ஓடுகிறான். அம்புலிமாமா கதை போல இது இருந்து விட்டால்? திடீர் என்று மதுமிதா 'ரகு, எல்லாம் விளையாட்டுக்கு! உன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். இந்த அமெரிக்க ராட்சகன் உபத்திரவம் என்னை விட்டு ஒழிந்து விட்டது. நீதான் என் கணவன். இந்தா மாலை! ரொம்ப காதல் வசப்பட்டு விட்டாய். இனியும் உன்னைச் சோதிக்க விருப்பமில்லை... விருப்பமில்லை......'

வேலிக்கு அருகே நின்றான். கோபிநாத், அந்த ராதா, மது, அவள் அம்மா, சுதா எல்லாரும் சிரித்துக்கொண்டு தோட்டத்தில் எல்லாவற்றையும் விரித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பான வகைகள் நிறைய இறைந்திருக்க ராதா, "கோபி, நீ எப்ப ஸ்டேட்ஸ் வர? அம்மா, நீங்க எப்ப ஸ்டேட்ஸ் வரிங்க?" என்று விசாரித்துக் கொண்டிருந்தான்.

ஏன் சேவகனை விட்டு விட்டாய்?

"ரொம்ப டிரபிள் கொடுத்தானா கோபி?"

"சேச்சே! பையன் ரொம்ப சாது. முதல்ல கொஞ்சம் ஏமாற்றம், சத்தம் போட்டான். கூலா கேட்டுக்கிட்டே இருந்தேன். ஐ வாஸ் ஏபிள் டு கன்வின்ஸ் ஹிம்."

“அழுதானாமே! சிவன் பிள்ளை சொன்னாரு”

“அது முதல்ல ஏமாற்றத்தினால் ஹி வாஸ் ஆல்ரைட்!”

“உண்மையான காரணத்தைச் சொல்லிட்டிங்கல்ல?” என்றாள் அம்மா.

“சொல்ல வேண்டிதாயிடுச்சு!”

“என்ன காரணம்?” என்றாள் மது.

“அதெல்லாம் உனக்கு எதுக்கு?”

“பா... வம்ப்பா ரகு!”

“என்னடி பாவம்?”

“நீதானம்மா ஆரம்பிச்சே?”

“மிட்டி! ‘டிட் யு’வ் ஸெக்ஸ் வித் தட் கய்?”

“நோ யார்”

“பிட்டர் ஸ்மூச்சின்!”

“யா!”

“லைக் வி டிட் திங் மார்னிங்?”

“யா!”

“ஸம்மோர் ஸ்காட்ச் கோபி?”

“இனஃப்”

“எபவுட் யூ மாம்?”

“வேண்டாங்க, ரொம்ப சாப்ட்டா சிரிப்பா வருது.”

“பேபி?”

“வேண்டாம்?”

“யாருப்பா அங்கே? சிவன் பிள்ளை, யாரோ நிக்கறாப்பல தெரியுது. யாரு பாரு?”

சுதாகர் டார்ச் அடிக்க, வட்டமாக ஒளி முகத்திலே விழ, ரகுபதி மெல்ல கதவைத் திறந்து அவர்களை நோக்கி நடந்தான்.

21

எல்லாரும் அவனைப் பார்த்தார்கள். கோபிநாத். "வா ரகு, உட் யூ லைக் டு ஜாய்ன் அஸ்?" என்றார்.

ரகு அவர்களை நோக்கி நடந்தான். மதுமிதாவின் அம்மா சற்றுத் திகைப்புடன் "எதுக்கு அவனைக் கூப்பிடறிங்க?" என்றாள். மதுமிதா எழுந்திருந்து அம்மாவின் பக்கத்தில் போய் ஒட்டிக் கொண்டாள். ராதாகிஷன் ஒரு நாற்காலியை அவனுக்குக் காட்டினான்.

"ஸாரிப்பா. உன் மனசைப் புண்படுத்திட்டோம். ஆனா உண்மையைச் சொல்ல வேண்டியது அவசியமாயிட்டுது."

"ஸார். என்னை நீங்க நிராகரிச்சதில தப்பே இல்லை. எந்தக் தகப்பனும் தயங்குவான். எங்கப்பாவைக் கேட்டேன். நீங்க சொன்னது உண்மைதான். அதுக்காக நான் அவமானப்படறேன். நீங்க தீர்மானிச்சது உங்க டாட்டருடைய நன்மைக்குத்தான் என்கிறது இப்ப தெளிவாவே ஆயிடுச்சு."

"உக்காருப்பா. ஏதாவது சாப்பிடறியா?"

"வேண்டாம் ஸார், பழக்கமில்லை."

"பரவாயில்லை. எதுக்கும் ஓர் ஆரம்பம் இருக்கு பாரு. இத பாரு. நான் உங்கிட்ட சொன்னது முழு விவரமும் இவங்க யாருக்கும் தெரியாது. வீணா மனசைப் போட்டு குழப்பிக்காதே. ராட் கிவ் ஹிம் எ ட்ரிங்க்!"

ராதாகிஷன் ஒரு கிளாஸில் சரசரவென்று ஊற்றி ஐஸ் கட்டிகளைப் போட்டு சோடா கலந்து அவன் முன் வைத்தான். மதுமிதா அவனை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"எதுக்குப் பயப்படறே மது? நான் உன்னை ஒண்ணும் செய்துர மாட்டேன்!"

"ரகு, என் மேலே கோபமா?"

"இப்ப இல்லை"

"டேக் இட் ரகு.... நல்லா தூக்கம் வரும். ஹாங்க் ஓவர் எதும் இருக்காது. ஸ்காட்ச் பாரு."

"சாப்பிடு ரகு, சும்மா சாப்பிடு, என்ன மாப்பிள்ளை! உங்க பீட்டா மாக்ஸைக் கொண்டு வாங்க ரகுவுக்கு வீடியோ போட்டுக் காட்டலாம். சமாதானமாயிட்டதை ஸெலிப்ரேட் பண்ணலாம்."

முதல்முறையாக மது அருந்தினான். பழக்கம் இல்லாததால் சட்டென்று விழுங்க, 'லொக்' என்று இருமினான். வாய்க்குள் கணப்பு பரவியது. வயிற்றில் அது போகும் பாதையைத் தெளிவாக உணர்ந்தான்.

"மெல்ல சாப்பிடு. அவசரம் இல்லை. என்ன பண்றதா உத்தேசம்?"

"திரும்ப வேலைக்குப் போய் சேர்ந்துரப் போறேன்."

“ஹானஸ்ட்லி தேர் இஸ் நத்திங் ராங் வித் யுர் ஃபாதர்... தெரியுமோ?”

“எங்கப்பாவைப் பத்தி தயவுசெய்து பேசாதிங்க. அவராலதான் இந்த வாய்ப்பை இழந்தேன். இனிமே நான் தனியாளு. ரொம்ப தனி... இன்னும் கொஞ்சம் ஊத்தறிங்களா?”

“கொஞ்சம் இரு. மெல்ல சாப்பிடு. மது உள்ளே போய் இன்னும் கொஞ்சம் முந்திரிப் பருப்பு கொண்டு வா.”

இப்போது விஸ்கி அவன் ரத்தத்தில் சேர்ந்து கொள்ள, சிரிக்க வேணும் போல இருந்தது. நிறையப் பேசவேணும் போல இருந்தது. உடல் பூராவும் தன்னிரக்கம் சுரந்தது. “நீங்க என்ன செய்விங்க? என்னதான் செய்வீங்க?”என்று கோபிநாத்தை திரும்பத் திரும்பக் கேட்டுவிட்டு “மிஸ்டர் அமெரிக்கா! யூ ஆர் லக்கி. மது மாதிரி பொண்ணு கிடைக்க மாட்டா. மே தி பெட்டர் மேன் வின்!”

“தி பெட்டர் மேன் ஹாஸ் ஒன் சியர்ஸ்!”

“ராட், அதிகம் கொடுக்காதே. முதல் தடவையா குடிக்கிறான்.”

“முதல் தடவைக்கு நல்லா தாங்குது. கமான் ரகு, ஃபினிஷ் இட்.”

“ஷார், கோபிநாத் ஷார்.... உங்க டாட்டழ் எனக்குக் கிடைக்கலை. பழவாயில்லை. இன்னொரு டாட்டழ் பெத்துக்கிட்டு அது பெருசாகற வரைக்கும் ஐ‘ல் வெயிட்! ஐல் வெயிட்! ப்ராமிஸ்?”

“ஓ எஸ்! ப்ராமிஸ்! இன்னொரு டாட்டர் பொறந்தா அது நம்ம ரகுவுக்குத்தான்! உத்தரவாதம்! என்ன டார்லிங்? எப்படி ஐடியா?”

“அவர் வீட்டுக்குப் போகட்டுங்க. ரொம்ப நேரமாயிடுச்சில்ல?”

“வீடு எதும்மா எனக்கு? இனிமே வீடு மைலாப்பூர்ல ஒரு சின்ன ரூம்தான்! அம்மா சின்ன வயஷிலருந்து கிடையாது. அப்பா இன்னைலேருந்து கிடையாது. நோ மதர்...நோ ஃபாதர்! எப்படி அமெரிக்கா?”

“எக்ஸலண்ட்! ஹேவ் ஒன் மோர்!”

“ஒய் நாட்?”

“ராதா! போதும் விடுங்க.”

“ஷ்ஷ்ஷ்ட் அப்! நீங்க பண்ணது தப்பு, உங்க பொண்ணைப் பழகவிட்டது தப்பு. நான் ஒரு ஜெண்டில்மன், நான் யாரு? ஜெண்டில்மன்! அதனால தகராா் பண்ணலை! இல்லை, உங்களை எல்லாம்... உங்களை எல்லாம்... நான் ஷொல்றது ஷரிதானே அமெரிக்கா!”

“ஸெண்ட் பர்ஸண்ட் பார்ட்னர்”

“அமெரிக்காவிலே எத்தனை பொம்பளையைப் பார்த்திருக்கே?”

“ஓ! ப்ளெண்ட்டி!”

“நான் மதுமிதா ஒருத்தியைத்தான்! ஏய், நான் உன் ஒய்ஃபைத் தொட்டிருக்கேன். கிஸ்கூட பண்ணிருக்கேன் தெரியுமோ!”

“வெரிகுட்...சியர்ஸ்”

“லெட்டர் எழுதியிருக்கா என்ன லெட்டர்? எல்லாம் நெட்ரு! ‘டியர் ரகு, நான் எழுதிய லெட்டர் கிடைச்சதா ஏன் பதில் போடலை. இன்னிக்கு சுதா மரத்திலே இருந்த விழுந்தான்–கால் உடையலை – நாளைக்கு வீட்டுக்கு கெஸ்ட் வராங்க– நீ என் ரிப்ளை போடலை–டு–பாட்–அதுக்காகா நீ வந்த உடனே மூக்கிலே ஒரு தடவை குத்தப் போறேன் சப்பக்–மெட்ரா**ஸு**க்கு ஓடி வந்துரட்டுமா? என்ன மது! நீதானே இதெல்லாம் எழுதின? சொல்லு மது, நீதானே?”

மது ‘ஆம்’ என்று தலையாட்டினாள்.

தள்ளாடி எழுந்தான். அவளருகில் செல்ல விரும்பி குறுக்கே இருக்கும் ஸ்டூலை எல்லாம் கவனிக்காமல் அவளை நோக்கி நடந்து,“சப்பக்! குத்து மது! மூக்கில் குத்து மது! மூக்கில் குத்து மது! நீ குத்தித்தான் ஆகணும். லெட்டர்ல எழுதிட்ட, வா மது! வந்தரு! எனக்கு ரத்தம் வரக் குத்து!”

அவளை அடைய முடியாமல் கவிழ இருந்தவனை ராதாகிஷனும் கோபிநாத்தும் பிடித்துக் கொண்டார்கள். “

“இதபார் ரகு ஜாஸ்தி சாப்பிட்டாச்சு.... ஜஸ்ட் ரிலாக்ஸ்!”

“எனக்கு இன்னும் மது வேணும்! மதுவுக்கு பதிலா மது! ஹஹ்ஹா!”

பழக்கமில்லாத திரவம் குபுக்கென்று தொண்டைக்கு வந்து விட, சமாளிக்க முடியாமல் வாந்தியெடுத்தான். அவனைத் தனியாகப் பிரித்து அழைத்துச் சென்று வேலியோரம் அவனுள் இருப்பதையெல்லாம் கொட்ட அவகாசம் அளிக்கப்பட்டது.

“சிவன் பிள்ளை! இவரை ஜீப்பிலே கொண்டு வீட்டிலே விட்டுட்டு வந்துரு!”

“எனக்கு வீட்டுக்குப் போக வேண்டாம். நான் உங்ககூட இருக்கேன். மதுவுக்கு தங்கை பிறக்கிற வரைக்கும் இங்க இருக்கேன்.”

“சிவன்பிள்ளை அழைச்சிக்கிட்டுப் போய்யா.”

“வாங்க தம்பி”

எதிர்த்த திராணியில்லை! எப்போது என்ன ஆயிற்று? மயக்கமாக விழுந்தானா?

எதோ ஜீப்பில் போனதும் கதவு தட்டினதும் அப்பா மௌனமாகக் கதவு திறந்ததும். “நான் பார்த்துக்கறேன் நீங்க போங்க என்ற குரலும்” அவன் பாண்ட் கழற்றப்பட்டதும் அவனைப் புரட்டி வேட்டி கட்டப்பட்டதும் தலையணை அமைக்கப்பட்டதும், படுத்து விளக்கை அணைத்ததும் கட்டில் சரிந்து சரிந்து சரிய பயந்து போய் சட்டென்று விழித்துக் கொண்டதும், தன் அபத்தமான நடத்தை நினைவுக்கு வந்ததும் மௌனமாக அழுததும் தூங்கிப் போனதும் –

“ரகு! ரகு!”

கண் விழித்தான். தலை பூரா கனமாக இருந்தது. அப்பா கையில் காபியுடன் நின்று கொண்டிருந்தார்.

"ஸ்ட்ராங்கா காபி கொண்டு வந்திருக்கேன், சாப்பிடு சரியாப் போயிரும்."

மௌனமாக வாங்கிக் கொண்டான்.

"என்ன சாப்டே? விஸ்கியா?"

பதில் சொல்லவில்லை.

"பழக்கமில்லாத நிறைய குடிச்சிருக்கே போல இருக்கு. சிவன் பிள்ளை சொன்னான். வாயிலெடுத்தியாமே? பேச மாட்டியா?

"....................."

"என் மேல கோபமா? நான்தான் உன் கல்யாணம் நின்னு போனதுக்குக் காரணமா?"

"ஜெயந்தி வந்தாச்சா?" என்றான். அப்பாவின் முகம் சிறுத்தது.

"உனக்கு எப்ப விருப்பமோ சொல்லு. ஜெயந்தியை பத்தி சொல்றேன்"

"பஸ் எப்ப?"

"எங்க போக?"

"மெட்ராஸ் திரும்பிப் போக."

"கேட்டுட்டுப் போ."

"எனக்கு ஒண்ணும் கேட்க வேண்டாம், எனக்குக் கேட்க உரிமை இல்லை. அது உங்க சொந்த விஷயம்."

"எதுவா இருந்தாலும் கேட்டுட்டுப் போ."

ரகு மறுபடி அந்தப் பக்கம் திரும்பி படுத்துக் கொண்டான். கொஞ்ச நேர மௌனத்திற்குப் பிறகு அப்பாவின் பெருமூச்சுக் கேட்டது. "நான் ஆபீஸ் போறேன். மத்தியானம் ஒரு மணிக்கு வருவேன்." கதவு சாத்தப்படும் சப்தமும் வாசலில் செருப்பை மாட்டிக்கொண்ட பின் அவர் சற்றுநேரம் தயங்கி பின்பு கதவைச் சாத்துவதும் கேட்டது.

கண்களை திறந்து சற்று நேரம் விட்டத்தைப் பார்த்தான். அப்பா பழைய செய்தித்தாள்களை ஒழுங்காக அடுக்கியிருந்தார். ரகுவின் சின்ன வயசு போட்டோ அலமாரியில் தெரிந்தது. கடிகாரம் சாவி கொடுத்த உற்சாகத்தில் டாண் டாண் என்றது. தன் முந்தினநாள் நடத்தையை எண்ணிப் பார்த்தான். அவமானமாக இருந்தது. அவர்கள் எல்லாரும் சிரித்திருப்பார்கள். இன்னும் சிரித்துக் கொண்டுதான் இருப்பார்கள். அப்பா கூட ஆபிஸ் போகிற வழியில் சிரித்துக் கொண்டு போயிருப்பார். பாபநாசமே என்னைப் பார்த்து நான் கடந்ததும் சிரித்துக் கொள்ளும். "இதோ போகிறான் பார் ரகு. எல்லாவற்றையும் கோட்டை விட்டவன். அவர்கள் வீட்டிற்கே

போய்க் குடித்துவிட்டு அமர்க்களம் பண்ணிவிட்டு வந்தவன். இவன் என்ன வேலை செய்து, உத்தியோகம் பார்த்து வாழ்க்கையில எதைச் சாதிக்கப் போகிறான்? அப்பன் வேற எதையோ ஜென்மத்தை வீட்டில் வைத்துக் கொண்டு கூத்தடிக்கிறான். சே! கேட்கவே நன்றாக இல்லை. இவனுக்குப் பெரிய இடத்து சம்பந்த ஆசை வேறே! இவன் எதற்கு லாய்க்கு? அவ்வப்போது அழுதான்!

டெலிபோன் ரொம்ப நேரம் அடித்தபின் அதை எடுத்தான்.

“ரகு!”

“யாரு?”

“நான்தான் மது பேசறேன்.”

“என்ன மது”

“ரகு நான் உன் கூடப் பேசணும். தனியா இருக்கியா? நான் அங்க வரட்டுமா?”

“என்ன வேணும் மது?”

“அங்கேயே இரு நான் வர்றேன்!”

எதற்கு இங்கு வருகிறாள்? மன்னிப்புக் கேட்கவா? இல்லை இல்லை இந்தக் கல்யாணத்தில் எனக்கு இஷ்டமில்லை. உன்னுடன் ஓடி வந்து விடுகிறேன். இருவரும் சொல்லாமல் கொள்ளாமல்.... சட்டென்று அவன் களைப்பு அத்தனையும் விலகிப்போய் ஒரே ஓட்டமாக ஸிங்க்குக்குப் போய் முகம் கழுவிக்கொண்டு சட்டை மாற்றிக் கொள்வதற்குள் வாசலில் சைக்கிள் மணி கேட்டது. கதவைத் திறந்தால் “ஹாய்!” என்றாள்.

அவளும் இப்போதுதான் எழுந்திருக்கிறாள் போலும்! கண்களில் தூக்கம் இருந்தது. அதனாலேயே அவள் முகத்திற்கு ஒரு நேர்த்தி கிடைத்திருந்தது. அவசரமாகக் தலையைப் பின்பக்கமாகச் சேர்த்து ரப்பர் வளையத்தால் சிறைப்படுத்தியிருந்தாள். சட்டையை பாண்ட்டுக்குள் செருகாமல் விட்டிருந்தாள். சைக்கிளில் வேகமாக வந்ததினால் மூச்சு இரைத்துக் கொண்டிருந்தது. எதோ திருநெல்வேலி சந்திப்பில் பார்த்த மதுமிதாவிலிருந்து மாறிவிட்டவள் போலத் தோன்றினாள். அருகேதான் நின்றாலும் தனக்கும் அவளுக்கும் தூரம் அதிகமாகிவிட்டது போலத் தோன்றியது.

“உள்ள வரட்டுமா ரகு?”

“வா மது”

“உள்ள வந்து இங்க உக்காரட்டுமா? ஃபோனைப் போடேன். வியர்க்குது!”

மின் விசிறிக் காற்றில் சட்டையைத் தொளதொளத்துக் கொண்டு ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

ரகு “சொல்லு” என்றான்.

“என்மேல கோபமா?”

“முதல்ல கோபம். இப்ப வருத்தம்தான் மது”

“உக்காரேன்.”

“பரவாயில்லை சொல்லு. எதுக்கு இங்க வந்தே?”

“வீட்டில் வேற யாரும் இருக்காங்களா? அப்பா இருக்காங்களா?”

“இல்லை, தனியாத்தான் இருக்கேன். சொல்லு.”

“எனக்குப் புரியவே இல்லை, உன்னை நெனைச்சா பாவமா இருக்குது. நான் ராதாகிஷனைக் கல்யாணம் பண்ணிக்கிறது சரியா? சொல்லு ரகு.”

“அதை நீதானே தீர்மானிக்கனும்?”

“நான் சொன்னேன் இல்லையா – ஐம் கன்ஃப்யூஸ்ட்ன்னு. அப்பா, அம்மா ரெண்டு பேரும் ராதாவைத்தான் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றாங்க. அமெரிக்காவில ஹாப்பியா இருக்கலாம், அப்படி இப்படின்னு–அமெரிக்காவில ஹாப்பியா இருக்குமா, சொல்லு ரகு. எனக்கு அமெரிக்க பார்க்கணும் போலத்தான் இருக்குது. “ரகு! எதுக்காக அப்பா உன்னை வேண்டாம்னுட்டாரு? அதுக்கு காரணம் என்ன சொல்லு?”

“ராதாகிஷன் உனக்கு பெட்டர்னு தீர்மானிச்சிருக்கார்.”

“இல்லை ரகு வேற ஏதோ காரணம் இருக்குன்னு அப்பா சொன்னார். என்னன்னு கேட்டா சொல்லமாட்டார். என்ன காரணம் ரகு? எனக்கு உன்னைப் பார்த்த பாவமா இருக்குது. நீ நேத்திக்கு அழுதியாமே? ஏன் அழுதே? நான் கிடைக்கலைன்னா? ஹௌ ஸ்வீட்! ரகு, எனக்கு புரியலை. கல்யாணம்னா என்ன? புரியலை. செக்ஸ் பத்தி நிறைய நாவல்களைப் படிச்சாச்சு. ஆனா இன்னும் அது என்னன்னு சரியா தெரியாது. ராதா எல்லாம் சொல்லித் தரேன்னு சொன்னான். வீடியோவில காட்டினான். எனக்குப் பிடிக்கலை. நாஸியேட்டிங் லவ்னாலும் என்னன்னு சரியாகத் தெரியாது. உனக்கு லெட்டர் எல்லாம் அம்மாதான் எழுதச் சொன்னாங்க. உங்கூட பழகும்படி அம்மாதான் சொன்னாங்க. உன்னைத் தொட்டது, கிஸ் பண்ணது எல்லாம் தப்பா இருக்கலாம். எனக்கு அது தப்பா தெரியலை. பூனைக்குட்டியை கிஸ் பண்றதில்லையா? எனக்கு எல்லாமே கன்ஃப்யூஸ்டாத்தான் இருக்குது. அமெரிக்கா பார்க்கணும் போல இருக்கு. ஆனா பத்தொன்பது வயசில கல்யாணம் செய்துக்கறது கொஞ்சம் எர்ளி இல்லை?”

ரகு அவளை நேராகப் பார்த்தான். அவள் கேட்கும் ஒவ்வொரு கேள்வியிலும் பாசாங்கு இல்லாத ஆர்வம் மட்டுமே இருந்தது. “யூ ஆர் என் ஓவர் க்ரோன் சைல்ட்! மது, ஒண்ணு செய்யறியா?”

“என்ன சொல்லு.”

“உனக்கு யாரைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டம்?

அவனையா, என்னையா?”

“சரியா தெரியலையே ரகு!” தவிப்பு அவள் முகத்தில் பிரதிபலித்தது.

“அமெரிக்காவில் போய் ரொம்பக் கஷ்டப்படுவே.”

“இண்டியன்ஸ் எல்லாம் நிறைய இருக்காங்களாமே? டமில் மூவிஸ் எல்லாம் காஸட்ல இருக்குமாம். கோயில் இருக்காம், மொட்டை கூட இருக்காம்” என்று சிரித்தான்.

“மது அந்த வாழ்க்கை உனக்கு ஏற்றதில்லை. நான் சொல்றபடி செய்யறியா?”

“என்ன ரகு?”

“என் கூட யாருக்கும் சொல்லாம மெட்ராஸ் வந்துருவியா?”

“யார்கிட்டயும் சொல்லாம?”

“ஆமா.”

“மெட்ராஸ்?”

“ஆமா இப்பவே கிளம்பிடலாம் அங்க போய் நானும் நீயும் கல்யாண பண்ணிக்கிடலாம்.”

“பயமா இருக்கு. போலீஸ் பிடிச்சுப்பாங்களா?”

இல்லை. நாம சட்டப்படி கல்யாணம் செய்துக்கிட்டா போலீஸ் ஒருத்தரும் ஒண்ணும் செய்ய முடியாது.”

“ஓடிப் போறதுன்னா எப்படி?”

“நான் போய் ஒரு டாக்ஸி பிடிச்சுக்கிட்டு வரேன். சாயங்காலம் பஸ் ஸ்டாண்டாண்ட வரேன். ஏறிக்கறே... வி டேக் ஆஃப்!”

“மெட்ராஸ் போயி”

“அப்புறம் கொடைக்கானல், ஊட்டி, பங்களூர், எங்க வேணமா...! நீ எங்க சொல்றியோ அங்க.”

“அமெரிக்காகூடப் போகலாமா?”

“பணம் சேர்த்து வெச்சுக்கிட்டு போகலாம்.”

“ராதாகிஷன் வேண்டாம் இல்லை?”

“சே! உனக்கும் அவனுக்கும் என்ன!”

“அம்மா சொன்னாங்க... உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா தினம் பால் புட்டி, கூப்பன் மண்ணெண்ணெய் எல்லாம் சொன்னாங்களே!”

“உன்னை அசங்க விடமாட்டேன் மது. எல்லாம் நான் பாத்துக்கறேன். இத பாரு மது, உனக்கு ஏற்ற ஆள் நான்தான், நான்தான்! என்கூட ஓடி வந்துரு. ஒருத்தருக்கும் சொல்லாதே!”

சற்று நேரம் யோசித்தாள்.

“என்னைக் கல்யாணம் பண்ணிக்கலைன்னா நீ செத்துப் போயிடுவேதானே?

“நிச்சயம்!”

மறுபடி யோசித்தாள். “சரி, எத்தனை மணிக்கு வரணும்?”

“நான் கீழ போய் ஒரு டாக்ஸி பிடிச்சுக்கிட்டு வர்றேன். நீ நேரா பன்னிரண்டு மணிக்குள்ள பஸ் ஸ்டாண்ட் பக்கம் வந்து நின்னுக்க. யார்கிட்டயும் சொல்லாத. துணி கிணி ஒண்ணும் எடுத்துக்காதே.”

“சரி வர்றேன்” என்று சைக்களில் ஏறிச் சென்றாள். அவள் போன திக்கைச் சற்று நேரம் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். என்ன பெண் இவள்?

சட்டென்று கதவைப் பூட்டி பக்கத்து வீட்டில் சாவி கொடுத்துவிட்டு வெளியே ஓடினான்.

## 22

புது வெள்ளம் போல உற்சாகத்தில் பஸ் பிடித்து, விக்கிரமசிங்கபுரம் சென்று, அங்கே டாக்கீஸ் அருகில் நின்று கொண்டிருந்தவரிடம் விசாரித்து, அவர் மில்லுக்குப் போகும் வழியில் ஒருத்தர் டூரிஸ்ட் டாக்ஸி வந்திருப்பதாகவும் கிலோ மீட்டருக்கு ஒரு ரூபாய் அறுபது பைசா ஆகும் என்றும் சொல்ல, தன்னிடம் இருந்த பணத்தையெல்லாம் முன்பணமாகக் கொடுத்துவிட்டு, டிரைவரைத் தேடிப்போய் அவருக்காக ஒரு சலூன் வாசலில் காத்திருந்துவிட்டு, மிலிட்டரி ஓட்டலில் அவர் சாப்பிடும்வரை காத்திருந்து, காரில் பரபரப்புடன் ஏறிக்கொண்டு “ஒரு நிமிஷம் இருங்க தம்பி. ஒரு டயரு வீக்கா இருக்குது. நீங்க எதுவரைக்கும் போகணும்!”

“திருநெல்வேலி அங்க ரயில் கிடைக்கலைன்னா மதுரை ஏன், மெட்ராஸ்கூட”.

“அப்ப கொஞ்சம் ஸ்டெப்னியை மாத்திக்கிட்டு வந்துர்றேன். ரொம்ப மொட்டையா இருக்குது.”

பதறினான், தவித்தான், நகத்தைக் கடித்தான். மத்தியானத்துக்குள் மலைக்குப் போய்விட வேண்டும். மதுமிதா காத்திருப்பாள். ஏன் இந்த யோசனை எனக்கு முன்னமே தோன்றவில்லை? அவள் உள்ளூர என்னை விரும்பித்தான் இருக்கிறாள். நான் கூப்பிடத்ததன் காத்திருந்திருக்கிறாள். அப்பாக்கள் எக்கேடு கெட்டுப்போகட்டும். அமெரிக்கர்களை வரவேற்கட்டும். பொருந்தாமல் கல்யாணங்கள் செய்து கொள்ளட்டும். இது மகன்களின் -- மகள்களின் யுகம். அவர்கள் தீர்மானம் வேறே. அவர்கள் பறந்து செல்ப் போகிறார்கள்!

ஒரு வழியாகக் காரைக் கிளப்பி புறப்படுவதற்கு ஒரு மணியாவிட்டது. அம்பாஸ்டர்தான்–வெளியே பார்க்கும்போது புதுசாக இருந்தது. பிரயாணம் செய்யும் போது அதன்பல பாகங்கள் நடுங்கின.

“சீக்கிரம் போங்க! சீக்கிரம் போங்க!”

“புதுசா ரீபோர் ஆன இன்ஜினுங்க. ரன்னிங் இன்ல இருக்கிறதால கொஞ்சம் நிதானமா போறேன். அதும் மலை பாருங்க. அங்க வெச்சு எதாவது ஆக்ஸிடெண்ட் ஆயிருச்சுன்னா? அங்க போய் யாரையாவது அழைச்சுக்கிட்டுப் போவணுங்களா?”

“ஆமாம். என் மனைவியை!”

மறுபடி பாவநாசத்துக்கு வந்து தூரத்திலிருந்து பார்த்தபோது மதுமிதா நின்று கொண்டிருப்பது தெரிந்தது. உடல் பூராவும் இன்பம் பொங்க கிட்டே சென்று “மது!”

என்று கூப்பிட்டபோது அவள் திரும்பவில்லை. மது இல்லை அது. பள்ளிக்கூட டீச்சர் மகள். இவனைப் பார்த்துத் திகைத்தாள். மது இன்னும் வரவில்லையா? இல்லை, வந்து காத்திருந்து விட்டு வீடு திரும்பியிருப்பாள். சே! சமயத்தில் வந்திருக்க வேண்டும். இப்போது அவள் வீட்டுக்குப் போகலாம். எப்படியாவது அவளைச் சந்தித்து அழைத்து வந்துவிடலாம்.

வீட்டுக்குப் போனபோது அங்கே நடமாட்டம் அதிகமாக இருந்தது. கிரேட் நிறைய டெம்போவில் குளிர்பானங்கள் வந்து இறங்கின. பந்தல் போடுவதற்கு மூங்கில்களை நிமர்த்திக் கொண்டிருந்தார்கள். வெள்ளுடைக்காரர்கள் நாற்காலியை வரிசைப்படுத்திக் கொண்டிருக்க மரக்கிளைகளில் மின் விளக்குச் சரங்களை அமைத்துப் பகலிலேயே பரிசோதனை பண்ணிக் கொண்டிருந்தார்கள். சுதா ஓடிக் கொண்டிருந்தான்.

“சுதா சுதா! கொஞ்சம் இங்க வாயேன்.”

சுதா தன் கையிலிருந்து அமெரிக்க விளையாட்டுப் பொம்மையைத் திருகிக் கொண்டே வந்தான்! “எஸ் அங்கிள்?”

“மது எங்கே?”

“உள்ள இருக்கா...”

“கொஞ்சம் கூப்பிடேன் அவகிட்ட மட்டும் சொல்லு ரகு....” சுதா முழுவதும் கேட்காமலே உள்ளே ஓடிப் போனான். மூங்கில் கம்பங்களில் குழல் விளக்குகளை அமைத்து ஸ்டார்ட்டரைத் திருகி டெஸ்ட் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

“முந்நூறு சேர் போட்டுருய்யா அரை வட்டமா இருக்கட்டும்!”

“ஹலோ செக் ஹலோ செக்!”

“கத்தைக் கெட்டியாப் புடியேன் சவமே!”

“பீஸ் செரியா போட்டிருக்கியா!”

டாக்ஸிக்காரன் அங்கிருந்து ‘பாம் பாம்’ என்றான்.

‘இரு இரு’ என்று சைகை செய்தான். மது வந்தாள். மெல்ல தூரத்திலிருந்து அவனைப் பார்த்துக் கொண்டு வந்தாள்.

“மது! பஸ் ஸ்டாண்டுக்கு வந்திருந்தியா? ஸாரி மது! லேட்டாயிருச்சு... கார் கொண்டு வந்திருக்கேன். மது.... அதோ பார், காத்துக்கிட்டு இருக்குது. வா மது... கிளம்பு கிளம்பு!”

“எங்க போகணும்,”

“அதான் சொன்னேனே காலைல. நாம இரண்டு பேரும் எங்க வேணா போகலாம். கிளம்பு மது. யாரும் பார்க்கறதுக்குள்ள சீக்கிரம் கிளம்பு.”

“ரகு, நான் வரலை!”

"என்ன மது, காலைல வர்றதா சொன்னியே! கார் எல்லாம் கொண்டு வந்துட்டன். இனிமே யோசிக்காதே. யோசிச்சா உன்னால தீர்மானிக்க முடியாது. ஆனா உனக்கு நல்லது இதுதான். வா, மது! அவங்க யாரும் பார்க்கறதுக்குள்ள போயிரலாம். கார் இருக்கு... சுதந்தரம் நம்மை அழைக்கிறது. வா மது!"

"ரகு! அப்பா என்னிட்ட சொல்லிட்டாங்க. எதுக்காக உனக்கும் கல்யாணம் வேண்டாம்னு காரணத்தை என்கிட்ட சொல்லிட்டாங்க! உங்கப்பா அந்த ஜெயந்தியை என்னவோ செய்துட்டாராம். அதுமாதிரி என்னையும் செய்துருவாராம். அதுக்காகத்தான் கல்யாணம் வேண்டாம்னு சொல்லிட்டாராம். ரகு, எனக்கு அதைக் கேட்டதும் இஷ்டமில்லாம போயிருச்சு. அதனாலதான் பஸ் ஸ்டாண்டுக்கு வரலை!"

"இதை எதுக்காக உங்கிட்ட சொன்னாங்க..? ஓ மைகாட்! பிசாசு மாதிரி இந்த அப்பா விவகாரம் என்னைத் துரத்துதே!"

"நான் உங்கூட வரத் தயாராத்தான் இருந்தேன் ரகு. அம்மா எங்கே போயிருந்தேன்னு கேட்டாங்க. கேள்வி மேலே கேள்வியா கேட்டப்ப நடந்ததைச் சொல்லிவிட்டேன். 'அவன் பின்னாலே போறேங்கறியேடி... அவங்க அப்பா எப்படிப்பட்ட மனுஷர் தெரியுமா?'ன்னு கேட்டாங்க. 'நீங்க செஞ்சது நல்லாயில்லை. ரகுவைப் பார்த்தா பாவமா இருக்குது'ன்னுட்டேன். அப்பதான் 'உண்மையான காரணத்தை தெரிஞ்சுக்க'ன்னு சொன்னாங்க. ரகு.... அது நிஜமா?"

"நிஜம்தான் மது" என்றான் லேசான குரலில்.

"ரகு, அப்ப எங்கப்பா எனக்கு நல்லதுதான் செய்திருக்காங்க, இல்லையா ரகு? நான் ராதாவையே கல்யாணம் செய்துக்கறேன் ரகு. என் மேல கோபப்படாத. நான் அமெரிக்கா போனதும் உனக்கு லெட்டர் போடறேன். ரகு, உனக்கு கல்யாணம் நடக்கறப்போ எனக்கு இன்விடேஷன் அனுப்பு. சாயங்காலம் நடக்கறப்போ எனக்கு இன்விடேஷன் அனுப்பு. சாயங்காலம் ஃபங்ஷன் இருக்கு. அப்பா ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் கூப்பிட்டிருக்காரு. நிச்சயதார்த்தம் பண்ணப் போறாங்க. பந்தல்லாம் போடறாங்க பார்த்தியா? விளக்கு வெக்கறாங்க! ராதா எனக்கு பெரிசா டைமண்ட் வெச்ச ஒரு மோதிரமும் நெக்லஸும் வாங்கிட்டு வந்திருக்கான். ரகு, நிச்சயம் நீ பார்ட்டிக்கு வரணும். உனக்காக காத்திட்டிருப்பேன். பார்த்துக்கிட்டே இருப்பேன். நீ வந்தாத்தான் உனக்கு எம்மேல கோபமில்லைன்னு அர்த்தம் என்ன வரதானே?"

"வரேன் மது" என்று புறப்பட்டான்.

"குட்பை ரகு!"

இயந்திரம் போல நடந்தான். "என்ன தம்பி போகலாமா? மனைவி வரலையா?"

"இல்லைங்க. வரவேண்டியவங்க வரலை! நீங்க திரும்பி விக்கிரமசிங்கபுரம் போயிருங்க. மீட்டரைப் பார்த்து ரிட்டர்ன் ட்ரிப்புக்கும் சேர்த்து எத்தனைன்னு சொல்லுங்க."

டிரைவர் கொஞ்சம் முகம் மலர்ந்து, "நல்லவேளை நீங்க பாட்டுக்கு மதுரை, மெட்ராஸ்ன்னு சொல்லிக்கிட்டிருந்தீக. இந்த வண்டி அவ்வளவு தூரம் போவாதுங்க." என்று கொடுத்த அட்வான்சுக்கு மேல் பதினைந்து ரூபாய் பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

"இந்த வண்டி போவாதுங்க"–சாதாரண வாக்கியம்! ரகுபதியின் மனசுக்குள் ஏதோ சடக்கென்று அறுந்துவிட்டது போல உணர்ந்தான். அந்தக் கணத்திலிருந்து அவனுள்

மெல்ல மெல்ல ஒரு பிரமாண்டமான அலை உருவாவாதற்கு ஆரம்ப அறிகுறிகள் புறப்பட்டன! அந்த அலை ஓயப்போவதில்லை. பெரிசாகிப் பெரிசாகி அவனையே சாப்பிடப் போகும் அலை. தன்னிரக்க அலை.

நடந்தான்; எங்கே போவது என்பதைத் தீர்மானிக்கவில்லை. இனி என்ன செய்வது என்பதும் தீர்மானிக்கவில்லை. இனி என்ன செய்வது என்பதும் தெரியவில்லை. மனசுக்குள் ஆயிரம் எண்ணங்கள் முட்டி மோதின. சிரித்துக் கொண்டான்.

“உனக்குக் கல்யாணம்! கெட்ட கேட்டுக்கு உனக்குக் கல்யாணம் வேறா?’ என்று சொல்லிக்கொண்டான். தன்னிரக்கம் உடம்பு பூராவும் பரவியது! ரகுபதி சின்ன வயசிலேயே தாயை இழந்தவன். அப்பாவால் கவனமாக வளர்க்கப்பட்டாலும் இளமையிலிருந்து அடித்தளத்தில் தாயில்லாத ஏக்கத்திலேயே வளர்ந்தவன். அப்பா யாரிடமாவது குழந்தையை விட்டுச் சென்றுவிடும் கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. அப்போதெல்லாம் பசியால் வீறிட்டு அழுததும் கொஞ்சம் தாமதமாக அவன் பசி நிவர்த்திக்கப்பட்டு வயிறு நிரம்பி ஏற்பட்ட திருப்தியும் அழுது அழுது அதன் பின் ஆறுதல் வந்து விளையாட்டுக் காட்டப்பட்டு, சந்தோஷம் ஏற்பட்டு அவன் மனத்தின் ஆழத்தில் சந்தோஷமும் தூக்கமும் ஒருவிதத்தில் இணைந்து விட்டன. ரொம்ப சந்தோஷமாக இருந்தால் ரொம்ப துக்கம் வந்தே ஆக வேண்டும் என்று அவன் உள்மனம் ஒரு விதத்தில் தயாராகி விட்டது. ஏன் பழகிவிட்டது.

அவன் இளவயதில் அடிக்கடி தோன்றிய பசி உணர்ச்சிகள், உணவுத் தேவைகள், மெல்ல மெல்ல அன்பு ஏக்கங்களாக பரிணமிக்க, அதே சமயம் அதிக அன்பைப் பெறும் போது அதன்பின் அதிகமாக நிராகரிப்பும் வந்துதான் ஆக வேண்டும் என்கிற எதிர்பார்ப்பின் பரபரப்பும் சேர்ந்திருந்தது. இதோ மறுபடி அவன் உள்மனத்தில் உருவில்லாத கவலைகள் ஊர்ஜிதம் பெற்றுவிட்டன. தன்னையே காதலித்துக்கொள்ள, தன்னையே வெறுத்துக்கொள்ள! நான் தனிமையானவன் எனக்கு அதிக சந்தோஷம் என்பது அதிக துக்கமே! என்னைக் காதலிக்க, விரும்ப, அன்பு கொடுக்க, என்னைத் தவிர யாரும் இல்லை. அப்பா என்னைப் பெற்றுப் போட்டதற்காகக் கடமையைச் செய்தார். அதற்கு மேல் அவரிடம் எதிர்பார்ப்பது என்னுடைய தப்பு அவர் செய்கையால் என் சந்தோஷம் குலைந்துவிட்டது என்று நினைப்பது கூட என் குற்றமே. என் விதியில் முறைப்படி மாறி மாறி அமைய வேண்டிய துக்கம் சுகம் என்கிற இருநிலை அனுபவத்தில், இது எனக்கு நிகழ வேண்டியது தவிர்க்க முடியாது.

ரகுபதிக்குள் ஓர் அழகான பதுமை இருந்து அது இப்போது முழுவதும் சுக்குநூறாக உடைக்கப்பட்டு விட்டது. அந்தப் பதுமை அழிந்த பின் இனி என்ன இருக்கிறது? மெல்ல மெல்ல நடந்தான்... மலையேறினான். ரெஸ்ட் ஹவுஸை நோக்கி நடந்தான். அங்கிருந்து மதுமிதாவின் வீடு தெரிந்தது. யாரோ ஊதிக்கொண்டு ‘ஹலோ செக்’ சொல்லிக் கொண்டிருந்தார்கள். மெல்ல அந்த மண்டபத்துக்குப் போய் உட்கார்ந்தான். வெகு நேரம் உட்கார்ந்திருந்தான். கன்னத்தில் கைவைத்து ஒரு திசையில் பார்த்துக் கொண்டு யோசித்துக் கொண்டு உட்கார்த்திருந்தான். உள்ளத்தில் குழப்பமான எண்ணங்கள் இருந்தாலும் வெளிப்புறத்தில் மிகவும் சாந்தமாகத்தான் காணப்பட்டான். அவ்வப்போது தனக்குள் சிரித்துக் கொண்டான். மண்தரையில் குச்சி உடைத்துக் கோடுகள் வரைந்தான். வட்டங்கள் ஒழுங்காக ஆரம்பித்து இனம் பெருகி மிகச் சிக்கலான வட்டங்களாகின. எத்தனை நேரம் அப்படி இருந்தான்! மெல்ல மண்டபத்திலிருந்து தாமிரபரணியின் ஆரம்ப உற்சாகம் பொங்கும் அந்தப் பிரதேசத்தை எட்டிப் பார்த்தான். தண்ணீர் வெண்மையான காட்டுக் குதிரை போல. தண்ணீர் துல்லியமானது. உற்சாகமானது. தண்ணீரில் துக்கமில்லை. தண்ணீருக்குக் கவலைகள் இல்லை. தண்ணீரை எல்லாரும் விரும்புவார்கள்.

வானம் கருநீலமாகக் கொண்டிருக்க, முதலில் நட்சத்திரங்கள் தெரிய ப்ராஜெக்ட் ஆபீசர் வீட்டில் இப்போது அத்தனை வண்ண விளக்குகளும் மரத்துக்கு மரம் பூத்து மின்சாரப் பூங்காவாக மாறி, ஒலி பெருக்கியில் பாப் சங்கீதம் கேட்டது.

www.writersujatha.com

மண்டபத்தில் வந்து உட்கார்ந்தான். எனக்கு யாருமில்லை, எனக்கு யாருமில்லை என்கிற ஸ்மரனை மெல்ல மெல்ல அவன் பகுத்தறியும் சக்திகளை நீக்கத் தொடங்கியது. இயந்திரம் போல “யாருமில்லை யாருமில்லை” என்று சொல்லிக் கொண்டான்.

இங்கிருந்து விழுந்தா எப்படி?

சரிதான் வா போகலாம்.

இந்த இடத்தில் யாரோ பெரியவர் விழுந்து செத்துப் போயிட்டார் இல்லை?

ஆமா, எழுதியிருக்கே பார்க்கலை? வ.வே.**ஸு**. அய்யர்.

அவர் யாரு?

நீ தமிழ் படிக்கிறதில்லையா?

படிப்பேனே– மதன் ஜோக்ஸ்.

அப்ப வ.வே.**ஸு**, அய்யரைப் பத்தி தெரிஞ்சிக்க நியாயமில்லை.

அவர் என்ன செஞ்சார் சொல்லேன்.

அவர் இந்த இடத்தில் இருந்து தவறி விழுந்தார்.

ரகுபதி தலையைச் சிலிர்த்துக் கொண்டான். நோ! சட்டென்று எழுந்து அந்த வீட்டை நோக்கி நடந்தான்.

சூட் அணிந்திருந்தார்கள். மதுமிதாவின் ஸாரியில் ஆயிரம் ரூபாய் மின்னியது. அம்மா கூட இளமையாக இருந்தாள். இவர்கள் எல்லாம் பாக்கியசாலிகள். கோபிநாத் கையில் திரவத் தம்பளருடன் விருந்தாளிகளின் ஊடே நடந்து கொண்டு அவ்வப்போது புன்னகை செய்து கொண்டு “தாங்க்யூ தாங்க்யூ! கிளாட் யூ குட் கம் அட் ஸச் ஷார்ட் நோட்டீஸ்!” ராதாகிஷன் அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டிருந்தான். தொட்டி நிறைய ஐஸ் போட்டு கோலா பாட்டில்கள் அடைந்திருந்தன. பீங்கான் பீங்கானாக முந்திரிப் பருப்பும், பாதாம் கேக்கும், தலைப்பாகை அணிந்த சர்வர்கள் ‘டீ ஆர் காபி ஸார்’? என்று விசாரித்துக் கொண்டிருக்க, சற்றே உயர்ந்த ஸ்தலத்தில் கோபி ஒரு நாற்காலி மேல் சட்டென்று ஏறிக்கொண்டு ‘லேடீஸ் அண்ட் ஜெண்டில்மென்! யுர் அட்டென்ஷன் ப்ளீஸ்! லெட் மி இன்ட்ரட்யுஸ் மை டாட்டர் அண்ட் ஸன் இன் லா ஃபர்ஸ்ட்!”

ராதா கையில் கோப்பை தவறாமல் “கம் ஸ்வீட் ஹார்ட்!”என்று மதுமிதாவை அணைத்து அழைத்துக்கொண்டு மையமாக நிற்க, அவர்கள் எல்லாரும் கைதட்ட மதுமிதாவின் கன்னத்தில் ராதா முத்தமிட்டான்.

கிவ் மி எ கிஸ்!

பாவம் செத்துப் போய்ட்டார் இல்லை? ரகு மண்டைல பட்டதும் உடனே உயிர் போயிடுமா? அந்த மாதிரி விழுந்தால்?

“ஜெண்டில்மென்! இதில் அதிர்ஷ்டக்காரன் நான்தான். நானும் அமெரிக்காவில் எத்தனையோ பெண்ணைப் பார்த்துவிட்டேன். ஆனால் இந்த இந்திய தேவதைக்கு ஈடு செய்ய முடியாது.”

"ஹியர் ஹியர்!"

"அவர்கள் உயரமானவர்கள், ஆரோக்கியமானவர்கள் ஆனால் கிட்டே வந்தால் உடல் நாற்றத்தைச் சமாளிக்க ஆயிரம் பர்ஃப்யூம் தேவைப்படுபவர்கள். இந்தப் பெண்...இந்தப் பெண்...இன்னும் எனக்கு நம்பிக்கை இல்லை... நான் காண்பது கனவா? திடீர் என்று விழித்து எழுந்திருக்கப் போகிறேனா!"

ரகுபதி சட்டென்று நடந்து அவர்களுக்கு எதிரே போய் நின்றான். "ஹாய் ரகு! ஜெண்டில்மேன்! லெட் மி இன்ட்ரட்யூஸ் மிஸ்டர் ரகுபதி–எ ஸ்போர்ட்டிவ் லூஸர். கோபிநாத் இவருக்குத்தான் தன் மகளைக் கொடுப்பதாக இருந்தது. நல்லவேளை நான் வந்தேன். இந்தப் பெண்ணின் நல்வாழ்வை எண்ணி எனக்காக விட்டுக் கொடுத்த இந்த உத்தமமான இளைஞனுக்கு நாம் எல்லாரும் சேர்ந்து ஒரு டோஸ்ட்!"

"டு ரகுபதி! எ க்ரேட் ஹார்ட்டட் லூஸர்!"

'கிளிங்' என்று கண்ணாடித் தம்ளர்கள் ஒலித்தன

ரகுபதி மதுமிதாவின் அருகே சென்றான். ராதாகிஷன் அவன் கைகளைப் பிடித்து வலுக்கட்டாயமாகக் குலுக்க, ரகுபதி மதுமிதாவையே பார்த்துக்கொண்டு "குட்பை மது! நான் போறேன்!" என்றான்.

"குட்பை ரகு!"

மறுபடி வ.வே.ஸு அய்யர் மண்டபத்தை நோக்கி நடந்தான். எப்படி இருக்கும்? ஒரு நிமிஷம். ஒரே ஒரு நிமிஷம்தான்! கீழே விழுந்து மோதும்போது. அவ்வளவுதான்! ஊஹூம்! ரகுபதி கீழே விழப் போவதில்லை. பாதி வழியில் அப்படியே கரங்களை அகல விரிக்கப் போகிறான். அந்த இடத்திருந்தே மேல் நோக்கி பறக்கப் போகிறேன் பறந்து கருநீல வாகனத்தில் இன்னும் கொஞ்சம் தெரியும் மேகங்களைச் சந்தித்து, அம்மாவைத் தேடப்போகிறான். 'அம்மா! உன்னை நான் போட்டோவில்தான் பார்த்திருக்கிறேன். உன்னை அப்பா வர்ணித்ததே இல்லை. நீதான் என் அம்மாவா? நீதான் எனக்காக நிஜமாகவே வருத்தப்படும் ஒரே ஒருத்தியா? எனக்கு அங்கே இடமில்லை. என்னை எல்லாரும் நிராகரித்து விட்டார்கள்.'

'வலித்ததா மகனே?'

'இல்லவே இல்லை அம்மா'.

'வா, வலித்திருக்கும். வா! என் மார்பின் மேல் சாய்ந்துகொள். தடவிக் கொடுக்கிறேன் வா! என் மகனே! உன்னைப் பார்க்கத்தான் இத்தனை காலம் மேகத்தின் இடைவெளிகளில் காத்திருந்தேன். வா நாம் இரண்டு பேரும் வெகுதூரம் போய்விடலாம்.'

ரகுபதி மண்டபத்தின் விளிம்புக்கு வந்து நின்றான். அரையிருட்டில் முந்நூறு அடி கீழே வெள்ளி மின்னல் போல் தெரியும் நதியின் சஞ்சலத்தைப் பார்த்தான். குதித்தான்.

## 23

**உ**ண்மைக் காதலர்கள் சொர்க்கத்துக்குத்தான் போவார்கள். ரகுபதி சொர்க்கத்தில்–தான் கண் விழித்ததாக எண்ணிக் கொண்டான். இங்கேயும் ஏமாற்றமாக இருந்தது.

சொர்க்கத்தில் பினாயில் வாசனை அடிக்குதே சுவரில் கரும்பலகையில் ஜனன–மரணக் கணக்கு எழுதியிருக்கிறதே! சொர்க்கத்தில் ஈ உண்டா என்ன? ஜன்னல் வழியாக முகங்கள் எட்டிப் பார்க்குமா? அப்பா இங்கே என்ன செய்கிறார்? தலைமாட்டில் குரல் கேட்கிறதே!

"உனக்குத் தற்கொலையைக் கூட ஒழுங்காப் பண்ணிக்கத் தெரியலை."

தன்னைப் பார்த்துக்கொண்டான். முழங்காலுக்குக் கீழே கட்டுப் போட்டிருந்தது. வலித்தது. "நான் செத்துப் போகலையா?"

"இல்லை. அப்படியே சரித்திரத்திலியோ ஆகாயத்திலியோ சூப்பர்மேன் மாதிரி பறந்துகிட்டே தங்க எழுத்துகள்ல பொறிக்க வேண்டி குதிச்சே. சரியா குதிக்க மாட்டியோ? முப்பதடியில் ஒரு ப்ரொஜக்ஷன் நீட்டிக்கிட்டு இருக்கிற இடமாவா பார்த்துக் குதிப்பாங்க? தற்கொலை பண்ணிக்கிறானாம் தற்கொலை! வெட்கமா இல்லை? முழங்காலக் கூட உடைச்சுக்கலை! சொர்க்கத்துக்குப் போறதுக்குப் பதிலா லோக்கல் ஃபண்டு ஆஸ்பத்தி!" என்று சிரித்தார்.

ரகுபதி உணர்ச்சியில்லாமல் அவரைப் பார்த்தான். அப்பா சிரிப்பைச் சட்டென்று நிறுத்திக் கொண்டார். புருவங்கள் பின்னிக் கொண்டன. "எதுக்கடா ரகு? தற்கொலை பண்ணிக்க வேண்டிய விஷயமா இது?" என்றார் உணர்ச்சியுடன்.

ரகு ஏதும் பேசவில்லை.

"சொல்லு ரகு, சொல்லு! தற்கொலை பண்ணிக்க வேண்டிய சமாசாரமா இது? சொல்லு!"

ரகுபதி மெல்லப் பேசினான்; "எனக்கு அதிர்ஷ்டமில்லை. இருட்டில சரியா குதிக்கலை. இந்த மாதிரி உபதேசங்களைக் கேட்டுக்கிட்டு இருக்கணும்னு விதி!"

"விதி அப்படி இல்லாம நீ உயிர் பிழைச்சு, சாதனைகள் செய்ய வேண்டியது பாக்கியிருக்குன்னு ஏன் நினைச்சுக்கக் கூடாது?"

ரகுபதி அலுப்புடன் தன் காலைப் பார்த்துக் கொண்டான்.

"ஃப்ராக்சர் இல்லை. டிஸ்லொக்கேஷன்தான்" என்றார் அப்பா. "நான்தான் தாமதிச்சுட்டேன். உன் மனநிலையைச் சரியா ஆழம் பார்க்கலை. தற்கொலை வரை போவேன்னு எதிர்பார்க்கவே இல்லை. உன்னை விட்டு விலகியிருக்கவே மாட்டேன். நல்லவேளை. எம் ஆர்ட்டிகாரங்க கவனிச்சு... ரகு காரணம் என்ன? சொல்லு ரகு! மதுமிதாவா, ஜெயந்தியா?"

"இரண்டும்தான்" என்றான்.

"இரண்டும் உயிரைவிடக் காரணங்கறியா?" ஆல்ரைட்! ரெண்டையும் பார்க்கலாம். ஒரு பெண் உன்னை நிராகரிச்சதுக்கா உலகத்திலேயே மதிப்பு வாய்ந்த உனக்காகக் கிடைச்சிருக்கிற ஒரே ரத்னம் போல ஓர் உயிரை இழக்கறதைப் போல பைத்தியக்காரத்தனமான செய்கை இருக்க முடியுமா? யார் இந்த மதுமிதா? ஒரு பெண். ஓர் உடம்பு! எல்லாதையும் ஆதாரமா பார்க்க வேண்டிய வேளை இது. ரகு, நான் சொல்றதை குறுக்கே பேசாம கேளு. மதுமிதா உனக்குக் கிடைக்கலை; கிடைக்காட்டா என்ன? சீ! போ.... சீயும் குருதிச் செழுநீர் வரும்பு செறிந்தெழுந்து பாயும் புடவை ஒன்றில்லாதபோது பகல் இரவாய் ஈயும் எறும்பும் புகுகின்ற யோனிக்குள் இரவு பகல் மாயும் மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே' என்று பட்டினத்தார் மாதிரி கதற வைக்குதப்பா நீ செய்கிற காரியம்! ஃபண்டமெண்டலா பார்த்தா....."

ரகு சிரித்தான்: "அதுக்காகத்தானே நீங்களும் அலையறீங்க?"

"அதுக்கில்லைடா! அதுக்கில்லைடா! இதை உன்கிட்ட சொல்லவிடவே இல்லையே. நான் ஏதோ ஸெக்ஸ் சமாசாரத்துக்காக ஜெயந்தியைக் கட்டிக்கப் போறதா நினைச்சுக்கிட்ட. ஜெயந்தி ஒரு நூலறுந்த பட்டம்.."

"எல்லாம் தெரியும்ப்பா... போரடிக்காதீங்க."

"இத பாரு. நீ கேட்டுத்தான் ஆகணும்! ஜெயந்திகூடக் காதல் கல்யாணம்தான் செய்துகிட்டா. கலப்புத் திருமணம்! புரட்சி! தெய்வீகக் காதல்! அந்தப் பையன் கோயில்ல குடலை நிறைய இவளுக்குப் பூப் பறிச்சுத் தருவானாம். பறிச்சுக்கிட்டே காதல் பேசுவாங்க, ஆத்தங்கரை, மேட்னி சினிமா, ஓட்டல் பக்கோடா பொட்டலம், பௌர்ணமி வெளிச்சத்தில் ஆயிரம் சத்தியங்கள்னு இந்தக் காலத்துக்குத் தகுந்தாப்பல காதல் வளர்ந்து போய், இவ அழகா இருக்கறவரைக்கும் மோகம் தலைக்கேறிப்போய், வீட்டுல எதிர்ப்பையும் மீறிக் கல்யாணம் கட்டிக்கிட்டான். பையன், குடும்பத்துக்கும் அப்பா, அம்மா பேச்சுக்கும் கட்டுப்பட்டு வளர்ந்தவன். இந்தப் பெண்ணோட மோகம் கொடுத்த தைரியத்திலே, எதிர்த்து தனியா வந்துட்டான். சரியா ஆறு மாசம் அவ கூட இருந்திருக்கான்; அவ்வளவுதான், அவமேல மோகம் அடங்கிருச்சு. வீட்டை விட்டு வந்த ஆவேசம் அடங்கிருச்சு. ஃபாமிலி சப்போர்ட் இல்லாதவள். பணக்கஷ்டம் வேற இவ வெச்சிருந்த கொஞ்ச நகையைப் பிடுங்கியாச்சு. கர்ப்பமாக்கியாச்சு, அவகிட்ட இருந்த எல்லா சரக்கும் தீர்ந்து போச்சு. குடும்பத்தில, அவ இல்லாம வந்தா சேத்துக்கறேங்றாங்க. இண்டியாவில்தான் இது நடக்கும். கணவன் மனைவியை வீட்டுல மாசக்கணக்கா விட்டுட்டுப் போயிர்றதும். நிறைமாசக் கர்ப்பிணியை அவங்க திண்ணைலகூடப் படுக்கவிடாம துரத்தறதும்... இது கொஞ்சம் வெகுளிப் பொண்ணு, அசடு. ஊரைக் கூட்டிச் சண்டைபோடத் திராணி இல்லை. அதுக்குப் பதிலா பேப்பர்ல எதிலயோ கேட்டான்னு கையெழுத்துப் போட்டுட்டு வந்திச்சு. என்ன பேப்பரோ தெரியலை....சூட்டைப் போடவோ என்னவோ! சித்தப்பா வீட்டில கொண்டு விட்டிருக்கான். பக்கத்து வூட்டுக்காரங்கூட எல்லாம் சிநேகிதம் வெச்சிருந்தது இந்தப் பொண்ணு: 'குழந்தையே என்னுது இல்லை'ன்னு அபாண்டமா பழி சுமத்தி, கொண்டு தள்ளிட்டுப் போய்ட்டான். அம்மா வயசான கிழம், என்ன பன்றதுன்னு தெரியாம சித்தப்பன் பிரசவம் ஆன கையோட உடனே பாவநாசத்துக்கு அனுப்பிச்சுட்டான். நம்ம டர்பைன் சூப்பர் வைசர் ராமுக்கு வீட்டுக் காரியங்கள் செய்ய சமைச்சுப் போட ஓர் ஆள் கேட்டிருந்தாராம். அனுப்பிச்சுட்டான். ராமுக்கு சமீபத்தில் மோயார் டிரான்ஸ்ஃபர் ஆயிருச்சு, அவங்ககூட இவளால போக முடியலை. எங்கிட்ட ஒப்படைச்சுட்டுப் போயிட்டாரு. நான் இதை ஏத்துக்கிட்டு ஆதரவு கொடுத்தேன். ஆனா ராமுவுக்கும் எனக்கும் வித்தியாசம் உண்டுல்லை? நான் விடோயர். பக்கத்து வீட்டு சாமி மாதிரி ஆசாமிங்க சும்மா இருப்பாங்களா? எதாவது கிளப்பி விடறாங்க – நான் இந்தப் பொண்ணை வெச்சுக்கிட்டு இருக்கிறதா. வீட்டுக்கு தினம் வரா ராத்திரி லேட்டாச்சுன்னா இங்கேயே படுத்துர்றா. வதந்திகளுக்குக் கேக்கணுமா? ஆனா நான் இவளுக்கு ஆதரவு தர கட்டாயமா விரும்பினேன். பார்த்தேன் – இந்தப் பொண்ணை ஒப்பெற்ற ஒரே வழிதான். இது என்கூட இருக்கிறதுக்கு ஒரு விதமான கௌரவம், அந்தஸ்து கொடுக்கறதுக்கு கல்யாணம் ஒன்னைப் பண்ணிப்பிட்டா கொஞ்ச நாளைக்குக் கிழவனுக்குக் காயகல்பம்னு பேசிப்பாங்க. ஸெக்ஸ் பிரதானமில்லை. ஆனா அதையெல்லாம் முற்றும் துறந்த ஞானின்னும் என்னை சொல்லிக்க மாட்டேன். இந்தப் பொண்ணுக்கு யோக்கியமா வாழ்வு கொடுக்க இது ஒண்ணுதான் எனக்கு வழியா பட்டுது. இப்ப சொல்லு நான் தீர்மானிச்சது சரியா, தப்பா சொல்லு? எனக்கு வருத்தம்னா என்னுடைய செயலை சுலபமா நீங்க ரெண்டு பேரும் பயன்படுத்திக்கிட்டிங்க. அவங்களுக்கு உன்னை நிராகரிக்கறதுக்குக் காரணம் தேவையா இருந்தது. என்னுடைய இந்தச் செயல், சரியான நேரத்தில் அகப்பட்டது. சுலபமா கழன்றுக்க வழி. உனக்கு உன்னுடைய ஏமாற்றத்தை தாங்கிக்கறதுக்கு ஒரு காரணம் தேவையாயிருந்தது. நீ ஒரு சாதாரணங்கிற காரணத்துக்காக அவங்க உன்னை நிராகரிச்சாங்க என்கிறதைப் புரிஞ்சுக்க விரும்பலை. ஸப்ஸ்டிட்யூட்



www.writersujatha.com

காரணம் தேவையாயிருந்தது! அதுக்கும் அப்பன் அகப்பட்டேன் அப்பா காரெக்டர் சரியா இல்லை, அதான் மகனை நிராகரிக்சுட்டாங்க!.... ஆல்ரைட்! அவங்க தீர்மானிச்சுட்டாங்க–அந்த ராதாகிஷன் உன்னை விடச் சிறந்தவன்னு. அமெரிக்காவில போய் சம்பாதிக்கிறான். நிறைய சம்பளம். கார் வெச்சிருக்கான். இதெல்லாம் உன்னால முடியாதா ரகு? அமெரிக்கா என்ன பெரிய புடலங்கா! கொஞ்சம் கான்ஸண்ட்ரேட் பண்ணா, முயற்சி செய்தா உன்னால அமெரிக்கா போக முடியாதா– அதும் உன் ஸப்ஜெக்ட்டுக்கு? நான் ஆதரவு தரமாட்டேனா? என்ன பிரமாதம்? இருக்கிற யூனிவர்ஸிட்டிக்கெல்லாம் அப்ளிகேஷன் போடறது. எதிலயாவது ஒண்ணுல அட்மிஷன் கிடைக்குது. அஸிஸ்டண்ட் ஷிப் கிடைச்சா நல்லது. கிடைக்கலைன்னா என்ன, நான் பிராவிடண்ட் ஃபண்டில பாங்க்கில கடன் வாங்கி உன்னை அனுப்பி வைக்க மாட்டேனா? என்ன பெரிய அமெரிக்கா! ரகு. உனக்கு அமெரிக்கா போக நான் ஏற்பாடு செய்து தரேன். போய் நல்லா படிச்சு, நல்லா சம்பாதிச்சு, இந்த கோபிநாத் முன்னாலயே வந்து காட்டு, என்னய்யா அமெரிக்கா! நான் கூடத்தான் அமெரிக்காவில சம்பாதிக்கிறேன்னு காட்டு. இத பார் ரகு, ஜிமாட், ஜி.ஆர்.இ, எல்லாத்துக்கும் புஸ்தகம் வாங்கி வைச்சிருக்கேன். நீயும் அமெரிக்கா போய் ராதாகிஷனுக்கு மேல் சம்பாதிச்சுக் காட்டிடு ரகு. எம்.எஸ். பண்ணு பிஎச்.டி. பண்ணு, எம்.பி.ஏ. பண்ணு, இந்த ஏமாற்றம் உன் வாழ்க்கையில ஒரு திருப்பமா இருக்கட்டும். இது ஒண்ணும் ‘ஸவர் கிரேப்ஸ் தியரி’ இல்லை. வாழ்க்கையில எதையாவது சாதிச்சுட்டு கல்யாணம் பண்ணிக்க. இப்ப அவசரமில்லை, ரகு! காதலை விட மகோன்னதமான விஷயங்கள் எத்தனையோ இருக்குது.

“நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். இதைக் கேட்ட பிற்பாடும் உனக்கு கன்வின்ஸ் ஆகலை. நீ எக்கேடு கெட்டும்போ, ஆனா தற்கொலை பண்ணிக்க நளினமான வழிகள்லாம் இருக்குது. பாறையில விழுந்து சிதறி இல்லை” என்று அவனைக் கையைப் பிடித்து அழுத்திவிட்டுச் சென்றார்.

அவர் போனதும் ஜன்னலின் ஆடும் திரையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்பா விட்டுப் போயிருந்த காகிதங்களை பிரித்தான். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்ப தாள்கள்.

ஆளவரம் கேட்டது. ஜெயந்தி காரியரில் சாப்பாடு கொண்டு வைத்தாள். இவனைப் பார்த்து, “எப்படி இருக்கு, இப்ப தேவலையா அண்ணா?” என்றாள்.

அவள் கழுத்தில் தழும்புகள் அவன் பார்ப்பதை உணர்ந்து தன் கழுத்தைப் பார்த்து, “என்ன பார்க்கிறேள்? சிகரெட் நெருப்புத் தழும்பு ! என்றாள்.

“ஜெயந்தி உன் புருஷன் எங்க இருக்கான்”

“தஞ்சாவூரில் இருக்கார். பிரிஞ்சு போனபுறமும் ரெண்டு மூணு தரவை ஒரே பஸ்ஸில் பார்த்தேன். பக்கத்து ஸீட்டில் இருந்துண்டே பாக்காதது மாதிரி இருந்தார். நான்தான் வேண்டாம். குழந்தையைக்கூடப் பார்க்கக் கூடாதா?” கொஞ்ச நேரம் தயங்கியவள் “அதான் குழந்தையும் தன்னுது இல்லன்னுட்டாரே!”

“ஜெயந்தி அப்பா உன்கிட்ட என்ன கேட்டார்?”

“உங்களுக்கே தெரியுமே! அண்ணா! நான் என்ன சொன்னேன் தெரியுமா ? “எனக்கு எத்தனையோ ஏச்சுப் பேச்சுக் கேட்டு மரத்துப் போச்சு மாமா! ஆனா உங்களுக்கு இதனால பொல்லாப்பு வரக்கூடாது. அதுக்காக நீங்க என்ன சொன்னாலும் கேட்டுக்கறே”ன்னு சொல்லிட்டேன் அவர் மாதிரி ஆள் ஆம்படமாட்டா அண்ணா! நடந்ததைக் கேள்விப்பட்டேன். எவ்வளவு சின்ன விஷயம்! இதுக்காக இப்படி பண்ணலாமா? என்னையே எடுத்துக்கோ. எனக்கு நேராத துக்கமா? நான் படாத பாடா? நடுத்தெருவில தரதரன்னு இழுத்துண்டு போய் இடுப்பு புடவையை உருவித்

துரத்தியடிச்சிருக்கா. ஒவ்வொரு நகைக்கும் சூடு போட்டுண்டாச்சு. இதெல்லாம் முழுங்கிட்டு சமாளிச்சுட்டு குத்துக் கல்லாட்டாம் இருக்கேன். எனக்கு ஒரு முழம் கயத்தில தொங்க எத்தனை தேகாலம் ஆயிருக்கும்? நான் பண்ணிக்கலையே! அது பாவம்! உசிர் நமக்குக் கடவுள் கொடுத்ததில்லையா? நாம பொறக்கறப்போ நம்மைக் கேட்டுண்டா கொடுத்தார்? அதைப்போல வேளைவர போது அவரே எடுத்துக்கிறார். அதுக்குள்ள அதை அகாலமா மாய்ச்சுக்கறது மகா பாவம்! எதுக்காக சாகணும்? அப்படி என்ன ஆயிடுத்து? நமக்கு வேளை வரப்பதான் செத்துப் போகனும். நீங்கள்லாம் படிச்சவா. நான் ஏதோ தத்துப்பித்துன்னு உளர்றதா நினைச்சுக்காதீங்க, கீரை மசிச்சுண்டு வந்திருக்கேன். உங்களுக்குப் பிடிக்குமேன்னு. சாப்பிடுங்கோ அண்ணா!"

"ஜெயந்தி, இனிமே என்னை அண்ணான்னு கூப்பிடாதே ... ரகுன்னே கூப்பிடு..."

"சேச்சே! நீங்க என்னைவிட ஒரு மாசம் பெரியவர்... யாரோ வந்திருக்காப்பல நிழலாடறதே... இருங்கோ பார்த்துட்டு வரேன்" என்று வெளியே சென்றாள்.

வராந்தாவில் பேச்சுக் குரல் கேட்க, ஜெயந்தி கொண்டு வந்த டிபன்காரியரைத் திறந்தான் ரகு. அவள் படபடப்புடன் உள்ளே வந்தாள்.

"அவாள்லாம் வந்திருக்கா" என்றாள்

"யாரு ஜெயந்தி?"

"ப்ராஜெக்ட் ஆபிசர் பொண்ணும் அந்த அமெரிக்கா பையனும். உங்களைப் பார்க்கணுமாம்,"

ரகுபதி சட்டென்று "இப்ப இல்லை, அப்புறமா சந்திக்கிறேன்னு சொல்லிடு ஜெயந்தி" என்றான்.

*(முதல் பாகம் முற்றும்)*

இந்தக் கதையைத் தொடங்குமுன் விகடன் ஆசிரியருடன் இதன் அமைப்பை விவாதித்துக் கொண்டிருந்தபோது இதன் இரண்டாம் பாகத்தை சம்பிரதாயப்படி உடனே தொடராமல் சில மாதங்கள் விட்டு ஆரம்பிக்கலாம் என்று அப்போதே தீர்மானித்தோம், 'பிரிவோம்.......சந்திப்போம்' என்கிற தலைப்பின் காரணமும் அதுதான். எனவே இப்போது பிரிவோம், மறுபடி ரகுவையும் மதுவையும் வேறு சூழ்நிலையில் சந்திப்போம்.

www.writersujatha.com